வெளியீடு 17-6-98

Issued 17-6-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, அக்டோபர் 18, 1997 – தொகுதி 38 – எண் 3

**Saturday the 18th October, 1997 – Volume 38 – No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

[Price Rs. 3.00

409/98

**18-10-1997**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 303-332 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (மூன்றாவது பட்டியல் முதல் ஆறாவது பட்டியல் வரை) | 333-470 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) நெல்லை மாவட்டத்தில் வேலை [illegible] அளிப்புத் திட்டத்திற்கான பணம் பயன்படுத்தியது | 470-476 |
| (ஆ) உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி தன் உயிருக்கு ஆபத்து உள்ளதாகத் தெரிவித்தது | 476-490 |
| (இ) இராமேசுவரம் அருகில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள்மீது இலங்கை இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூடு | 490-503 |
| (ஈ) தமிழகம் முழுவதும் பரவலாக உள்ள மின் தடை | |
| 3. தகவல் கோரல்— | |
| (அ) உறுப்பினருக்கு வந்துள்ள கொலை மிரட்டல் | 490 |
| (ஆ) திருநெல்வேலியில் எம்.ஜி.ஆர். சிலை அமைக்க அனுமதி கோரியது | 503-505 |
| (இ) இரயில்வே விழா அழைப்பிதழில் பெயர்கள் அச்சிட்டுள்ள வரிசை | 506-507 |


53/303—1

| | பக்கங்கள் |
|---|---|
| 4. பேரவை விதி 111-ன்கீழ் வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை. | 505-506 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| மயிலாடுதுறை வட்டம், அஞ்சார்—வார்தலை விக்கிரமன் பாலம் பழுதடைந்துள்ளமை | 507-510 |
| 6. அறிக்கை அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 511 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 511 |
| (இ) மனுக்கள் குழு | 511 |
| 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1997 | 511-513 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி. | 512-513 |
| (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 | 514-537 |
| திரு. ச. அழகிரி | 514-519, 523 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 519-522 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 522-525 |
| திரு. ஆர். சொக்கர் | 525-526 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 535 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 519, 526, 536 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 514, 526-537 |


218446.




| | பக்கங்கள் |
|---|---|
| (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 | 538-544 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 538-540 |
| *திரு. செங்கை சிவம் | 540-541 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 542-544 |
| (ஈ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997 | 545-574 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 545-546 |
| திரு. சி. வேலாயுதன் | 546-548 |
| திரு. டி. மணி | 548-550 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 550-554 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | 554-555 |
| திரு. ஜி. பழனிசாமி | 555-558 |
| திரு. சி. ஞானசேகரன் | 547, 558, 559, 560, 561-562, 565, 567, 568, 570, 571 |
| திரு. பி. வெங்கடசாமி | 566, 571, 573 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 569-570 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 545, 558, 559, 561, 562-565, 566-569, 570 |


D
V211,31'N97
N97.38.3

| | பக்கங்கள் |
|---|---|
| 8. அரசினர் தீர்மானம்— | |
| (அ) விதி 156 (1)-ஐத் தளர்த்தல் | 574 |
| (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல். | 575-576 |
| 9. அறிவிப்பு— | |
| சட்டமன்றப் பவள விழா மற்றும் சட்டமன்றப் பேரவை வைர விழா மலர் மற்றும் நினைவுப் பரிசு வழங்குதல் | 575 |
| 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 576-579 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஐப்பசி 2, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 அக்டோபர் 18, சனிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துக்களைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 81, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**81—**

**முதல்நிலைக் காவலர்களை பணி மூப்பின்கீழ் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்துதல்**

***3093—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையில் 1972-ஆம் ஆண்டில் முதல்நிலைக் காவலர்களாகப் பணி நியமனம் பெற்றவர்கள் பணி மூப்பின் அடிப்படையில் உதவி ஆய்வாளர்களாக பதவி உயர்த்தப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): காவல் துறையில், 1972-ஆம் ஆண்டில் முதல்நிலைக் காவலர்களாக நேரடியாக நியமனம் செய்யப்பட்ட 1,000 பேரில் இதுவரை 590 பேர் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்றிருக்கின்றனர். எஞ்சியுள்ளவர்களும் பணி மூப்பு (சீனியாரிட்டி) மற்றும் அவ்வப்போது உருவாகும் காலியிடங்களைப் பொறுத்து பதவி உயர்வு பெறுவார்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட இந்த முதல்நிலைக் காவலர்கள் கடந்த 11 ஆண்டுகாலமாக தலைமைக் காவலர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். கோவை, ஈரோடு, நீலகிரி, சென்னை மாநகரம் ஆகிய பகுதிகளில் இன்னும் 400-க்கு மேற்பட்ட காவலர்கள் பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள். கூடியவிரைவில் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1972-ல் ஒரு புதிய திட்டமாக எஸ்.எஸ்.எல்.சி. வரையிலே படித்துத் தேறியவர்களுக்கு முதல்நிலைக் காவலர்கள் பதவி என்று கூறி அப்படிப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அந்த 1,000 முதல்நிலை காவலர்களில் இதுவரையில் நான் ஏற்கெனவே சொன்னபடி 590 பேர் பணியிலே பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். மீதம் உள்ள 410 பேர் இன்னும் சேர்க்கப்படவில்லை. சீனியாரிட்டி - பணி மூப்பு என்பது அவர்கள் பணியாற்றுகின்ற அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்தும் அந்தந்த சரக மட்டத்திலும்—அந்தப் பணி மூப்பு வரிசை நிர்ணயிக்கப்படுகிறது. அப்படி நிர்ணயிக்கப்படும்போது மாவட்ட அளவையும், சரக அளவையும். டிவிஷன் அளவையும் அதே நேரத்திலே இடங்கள் காலியுள்ள நிலையையும் எண்ணிப் பார்த்து அந்த வகையிலேதான் இந்தப் பதவி உயர்வுகள் அளிக்கப்படுகின்றன. இவர்களுக்கும் விரைவிலே அந்தப் பதவி உயர்வு அளிக்கப்படுவதற்கு அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.



**திரு. இ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, *(கடந்த கால) அரசு, 1,198 பேரை எஸ். ஐ. போஸ்ட்டுக்காக அறிவித்து அண்ணா தி.மு.க. ஆட்சியிலே 500 பேரும்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, *(கடந்த கால) அரசு என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'கடந்த கால அரசு' என்று மாற்றிச் சொல்லுங்கள்.

**திரு. இ. கணேசன்:** தலைவர் அவர்களே, கடந்த கால அரசு எஸ். ஐ. போஸ்ட்டுக்கு 1,198 பேருக்கு மருத்துவச் சான்றிதழ், உள்ளூர் ஸ்டேஷன் விசாரணை அனைத்தும் முடித்து அண்ணா தி.மு.க. ஆட்சியில் 500 பேரையும், தி.மு.க. ஆட்சியில் 600 பேரையும் பயிற்சிக்கு வரவழைத்தார்கள். அதில் 78 பேர் பயிற்சிக்கு ஆணை வரவில்லை. இந்த மழைக்காலத் தொடரிலே நம்முடைய முதல்வர் அவர்கள் கருணை மழைபொழிய வேண்டும் என்று அன்போடு கேட்டு அந்த இளம் உள்ளங்களுக்கு பயிற்சிக்கான அழைப்புகளை அனுப்ப முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் 500 பேர்களை சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப் போவதாக அறிவிக்கப்பட்டு என்ன காரணத்தாலோ திடீரென்று 1,100 பேர் என்று அது உயர்த்தப்பட்டது. அதன் இடையிலே நடந்தவைகள் என்ன என்பவைகளை எல்லாம் நான் இங்கே விளக்கத் தேவையில்லை கேள்வி நேரத்தில். அந்த 1,100 பேரும் 1,198-ஆக திடீரென்று பட்டியலிலே உயர்ந்தார்கள். எனவே, அப்போது அறிவிக்கப்பட்டபடி 1,198-ல் 1,100 பேர்தான் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளும்படியாக அன்றைய அரசு தெரிவித்தது. அவர்களில்-அந்த 1,100 பேர்களில்கூட, 500 பேருக்குத்தான் முதல் கட்டமாக ஆணை அனுப்பப்பட்டது கடந்தகால ஆட்சியில். மீதம் உள்ள 600 பேருக்கு 2-6-97 ல் இந்த ஆட்சியில் அவர்கள் எல்லாம் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு பயிற்சியும் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல 78 பேர் அல்ல, 98 பேர், அவர்களுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. 500 என்பது 1,100 ஆக உயர்ந்து. பட்டியல் வரும்போது 1,198 ஆக உயர்ந்து

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

இருக்கிறது. 500 பேருக்கு கடந்த கால அரசிலே அவர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு, இந்த அரசிலே மீதம் உள்ள 600 பேர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மீதம் 98 பேர் இருக்கிறார்கள். 98 பேரும் தீர்ப்பாயத்தில் தாங்கள் இன்னும் பயிற்சிக்கு அனுப்பப்படவில்லை என்று வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கு 3-11-1997 அன்று தீர்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. இதற்கிடையில் கருணை அடிப்படையில் அவர்களை எல்லாம் எடுத்துக்கொள்ள முடியுமா என்று அரசு பரிசீலித்து வருகிறது. மழைபொழியும், இடி இடிக்காது. (சிரிப்பு)

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1990 ஆம் ஆண்டு கழக ஆட்சியின் போது காவலர்கள் பணிக்காக சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தேர்வு செய்யப்படுவதற்கான ஆயத்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றன. ஆனால் ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு அவர்களுக்குப் பணி நியமன உத்தரவு வழங்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் அவர்களுக்கு பணிக்கான உத்தரவுகளை வழங்குவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்திலே 1993 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்கள் 376 பேர் விடுபட்டுப் போய் விட்டார்கள். மாண்புமிகு மு[illegible]வாக[illegible]ர்ந்து [illegible] கருணை மழைபொழிந்து அவர்களையும் வேலைக்கு எடுத்துககொள்ள ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலுள்ள அந்தக் குறிப்பில் அது பற்றிய தகவல் இல்லை. அந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் எனக்கு அனுப்பிவைப்பார்களானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**82—**

**சிமெண்ட் தொழிற்சாலை அமைத்தல்**

***6778—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியில் கிடைக்கும் சுக்கான் சுண்ணாம்புக் கற்களைப் பயன்படுத்தி சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

**திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் தொகுதி எந்த தொழிலும் இல்லாத தொகுதியாக இருக்கின்றது. அங்கே சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு சுமார் 2 ஆயிரம், 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் அதற்குத் தகுதிவாய்ந்த கற்கள் கிடைக்கின்றன. ஆகவே, அங்கே அந்தத் தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அங்கிருந்து சரக்குகளை எடுத்துச் செல்வதற்கும் தூத்துக்குடி துறைமுகம் பக்கத்திலேயே இருக்கிற [illegible] வசதி[illegible] என்[illegible] மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு அந்தத் தொழிற்பேட்டையை அமைத்து தருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பகுதியில் கிடைக்கின்ற கற்கள் படிவுப் பாறை வகையைச் சேர்ந்த சுக்கான் சுண்ணாம்புக் கற்கள்

ஆகும். இந்தக் கற்களை உயர்தர சுண்ணாம்புக் கற்களோடு கலந்து சிமெண்ட் தயாரிக்கத்தான் பயன்படுத்த முடியும். சாத்தான்குளம பகுதியிலுள்ள இந்தக் கற்களை வெட்டி எடுத்துச் செல்வதற்கு தாழையூத்து இந்தியா சிமெண்ட் நிறுவனத்திற்கும், திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஜெ.வி.எஸ். நிறுவனத்திற்கும் சுரங்கக் குத்தகை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இதை உயர்தரமான சுண்ணாம்புக் கற்களுக்குத் துணையாகப் பயன்படுத்த முடியுமே தவிர இவைகளை மட்டும் அப்படியே எடுத்து அங்கே ஒரு சிமெண்ட் ஆலை அமைப்பது என்பது இயலாத காரியம் என்பதால்தான் தொடக்கத்திலேயே என்னுடைய அந்த பதிலை நான் தெரிவித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திரு. இ. ஏ. பி. சிவாஜி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**83—**

**துணை மின் நிலையத்தை மின் நிலையமாக்குதல்**

***6786—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் 33 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. மின் நிலையமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு மக்கள் நலவாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**84—**

**துணை மின் நிலையம் அமைத்தல்**

***9732—திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தொகுதி, கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஒன்றியத்தில் கடமலைக்குண்டில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டான 1997-98-லேயே பணி துவங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 85, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**85—**

**செட்டிக்குளம், கொளக்காநத்தம் பிர்க்காவை இணைத்தல்**

***9519—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, செட்டிக்குளம் மற்றும் கொளக்காநத்தம் பிர்க்காவை ஒன்றிணைத்து வட்டமாக ஆக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள ஆலத்தூர் ஒன்றியத்தில் அடங்கிய செட்டிக்குளம் மற்றும் கொளக்காநத்தம் பிர்க்காக்கள், ஏறத்தாழ 39 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. ஆனால் குறைவான பஞ்சாயத்துக்களான செந்துறை 30, வேப்பந்தட்டை 32, குன்னம் 33 ஆகிய பஞ்சாயத்துக்கள் வட்டங்களாக ஆக்கப்பட்டுள்ளன. இந்தப் பிர்க்கா மேற்கே துறையூர் வரையிலும், கிழக்கே அரியலூர் வரையிலும் ஏறத்தாழ சுமார் 70 கிலோ மீட்டர் நீண்டு உள்ளது. இதனை அறிந்து, அந்தப் பகுதியினுடைய நீண்ட நாள் கோரிக்கையான, வட்டங்களை உருவாக்குவதற்கு இந்த இரண்டு பிர்க்காக்களை ஒன்றிணைத்து வட்டங்களாக, வருகின்ற பட்ஜெட் கூட்டத்திலேயாவது ஆக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஓராண்டில் புதிய வட்டங்களும், மற்றும் புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புக்களை உருவாக்குவது இல்லை என்று 20-6-1997-இல் முடிவெடுக்கப்பட்டது. புதிய மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் போன்ற கூடுதல் நிர்வாகப் பிரிவுகளை உருவாக்குவது அதிகமான தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்கு வழிவகுக்கும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி வருவாய்ப் பற்றாக்குறை 1,700 கோடிக்கு மேல் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட கூடுதல் செலவினங்களைத் தவிர்ப்பது அவசியம். ஆகவே, அடுத்த ஓராண்டில் புதிய வட்டங்களை, வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புக்களை உருவாக்குவது இல்லை என்று முடிவெடுக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. பி.என் வல்லரசு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**86—**

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

***819—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி நகர் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அணைப்பட்டி அணையில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உசிலம்பட்டி நகர் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அணைப்பட்டி அணையில் குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி நகரில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டு அடிக்கடி பஸ் மறியலை மக்கள் நடத்துகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. பேரணையில் அதற்குரிய கிணறு தோண்டப்பட்டிருக்கிறது. அந்தக் கிணறு கற்பாறைகளாக இருக்கின்ற காரணத்தால் தண்ணீர் போதிய அளவு கிடைப்பது இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இணைப்புக் கால்வாய் மூலம் வருகிற தண்ணீர் மூலம் உசிலம்பட்டி கிணற்றுக்கு அங்கே தண்ணீர் விடவும், மாற்றுக் காலங்களில் வைகை அணையிலிருந்து மதுரைக்குக் குடிநீர் செல்வதைப்போல குழாய் மூலம் தண்ணீர் விடவும் செய்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நிரந்தரத் தீர்வு காண்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1996 ஆம் வருடம் ஆறாம் மாதம் இந்தக் கேள்வியைக் கொடுத்திருந்தார்கள். அதற்குப் பிறகு எடுத்த நடவடிக்கையையொட்டி உசிலம்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட 26,413 மக்களுக்கு மீண்டும் இடையிலே பழுதாகியிருந்த திட்டத்தை உருவாக்கி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 15 இலட்சம்

ரூபாய் செலவில் உசிலம்பட்டியிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில் 2 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின்னேற்றிகள் மூலம் நீர் உந்தப்பட்டு ஏற்கனவே அங்குள்ள 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த் தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இப்பொழுது வைகையாற்றுக் குடிநீர்த் திட்டமும் செயலாக்கம் பெற்று அதன் மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது. இஃதன்னியில் இன்னும் தேவைப்பட்டால் பரிசிலனை செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், உசிலம்பட்டியைப் பற்றியா கேட்கப் போகிறீர்கள்? **(குறுக்கீடு)** உசிலம்பட்டியைப் பற்றித்தான் கேட்க வேண்டும்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** அணைப்பட்டி, பொன்னம்மாள் தொகுதிதான் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடே உங்கள் தொகுதிதான். அதற்காக உங்களையே முழுவதும் கேட்க விட முடியாது. உசிலம்பட்டியைப் பற்றிக் கேளுங்கள். இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள்.

வினா எண் 87, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**87—**

## நாகப்பட்டினம் தொகுதியில் குடிநீர் வசதி

***1047—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் **உள்ளாட்சித் துறை அமைச்சர்** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, நாகூருக்கு பால்பண்ணை சேரியிலிருந்து வழங்கப்படும் குடிதண்ணீர் உடல்நலத்திற்கு உகந்தது அல்ல என்று 25-10-1993 அன்று பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகத்தால் சான்று வழங்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தலைமை நீர்ப் பகுப்பாய்வாளர், சென்னை, அவர்கள், நாகூரில் நீர் பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அவ்வறிக்கையில், குடிநீருக்கு உகந்தது என்று சான்றிதழ் அளித்துள்ளார். மேலும் அதிக அளவில் பிளிச்சிங் பவுடர் கலந்து விநியோகிக்கவும் வேண்டுமென்று அறிவுரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கூடுதலாக பிளிச்சிங் பவுடர் கலந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால்பண்ணை சேரியிலிருந்து வழங்கப்படும் தண்ணீர் மக்கள் மிகவும் பயன்படுத்த முடியாத நிலையில் இன்றுவரை இருந்து வருகிறது. மக்கள் அதைப் பயன்படுத்துவது இல்லை. அதற்கு மாறாக, இந்த அரசு பெரிய ஒரு திட்டத்தையும் அங்கே 9 கோடி ரூபாய் மதிப்பிலே திட்டத்தையும் செயல்படுத்தி வருகின்றது. அதற்காக இந்த அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நகராட்சிக்குத் தண்ணீர் எடுக்குமிடத்தில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் நகராட்சிக்குச் சரியாகத் தண்ணீர் விநியோகம் செய்ய முடியவில்லை. ஆகவே, அந்த இடத்தில் ஜெனரேட்டர் வசதி அமைத்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவும் மின் அழுத்தத்தில் கோளாறு ஏற்படுவது வாடிக்கையாக இருக்கிறது. இப்படி ஒவ்வொரு இடத்திற்கும் நாம ஜெனரேட்டரை வழங்குவது என்று சொன்னால் - வாங்கி விடுவதுகூடச் சுலபம். ஆனால் அதை வைத்து நிர்வகிப்பது ரொம்பக் கஷ்டம். ஆகையால், அந்தப் பிரச்சினை நாகப்பட்டினத்தைப் பொறுத்தவரையில் இல்லை. நல்ல தண்ணீர் கிடைத்திருக்கிறது, நல்லமுறையில் கொடுக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. எனவே, விரைவாக அடுத்த மாதத்தில்கூட அந்தப் புதிய திட்டத்தைத் துவக்குவதாக இருக்கிறோம். நான் வருகின்ற 5 ஆம் தேதி அதை முழுவதும் சுற்றிப் பார்வையிட இருக்கிறேன். பார்வையிட்ட பிறகு சில நாட்களில்கூட இந்தப் புதிய திட்டம் நடைமுறைக்கு வரும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, திரு. பி.என். சுப்பிரமணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**88—**

**வேளாண்மைப் பொறியியல் கல்லூரி அமைத்தல்**

***7523—திரு. பி.என். சுப்பிரமணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, முள்ளுவாடி, அல்லாளசேரி ஆகிய கிராமங்களில் சுமார் 100 ஏக்கரில் செயல்படாமல் உள்ள விதைப்பண்ணை இருந்த இடத்தில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதி முள்ளுவாடி, அல்லாளசேரியிலுள்ள விதைப் பண்ணை செயல்படாமல் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விதைப் பண்ணைக்கு வருகை தந்தார்கள். அங்கே சுமார் 50 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அங்கே பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்தோம். விதை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-4-1997 அன்று பண்ணையை நான் நேரில் பார்வையிட்டேன். அப்போது எனக்குத் தெரிய வந்தது, அங்கே தண்ணீர் வசதி குறைவாக இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் பொறியியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டார். அது சாத்தியமில்லை, வேண்டுமானால், அதை விதை ஆராய்ச்சிப் பண்ணையாக ஆரம்பிக்கலாமா என்று பரிசீலிக்கலாம் என்றுதான் சொன்னேன்.





அந்த அறிக்கை இன்னும் அரசுக்குக் கிடைக்கப் பெறவில்லை. அறிக்கை கிடைத்த பிறகு பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**89—**

**கடனா நதி உயர்மட்டக் கால்வாய் விரிவாக்கம்**

***3733—திரு. இரா. ஆவுடையப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடனா நதி உயர்மட்டக் கால்வாய் விரிவாக்கத் திட்டத்திற்கு உடனடியாக அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணி எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்த பிறகு ஏற்புடையது என்று கருதினால் மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். பிறகு நிதிநிலைமைக்கேற்ப இந்தத் திட்டம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை முதலமைச்சர் அறிவிப்பார்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையானது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. தற்போது அந்த அணையின் உயர்மட்டக் கால்வாய் விரிவாக்கத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. அதில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறும். அந்த விவசாயிகள் அந்த அணையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அரசு அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, அந்த அணையினுடைய பணியை முடித்துத் தருமா என அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 18

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வியில் குறிப்பிட்ட உயர்மட்டக் கால்வாய் விரிவாக்கத் திட்டம் என்பது ஏற்கெனவே கடனா நதியிலிருந்து வெளி வருகின்ற அரசமுத்து கால்வாயில் 3.75-வது கிலோ மீட்டரிலே ஓர் உயர்மட்டக் கால்வாய் வெட்டி, ஏற்கெனவே பாசனத்தில் இருக்கின்ற 20 குளங்களுக்கு தண்ணீர் அனுப்பி அதனுடைய பாசனப் பகுதியை விஸ்தரிப்பதாகும். ஆனால், தண்ணீர் ஏற்கெனவே இருக்கின்ற பகுதிகளுக்குப் போதவில்லையென்ற காரணத்தினால்தான் இந்தக் கடனா நதி விரிவாக்குகின்ற திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் காலத்திலே ஓர் ஆய்வு செய்தார்கள். அந்த ஆய்வு இடையிலே நின்றுவிட்டது. மீண்டும் இந்த அரசு வந்து அதைத் துரிதப்படுத்திய காரணத்தினால் சுமார் 18 கோடி ரூபாயில் அந்த விரிவாக்கத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவு பரிசீலனையில் இருந்து வந்திருக்கிறது. அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. முடிந்த பிறகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையிலிருந்து வருகின்ற 20 ஆம் தேதியிலிருந்து விவசாயிகளுக்கு தண்ணீர் திறந்து விடுவதுபோன்று, என்னுடைய தொகுதியிலுள்ள பேச்சிப்பாறை அணையிலிருந்து இராதாபுரம் கால்வாயிலுள்ள 54 குளங்களுக்கு நேரிடையாக பாசனத்திற்காக குளங்களுக்குத் தண்ணீர் விடுகின்ற திட்டத்தில் வருகின்ற நவம்பர் மாதம் முதல், அந்த 54 குளங்களை மட்டுமாவது இந்த அரசு கருணையோடு கவனித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்தக் குளங்களை மட்டுமாவது பெருக்கித்தர வேண்டுமென்று தங்கள் மூலமாக கேட்பதோடு, அந்தப் பகுதியில் மிகப் பெரிய குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, தயவுசெய்து வருகின்ற நவம்பர் 1 முதல் 30 நாட்களில் அந்தக் குளங்களைப் பெருக்கித் தருவாரா என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடனா நதியிலிருந்து இராதாபுரம் கால்வாய்க்குக் கேள்வி தாண்டியிருக்கிறது. பரவாயில்லை. ஆனால், இராதாபுரம் பகுதியிலே



1997 அக்டோபர் 18 ]

குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது, கஷ்டப்படுகிறார்கள் என்று நேற்றைக்கு முன்தினம் வள்ளியூர் ஒன்றியத்தில் ஒன்றியப் பெருந்தலைவராக இருக்கின்ற எங்கள் கட்சியைச் சார்ந்த மல்லிகா ராணி அவர்கள் பலரோடு வந்து என்னிடத்திலே மனுவைக் கொடுத்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அப்போது தண்ணீர் பற்றாக்குறை இருந்தது, இப்போது கொஞ்சம் பரவாயில்லை கோதையாறு திட்டத்தில். எனவே, இரு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கலந்து பேசிய பிறகுதான் அதற்கு ஒரு முடிவு எடுக்கப்படும். அவர்கள் இன்று அல்லது நாளை முடிவு செய்து கொள்வார்கள். எனவே, இராதாபுரம் கால்வாயிலே குடிதண்ணீருக்காக 1 ஆம் தேதியிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவது என்ற முடிவை இந்த அரசு எடுக்கும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 90, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**90—**

### மயிலாடுதுறை—தரங்கம்பாடி இரயில் பாதை அமைத்தல்

***2564—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை—தரங்கம்பாடி இரயில் பாதையை மீண்டும் அமைத்து இரயில் போக்குவரத்துத் தொடங்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மயிலாடுதுறை—தரங்கம்பாடி இரயில் பாதை (மீட்டர்கேஜ்) 14-11-1985 முதல் குறைவான பயணிகளின் பயணத்தால் இரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மேலும், மயிலாடுதுறை—தரங்கம்பாடி மார்க்கத்தில் மீண்டும் இரயில் இயக்குவது பற்றிய செயற்குறிப்பு

ஏதுமில்லை. எனவே, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துகிற சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியினுடைய போக்குவரத்து நெரிசலைக் கருத்திற்கொண்டு இரயில் பாதை அமைந்திருந்த அந்தப் பாதையில் ஒரு மாற்றுப் பாதை, மயிலாடுதுறையிலிருந்து ஒரு பை-பாஸ் ரோடு அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியில் இரயில் பாதை பற்றி கேட்டுவிட்டு இப்போது பை-பாஸ் ரோடு கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் பரிசீலனையில் எடுக்கப்பட்டு, அங்கே அதிக நெருக்கடி இருக்குமானால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**91—**

**மேல்மலையனூர் சாலையை இருவழிப் பாதையாக மேம்படுத்துதல்**

***5753—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் உள்ள வளத்தி—மேல்மலையனூர் சாலை கி.மீ. 0/0 ஏ-லே 6/4 மற்றும் அவலூர்பேட்டை—மேல்மலையனூர் சாலை கி.மீ. 0/0-ல் 10/0 வரையுள்ள ஒருவழிப் பாதையை இருவழிப் பாதையாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை மேம்படுத்த சுமார் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் தேவைப்படும். அரசின் நிதி நெருக்கடி நிலை காரணமாய், பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக்காலங்களில் எடுத்துக் கொள்கிற வாய்ப்புக்கள் கிடையாது.





**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை என்னுடைய தொகுதி மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கை. அகலப் பாதையாக, அதாவது 100 அடி சாலையாக, இரண்டு கட்டங்களாக, இந்த நிதியாண்டில் வளத்தியிலிருந்து மேல்மலையனூருக்கும், அடுத்த நிதியாண்டில் மேல்மலையனூரிலிருந்து அவலூர்பேட்டைக்கும் சாலையை மேம்படுத்தித் தர, 100 அடி சாலையாக மேம்படுத்தித்தர தயவுசெய்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய நகரங்களை இணைக்கிற சாலைகள்கூட 100 அடி சாலையாக உருவாக்கப்படுவதில்லை. மேல்மலையனூருடைய சாலை வளர்ச்சி பற்றி எனக்கும் நன்றாகத் தெரியும். இருக்கிற சாலையையே திடப்படுத்தி, ஒழுங்காகச் செய்தாலே போதும் என்று இந்த அரசு கருதுகிறது. அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாகுமானால் பிறகு இது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**92—**

**பகுத்தறிவு வாரியம் அமைத்தல்**

***6122—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மக்களின் மூடநம்பிக்கை, அறியாமை இவைகளை ஒழிக்கவும், கல்வி நிலையங்களில் ஒழுக்க மேம்பாடு குறித்த சிறப்பு வகுப்புகளை உருவாக்கவும், மத, சாதிப் பிணக்குகளை முழுவதும் வரவிடாமல் தடுக்கின்றவை போன்ற பணிகளைச் செய்ய பகுத்தறிவு வாரியம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1997 அக்டோபர் 18

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மனமகிழ்வோடு வாழ வேண்டும், நாடு செழித்திட வேண்டும், எல்லோரும் எல்லாமும் பெற்றிட வேண்டும் என்று உழைத்திடுகின்ற உன்னதமான மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்குகின்ற இந்த அரசு, வேதனைப்படுகின்ற விதமாக, இடையிலே தோன்றுகின்ற சாதி சமய சச்சரவுகளின் மூலமாக முழுமையாக ஆற்றுகின்ற பொதுப்பணிக்கு ஏற்படுகின்ற தடங்கலையும், தடைகளையும் நீக்குகின்ற, களைகின்ற விதமாகவும், தொடர்ந்து கண்காணித்து நாட்டிலே அமைதியை உருவாக்குவதற்கு நல்ல கருத்துக்களைப் பரப்புகின்ற விதமாகவும், அஃதன்றி, கற்பது என்பது பட்டம் பெறவும், வேலைக்குப் போகவும் என்ற அடிப்படையாக இருக்கின்ற அந்தப் பொய்யான நிலையை மாற்றி, கல்வி பெறுவது என்பது அறியாமையை அகற்றவும், நல்வாழ்வு வாழ்ந்திடவும், அமைதியான நிலை உருவாக்கவும்தான் என்ற நிலையை உருவாக்கிட, கல்விக் கூடங்களில் அறிவு முகிழ்ந்திருக்க, அறிவுக் கண்ணைத் திறந்திடுகின்ற நேரமாக இருக்கின்ற, மூன்றாம் வகுப்பு, நான்காம் வகுப்பு என்ற அந்தத் தொடக்க நிலையிலேயே வாரத்திற்கு ஒரு முறை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பொதுக் கூட்ட மேடை இல்லை. துணை வினாவைச் சீக்கிரம் கேளுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** வாரத்திற்கு ஒரு முறை நல்லொழுக்கப் போதனைகளை, பகுத்தறிவுக் கருத்துகளைப் பாடமாக, மாணவ மாணவியர்களுக்குப் போதித்து வருவோமேயானால் அதன் மூலமாக, வரக்கூடிய நாட்களில் புதிய சமூகத்தைக் காணமுடியும் என்ற அளவிலேயும், உதவி செய்து பணியாற்றக்கூடிய அளவிற்கும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் காணத் துடிக்கின்ற சமத்துவபுரத்தை நோக்கி அழைத்துச் செல்வதற்காக, உயர்ந்த நாத்திக, மூடப் பழக்கத்தை எதிர்கொள்ளாத ஆத்திக அன்பர்களையும், இணைத்து இயங்கக்கூடிய ஒரு பகுத்தறிவு வாரியத்தை அமைத்திட நமது அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1997 அக்டோபர் 18]

முற்பகல் 9-55

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நீண்ட உரையை ஆற்றி, தன்னுடைய உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். பொதுவாகவே, வாரியம் என்பது ஒரு நிறுவனத் தன்மை கொண்டதாக இருக்குமே தவிர, தமிழர்களுடைய உள்ளங்கள் அத்தனையிலும் ஊடுருவிச் சென்று பணியாற்றக்கூடிய அமைப்பாக இராது. ஏற்கெனவே 1912-ல் நடேச முதலியார் குரல் கொடுத்த காலத்திலிருந்து இப்பொழுது வந்த அனைத்துத் தலைவர்களும் - தந்தை பெரியார் போன்ற பகுத்தறிவாளிகளும், அதனைத் தொடர்ந்து வந்த பேரறிஞர் அண்ணாவும், தானைத் தலைவர் கலைஞரும், மற்றுமுள்ள அனைத்து எழுத்தாளர்களும், உரையாளர்களும் எண்ணற்ற கருத்துக்களை இந்த நாட்டு மண்ணுக்கு எடுத்து வைத்து விரிவுரையாற்றிருக்கிறார்கள். நூல்களை வெளியிட்டு இருக்கிறார்கள், கருத்துக்களைப் பரப்பியிருக்கிறார்கள். இவற்றை ஒழுங்காகப் படித்து, அவற்றை மனதில் நிறுத்திக் கொண்டு செயல்பட முடிந்தாலே இந்தச் சமுதாயத்தை வெகு விரைவில் சீர்படுத்திவிட முடியும். ஆகவே, அப்படிப்பட்ட வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. அதுபோக, கல்விக் கூடங்களில் இதுபோன்ற பாடங்களை இணைக்கலாமா என்பதைக் கல்வித் துறைக்கு எடுத்துச் சொல்லலாம். அதற்குக் கருத்துரு அனுப்பப்படலாம். அதே நேரத்தில் பகுத்தறிவுச் சிந்தனை வகுப்புகள் பல்கலைக் கழகங்களில் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் அந்தப் பாடத் திட்டம் இருக்கிறது. நான் பணியாற்றிய கல்லூரியில் அந்தப் பாடம் ஏற்கெனவே கற்பிக்கப்பட்டு வருகிறது. அதுபோக, வேறு நிலையிலே பகுத்தறிவுப் பாடங்கள் அனைத்து வழியிலும் கற்பிக்கப்படுகின்றன. இப்படிப் பல நிலைகளில் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அதற்கென்று தனி வாரியம் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93. திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1997 அக்டோபர் 18

93—

### கிராமங்களிலும் தமிழில் தந்தி

***7060—திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முக்கிய நகரங்களில் தமிழில் தந்தி அனுப்பும் முறை உள்ளது போல் கிராமங்களிலும் விரிவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, இந்து தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பொதுவாக கிராமங்களிலே நம்முடைய தமிழ் மொழியைக் கற்பிப்பதிலே இன்றைக்கு சிரமமாக இருக்கின்ற காலத்தில், பல மொழிகளில் நம்முடைய தாய்மொழியைத் தவிர, மற்ற மொழிகளில் வருகின்ற அந்த தந்தி ஃபாரத்தை அங்கே பூர்த்தி செய்து அடிக்கக்கூட சிரமப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. கிராமத்தில் ஒரு சிலர் கூட மற்ற மொழிகளைக் கற்றவர்களாக இல்லாத நிலைமை இருக்கின்ற காரணத்தால், பேரூராட்சி அளவிலாவது தமிழில் தந்தி அனுப்பும் முறைக்கு அரசு ஆவன செய்யுமா, அதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் தொலை வரி அனுப்புவது குறித்து ஏற்கெனவே நடுவண் அரசு நமக்குத் தெளிவான நடைமுறைகளை விதித்துத் தந்து இருக்கின்றது. 9-3-1991 அன்று வாழ்த்துத் தொலை வரிகளைத் தமிழில் அனுப்பலாம் என்ற வாய்ப்பை நடுவண் அரசு நமக்குக் கொடுத்து இருக்கிறது. அந்த அடிப்படையில் ஆங்கிலத்தில் தொலை வரி அனுப்பினாலும் அதற்குக் கீழே, செய்திக்குக் கீழே



1997 அக்டோபர் 18 ]

'தமிழ்' என்று எழுதிவிட்டால் அங்கே சென்று சேருகின்றபோது தமிழில் தொலை வரி வழங்கப்படுகின்றது. இதை நிறையப் பேர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, 14-1-1994-ஆம் நாளன்று அனைத்துத் தொலை வரிகளும் தமிழில் அனுப்பப்படலாம் என்று 20 இடங்களில் தமிழுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால் வருந்தத்தக்க நிலை என்னவென்றால், விவரம் தெரிந்தவர்கள்கூட அந்த நிலையத்திலிருந்து தமிழில் வரிகளைத் தருவதில்லை. தமிழ்ப் பற்றாளர்களே அதைத் தருகிறார்களா என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. எனவே, தந்த வாய்ப்பைப் பயன்படுத்தாத காரணத்தால், இப்போது நடுவண் அரசு என்ன தெரிவித்திருக்கிறது என்று சொன்னால், "நாங்கள் தந்த இந்த 20 இடங்களிலிருந்துகூட போதுமான தொலைவரிகள் தமிழில் வருவதில்லை, எனவே, இதைக் கைவிட்டு விடலாமா என்று கருதுகிறோம். இதுசம்பந்தமாக அரசு மீண்டும் கவனித்து ஆவன செய்ய வேண்டும்" என்று எங்களுக்குத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய அரசு 12-8-1996 அன்று ஓர் அரசாணையை தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற செயலாளர்கள், அரசுத் துறை அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் தமிழில் தொலை வரிகளை அனுப்ப முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணையைப் பிறப்பித்து இருக்கிறோம். எனவே, கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது தமிழர்களுடைய கடமை. 'ஏணி பெற்றும் ஏறாத எந்தமிழராக' இருப்பதைவிட, கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்தினால், கண்டிப்பாக நடுவண் அரசு மேலும் தன்னுடைய பணிகளை விரிவாக்கும் என்ற உறுதியை மட்டும் நான் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

94—

### சென்னையில் கூட்டுறவு வங்கிகள் துவக்குதல்

***8863—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் புதிதாகக் கூட்டுறவு வங்கிகள் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**95—**

**மாவட்டங்களில் தானியங்கி பால் நிலையம்**

***5939—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னாள் படை வீரர்களுக்கு சென்னை நகரில் தானியங்கி பால் நிலையம் இருப்பதைப் போல் பிற மாவட்டங்களிலும் தானியங்கி பால் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முன்னாள் படை வீரர்களுக்கு சென்னையில் இருப்பதுபோல் பிற மாவட்டங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சுடலைமுத்து, இருக்கையில் இல்லை.



**வினா எண் 96. திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.**

**96—**

**பணி நீக்கம் செய்யப்பட்டவர்களைப் பணியமர்த்துதல்**

***3346—திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடியில் ஸ்பிக், பாரத் டிரான்ஸ்போர்ட் நிறுவனங்களில் பணிபுரிந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் பணியளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். ஸ்பிக், பாரத் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் பணிபுரிந்து பணி நீக்கம் செய்யப்பட்ட 147 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கிட திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன்படி ஸ்பிக், பாரத் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தால் 12-3-1997-ஆம் நாளன்று இவர்கள் மீண்டும் பணிக்கு அழைக்கப்பட்டனர். ஆனால் இவர்களும் நிர்வாகம் கூறியபடி ஸ்பிக், பாரத் நிறுவனத்தினின்று 10 கி.மீ. தொலைவிலுள்ள மீளவிட்டான் என்ற இடத்தில் வேலை செய்ய மறுத்து, ஸ்பிக், வளாகத்தில்தான் பணியமர்த்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் நிர்வாகம் இதை ஏற்கவில்லை. இது குறித்து 14-3-1997 அன்று, தூத்துக்குடி தொழிலாளர் அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையும் பலனளிக்காமல், இப்பிரச்சினை குறித்து ஒரு சுமூகமான தீர்வு காண இயலாத நிலை உருவாகியுள்ளது என தெரிய வருகிறது.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 147 தொழிலாளிகளில் பல பேர் நீண்ட நாட்களாக பட்டினி கிடந்து வெளி ஊர்களுக்குச் சென்று விட்டார்கள். இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, பேச்சு வார்த்தைக்குப் பிறகு வேலை கொடுப்பதாக நிர்வாகம் சொன்னாலும், அவர்கள் செய்த வேலையை

கொடுக்க மறுத்தும், வேறு ஒரு இடத்திற்கு, சம்பந்தம் இல்லாத இடத்திற்கு, 'நாங்கள் சொல்லக்கூடிய இடத்திற்குச் செல்ல வேண்டும்' என்று நிர்வாகம் சொல்கிறது. அந்தத் தொழிலாளர்கள் நாங்கள் பணி புரிந்த இடத்தில் வேலை கொடுங்கள், வேலைக்குப் போகத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் அந்த இடத்திலேயே வேலை பெற தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்பிக் நிர்வாகத்திலே ஒரு பிளான்ட் இயங்காமல் இருக்கிற காரணத்தாலும், சரக்குப் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், அந்த இடத்தில் வேலை கொடுக்க இயலவில்லையே தவிர 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய மீளவிட்டான் என்ற இடத்திலே, அவர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட்ட இடத்திலே வேலை கொடுக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் அங்கே போக மறுக்கிறார்கள். இடையிலே பேச்சுவார்த்தை நடைபெற்றது. நீதிமன்ற உத்தரவின் மூலம் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. ஆனாலும் தொழிலாளர்கள் வேலைக்குப் போக மறுக்கிறார்கள். ஆனால் இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்ட், பிரிவு 29-ன் படி இதில் மீண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 97, திரு. இ. கணேசன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**97—**

### தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குதல்

***7533—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பச்சியம்மன் கோவில் அருகிலுள்ள கொல்லம்பாளையம் ஊரில் மின்சாரக் கோளாறினால் எட்டு குடிசை வீடுகளும், ஒரு கைத்தறிக் கொட்டகையும், கைத்தறித் துணிகள் மற்றும் 21 தறிகள் தீக்கிரையானது அரசுக்குத் தெரியுமா?





**(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி தொகுதி, கன்னந்தேரி கிராமம், பச்சியம்மன் கோவில் அருகிலுள்ள கொல்லம்பாளையம் என்னுமிடத்தில் மின்சாரக் கோளாறினால் எட்டு குடிசை வீடுகளும் ஒரு கைத்தறி கொட்டகையும், கைத்தறித் துணிகள் மற்றும் 18 தறிகளும் தீக்கிரையானது. மேற்படி தீ விபத்து 19-2-1997 அன்று இரவு சுமார் 1-00 மணியளவில் ஏற்பட்டுள்ளது. தீ விபத்து நடந்த இடத்தில் சங்ககிரி உதவி ஆட்சியர் மற்றும் தாசில்தார் ஆகியோர் முகாம் மேற்கொண்டு பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசின் சார்பில் அனைத்து உதவிகளையும் செய்துள்ளனர்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடிழந்த ஏழைகளுக்கு அரசு ஆயிரம் ரூபாயும், அரிசியும் வழங்கியிருக்கிறது. அதுபோல அவர்கள் குடியிருக்க அரசு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படுமா என்பதையும் அந்த ஏழையெளிய கைத்தறி நெசவாளர்களுக்கு, அதனை நம்பியிருக்கின்ற நிலையில் இருக்கக்கூடிய மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அந்த மக்கள் உயிர் வாழத் தொழில் உதவி செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டுவது என்பது தனியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை. சேதத்தின் மதிப்பு நமக்கு சொல்லப்பட்டிருக்கின்ற கணக்கின்படி ரூ.82,500/-. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல குடியிருப்புக்கு 1,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் கைத்தறித் துறைக்கோ, கூட்டுறவு சங்கத்திற்கோ சம்பந்தப்படாதவர்களாக இருக்கிற காரணத்தால், 'யுனைடட் இன்ஷூரன்ஸ்' என்ற காப்புறுதியின் மூலமாக அவர்களுக்கு, தறி ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்க வட்டாட்சியர் மூலம் இன்ஷூரன்ஸ் நிறுவனம் அணுகப்பட்டிருக்கிறது. ஆகவே தனியாக, எந்தச் சங்கத்திலும் இல்லாத காரணத்தால் துறையின்

மூலம் எதுவும் செய்ய இயலவில்லை. எனினும் யுனைடட் இன்ஷூரன்ஸ் மூலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணத் தொகையைத் தர வேண்டுமென்று வட்டாட்சியர் மூலம் கோரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 98, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**98—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

***8209—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மானூர் கிராமத்தில் சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும் இன்னும் பட்டா வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றத்தில் நில உரிமையாளர் தொடுத்த நீதி பிரேரணை எண் 17046/94-ல் பெறப்பட்ட தடையாணை மீது இறுதியான உத்தரவு கிடைக்கப் பெற்றதும் பட்டா வழங்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதியில், மானூர் கிராமத்தில் சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் ஆகியோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகச் சொன்னார்கள்.



ஆனால், தடையாணை வழங்கப்பட்டு வழக்கு உயர்நீதிமன்றத்திலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், தடை உத்தரவு எப்போது நீக்கப்படும்? எத்தனை வருடங்களாக வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதை அறிவதோடு, நம்முடைய அன்புத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், எப்படி திருமண உதவித் தொகையாக ரூ.10,000/-, வருமான வரம்பின்றி—அன்-லிமிடெட்—அனைவருக்கும் கொடுக்கப்படுகிறதோ அதைப்போல, சலவைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலவைப் பெட்டி, முடி திருத்துவோருக்குக் கொடுக்கப்படுகின்ற உபகரணங்கள் ஆகியவை தடையின்றி, மனுச் செய்கின்ற அனைவருக்கும் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். மேலும், வழக்கு நீதிமன்றத்தில் எத்தனை ஆண்டு காலமாக நிலுவையில் இருக்கின்றது என்பதையும், பட்டா எப்போது வழங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் வட்டம், மானூரில் 52 சலவை மற்றும் சவரத் தொழிலாளர்களுக்குப் பட்டா வழங்க 1.25 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தி, 19-7-1994 நாளிட்ட, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் அரசாணை என் 65-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இது குறித்து தடையாணை விதிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிலத்திற்கான செலவுத் தொகை ரூ.87,048, திண்டிவனம் சார்பு நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டு வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு முடிவுற்ற பின்னரே பட்டா வழங்குவது பற்றி முடிவு செய்ய இயலும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அனைத்து சலவைத் தொழிலாளர்களுக்கும் சலவைப் பெட்டி வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வருடத்திற்கு 6,000 சலவைப் பெட்டிகளை இந்த அரசு வழங்கி வருகிறது. உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தினை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்துபேசி, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன், திண்டிவனம் பற்றித்தான் கேட்க வேண்டும்.

[1997 அக்டோபர் 18

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில உரிமையாளர்கள் நிலம் வழங்க முன் வந்தாலும் நில ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகள் காலதாமதம் செய்வதை அரசு அறியுமா? அதைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வாசுகி அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். இந்தத் திட்டத்திற்காக ரூ.18 கோடி அளவிற்கு இந்த ஆண்டு நமது முதல்வர் அவர்கள் நிதியளித்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தேவையை உறுதி செய்து, இந்தத் திட்டத்தின் மூலமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிலம் கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள், அரசு நடவடிக்கை எடுக்கவில்லையே என்று கேட்கிறார்கள். அதற்கு மாத்திரம் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பயன்படுத்திக் கொண்டு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களுடைய தொகுதி மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று ஒரு எண்ணம் இருந்தால், நில உரிமையாளருடன் பேசி, அதன் மூலமாக நிலத்திற்குப் பட்டா கொடுப்பதற்கு நீங்கள் வழிவகை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**99—**

**மிகவும் பிற்பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்குதல்**

***11543—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சியில் வசிக்கும் மிகவும் பிற்பட்டோருக்கு இலவச வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?



1997 அக்டோபர் 18]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், எங்களுடைய பெண்ணாகரம் தொகுதி என்பது, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள் நிறைந்த பகுதி. அங்கே வீட்டுமனை இல்லாதவர்கள் நிறைய இருக்கின்ற காரணத்தினாலே, பெண்ணாகரம், பாப்பாரப்பட்டி, இந்தூர், இந்திரையூர், நெருப்பூர், பெரும்பாளையம், போன்ற ஊர்களையொட்டி, நில ஆர்ஜிதம் செய்து, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளம் கொண்டவர்கள், நிதியாதாரத்திற்கு வழிவகை செய்யக்கூடியவர்களாக இருக்கிற காரணத்தினால், இந்தத் தருணத்திலே மேற்கண்ட ஊர்களிலே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்துவதைத் துரிதப்படுத்துவதற்காக சட்டம் பிரிவு எண் 4/1 மற்றும் 6-ன்கீழ் அறிக்கை வெளியிடுவதற்கான இரண்டு ஆண்டு காலத்தைக் குறைப்பதற்கு, நீதிமன்ற வழக்குகளைத் தவிர்ப்பதற்காக, அரசு ஆணை எண் 885, வருவாய்த் துறை, நாள் 21-9-1995-ல், நேரடிப் பேச்சுவார்த்தையின் மூலமாக, தனியார் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு, அனைத்துத் துறைகளுக்கும் சேர்த்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த ஆணையைப் பயன்படுத்திக் கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்கள் தொகுதியிலுள்ள தெரிந்த நிலச்சுவாந்தார்களிடம் பேசி, மாவட்ட அளவிலான ஒப்பந்தத்தின் மூலமாக நிலத்தைக் கையைகப்படுத்தி, பட்டா வாங்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய ஒத்துழைப்பும்

இந்த அரசு மூலமாகக் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையில், பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர், தன்னுடைய தொகுதியில், இந்தப் பயனைப் பெறுவதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 100, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**100—**

**கால்நடை மருத்துவமனைக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்**

***7868—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி தொகுதி, நாங்குனேரி கால்நடை மருத்துவமனைக் கட்டிடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாங்குனேரி கால்நடை மருந்தகக் கட்டிடத்தைப் பழுதுநீக்கிப் புதுப்பிப்பதைவிட, புதிய கட்டடம் கட்டுவதே சாலச் சிறந்தது என்பதால், பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ், புதிய கட்டிடம் கட்ட, நிதி ஒதுக்கீடு செய்திட, திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரிடம் கேட்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.



## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

**(மூன்றாம் பட்டியல்)**

**1—**

**உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிட வசதி**

வினா **5896—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம் மேல் மலையனூர் தொகுதி, நல்லான் பிள்ளை பெற்றாள் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் அதிகமாகப் பயின்று வருவதால் கூடுதல் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண். 291, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 9-7-1997-ல் இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசு ஆணையிட்டுள்ளது.

**2—**

**வாயிப்பாளையத்தில் நூலகம் விரிவுபடுத்துதல்**

வினா **6716—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம். திருப்பூர் தொகுதி, நெறிப்பறைச்சல் கிராமம், வாயிப்பாளையத்தில் நூலகம் இயங்குகிறதா?

(ஆ) அதனை சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றி மேலும் விரிவுபடுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூர் தொகுதி நெறிப்பறைச்சல் கிராமம், வாயிப்பாளையத்தில் 25-5-1965 முதல் நூலகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் இந்நூலகத்திற்கு காலிமனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலிமனை பெறப்பட்ட பின்னரே நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டவும், அதனை விரிவுபடுத்தவும், நடவடிக்கை எடுக்கப்படும்.

3—

**அரசு மருத்துவமனைகளில் கட்டண சிகிச்சைப் பிரிவு**

வினா **2561—திரு. டி. இராஜேந்தர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் கட்டண சிகிச்சைப் பிரிவுகள் தமிழகத்தில் எத்தனை மருத்துவமனைகளில் செயல்படுகின்றன?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின் மூலம் வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள 21 மருத்துவமனைகளில் கட்டண சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுகின்றன. இப்பிரிவுகளிலிருந்து கிடைத்த மொத்த வருமானம் ரூ.77,21,663.05 ஆகும். வேறு எந்த அரசு மருத்துவமனைகளிலும், தனியாக கட்டண சிகிச்சைப் பிரிவுகள் ஏதும் இல்லை.

4—

**அகநோயாளிகளுக்குச் சீருடை வழங்குதல்**

வினா **8035—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சேனடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனை அக நோயாளிகளுக்கு சீருடை வழங்காதது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 18-6-1996 அன்று நடைபெற்ற திட்ட நடவடிக்கைகள் கூட்டத்தில், இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்ட போது மருத்துவமனையில் சிகிச்சை பெறும் அக நோயாளிகளுக்கு வழங்கப்படும் சீருடை நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் தாம்பரம் சேனடோரியம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் அக நோயாளிகளுக்குச் சீருடை வழங்குவது நிறுத்தப்பட்டது.

5—

**மருத்துவமனைக்குக் கட்டிட வசதி**

வினா **8071—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பெரிய கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பெரிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

6—

### மறுவாழ்வு இல்லம் அமைத்தல்

வினா **8508—திரு. பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எய்ட்ஸ் நோய் கண்டவர்களுக்கு தொழுநோய் மறுவாழ்வு இல்லம் போல் தனியாக மறுவாழ்வு இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த நோய் முற்றிவிடும் போது உடலில் புண்கள் தோன்றி அருவருப்பான நிலை ஏற்படுவதால் அவர்களுக்கு மட்டும் தனியாக இல்லங்கள் அமைந்துள்ளன. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து பல்வேறு நோய்களுக்கும் ஆட்படுவதாலும் இந்நிலை பல ஆண்டுகளுக்குப் பிறகே ஏற்படுவதாலும் அவர்களுக்குத் தனியே மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மேலும் இந்நோய்க்கு சிகிச்சை இல்லாததால் மறுவாழ்வு இல்லங்கள் அமைத்தாலும் நோயைக் குணப்படுத்த இயலாது என்பதால் மறுவாழ்வு இல்லங்கள் தேவையில்லை எனக் கருதப்படுகிறது. ஆனால் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை குடும்பத்தினர் கவனிக்காமல் விட்டுவிட்டால் அவர்களைக் கவனித்துக் கொள்வதற்கு தன்னார்வ அமைப்புகள் முன்வந்தால் அதற்கு எய்ட்ஸ் கட்டுப்பபாட்டு சங்கம் மூலம் தக்க உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

### மின்சாரத்தைத் தடையின்றி வழங்குதல்

வினா **8825—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கோடைக் காலத்தில் வெம்மையால் கோழிகள் இறப்பதைத் தடுக்க கோழிப் பண்ணைகள் அதிகம் இருக்கும் பகுதிகளில் சிங்கிள் ஃபேஸ் மின்சாரத்தைத் தடையின்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்பொழுது தமிழ்நாடு மின் வாரியத்தில் உள்ள அனைத்து ஊரக மின் ஊட்டிகளிலும் மும்முனை மின்சாரம் ஒரு நாளில் 10 மணி நேரமும் (4 மணி நேரம் பகலிலும் 6 மணி நேரம் இரவிலும்) வழங்கப்படுகின்றது. மற்ற நேரங்களில் எல்லாம் இருமுனை மின்சாரம் வழங்கப்படுகின்றது. எனவே 24 மணி நேரமும் மின்சாரம் தொடர்ந்து தடையின்றி வழங்கப்படுகின்றது.

8—

### அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி

வினா **8543—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், நாகை அரசினர் தலைமை மருத்துவமனையில் இரத்த வங்கி முழுமையாக இயங்கத் தேவையான சாதனங்கள் மற்றும் குளிர்சாதன பெட்டி வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் அரசினர் தலைமை மருத்துவமனையில் இரத்த வங்கி முழுமையாக இயங்கத் தேவையான அனைத்து உபகரணங்களும் உள்ளன. குளிர்சாதனப் பெட்டியும் உள்ளது. இந்திய உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இந்த இரத்த வங்கிக்கு உரிமம் வழங்கப்பட்டு, இரத்த வங்கி நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

[1997 அக்டோபர் 18

9—

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிட வசதி

வினா **8768—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டவும், புதிய கட்டிடங்கள் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிவகங்கை மாவட்டம் முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் மற்றும் புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கட்டிட வசதி இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு மட்டும் அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. இனி வரும் காலங்களில் நிதிநிலைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்போது முத்தனேந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

10—

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர்

வினா **9540—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம் - சித்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?



1997 அக்டோபர் 18]

(ஆ) ஆம் எனில், சுற்றுச்சுவர் இந்த நிதியாண்டில் கட்டிக் கொடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி ஒன்றியம், சித்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. கட்டிட வசதி இல்லாத ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு தற்போது ஆணை வழங்கியுள்ளது. இனிவரும் காலங்களில் நிதிநிலைக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பணியாளர் குடியிருப்பு மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் திட்டத்தினை அரசு பரிசீலிக்கும். அப்போது சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

11—

### வேளாண்மைத் தொழிலுக்கு மின் உற்பத்தி நிலையங்கள்

வினா **9560—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலுக்கு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவ தனியார் துறை நிறுவனங்கள் எத்தனை விண்ணப்பித்துள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எந்த நிறுவனம் விண்ணப்பித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம் உட்பட வேளாண்மைத் தொழிலுக்கு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவ 1997-98-ஆம் ஆண்டு தனியார் துறை நிறுவனத்திடமிருந்து விண்ணப்பம் ஏதும்

பெறப்படவில்லை. 31-3-1997-ல் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பதினொன்று இடங்களில் 1243.696 மெ.வாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி/டீசல் மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு எட்டு (8) தனியார் நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த மின் திட்டங்கள் 1999-2000-ஆம் ஆண்டுகளில் நிறுவப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 9 இடங்களில் எரிவாயு சுழலி/டீசல் எஞ்சின் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தினால் தற்பொழுது ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவற்றுள் சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள பள்ளிப்பாளையம் என்ற இடமும் ஒன்றாகும்.

**12—**

**மின் கட்டணச் சலுகை அளித்தல்**

வினா **10742—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கு பயன்படுத்தும் மின்சாரத்திற்கு மின் கட்டண சலுகை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**13—**

**சித்த மருத்துவப் பிரிவிற்குக் கட்டிடங்கள்**

வினா **10818—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழகத்தில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள அரசு தலைமை மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் 'சித்த மருத்துவப்' பிரிவிற்கென தனியாகக் கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சித்த மருத்துவப் பிரிவிற்கென தனிக் கட்டிடங்கள் இல்லாத 10 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தனிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு 1997-98-ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**14—**

**சாத்தான்குளம் தொகுதியில் பவர் யூனிட் அமைத்தல்**

வினா **11177—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுதொழிலை ஊக்குவிக்க பவர் யூனிட் ஒன்று சாத்தான்குளம் தொகுதியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினரால் குறிப்பிடப்படும் "பவர் யூனிட்" என்பது எத்தகைய மின் வசதியைக் குறிப்பிடுகிறது என்று விளங்கவில்லை. இது ஒரு துணை மின் நிலையத்தைக் குறிப்பிடுமேயானால், சாத்தான்குளம் தொகுதியில், சாத்தான்குளத்தில் ஏற்கனவே ஒரு 110/33-11 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவப்பட்டு, இப்பகுதியின்

தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. எனவே இங்கு மேலும் ஒரு துணை மின் நிலையம் நிறுவும் அவசியம் எழவில்லை.

பவர் யூனிட் என்பது ஒரு புதிய மின் உற்பத்தி நிலையத்தைக் குறிப்பிடுமேயானால், சாத்தான்குளத்துக்கு அருகில் உள்ள தூத்துக்குடியில் 1040 மெகா வாட் மின் திறனுடன் மின் உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டு இயக்கத்தில் உள்ளது. எனவே சாத்தான்குளத்தில் புதிய மின் உற்பத்தி நிலையம் நிறுவும் திட்டம் ஏதும் இல்லை.

**15—**

**வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டிடம்**

வினா **3245—திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதியக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதியக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு இந்த ஆண்டு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**16—**

**சாலை அமைக்கும் செயற்குறிப்பு**

வினா **4880—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், காட்டுக்காலூர் மதுராரெட்டிப் பாளையம் கிராமம், பெரிய ஏரிக்கரை மேல் சாலை அமைப்பது குறித்த செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், காட்டுக்காலூர் மதுராரெட்டிப் பாளையம் கிராமம், பெரிய ஏரிக்கரை மேல் சாலை அமைக்க போதிய அளவு ஏரிக்கரை அகலம் இல்லை. ஏரிக்கரையில் 300 பச்சை பனை மரங்களும் முள்புதர்களும் உள்ளன. ஏரிக்கரையின் நீளம் சுமார் 1½ கி.மீ. உள்ளது. ஏரிக்கரையின் மேல் சாலை அமைக்க சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

**17—**

**குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குதல்**

வினா **4272—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், சத்துவாச்சாரி பகுதி-1 மற்றும் பகுதி-3-ல் உள்ள பீடித் தொழிலாளர் குடியிருப்புகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். வேலூர் சத்துவாச்சாரி பகுதி-1 மற்றும் பகுதி-3-க்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த உத்தேச மதிப்பீடு ரூ. 188.40 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. அந்தத் திட்டத்தில் பீடித் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்படும்.

18—

### குடிநீர்த் திட்டத்திற்கான கடன் விவரம்

வினா **5749—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, கருமாண்டிசெல்லிபாளையம் மற்றும் பெருந்துறை பேரூராட்சிகள் குடிநீர் திட்டத்திற்காக கடன் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். இத்திட்டத்திற்கான செலவு ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் அரசுக் கடன்கள் மூலமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) கடன் விவரம்: (ரூபாய் இலட்சங்களில்)

| பேரூராட்சி பெயர் | எல்.ஐ.சி. கடன் | அரசு கடன் | நிலுவை எல்.ஐ.சி. கடன் | அரசு கடன் |
|---|---|---|---|---|
| பெருந்துறை | 13.90 | 9.30 | 1.90 | 9.13 |
| கருமாண்டி செல்லிபாளையம் | 10.75 | 6.79 | 6.85 | 4.48 |

19—

### சமுதாய நலக் கூடம் அமைத்தல்

வினா **6251—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) விழுப்புரம் மாவட்டம், புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஒன்றியம், சாமியார்பேட்டை, உத்தம சோழமங்கலம், கொடிப்பள்ளம் ஆகிய இடங்களில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

20—

### பாதையைச் சீர் செய்தல்

வினா **6994—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரம், 4-வது வார்டு, மோட்டூர் ரோடு (சம்மங்குட்டையிலிருந்து) சந்தன ஆலை வரையுள்ள பாதை இருபுறமும் சிறுத்து உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பாதையைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): எடப்பாடி நகரில் சாலை ஓரங்களில் உள்ள முள்வேலிகளை அகற்றும் பணி ஜெ.சி.பி. இயந்திரம் மூலம் ஜூன் 1997-ல் செய்யப்பட்டது. அப்போது சந்தன ஆலையிலிருந்து மோட்டூர் செல்லும் சாலை இருபுறமும் உள்ள முள்வேலிகளை அகற்றும் பணியும் செய்யப்பட்டு சாலை சீர் செய்யப்பட்டது.

21—

## தார்ச் சாலை செப்பனிடுதல்

வினா **6996—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரம், 4வது வார்டு, ரெட்டித்தெரு, மற்றும் முண்டாச்சியூரிலிருந்து பூலாம்பட்டி மெயின்ரோடு வரை செல்லும் தார்ச்சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக சாலைகளைச் செப்பனிட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி நகராட்சியில் 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் பல்வேறு திட்டப் பணிகளின் மூலம் 20 சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரு சாலைப் பணிகளும் அடங்கும். மேலும் தற்போது குறிப்பிட்டுள்ள சாலைப் பணிகள் அடுத்து வரும் திட்ட ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

22—

## சமுதாய நலக் கூடம் அமைத்தல்

வினா **10493—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, செங்கோட்டை ஒன்றியம், வேம்ப நல்லூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழ வாய்ப்பில்லை.

23—

## தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை மேம்படுத்துதல்

வினா **9530—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடப்பு நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை மேம்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் (1997-98-ல்) சேலம் மாவட்டத்தில் தரிசு நிலங்களை மேம்படுத்த தேசிய பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டு வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் நேரடி அரசுத் திட்டம் ஏதுமில்லை. எனினும், தமிழ்நாடு ஏழை உழவர்கள் சங்கம் என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் 150 ஹெக்டேர் பரப்பில் ரூ. 6.69 இலட்சம் மதிப்பீட்டில் பயன்படுத்தப்படாத நில மேம்பாடுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

மானாவாரி நிலங்களைப் பொறுத்த வரையில் தேசிய மானாவாரி நீர்ப்பிரிமுகடுத் திட்டத்தின்கீழ் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சேலம் மாவட்டத்தில் ரூ. 85.440 இலட்சங்கள் செலவில் மானாவாரி நிலங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

ஒருங்கிணைந்த நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உலக வங்கி உதவியுடன் சேலம் மாவட்டத்தில் நிலத்தடி நீர் சேமிப்பு, மானாவாரி நிலங்களில் மரக்கன்றுகள் நடுதல், விவசாயிகளுக்குப்

[1997 அக்டோபர் 18

பயிற்சி, பயிர் செயல் விளக்கம், கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகள் ஆகிய பணிகள் ரூ. 235.92 இலட்சம் செலவில் 1997-98-ஆம் ஆண்டில செயல்படுத்தப்படவுள்ளன.

**24—**

### எண்ணெய் எடுக்கும் ஆலை அமைத்தல்

வினா **11198—திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் எண்ணெய்ப் பனை மூலம் எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கப்படவுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மற்றும் ஒருங்கிணைந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் பயிரிடப்படும் எண்ணெய்ப் பனை பழத்திலிருந்து எண்ணெய் பிழியும் ஆலை நிறுவ, திருவாளர்கள் எஸ் & எஸ் இண்டஸ்ட்ரீஸ் & என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்நிறுவனம் தஞ்சாவூர் அருகேயுள்ள விளார் கிராமத்தில் ஒரு ஆலை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது.

**25—**

### சாலை விபத்துக்கள்

வினா **7834—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-96 மற்றும் 1997-ல் தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ள சாலை விபத்துக்கள் எத்தனை?

(ஆ) அதில் எத்தனை பேர் உயிர் இழந்துள்ளார்கள்?

(இ) அவர்களுக்கு அரசு வழங்கிய உதவி என்ன?



1997 அக்டோபர் 18]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

| (அ) வருடம் | சாலை விபத்துக்கள் |
| --- | --- |
| 1995 | 41,685 |
| 1996 | 42,197 |
| 1997 (30-6-1997 முடிய) | 20,058 |

| (ஆ) வருடம் | உயிர் இழந்தோர் |
| --- | --- |
| 1995 | 8,773 |
| 1996 | 9,028 |
| 1997 (30-6-1997 முடிய) | 3,985 |

(இ) முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து சாலை விபத்துக்குள்ளானவர்கள் அல்லது அவர்களின் உறவினர்களுக்கு கீழ்க்காணும் வீதங்களில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

| | ரூபாய் |
| --- | --- |
| 1. இறப்பு | 3,000 |
| 2. நிரந்தர செயலிழப்பு | 1,500 |
| 3. ஒரு கண் அல்லது ஒரு உறுப்பு இழப்பு | 1,000 |
| 4. ஏனைய இனங்கள் | 100 |

இது கருணைத் தொகையாகும். இதற்கு நிபந்தனைகள் ஏதுமில்லை. எல்லா மனுதாரர்களும் அவர்களின் நிதித் தகுதியைக் கருத்திற்கொள்ளாமல், இந்நிவாரணத் தொகையைப் பெற உரிமையுடையவராவார். இதற்கென, மோட்டார் வண்டிகள் வரி வசூல் தொகையிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 1.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதிக அளவில் இறப்புகள் நேரிடும் கொடிய விபத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் ஆணையின் பேரில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உயரளவு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

**26—**

**பயணியர் விடுதி கட்டுதல்**

வினா **7915—திரு. ரா. ஈஸ்வரன்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர், சிவகிரியில் நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிவகிரியிலிருந்து சுமார் 12 கி.மீ. தூரத்தில் வாசுதேவநல்லூரில் நெடுஞ்சாலை பயணியர் விடுதி அமைந்திருப்பதால் சிவகிரியில் பயணியர் விடுதி கட்டும் அவசியம் இல்லை.

**27—**

**பாலம் சீரமைத்தல்**

வினா **8500—திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரில் உள்ள மணிமுத்தாறு பாலத்தை புதுப்பித்து சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விருத்தாசலம் நகரில் உள்ள மணிமுத்தாறு பாலம் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்படும் பெரிய மாவட்டச் சாலையான கடலூர்-விருத்தாசலம்-சேலம் சாலை கி.மீ 60/8ல் மணிமுத்தாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலமாகும். மேற்படி பாலத்தில், அவ்வப்போது ஏற்படும் சிறு பழுதுகள் உடனுக்குடன் சீர் செய்யப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் பாலம் தற்போது நல்ல நிலையில் உள்ளதால் இப்பாலத்தை புதுப்பிக்கத் தேவையில்லை.



**28—**

**சாலை செப்பனிடல்**

வினா **8555—திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதியில், சென்னை, பெங்களூர் சாலையிலிருந்து படூர் கிராமத்திற்குச் செல்லும் பழுதடைந்துள்ள சாலை செப்பனிடப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது, இதர மாவட்ட சாலையான படூர் சாலையாகும். இச்சாலையின் நீளம் 4.2 கி.மீ. ஆகும். (0/0-4/2) இதில் சிறப்புப் பழுது பார்த்தல் பணிகள் கீழ்க்கண்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன:

1. கி.மீ. 0/0-0/400
2. கி.மீ. 0/400-0/900
3. கி.மீ. 0/90-1/0 மற்றும் 1/0-1/300
4. கி.மீ. 1/3-2/0
5. கி.மீ. 2/0-3/0
6. கி.மீ. 3/0-4/2

இவற்றில் கி.மீ. 1/3-2/0 வரையிலான பணி மட்டும் முடிக்கப் பெற்றுள்ளது.

நடைபெற்று வருகின்ற இதர பணிகள் விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

**29—**

**சென்னைப் பெருநகரை விரிவுபடுத்துதல்**

வினா **10665—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைப் பெருநகரில் (எம்.எம்.டி.ஏ.) வளர்ச்சியை சீர்படுத்தும் விதத்தில் மாநகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம். சென்னை மாநகருக்குள் 50 திட்டங்களும், பெருநகருக்குள் 4 திட்டங்களுமாக மொத்தம் 54 விரிவான வளர்ச்சித் திட்டங்கள் இதுவரை அரசால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் சென்னை மாநகருக்குள் 10 திட்டங்களும், பெருநகருக்குள் 16 திட்டங்களும் வரையப்பட்டு வருகின்றன.

**30—**

### பணிமனை அமைத்தல்

வினா **10718—திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், போ. மல்லாபுரம், பேரூராட்சியில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பணிமனை அமைத்திட 22-3-1997 அன்று நடைபெற்ற இயக்குநர் குழுமக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் பணிமனை அமைப்பதற்காக 1.68 ஏக்கர் நிலத்தை பி. துரிஞ்சிப்பட்டியைச் சேர்ந்த திரு. எஸ். மாரப்பன், திரு. பாவு, திரு. பி. பெருமாள் கவுண்டர் ஆகியோர், போக்குவரத்துக் கழகத்திற்கு இலவசமாக வழங்கி உள்ளனர்.



**31—**

### துப்புரவுப் பணியாளர்களை நிரந்தரம் செய்தல்

வினா **11233—திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தில் பல ஆண்டுகளாகப் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்களா?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் எவ்வளவு?

(இ) மாதா மாதம் எந்தத் தேதியில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) பணிமனை மற்றும் பேருந்து நிலையங்களில் பணிபுரியும் அனைத்து துப்புரவுப் பணியாளர்களும் நிரந்தரப் பணியில் அமர்த்தப்பட்டவர்கள். அவர்கள் அனைவரும் பணி நிரந்தரம் செய்யப்பட்டு விட்டனர்.

(ஆ) ரூ. 1690-20-2170 என்ற மாதாந்திர அடிப்படைச் சம்பள விகிதத்தில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

(இ) அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வழங்குவதுபோல் மாதத்தின் கடைசிப்பணி நாளன்று ஊதியம் வழங்கப்படுகிறது.

**32—**

### பால் உற்பத்தியை அதிகரித்தல்

வினா **7832—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது நாள் ஒன்றுக்கு 18,297 லிட்டர் பால் 150 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 1997-98-ஆம் ஆண்டில் 500 உறுப்பினர்களுக்கு 2000 கறவை மாடுகள் மினி டைரி திட்டத்தின் கீழ் கடன் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பின்தங்கிய வளர்ச்சி வாரியத்தின் மூலம், 200 உறுப்பினர்களுக்கு 2 கறவை மாடுகள் வீதம் 400 கறவை மாடுகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. தாட்கோ திட்டத்தின்கீழ் 200 உறுப்பினர்களுக்கு 2 கறவை மாடுகள் வீதம் 400 கறவை மாடுகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மானியமில்லா திட்டத்தின் கீழ் 400 உறுப்பினர்களுக்கு இரண்டு கறவை மாடுகள் வீதம் 800 கறவை மாடுகள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1997-98-ஆம் ஆண்டில் புதியதாக ஆரம்பிக்கப்படவுள்ள 40 சங்கங்கள் மூலமாகவும், செயலிழந்த மற்றும் கலைக்கப்பட்ட சங்கங்களை புத்துயிர் ஊட்டுவதன் மூலமும் பால் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**33—**

**நீதிமன்றக் கட்டிடங்களுக்குக் கட்டிடம்**

வினா **10014—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, தக்கலையில் உள்ள பழுதடைந்த நீதிமன்ற கட்டிடங்களை மாற்றி புதியக் கட்டிடம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டம், தக்கலையில் புதிதாக நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.



**34—**

**கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி உதவி**

வினா **10893—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், கருக்குப் பாளையத்தில் ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டத்திற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கருக்குப்பாளையத்தில் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்திற்காக மத்திய அரசு அதன் பங்கின் முதல் தவணையாக ரூ. 9,275 அளித்துள்ளது. அதனை விடுவித்து மாநில அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**35—**

**மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா **7363—திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் உள்ள வாடிப்பட்டி பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதியில் உள்ள வாடிப்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

[1997 அக்டோபர் 18

36—

**மாணவர் விடுதி மற்றும் இல்லங்கள் கட்டுதல்**

வினா **10202—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள் எத்தனை துவக்கப்படும்?

(ஆ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் இல்லங்கள் எத்தனை துவக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1997-98-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்கள் விடுதிகள் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லங்கள் துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவிகள் விடுதி**

வினா **10364—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவிகள் விடுதி எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 283 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவிகள் விடுதிகள் இயங்கி வருகின்றன. இதைத்தவிர 1997-98-ஆம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் 10 மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி



1997 அக்டோபர் 18]

மாணவர் விடுதிகளும் 6 மிகப் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவியர் விடுதிகளும் துவங்க அரசு ஆணை (நிலை) எண் 47, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 5-5-1997 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 52, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, நாள் 15-5-1997-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

38—

**பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டிடம்**

வினா **10502—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூரில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்களின் விடுதிக்குக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வெள்ளக்கோவில் தொகுதி, மூலனூரில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதிக்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

**பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குக் கட்டிடம்**

வினா **11457—திரு. எஸ்.எஸ். மணிநாடார்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 18

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

**மாணவர் விடுதி அமைத்தல்**

வினா **11425—திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், பொன்னூர் மற்றும் சேத்துப்பட்டு ஒன்றியம் வடமாதிமங்கலம் ஆகிய கிராமங்களில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், பொன்னூர் மற்றும் சேத்துப்பட்டு ஒன்றியம், வடமாதிமங்கலம் ஆகிய கிராமங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

**மாணவர், மாணவியர் விடுதி அமைத்தல்**

வினா **11431—திரு. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 18]

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், கள்ளிக்குடியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர், மாணவியர் விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம், கள்ளிக்குடியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதி தொடங்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

**இலங்கைத் தமிழ் அகதிகள் வேலை செய்ய அனுமதி**

வினா **11843—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாமில் இலங்கைத் தமிழ் அகதிகள் வெளியே சென்று வேலை பார்க்க அனுமதிக்கப்படுகிறார்களா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த முகாம் அகதிகள் வெளியே சென்று வேலை பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் வெளியே சென்று வேலை பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) வெளிநாட்டவர்கள் மற்றும் கடவுச்சீட்டு சம்பந்தமான சட்ட மீறல்கள் வழக்குகளில் சம்பந்தப்பட்டு, வேலூர், மேலூர் மற்றும் செங்கற்பட்டு ஆகிய இடங்களில் உள்ள சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகளைத் தவிர, ஏனைய அனைத்து முகாம் அகதிகளும் வேலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

**43—**

**கணிப்பொறி மூலம் பத்திரப் பதிவு**

வினா **11946—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களில் கணிப்பொறி மூலம் பத்திரப் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர்:**

1997-98 பகுதி-2 திட்டத்தில் பதிவுத் துறையை கணினிமயமாக்க ரூ. 1.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் தமிழ்நாட்டின் பெருநகரங்களிலுள்ள சார்பதிவகங்களை மட்டுமே நடப்பாண்டில் கணிப்பொறிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களையும் படிப்படியாக கணிப்பொறி மயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதால், வரும் ஆண்டுகளில் தருமபுரி நகரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களையும் கணிப்பொறிமயமாக்கும் வாய்ப்புள்ளது. எனினும், தருமபுரி நகரங்களிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களில் கணிப்பொறி மூலம் பத்திரப் பதிவு செய்யும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**44—**

**பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்தல்**

வினா **10618—திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டியில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தண்டராம்பட்டு தொகுதி, தச்சம்பட்டியில் புதிய சார்பதிவகம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**45—**

**ஆழ்குழாய்க் கிணறு பழுதுபார்த்தல்**

வினா **2011—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதி ஆதிதிராவிட காலனியில் உள்ள சமுதாய ஆழ்குழாய்க் கிணறு பழுதடைந்து இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதி ஆதிதிராவிடர் குடியிருப்பில் பழுதடைந்துள்ள ஆழ்குழாய்க் கிணற்றினைப் பழுதுபார்க்க மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**46—**

**பனியன் தொழிற்பேட்டை கட்டுமானப் பணிகள்**

வினா **5750—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், ஈங்கூர் கிராமத்தில் தாட்கோ மூலம் அமைத்து வரும் பனியன் தொழிற்பேட்டை கட்டுமானப் பணிகள் முடிந்துவிட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர் கிராமத்தில் தாட்கோ மூலம் 189 ச.மீ. பரப்புள்ள 200 தொழிற்கூட அலகுகளுக்கு, திண்காரை மேற்கூரைப் பாலம் வேயப்பெற்றுவிட்டன. (Roof Slab Concrete) அவற்றில் 91 அலகுகள் முடிப்புப் பணிகளை எட்டியுள்ளன. எஞ்சிய அலகுகளில், பல்வேறு நிலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வாறே இணையமைவுப் பணிகளான சாலை விளக்குகள் அமைத்தல், நீர் வழங்க குழாய்களமைத்தல், கழிவுநீர் வசதிப் பணிகள், நிலமேம்படுத்துதல் மற்றும் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கீழ்நிலை மேனிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், மின்விசைக் குழாய் அமைப்பு - மோட்டார் பொருத்துதல் (Pump and motor) போன்ற பணிகள் முடிக்கப்பெற்று விட்டன.

**47—**

**திருமண மண்டபம் கட்டுதல்**

வினா **7747—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், பொம்மநாயக்கன் பாளையம், நெறிப்பறைசசல் ஊராட்சியில் ஆதிதிராவிடர் காலனியில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?





விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**48—**

**காட்டுநாயக்கன் பழங்குடியினருக்கு சாதிச் சான்று**

வினா **10132—திரு. அ. அசோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் வாழும் காட்டுநாயக்கன் பழங்குடியின மக்களுக்கு சாதிச் சான்று தாமதமில்லாமல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே ஆவன செய்யப்பட்டுள்ளது.

**49—**

**மீன் வளத் துறையின் உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்தல்**

வினா **10125—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திற்கென்று தனியாக மீன்வளத் துறையின் உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டத்திற்கென்று தனியாக மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம் மணிமுத்தாறு தலைமையிடமாகக் கொண்டு ஏற்கெனவே இயங்கி வருகிறது.

(ஆ) இவ்வினா எழாது.

**50—**

**மீன் வளர்ச்சி முகமை விவரம்**

வினா **10651—திரு. இ. கணேசன்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள ஏரிகளில் மீன் வளர்ச்சி முகமையில் எடுத்துக்கொண்ட ஏரிகள் எத்தனை?

(ஆ) மீன் வளர்ச்சி முகமையில் 1996-97-ஆம் ஆண்டின் செயல்பாடு என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள ஏரிகளில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலமாக மீன் வளர்ச்சிக்காக எந்த ஏரிகளும் எடுக்கப்படவில்லை.

(ஆ) தமிழ்நாட்டில் தற்போது 13 மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் இயங்கி வருகின்றன. 1996-97-ஆம் ஆண்டில் சுமார் 3400 ஹெக்டேர் குளங்களில் சுமார் 160 இலட்சம் பெருரக மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன. இதன்மூலம் சுமார் 4700 டன்கள் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், 2300-க்கும் மேற்பட்ட மீன் வளர்ப்போர்கள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர். இத்துடன் 125 மீன் வளர்ப்போர்களுக்கு இம்முகமைகளின் மூலம் மீன் வளர்ப்பது குறித்து தொழில்நுட்ப பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.





**(நான்காம் பட்டியல்)**

**1—**

**தீயணைப்பு நிலையத்திற்கு நவீன வாகனம்**

வினா **10824—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை தீயணைப்பு நிலையத்தில் காலாவதியான வாகனத்தை மாற்றி புதிய நவீன வாகனம் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை தீயணைப்பு நிலையத்தின் நீர்தாங்கி வண்டி டி.சி.சி. 5480க்கு (1981 இந்துஸ்தான் மோட்டார் மாடல்) செல்ப் மோட்டார் பழுது உள்ளது. இப்பகுதியைச் செப்பனிட்டு ஊர்தியை ஓடும் நிலையில் வைக்க இயலுமென மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இப்பழுதினை அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பணிமனையில் செப்பனிட, மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையினரின் தடையின்மைச் சான்று பெற்று, விலைப் பட்டியல்கள் கோரப்பட்டுள்ளன. விரைவில் இவ்வூர்தியின் பழுதுகள் செப்பனிட்டு நன்கு இயங்கும் நிலையில் வைக்கப்படும். இதற்கிடையில் மாற்று ஏற்பாடாக, நாகர்கோவில் தீயணைப்பு நிலையத்தில் உள்ள இரு ஊர்திகளில், 1 நீர்த்தாங்கி வண்டியினை (டிஎன்.37. ஜி.261) தற்காலிகமாக தக்கலை தீயணைப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்க நாகர்கோவில் கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை தீயணைப்பு நிலையத்திற்கு புதிய வாகனம் வழங்க அவசியமில்லை.

**2—**

**புகார் பெட்டி வைக்கும் திட்டம்**

வினா **11227—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்களில் பொது மக்களின் கருத்தை வெளிப்படுத்தும் புகார் பெட்டி வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் பொது மக்களிடமிருந்தும், அரசு ஊழியர்களிடமிருந்தும் புகார்களை பெறுவதற்கு மாவட்டாட்சியர் அலுவலகம், தாலுகாக்கள் மற்றும் துறைத் தலைவர் அலுவலகங்களில் புகார் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதில் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்று 6-4-1987 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை நிலை எண் 305-லும் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 8-9-1995 நாளிட்ட கடித எண் 83314/எ/94-11-லும் அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. புகார் மனுக்களைப் பெற வாரத்தில் ஒரு நாளைத் தேர்வு செய்து, மனுக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பெறப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, அரசு அலுவலகங்களில் புகார்களை பெறுவதற்கு புகார் பிரிவுகளும், குறை தீர்க்கும் நாட்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், புகார் பெட்டி வைக்கும் திட்டம் ஏதும் அரசு அளவில் ஆய்வில் இல்லை.

3—

**காவலர்கள் நியமனம்**

வினா **11981—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1996-ல் காவல்துறையில் புதிதாக காவலர்கள் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஆ) ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டு விடுபட்டவர்கள் எவ்வளவு பேர்?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) காவல் துறையில் 1996 ஆம் ஆண்டு புதிதாகக் காவலர்கள் நியமிக்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

4—

**விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு விடுதிகள்**

வினா **6627—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டு வீரர்களுக்கு என தனியாக விளையாட்டு விடுதிகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1. விளையாட்டு வீரர்களுக்கு என தனியாக விளையாட்டு விடுதிகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் இயங்கி வரும் விளையாட்டு அரங்கங்களிலேயே விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான வசதி செய்யப்பட்டு, அவை விடுதிகள் போல் செயல்படுவதால் விளையாட்டு வீரர்களுக்கென தனியாக விடுதி கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை

2. விளையாட்டுக்களில் சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களுக்கென்று 15 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. அவற்றில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரம் கீழ்வருமாறு:—

[1997 அக்டோபர் 18

| விளையாட்டு விடுதி (மாணவர்களுக்கு மட்டும்) | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | விளையாட்டு அரங்கம் | விளையாட்டு விடுதி | பயிற்றுவிக்கப்படும் விளையாட்டு |
| 1 | 2 | 3 | 4 |
| திருச்சி | அண்ணா விளையாட்டரங்கம். | திருச்சி | தடகளம். கால்பந்து. கையுந்து பந்து. |
| மதுரை | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கம். | மதுரை | தடகளம். கால்பந்து. கூடைப்பந்து. |
| திருநெல்வேலி | அண்ணா விளையாட்டு அரங்கம். | திருநெல்வேலி | தடகளம். ஹாக்கி. கையுந்து பந்து. |
| விளையாட்டு விடுதி (மாணவியர் மட்டும்) | | | |
| ஈரோடு | வ.உ.சி. விளையாட்டு அரங்கம். | ஈரோடு | தடகளம். கூடைப்பந்து. கையுந்து பந்து. |
| தர்மபுரி | விளையாட்டு அரங்கம் | தர்மபுரி | தடகளம். கையுந்து பந்து. |

**3. விளையாட்டுப் பள்ளிகள் கீழ்க்காணும் இடங்களில் உள்ளன:—**

**விளையாட்டுப் பள்ளி:**

| | | |
|---|---|---|
| சென்னை | ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை. | தடகளம், ஹாக்கி, நீச்சல். |
| நெய்வேலி | என்.எல்.சி. விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | தடகளம். கிரிக்கெட். கால்பந்து. |
| கோவை | எஸ்.ஆர்.கே. மாருதி விளையாட்டுப் பள்ளி. கோவை. | தடகளம். கூடைப்பந்து. கையுந்து பந்து. |



1997 அக்டோபர் 18]

**4. வசதிகள்:**

**விளையாட்டுப் பள்ளி:** விளையாட்டுப் பள்ளி வளாகத்தில் உள்ள விடுதிகளில் மாணவ/மாணவியர் தங்கி, அப்பள்ளியில் படிப்புடன் விளையாட்டுப் பயிற்சியினைத் தொடர்ந்து பெற்று வருகின்றனர்.

**விளையாட்டு விடுதி:** விளையாட்டு அரங்கங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு விடுதிகளில் மாணவ/மாணவியர் தங்கி, அருகில் உள்ள பல்வேறு பள்ளிகளுக்குச் சென்று படிப்பினைத் தொடர்வதுடன், விளையாட்டு அரங்கங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி பயிற்சியினைப் பெற்று வருகின்றனர். தமிழ்நாட்டில் நடத்தப்படும் விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகளில், எட்டு, ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்புகளில் சேர விளையாட்டுத் திறமை உள்ள மாணவ மாணவிகள் இட எண்ணிக்கையைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு உறைவிடம் மற்றும் உணவுக்காக ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 600/- செலவிடப்படுகிறது. விளையாட்டிற்கான சீருடைகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு என்.ஐ.எஸ். பயிற்சி பெற்ற பயிற்றுநர் மூலம் தீவிர பயிற்சி அளிக்கப்படுகிறது.

5—

## நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம்

வினா **9177—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குத்தாலம் பேரூராட்சியில் உள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குத்தாலம் பேரூராட்சியில் தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு காலிமனை பெற நாகப்பட்டினம் மாவட்ட நூலக அலுவலர் கேட்டுக்

கொள்ளப்பட்டுள்ளார். காலிமனை பெறப்பட்டதும் தொழில்நுட்பக் கல்வித் துறையிலிருந்து மதிப்பீடு பெற்று கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

## நூலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா **9836—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகின்ற நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டிலேயே கட்ட ஏற்பாடு செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் இயங்கி வருகின்ற கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட காலிமனை பெற மாவட்ட நூலக அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காலிமனை பெறப்பட்டதும் சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) இந்நிதியாண்டில் மாவட்ட நூலக அலுவலரால் காலிமனை பெறப்படுமேயானால், இந்நிதியாண்டிலேயே கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

## கருணை அடிப்படையில் வேலை

வினா **10177—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பணிக்காலத்தில் தாய், தந்தையரை இழந்த குடும்பத்தாருக்கு, தகுதி உடைய மாணவ, மாணவியர்க்கு கல்வித் துறையில் கருணை அடிப்படையில் வேலை கிடைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?*



விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இவ்வகையான திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. அரசு அலுவலர் பணியில் இருக்கும்போது இறந்தால் கருணை அடிப்படையில், வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

8—

## படை வீரர் விதவைகளுக்கு அளித்த கடன்தொகை விவரம்

வினா **10200—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் காதி மற்றும் கிராமத் தொழில் தொடங்க படை வீரர் விதவைகளுக்கு 1996-97, 1997-98-இல் எவ்வளவு தொகை கடன் உதவியாக அளிக்கப்பட்டுள்ளது?*

*(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு தொகை கடன் உதவியாக அளிக்கப்பட்டுள்ளது?*

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1996-97, 1997-98 ஆண்டுகளில் கதர் மற்றும் கிராமத் தொழில் தொடங்க படை வீரர் விதவையருக்கு கடன் தொகை ஏதும் முன்னாள் படை வீரர் நலத் துறை மூலமோ மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமோ அளிக்கப்படவில்லை.

(ஆ) சேலம் மாவட்டத்தில் முன்னாள் படை வீரர் நலத் துறை மூலமோ அல்லது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமோ கடன் உதவி ஏதும் அளிக்கப்படவில்லை.

9—

### தேர்வு மையம் அமைத்தல்

வினா **11207—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலைத் தேர்வு மையத்தை நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மார்ச் 1998-ல் நடைபெறவிருக்கும் மேல்நிலைத் தேர்விற்கு இப்பள்ளியினை தேர்வு மையமாக அமைக்க உரிய ஆய்வு அலுவலரின் (தஞ்சாவூர், முதன்மைக் கல்வி அலுவலர்) பரிந்துரையுடன் கிடைக்கப்பெறின் அரசின் நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப தேர்வு மையம் அமைக்க உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

### ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம்

வினா **9543—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98-ஆம் ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டும் திட்டத்தில் சேலம், ராஜாஜி மாவட்டத்தில் எத்தனை கட்டிடங்கள் கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1997-98-ஆம் நிதியாண்டில் ரூ. 24.64 கோடி மொத்தச் செலவில் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான ஆணை அரசாணை எண் (நிலை) 212, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12-5-1997-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சேலம் மாவட்டத்தில் 21 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டிடம் கட்ட ஆணை வழங்கப்பட்டுள்ளது.





11—

### தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் விவரம்

வினா **9544—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97-ல் தமிழ்நாட்டில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில், சேலம், ராஜாஜி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97-ல் தமிழ்நாட்டில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 63,589.

(ஆ) சேலம், ராஜாஜி மாவட்டத்தில் 1996-97-ல் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 4,369.

12—

### அரசு மருத்துவமனை மீண்டும் செயல்படுதல்

வினா **9690—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமப்பட்டி பஞ்சாயத்தில் உள்ள பாலப்பட்டியில் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசு மருத்துவமனை செயல்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்த மருத்துவமனை மீண்டும் செயல்பட அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமப்பட்டி பஞ்சாயத்தில் உள்ள பாலப்பட்டியில் டேனிடா திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனை ஏதும் இல்லை. ஆனால் டேனிடா திட்டத்தில் பாலப்பட்டியில் துணைச் சுகாதார நிலையம் கட்டப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(ஆ) இத்துணைச் சுகாதார நிலையம் நல்ல முறையில் இயங்கி வருவதால், இக்கேள்விக்கு இடமில்லை.

**13—**

### மருத்துவமனை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை

வினா **9691—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் துன்னந்தேரி பஞ்சாயத்தில் டேனிடா திட்டத்தில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை செயல்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் துன்னந்தேரி பஞ்சாயத்தில் மருத்துவமனை ஏதும் இயங்கவில்லை. ஆனால், தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் துன்னந்தேரி கிராமத்தில் கட்டப்பட்டு துணைச் சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.

(ஆ) மேலே சொன்னவாறு, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள வைகுந்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் துன்னந்தேரி துணைச் சுகாதார நிலையம் இயங்கி வருவதால் இக்கேள்விக்கு இடமில்லை.

**14—**

### மருத்துவமனை மீண்டும் செயல்படுத்துதல்

வினா **9692—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி பஞ்சாயத்தில் உள்ள டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட மருத்துவமனை செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது மீண்டும் செயல்பட அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளி பஞ்சாயத்தில் டேனிடா திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனை ஏதும் கட்டப்படவில்லை. ஆனால் எடப்பாடி தொகுதியில் வெள்ளரிவெள்ளி பஞ்சாயத்து கிராமத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கட்டிடம் கட்டப்பட்டு துணைச் சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.

(ஆ) துணைச் சுகாதார நிலையம் இயங்கி வருவதால், இக்கேள்விக்கு இடமில்லை.

15—

## பெண்களுக்கு உதவித் தொகை

வினா 10333—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-97-ல் ஈரோடு மாவட்டத்தில் குடும்பத் தலைவனை இழந்த ஏழைப் பெண்களுக்கு எவ்வளவு தொகை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) பவானி தொகுதியில் குடும்பத் தலைவனை இழந்த ஏழைப் பெண்கள் எத்தனை பேர் விண்ணப்பம் செய்தார்கள்? அதில் எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம் மற்றும் பவானி தொகுதியில் வழங்கப்பட்ட நிவாரணம் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | 1995-96 | | 1996-97 | |
|---|---|---|---|---|
| | விபத்து நிவாரணம் | நலிந்தோர் குடும்ப நல நிவாரணம் | விபத்து நிவாரணம் | நலிந்தோர் குடும்ப நல நிவாரணம் |
| (அ) ஈரோடு மாவட்டத்தில் குடும்பத் தலைவனை இழந்த ஏழைப் பெண்கள் | 25 | 1885 | 10 | 1160 |
| நிவாரணத் தொகை | 2,47,000 | 94,25,000 | 1,00,000 | 58,00,000 |
| (ஆ) பவானி தொகுதியில் குடும்பத் தலைவனை இழந்த ஏழைப் பெண்கள் விண்ணப்பம் செய்தவர்கள் | - | 210 | - | 362 |
| நிவாரணத் தொகை | - | 7,15,000 | - | 4,35,000 |





16—

## விதவைகளுக்கு உதவித் தொகை

வினா 10858—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு, குடும்பத் தலைவன் இறந்துவிட்டால், அவர்களது விதவை மனைவிகளுக்கு வழங்கப்படும் ரூ. 7,500/- உதவித் தொகையை அவர்களுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்மக்கள் இருந்தாலும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஒரு குடும்பத்தில் வயது வந்த ஆண்பிள்ளைகள் சம்பாதிக்கும் நபர்களாக இருப்பின் அவர்கள் தம் தாய்/தந்தை, உடன் பிறந்தவர்களை உடன் வைத்துக் காப்பாற்றும் கடமைப்பட்டவர்கள். அவர்கள் தனியாகக் குடும்பம் நடத்தி வந்தாலும், அவர்கள் தங்கள் கடமையிலிருந்து விடுபட்டவர்களாக எடுத்துக்கொள்ள முடியாது. எனவே, ஒரு குடும்பத்தில் பொருளீட்டும் வயது வந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் வாரிசுதாரர்கள் இருந்தால், அவர்களின் பொருளீட்டி வந்த தந்தை/தாய் இறந்ததற்காக அவர்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு நலிந்தோர் குடும்பநல நிவாரணத் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்க இயலாது. இதனை திருத்தியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

17—

## கணிப்பொறியை அறிமுகப்படுத்துதல்

வினா 12480—**திரு ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தாலுகா அலுவலகத்தில் கோப்புகளை கணிப்பொறி மூலம் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**18—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் செயல்படுத்துதல்**

வினா **591—திரு ச. அழகிரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், காவாலக்குடி மற்றும் ஒடக்கநல்லூர் ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எப்போது செயல்படத் துவங்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கீரப்பாளையம் ஒன்றியம், காவாலக்குடி கிராமத்திற்கு 1996-97-ஆம் ஆண்டில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் இணைக்கப்பட்டு தற்காலிக ஏற்பாடாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் இறைப்பான் திட்டம் 1997-98-ஆம் ஆண்டில் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

ஒடக்கநல்லூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி 1997-98-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட உள்ளது.

**19—**

**மயானப் பாதை அமைக்கும் திட்டம்**

வினா **2215—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஒன்றியம், அலமேலுமங்காபுரத்தில் மயானப் பாதை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, பறங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அலமேலுமங்காபுரம் மயானப் பாதை மொத்தம் 1.0 கி.மீ தூரம் உள்ளது. 500 மீட்டர் சாலை ரூ. 20,000/- மதிப்பீட்டில் 1996-97-ஆம் ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள 500 மீட்டர் சாலை 1997-98-ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

**20—**

**தரைப் பாலம் கட்டுதல்**

வினா **3143—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் ஒன்றியம் சூலாங்குறிச்சி அணையையும் கள்ளக்குறிச்சி சாலையிலுள்ள அகர கோட்டாலத்தையும் இணைக்கும் வகையில் தரைப் பாலம் ஒன்று கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ரிஷிவந்தியம் ஒன்றியம், சூலாங்குறிச்சி அணையிலிருந்து நீர் வெளியேறும் பகுதிக்கு மிக அருகாமையில் சேதமடைந்த பாலம் உள்ளது. இங்கு நீரின் வேகம் மிகவும் அதிகமாக உள்ளதால் தரைப் பாலம் அமைக்கப்பட்டால் உடனே முற்றிலும் பாதிக்கப்பட வாய்ப்பு

உள்ளது. எனவே இந்தத் திட்டத்தில் உயர்மட்ட பாலம் அமைக்கலாம். இப்பாலம் அமைக்க ரூ. 2 கோடி தேவைப்படும், இப்பாலம் அமைக்கும் திட்டம் தற்போது பரிசிலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**21—**

**தார்ச் சாலைகளாக்குதல்**

வினா **5500—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, மலையப்பாளையம்-குன்னத்தூர் சாலை முதல் மூக்குத்திப் பிள்ளையார் கோவில் வரை மற்றும் ராமேகவுண்டன் பாளையம் முதல் தாராபுரம் வரை— விஜயாபுரம் முதல் அமராவதி பாளையம் வரை மேற்குப்பகுதி ஊராட்சி ஈச்சம்பள்ளம் முதல் கொன்னக்காடு ஆதிதிராவிடர் காலனி வரை உள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ):

1. மலையப்பாளையம்—குன்னத்தூர் சாலை முதல் மூக்குத்திப் பிள்ளையார் கோவில் வரை தார்ச்சாலை அமைத்தல்

இந்தச் சாலையின் மொத்த நீளம் 3 கி.மீ. இதில் 1 கி.மீ. சாலை திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் 1996-97 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டு தற்போது வேலை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 2 கி.மீ. நீளமுள்ள சாலையை ஊரகசாலைத் திட்டம் (நெடுஞ்சாலை கிராமப் பணி) துறை மூலம் அனுமதிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.



*2. தாராபுரம்- திருப்பூர் சாலை முதல் ராமேகவுண்டன் பாளையம் வரை தார்ச் சாலை அமைத்தல்:*

இந்தச் சாலையின் மொத்த நீளம் 2.1 கி.மீ. 1996-97-ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்பு திட்டத்தில் மேற்படி சாலையை தார்ச் சாலையாக மாற்றும் பொருட்டு 7.28 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

*3. விசயாபுரம்-அமராவதி பாளையம் வரை தார்ச் சாலை அமைத்தல்:*

இந்தத் தார்ச் சாலை அமைக்கும் பணி ஊரக சாலை திட்டம் (நெடுஞ்சாலை) கிராமப் பணித் துறை மூலம் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*4. மேற்குப்பகுதி ஊராட்சி-ஈச்சம்பள்ளம் முதல் கொன்னக்காடு ஆதிதிராவிடர் காலனி வரை தார்ச்சாலை அமைத்தல்:*

இந்தச் சாலை அமைக்கும் பணி 1997-98 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**22—**

**தார்ச் சாலை அமைத்தல்**

வினா **5892—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, கொணலூருக்கும்-சிறுவள்ளிக் குப்பத்திற்கும் இடையே உள்ள சுமார் 2 கி.மீ பாதையை தார்ச்சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொணலூர்-சிறுவள்ளிக் குப்பம் 1.20 கி.மீ. சாலையை தார்ச்சாலையாக மாற்ற 1996-97 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு

உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலைப் பணி விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

**23—**

### சாலை வசதி செய்தல்

வினா **10244—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, காட்டு நாயக்கன் அள்ளி கிராமத்திற்குச் செல்ல சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டிலே ஆவன செய்யப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், வட்டுவனஅள்ளி ஊராட்சி, காட்டுநாயக்கன் அள்ளி கிராமம், தருமபுரி முதல் பென்னாகரம் வரை உள்ள சாலையில் கி.மீ. 27/0 வலதுபுறமாக பிரிந்து செல்கிறது. வண்ணாத்திப்பட்டியிலிருந்து காட்டுநாயக்கன் அள்ளி வரை உள்ள தூரம் 3.20 கி.மீ ஆகும். இங்கு தற்சமயம் ஜல்லிசாலை உள்ளது. இச்சாலையை சீர் செய்து தார்ச் சாலையாக மாற்றவும் ஆங்காங்கு பாலங்கள் கட்டவும், மொத்த செலவினம் ரூ. 14 இலட்சம் தேவைப்படும். நடப்பு ஆண்டு திட்டப் பணிகள் அனைத்தும் துவக்கப்பட்டு விட்டதால் வருகின்ற நிதியாண்டில் இப்பணியினை மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்படும்.

**24—**

### புதிய சாலை வசதி

வினா **10246—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி சாமத்தான் கொம்பாடியூர் அடுத்துள்ள குழிக்காடு கிராமப் பகுதிக்கு புதிய சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி சாமத்தான் கொம்பாடியூர் அடுத்துள்ள குழிக்காடு கிராமப்பகுதிக்கு புதிய சாலை வசதி செய்ய மேற்படி கிராமப் பகுதியின் இருபுறங்களிலும் உள்ள பட்டா நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து தர வேண்டியுள்ளதால், நில ஆர்ஜிதம் செய்த பின்பு சாலை வசதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25—**

### புதிய பாதை அமைக்கும் பணி

வினா **10247—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, புள்ளப்பட்டி கிராமத்திற்கு இதுவரை பாதை வசதியே இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாதை அமைக்கும் பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், மாங்கரை ஊராட்சி, புள்ளம்பட்டி கிராமத்திற்கு சாலை வசதி செய்யும் பொருட்டு பெண்ணாகாம் வட்டாட்சியரால் நில ஆர்ஜிதம் செய்து தர

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில ஆர்ஜிதம் செய்து கொடுத்த பின்பு சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**26—**

### மண் சாலை அமைத்தல்

வினா **10248—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, நெக்குத்தி முதல் பாலிக்காடு வரை மண் சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் தொகுதி, எச்சனஅள்ளி ஊராட்சி, நெக்குத்தி முதல் பாலிக்காடு வரை உள்ள சாலையின் நீளம் சுமார் 3.0 கி.மீ ஆகும். இச்சாலையில் ஆங்காங்கே பெரிய மேடும், பள்ளங்களும், பாறைகளும் உள்ளதால் இச்சாலையை சீர் செய்து சாலையமைக்க சுமார் ரூ. 50,000 செலவு ஏற்படும் எனவும் நடப்பு ஆண்டு திட்டங்கள் அனைத்தும் அனுமதி பெற்று செயல்படுத்த துவங்கப்பட்டு விட்டதால் இப்பணியினை வரும் நிதியாண்டில் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்படும்.

**27—**

### சாலை வசதி ஏற்படுத்துதல்

வினா **10249—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் குருநாத கவுண்டர் கொட்டாய் வழியாக பிச்சமாதைய கவுண்டர் கொட்டாய் மெட்டுக்கல் வரை சாலை வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த குருநாத கவுண்டர் கொட்டாய் வழியாக பிச்சமாதைய கவுண்டர் கொட்டாய் மெட்டுக்கல் வரையுள்ள சாலையின் நீளம் சுமார் 1.60 கி.மீ. ஆகும். இதில் 0/0- 0/8வரை தற்சமயம் புதியதாக சாலை மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 0/8- 1/6 கி.மீ. வரையுள்ள சாலையை சீர் செய்ய இச்சாலையின் இருபுறங்களிலும் உள்ள பட்டா நிலங்களை நில எடுப்பு செய்த பின்பே மேற்படி கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர இயலும்.

**28—**

### சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான நேர்முகத் தேர்வு விவரம்

வினா **10655—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்தினர் சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கு நேர்முகத் தேர்வு, சென்னை ஆணையர் அலுவலகத்தில் நடத்தி, இதுவரை எந்த முடிவும் அறிவிக்கப்படாமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பயிற்சியாளர்களுக்கான முடிவு எப்பொழுது அறிவிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான நேர்முகத் தேர்வு முடிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநரால் வெளியிடப்பட்டு தேர்ச்சிபெற்ற நபர்களுக்கு உத்தரவுகள் அனுப்பப்பட்டு, மேற்படி நபர்கள் தங்களுக்கு ஆணை வழங்கப்பட்ட நகராட்சிகளில் துப்பரவு ஆய்வாளர்களாகப் பொறுப்பு ஏற்று பணிபுரிந்து வருகிறார்கள்.

**29—**

**உரம், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் விதை விற்பனை விவரம்**

வினா **11811—திரு இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உரம், பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் விதை எவ்வளவு விற்பனை செய்யப்பட்டது?

(ஆ) சங்ககிரி வட்டத்தில் உரம், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் விதை எவ்வளவு விற்பனை செய்யப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் வழங்கப்பட்ட இடுபொருட்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| வழங்கப்பட்ட இடுபொருள் | | அளவு (டன்னில்) |
|---|---|---|
| **1.** | **விதை விநியோகம்—** | |
| 1. | நெல் | 553.0 |
| 2. | சிறுதானியங்கள் | 37.0 |
| 3. | பயறு வகைகள் | 202.0 |



| வழங்கப்பட்ட இடுபொருள் | | அளவு (டன்னில்) |
|---|---|---|
| 4. | பருத்தி | 28.0 |
| 5. | நிலக்கடலை | 656.0 |
| 6. | எள் | 6.5 |
| 7. | சூரியகாந்தி | 32.6 |
| 8. | ஆமணக்கு | 31.3 |
| 9. | சோயாபீன்ஸ் | 27.5 |
| **2.** | **பயிர் பாதுகாப்பு மருந்துகள்—** | |
| 1. | தூள் | 125.5 |
| 2. | திரவம் (லிட்டர்) | 99436 |
| **3.** | **உரங்கள்—** | |
| 1. | அமோனியம் சல்பேட் | 3068 |
| 2. | யூரியா | 17370 |
| 3. | கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் | 967 |
| 4. | அம்மோனியம் குளோரைட் | 2656 |
| 5. | அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் | 6219 |
| 6. | அம்மோனியம் பாஸ்பேட் | 4337 |
| 7. | சூப்பர் பாஸ்பேட் | 8005 |
| 8 | ராக் பாஸ்பேட் | 1491 |
| 9. | மூரியேட் ஆப் பொட்டாஷ் | 14707 |
| 10. | டை அம்மோனியம் பாஸ்பேட் | 5028 |
| 11. | காம்ப்ளக்ஸ் 15:15:15 | 2632 |
| 12. | காம்ப்ளக்ஸ் 17:17:17: | 10849 |

| வழங்கப்பட்ட இடுபொருள்கள் | அளவு (டன்னில்) |
|---|---|
| 13. காம்ப்ளக்ஸ் 10:26:26 | 5573 |
| 14. காம்ப்ளக்ஸ் 14:28:14 | 2013 |
| 15. தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் அடங்கிய கலப்பு உரங்கள் | 24755 |

(ஆ) 1996-97-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் சங்ககிரி உட்கோட்டத்தில் வழங்கப்பட்ட இடுபொருட்களின் விவரம் பின்வருமாறு:-

| வழங்கப்பட்ட இடுபொருள்கள் | அளவு (டன்னில்) |
|---|---|
| 1. நெல் | 60.0 |
| 2. சிறுதானியங்கள் | 4.3 |
| 3. பயறு வகைகள் | 23.2 |
| 4. பருத்தி | 1.5 |
| 5. நிலக்கடலை | 92.3 |
| 6. எள் | 1.0 |
| 7. சூரியகாந்தி | 0.9 |
| 8. ஆமணக்கு | 6.0 |
| 9. சோயாபின்ஸ் | 2.5 |
| **2. பயிர் பாதுகாப்பு மருந்துகள்** | |
| 1 தூள் | 25.5 |
| 2. திரவம் (லிட்டர்) | 3800 |
| **3. உரங்கள்** | |
| 1. அம்மோனியம் சல்பேட் | 67 |
| 2. யூரியா | 2640 |



| வழங்கப்பட்ட இடுபொருள்கள் | அளவு (டன்னில்) |
|---|---|
| 3. கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் | 55 |
| 4. அம்மோனியம் குளோரைடு | 57 |
| 5. அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் | 45 |
| 6. அம்மோனியம் சல்பேட் | 450 |
| 7. சூப்பர் பாஸ்பேட் | 330 |
| 8. மூரியேட் ஆப் பொட்டாஷ் | 910 |
| 9. டை அம்மோனியம் பாஸ்பேட் | 495 |
| 10. காம்ப்ளக்ஸ் 15:15:15 | 140 |
| 11. காம்ப்ளக்ஸ் 17:17:17 | 980 |
| 12. காம்ப்ளக்ஸ் 14:28:14 | 130 |
| 13. காம்ப்ளக்ஸ் 10:26:26 | 530 |
| 14. தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் அடங்கிய கலப்பு உரங்கள் மொத்தம் | 1569 |

**30—**

## ஏரிகளைச் செப்பனிடுதல்

வினா **6556—திரு கு. மனோகரன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், செட்டிக்கரை ஊராட்சி ராஜாதோப்பு, பள்ளக்கொல்லை ஆகிய ஊர்களில் ஏரிகளைச் செப்பனிட அரசு ஆவன [illegible]யயுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர்:**

செட்டிக்கரை கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த செட்டிக்கரை ஏரி சீர் செய்யும் பணிகளுக்கு ரூ. 60,000/- வேலை

வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பணியை விரைவில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

31—

கால்வாய்கள் பழுதுபார்த்தல்

வினா 8519—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தெற்கு மேடு சாத்தான்குளம் கால்வாய்களை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன்; பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) தென்காசி தொகுதி, தெற்குமேடு, சாத்தான்பத்து குளத்து வடிகால் வாய்க்காலில் ஏற்பட்ட உடைப்புகள் தற்காலிகமாக மணல் மூட்டைகளை அடுக்குதல் மற்றும் மண் வேலைகள் மூலம் ரூ. 50,000/-க்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. நிரந்தர பணியாக தடுப்புச் சுவர் கட்ட ரூ.1,37,000-க்கு திருநெல்வேலி கோட்டம் மூலம் மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்நிதியாண்டில் நிதி நிலைக்கேற்ப, மழைக்காலத்திற்கு, முன்பு இப்பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

32—

சானல் உடைப்பு கட்டுமானப் பணி

வினா 10019—**திரு. . சி. வேலாயுதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபுரம் தொகுதி, தோட்டியோடு பி.பி. சான்ல் உடைப்பு பல ஆண்டுகளாகக் கட்டாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?



(ஆ) கட்டுமானப் பணியைத் துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி நிதி உதவி திட்டத்தின் கீழ் கோதையாறு வடி நில திட்ட கால்வாய்கள் அனைத்தும் சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதில் பி.பி. சானல் முழுவதும் சீரமைக்க ரூ. 211.86 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தோட்டியோடு கால்வாயில் ஏற்பட்ட உடைப்பை செப்பனிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்குரிய திட்ட மதிப்பீடுகள் அரசின் ஒப்புதல் பெறப்பட்டு வேலை செய்வதற்கான ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட்டு 1998-99ஆம் ஆண்டில் பணிகள் துவங்கப்படும்.

33—

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை

வினா 6767—**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி-திருநெல்வேலி நெடுஞ்சாலையில் தென்காசி தபால் நிலையத்திலிருந்து நகராட்சி அலுவலகம் வரை ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1. தென்காசி நகரில், தென்காசி தபால் நிலையத்திலிருந்து நகராட்சி அலுவலகம் வரை உள்ள சாலைப்பகுதி, தூத்துக்குடி-திருநெல்வேலி-செங்கோட்டை- கொல்லம் சாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 105/6-105/10 வரையுள்ள பகுதியாகும். இச்சாலைப்

பகுதியில் இருபுறமும் தனியார் கட்டிடங்கள் அமைந்துள்ளதால் மேற்படி இடத்தில் சாலையை அகலப்படுத்த இயலாது.

2. தென்காசி நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க புறவழிச்சாலை அமைக்க தோராயமாக ரூ. 100.00 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாக இப்பணியினை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**34—**

**புறநகர் இரயில்களில் குடிநீர் வசதி**

வினா **10186—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம், கும்மிடிப்பூண்டி, செங்கற்பட்டு ஆகிய இடங்களுக்கு இயக்கப்படும் புறநகர் இரயில்களில் குடிநீர் வசதியளிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு கோரிக்கை விடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புறநகர் பகுதிகளில் இயக்கப்படும் மின்சார இரயில்களில் குறைந்த தூரம் பயணிகளைக் கொண்டு இயக்குவதாலும், சட்ட விதிகளின்படியும் குடிநீர் வசதிகள் செய்து தர இயலாது.

**35—**

**கோயம்பேடு வணிக வளாக அங்காடிகள் ஒதுக்கீடு விவரம்**

வினா **10622—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள கோயம்பேடு வணிக வளாக அங்காடிகள் ஒதுக்கீடு முறையில் வணிகர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) தனி நபர் வியாபாரிகளுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?





விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சென்னையிலுள்ள கோயம்பேடு வணிக வளாக அங்காடியின் கடைகள் அனைத்தும் நாளிதழ்களில் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கோயம்பேடு வணிக வளாக கடைகள் அனைத்தும் நாளிதழ்களில் விளம்பரம் செய்து தனி நபர் வியாபாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு குலுக்கல் முறையிலேயே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தனி நபர் வியாபாரிகளுக்கு வேறு வகையில் நேரடியாக கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

**36—**

**கோயம்பேடு வணிக வளாக அங்காடிகள் விவரம்**

வினா **10624—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கோயம்பேடு பகுதியில் கட்டப்பட்டுள்ள கோயம்பேடு வணிக வளாக அங்காடிகள் மொத்தம் எத்தனை?

(ஆ) அவை அனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டனவா?

(இ) ஒதுக்கீடு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள அங்காடிகளை உடனடியாக ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்பேடு வணிக வளாக அங்காடியில் உள்ள மொத்த கடைகள் 2334. அவற்றில்

| | |
|---|---|
| காய்கறி கடைகள் | 1422 |
| மலர் கடைகள் | 456 |
| பழக்கடைகள் | 456 |
| மொத்தம் | 2334 |

[1997 அக்டோபர் 18

(ஆ) கோயம்பேடு வணிக வளாக அங்காடியில் 119 கடைகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளன. அவற்றில்

| | | |
|---|---|---|
| காய்கறி கடைகள் | .. | 63 |
| மலர் கடைகள் | .. | 32 |
| பழக்கடைகள் | .. | 24 |
| மொத்தம் | .. | **119** |

(இ) கோயம்பேடு வணிக வளாக அங்காடியில் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள கடைகளுக்கு நாளிதழ்களில் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவைகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. பரிசீலனை செய்யும் பணி முடிவடைந்தவுடன் ஜார்ஜ் டவுன் பகுதியில் வியாபாரம் செய்து கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடியில் கடை ஒதுக்கீடு பெறாதவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும், பிற விண்ணப்பதாரர்களுக்கு பொதுப்பிரிவு முறையிலும், ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள கடைகள் குலுக்கல் முறையிலும் ஒதுக்கீடு செய்யப்படும்.

**37—**

**கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் விவரம்**

வினா **9372—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானியில் உள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளன?

(ஆ) அதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கும் வருமானம் என்ன?



1997 அக்டோபர் 18]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு.தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், அதிலிருந்து திருக்கோயிலுக்கு வரும் வருமானம் கீழ்வருமாறு உள்ளன:

| விவரம் | பரப்பளவு | வருமானம் ரூ. |
|---|---|---|
| நன்செய் நிலம் | 0.27 ஏக்கர் | 400.00 |
| புன்செய் நிலம் | 6.38 ஏக்கர் | 6,000.00 |
| மானாவாரி (சுற்றுலா வண்டி நிறுத்துமிடம்) | 0.49 ஏக்கர் | .. |
| மனைகள் (நத்தம்) | 0.46 ஏக்கர் | 10,902.00 |
| நந்தவனம் (தென்னை மரம் மேல் பலன்) | 0.54 ஏக்கர் | 5,599.00 |

**38—**

**அறநிலையத் துறை சார்பில் திருமண மண்டபம்.**

வினா **9667—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், தெக்கூர் ஊராட்சி, கோட்டைத்தெரு என்ற ஊரில் அறநிலையத் துறை சார்பில் திருமண மண்டபம் கட்டும் பணி எப்பொழுது துவங்கும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், தெக்கூர் ஊராட்சி, கோட்டைத்தெரு கிராமத்தில் அறநிலையத் துறை

[1997 அக்டோபர் 18

சார்பாக திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை.

**39—**

**கட்டிடங்களை பொது ஏலமுறையை அமல்படுத்தி வாடகைக்கு விடுதல்**

வினா **11791—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்து சமய அறக்கட்டளை நிர்வகிக்கும் மடங்கள் மற்றும் கோவில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களை பொது ஏல முறையை அமல்படுத்தி வாடகைக்கு விட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அற நிறுவனங்களுக்குச் சொந்தமான கடைகள் யாவும் பொது ஏலம் மூலமாகவே தற்போது வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. கட்டிடத்தின் தன்மை, இருப்பிடம் ஆகியவற்றை பொறுத்து பொதுப் பணித் துறையினர் நிர்ணயிக்கும் வாடகையை அனுசரித்தே மேற்படி கடைகள் பொது ஏலத்தின் மூலமாக வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. ஒரு சில தவிர்க்க இயலாத இனங்களில் சட்ட விதிகளுக்குட்பட்டு வாடகைத் தொகையை ஆண்டு ஒன்றிற்கு முந்தைய வாடகைத் தொகையில் குறைந்தபட்சம் பத்து சதவீதம் உயர்வு செய்து வாடகை உரிமம் நீட்டிப்பு செய்யப்படுகிறது. பொதுவாக பெரும்பாலான இனங்களில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அற நிறுவனங்களுக்கு சொந்தமான கடைகளின் வாடகை உரிமங்கள் பொது ஏலத்தின் மூலமாகவே விடப்பட்டு வருகின்றன.

**40—**

**நியாயவிலைக் கடைகளுக்கு நிரந்தரக் கட்டிடம்**

வினா **5898—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 18]

விழுப்புரம் மாவட்டம். மேல்மலையனூர் தொகுதி. சேப்பேட்டை மற்றும் மாதப்பூண்டி ஆகிய கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு நிரந்தரக் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைப்பதற்காக அரசால் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், வேலை உத்தரவாதத் திட்டத்தின் (EAS) கீழ், நியாவிலைக் கடைகளுக்கு கட்டிடங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதி ஆதாரத்தைப் பொறுத்து 2,000 கடைகள் வரை கட்டும் திட்டம் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, சேப்பேட்டை மற்றும் மாதப்பூண்டி ஆகிய கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கும் கட்டிடங்கள் கட்டப்படும் வாய்ப்புள்ளது.

**41—**

**பணி நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு**

வினா **8591—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல வருடங்களாக கூட்டுறவு விற்பனை அங்காடியில் பணிபுரியும் எடையாளர்களை பணி நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பணி நிரந்தரம் அளிக்கப்படும்?

[1997 அக்டோபர் 18

விடை—

**மாண்புமிகு திரு கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் வேலைவாய்ப்பகம் மூலம் இல்லாது நேரடியாக 8-7-1980க்குப் பின்னர் பணியில் சேர்க்கப்பட்ட பணியாளர்களின் பணி நியமனத்தை தகுதியின் அடிப்படையில் முறைப்படுத்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அனுப்பிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து, அரசு பரிசீலித்து, உரிய ஆணைகள் வெளியிடும்.

**42—**

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு சொந்தக் கட்டிடம்**

வினா **9408—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கருவாக்குறிச்சி-செருமங்கலம் ஆகிய கிராமங்களில் வாடகை கட்டிடத்தில் இயங்கிவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அலுவலகக் கட்டிடம் மட்டும் கட்ட நிதி உதவி வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டிக் கொடுக்கப்படும் திட்டங்கியில் அலுவலகப் பணிக்கும், நகை கடன் வழங்கும் பணிக்கும், பொது விநியோகத் திட்டப் பணிக்கும் மற்றும் விளைப் பொருட்களை சேமித்து வைக்கவும் தனித்தனியாக இடங்கள் பகிர்ந்தளிக்கப்படுகிறது. எனினும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கிடங்கு கட்ட தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெறுதல் குறித்து தற்போது அரசின் பரிசிலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிடங்கு கட்ட 90 சதவீதம் நிதி உதவியை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசுக்கு கடனாக வழங்குகிறது. மாநில அரசு அதனைப் பெற்று 50 சதவீதம் கடனாகவும், 40 சதவீதம் அரசு பங்கு மூலதனமாகவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்க திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிடங்கு கட்ட கருவாக்குறிச்சி, செருமங்கலம் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பிரேரணை ஏதும் பெறப்படவில்லை. மேற்படி சங்கங்களிடமிருந்து பிரேரணை பெறப்படின், அவை தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.



1997 அக்டோபர் 18 ]

**43—**

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவரம்**

வினா **11805—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ரூ. 50 இலட்சத்திற்கு அதிகமாக வைப்புத் தொகை வைத்துள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ரூ. 50 இலட்சத்திற்கும் அதிகமாக வைப்புத் தொகை வைத்துள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை 96 ஆகும். அது தவிர, நாமக்கல் மாவட்டத்தில் 50 இலட்சத்திற்கும் அதிகமாக வைப்புத் தொகை வைத்துள்ள 72 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளையும் சேர்த்து மொத்தம் 168 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**44—**

**தோல் தொழிற்சாலைகள் மூடப்பட்டதன் விவரம்**

வினா **5414—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோல் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் வேலையிழந்துள்ள தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தோல் பதனிடும் ஆலைகள் மூடப்பட்டதால் சுமார் 22,925 தொழிலாளர்கள் நேரடியாகவும், 33,843 தொழிலாளர்கள் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டனர்.

(ஆ) மேற்படி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மூடப்பட்ட தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவுவதின் மூலம் படிப்படியாக இவைகள் திறக்கப்படுவதற்கான வாய்ப்புள்ளது.

**45—**

**உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் பணியிடங்கள் நிரப்பப்படுதல்**

வினா **3212—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை உயர்நீதிமன்றத்தில் நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும்?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சென்னை உயர்நீதிமன்ற நிரந்தர மற்றும் கூடுதல் நீதிபதிகளின் எண்ணிக்கை 42 ஆகும். தற்போது 37 நீதிபதிகள் உள்ளனர்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனக் கருத்துரு தலைமை நீதிபதி அவர்களால் முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இக்கருத்துருவின் நகல் ஆளுநர் அவர்களுக்கும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கும், மைய சட்ட அமைச்சர் அவர்களுக்கும் தனித்தனியே அனுப்பி வைக்கப்படுகின்றது. முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி ஆளுநர் அவர்கள் தமது பரிந்துரையுடன் கருத்துருவின் முழுத் தொகுதியினை மைய சட்ட அமைச்சருக்கு அனுப்பி வைக்கின்றார். பின்னர் மைய சட்ட அமைச்சகம் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று முறையான ஆணையினைப் பிறப்பிக்கின்றது.

நிரப்பப்படாமல் உள்ள நீதிபதி பதவிகள் மேற்கண்ட வரைமுறைகளின்படி விரைவில் நிரப்பப்படும்.

**46—**

**குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விவரம்**

வினா **11917—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சி விற்று வந்தவர்கள் மற்றும் ரவுடிகள் எத்தனை பேர் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்.**

(அ) தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அதாவது 1982-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 14-ன் கீழ் 1-1-1997 முதல் 31-8-1997 முடிய கள்ளச் சாராயக்காரர்கள் 422 பேர்களும் [illegible] 71 பேர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் மட்டும் 1-1-1997 முதல் 31-8-1997 முடிய கள்ளச்சாராயக்காரர்கள் 24 பேர்களும், குண்டர்கள் 21 பேர்களும் தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**47—**

## பதிவு செய்யத் தடங்கல்

வினா **8759—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் சேன்பாக்கம், ரங்காபுரம், அம்மனான்குட்டை, போன்ற பகுதிகளில் மார்க்கெட் மதிப்பை விட துறை நிர்ணயித்துள்ள மதிப்பு அதிகம் உள்ளதால் பதிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டு மக்கள் அவதியுறுவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

வேலூரில் சேன்பாக்கம், ரங்காபுரம், அம்மனான்குட்டை போன்ற மூன்று கிராமங்களில் பதிவான ஆவணங்களில் "வழிகாட்டி மதிப்பை" ஆவணதாரர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புக் குறைவாக உள்ள நேர்வுகளில் அதை ஏற்காமல் முத்திரைச் சட்டப்பிரிவு 47-ஏ (1)-ன் கீழ் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக மிகவும் குறைவான ஆவணங்களே அனுப்பப்பட்டுள்ளன பொது மக்களிடமிருந்து வழிகாட்டி மதிப்பைக் குறைக்கக் கோரி முறையீடுகளோ, புகார்களோ பெறப்படவில்லை. துறை நிர்ணயித்த "வழிகாட்டி மதிப்பு" சந்தை மதிப்பைவிட அதிகமாக இல்லாததால், பதிவு செய்வதில் சிக்கல் ஏற்படவும் அதனால் மக்கள் அவதியுறும் சூழ்நிலையும் எழவில்லை. பதிவுத் துறை நிர்ணயித்துள்ள "வழிகாட்டி மதிப்பு" சந்தை மதிப்பை பிரிதிபலிப்பதாகவே உள்ளது.





**48—**

## பெண்கள் தையற் பயிற்சிப் பள்ளி துவக்குதல்

வினா **11655—திரு மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலூகா, திருநல்லூர் மற்றும் தஞ்சாவூர் வல்லம்புதூர் ஆகிய கிராமங்களில் பெண்கள் தையற் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம் மாரியம்மன் கோயில் என்ற இடத்திலும், ஒரத்தநாடு வட்டம் பனையக்கோட்டை என்ற இடத்திலும் ஆக இரு தையற் பயிற்சி நிலையங்கள் தற்போது சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையில் நடைபெற்று வருவதால், புதியதாக தையற் பயிற்சி நிலையங்கள் தொடங்குவதற்கு இல்லை.

**49—**

## ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா

வினா **7444—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முருகம்பாளையம் ஊராட்சி, தந்தை பெரியார் நகரின் SF. என் 231-ல் குடியிருக்கும் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): திருப்பூர் முருகம்பாளையம் ஊராட்சி புல எண் 231-ல் ஆதிதிராவிடர்கள் குடியிருந்து வரும் பகுதி கிராமக் கணக்குகளின்படி 'கல் கரடு' என உள்ளது. இப்பூமியை நில மாற்றம் செய்து பட்டா வழங்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**50—**

**மீன் பிடிக்கும் உரிமம் ஏலம் விடுதல்.**

வினா **10920—திரு எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானி தொகுதியில் ஏரி, குளங்களில் மீன் பிடிக்கும் உரிமம் ஏலம் விடப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில் அதன் மூலம் கிடைக்கும் வருட வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்.**

(அ) பெரியார் மாவட்டம், பவானி தொகுதியில் ஏரி, குளங்களில் மீன் பிடிக்கும் உரிமம் அரசினால் ஏலம் விடப்படுவதில்லை.

(ஆ) எழாது.



## (ஐந்தாம் பட்டியல்)

**1—**

**குடும்ப உதவித் தொகை சலுகை**

வினா **9242—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் மாதம் 20 ரூபாய் செலுத்தியவர்கள் மரணமுற்றால் குடும்ப உதவித்தொகை ரூபாய் 25,000/- என உத்தரவிட்டுள்ளதை, உத்தரவிட்ட தினத்திலிருந்து சலுகை பெறும் வகையில் இச்சட்டத்தைத் திருத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**2—**

**கனிமப் பொருட்கள் விவரம்.**

வினா **10754—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் என்னென்ன கனிமப் பொருட்கள் கிடைக்கின்றன?

(ஆ) என்னென்ன கனிமங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் "லைம் ஸ்டோன் எனப்படும், சுண்ணாம்புக்கல், பாக்ஸைட்" எனப்படும் அலுமினிய தாதுப்பொருள், இரும்புத்தாது, மாக்னசைட் கனிமம், குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார் கனிமங்கள், ஸ்டியடைட் கனிமம் போன்ற பெருவகை கனிமங்கள்

கிடைக்கின்றன. சிறுவகை கனிமங்களான கருப்பு கிரானைட், பலவண்ண கிரானைட் பாறைகள் கிடைக்கின்றன. ஆபரணக் கற்களுக்கான (ரத்தினக் கற்கள்), ஆய்வுப் பணி, பரமத்தியைச் சுற்றியுள்ள பகுதியில் தற்போது நடைபெற்று வருகின்றன.

(ஆ) கருப்பு கிரானைட், பலவண்ண கிரானைட் கற்துண்டங்கள் மற்றும் உயர்தர குவார்ட்ஸ் கனிமம் ஆகியவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

**3—**

**கனிமங்கள் ஏற்றுமதியின் மதிப்பு**

வினா **10755—திரு ஆர்.ஆர். சேகரன்** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* இந்தியன் ரேர் எர்த் (Indian Rare Earths) நிறுவனத்தின் மூலமாக என்னென்ன கனிமங்கள் கையாளப்படுகின்றன?

(ஆ) மொத்த ஏற்றுமதியின் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் உள்ள மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ரேர் எர்த் நிறுவனத்தினர் கடற்கரை மணற்படிவுகளில் இருந்து 1) இல்மனைட், 2) ரூடைல், 3) சிர்கான், 4) மோனசைட், 5) கார்னட், 6) சில்லிமனைட் ஆகிய கனிமங்களைப் பிரித்தெடுத்தெடுக்கின்றனர்,

(ஆ) 1995-96-ஆம் நிதியாண்டில் இங்கிலாந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய வெளிநாடுகளுக்கு 12124 மெட்ரிக் டன் இல்மனைட் மணலும், 80 மெட்ரிக் டன் கார்னட் மணலும் இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் மூலம் ஏற்றுமதி செய்து ரூ. 225 இலட்சம் அன்னியச் செலாவணி பெறப்பட்டுள்ளது.



**4—**

**மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிட வசதி**

வினா **7498—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, சத்திரப்பட்டி, கீரனூர், முத்துநாயக்கன்பட்டி, மார்க்கம்பட்டி, இடையகோட்டை, ஓடைப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, ஆகிய இடங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், ஒட்டன்சத்திரத்திலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் கூடுதல் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வியமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் 1997-98-ஆம் ஆண்டில் 2 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசாணை எண் 195, பள்ளிக் கல்வித் துறை, நாள் 5-5-1997-ல் ஆணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், முத்துநாயக்கன்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பகுதி 2 திட்டத்தின்கீழ், 1996-97-ஆம் ஆண்டில் 2 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசாணை எண் 686 கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை நாள் 24-9-1996-இல் ஆணையிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, சத்திரப்பட்டி, கீரனூர் மார்க்கம்பட்டி இடையகோட்டை, ஓடைப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஒட்டன் சத்திரத்திலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் கூடுதல் வகுப்பறைகள் வசதி செய்து தர நிதி ஆதாரங்களின் அடிப்படையில் அரசு பரிசிலனை செய்யும்.

[1997 அக்டோபர் 18

5—

## அறிவொளி இயக்கப் பணியாளர்கள் விவரம்

வினா **11884—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் அறிவொளி இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வியமைச்சர்:**

(அ) அறிவொளி இயக்கப்பணியில், தமிழ்நாட்டில் சுமார் 6 இலட்சம் தன்னார்வத் தொண்டர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) அறிவொளி இயக்கத்தில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் தன்னார்வத் தொண்டர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் அல்லர். அறிவொளி இயக்கப்பணி, மைய அரசின் நிதியுதவியுடன் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடிவு பெற்றுவிடும் இயக்கப் பணியாகும். இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பள்ளியில் பயின்று வரும் மாணவர்கள் உட்பட, பல்வேறு கல்வித் தகுதியை உடையவர்களாக உள்ளனர். இவ்வியக்கம் செயல்பாட்டில் உள்ளவரை இவர்களது பணி நீடிக்கும். இதில் பணிபுரிபவர்கள் முறையான அரசுப் பணியாளர்கள் இல்லை என்பதால், இவர்களின் பணியை வரன்முறைப்படுத்த இயலாது.

6—

## மருத்துவமனையில் வசதிகள்

வினா **5261—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு வட்ட மருத்துவமனையில் அதிக படுக்கை வசதியும், ரத்த வங்கியும், புதிய கழிப்பிட வசதியும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



1997 அக்டோபர் 18 ]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசினர் வட்ட மருத்துவமனையில் அதிக படுக்கை வசதி செய்ய காலியிடமில்லை. இம்மருத்துவமனையில் இரத்த வங்கி அமைப்பதற்கான கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இரத்த வங்கிக்குத் தேவையான குளிர்சாதன இயந்திரம், கருவிகள் வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனையில் தற்சமயம் மருத்துவமனைக் கட்டிடத்திற்குள் 26 எண்ணிக்கையில் கழிப்பிடங்களும், கட்டிடத்திற்கு வெளியே 5 எண்ணிக்கையில் கழிப்பிடங்களும் உள்ளன. அவைகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன. இக்கழிவறைகள் மன்னார்குடி நகராட்சியின் கழிப்பிட குழாயுடன் இணைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

## இரத்தப் பரிசோதனை நிலையம், ஆய்வுக் கூடம் அமைத்தல்

வினா **5829—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு இரத்தப் பரிசோதனை நிலையம் மற்றும் இதர மருத்துவ ஆய்வுக் கூடம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனையில் இரத்தப் பரிசோதனை நிலையம் மற்றும் இதர ஆய்வுக் கூடம், அதாவது பரிசோதனை ஆய்வுக் கூடம் தற்போது துவக்கப்பட்டு இயங்கி வருகிறது.

[1997 அக்டோபர் 18

8—

**அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு**

வினா **5980—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகாவில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வேன் மற்றும் டிரைவர் நியமனம் குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் உள்ளன. இங்கு எக்ஸ்-ரே, பரிசோதனைக் கூடம், பல் சிகிச்சைப் பிரிவு ஆகியவை இயங்கி வருகின்றன. குழந்தைகள் நலம் பேண தனியாக ஆறு படுக்கைகள் ஒதுக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இம்மருத்துவமனைக்குப் போதுமான நவீன கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இம்மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இல்லை.

9—

**அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்**

வினா **7913—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 18]

பர்கூர் தொகுதி, மத்தூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

பர்கூர் தொகுதி, மத்தூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டுவது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

**அடிப்படை மருத்துவ ஊழியர்கள் பணியிடம் நிரப்புதல்**

வினா **8031—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சானடோரியம் (தாம்பரம்) நெஞ்சக நோய் மருத்துவமனையில் 35 அடிப்படை மருத்துவ ஊழியர்கள் பணியிடம் காலியாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை நிலை எண் 1364, சுகாதாரம், நாள் 21-12-1992-ல் 6 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவமனைப் பணியாளர் என்ற விகிதம் நிர்ணயித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, 776 படுக்கைகள் கொண்ட தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனைக்கு 129 பணியாளர்கள் இருத்தல் வேண்டும். ஆனால் இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 248 பணியிடங்களில், 34 பணியிடங்கள் காலியாக உள்ளன. 214 பணியாளர்கள் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியிடங்கள் 129 ஆகக் குறையும் வரை, காலியாகும் பணியிடங்களை நிரப்ப இயலாது.

11—

### மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை

வினா **10512—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கருக்காடிப்பட்டி கிராமத்தில் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க 63 கே.வி.ஏ. மின் மாற்றியை 100 கே.வி.ஏ. மின் மாற்றியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கருக்காடிப்பட்டி கிராமத்தில் தற்போதுள்ள 63 கே.வி.ஏ. மின் மாற்றியை 100 கே.வி.ஏ. ஆக மாற்றத் தேவையில்லை. குறைந்த மின்னழுத்தத்தைப் போக்கிட அந்த மின்மாற்றியிருக்கும் இடத்திலிருந்து சிறிது தொலைவில் புதிதாக ஒரு 63 கே.வி.ஏ. மின் மாற்றி நிறுவப்பட்டு 20-6-1997-ல் இருந்து அது செயல்பட்டு வருகிறது.

12—

### மின் அழுத்தக் குறைவை சீரமைத்தல்

வினா **10619-திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, வாணாபுரம், தச்சம்பட்டு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தச்சம்பட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் தற்போது இருக்கும் 3,437 விவசாய பம்ப்செட்டு இணைப்புகளும் மற்றும் 7,900 இதர வகை மின் இணைப்புகளும் தச்சம்பட்டு 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து நான்கு உயர் அழுத்த மின் பாதைகள் வழியாக 188 மின்மாற்றிகள் மூலம் மின்சாரம் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இப்பகுதியில் மின் அழுத்தக் குறைபாடு ஏதும் இல்லை. அதுபோலவே வாணாபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் தற்போது இருக்கும் 2025 விவசாய மின் இணைப்புகளும் மற்றும் 6,600 இதரவகை மின் இணைப்புகளும் தண்டராம்பட்டு 110/33-11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 3 உயர் அழுத்த மின் பாதைகள் வழியாக 148 மின்மாற்றிகள் மூலம் மின்சாரம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இப்பகுதியில் மின் அழுத்தக் குறைபாடு ஏதும் இல்லை. மேலும், இப்பகுதியில் மின்சாரம் மேலும் சீராக பகிர்ந்தளிக்க வாணாபுரம் அருகில் உள்ள கோட்டையூர் என்ற கிராமத்தில் 125 இலட்ச ரூபாய் செலவில் ஒரு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைப்பதற்காக நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

13—

### 50 வீடுகளுக்கு மின்வசதி

வினா **11114—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரை ஊராட்சியைச் சேர்ந்த காலிட்டுமேட்டுக் கொட்டாயில் 50 வீடுகளுக்கு மின்வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமரை ஊராட்சியைச் சேர்ந்த காவிட்டுமேட்டுக் கொட்டாயிலிருந்து வீடுகள் மற்றும் குடிசைகளுக்கு மின் இணைபபு வேண்டி விண்ணப்பம் எதுவும் இதுவரையில் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன், பதிவு வரிசை முன்னுரிமை அடிப்படையில், தருமபுரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கீட்டினைப் பொறுத்து மின் இணைப்பு வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

### மின் இணைப்பு வழங்குதல்

வினா **11115—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட (புதூர் கோளப்பாடி) காளியம்மன் கோயில்மேடு என்ற கிராமத்தில் உள்ள 70 வீடுகளுக்கு மின்சார வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட (புதூர் கோளப்பாடி) காளியம்மன் கோயில்மேடு என்ற கிராமத்திலிருந்து வீடுகளுக்கும் மற்றும் குடிசைகளுக்கும் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் எதுவும் இதுவரையில் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் பதிவு வரிசை முன்னுரிமை அடிப்படையில் தருமபுரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கீட்டினைப் பொறுத்து மின் இணைப்பு வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



15—

### கோவிலுக்கு மின் இணைப்பு கொடுத்தல்

வினா **11116—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த ஆலமரத்துப்பட்டியிலிருக்கும் கோவிலுக்கு மின் இணைப்பு கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த ஆலமரத்துப்பட்டியிலிருக்கும் கோவிலுக்கு மின் இணைப்பு வேண்டி, விண்ணப்பம் ஏதும் இதுவரையில் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டவுடன் பதிவு வரிசை முன்னுரிமை அடிப்படையில், மின் இணைப்பு வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

### குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு மின்சாரம்

வினா **11117—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட மருக்கம்பட்டி, கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த காட்டுவளவு, சொரக்காகாடு ஆகிய ஊர்களில் வசிக்கும் ஏழை மக்களின் குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு மின்சாரம் வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மருக்கம்பட்டி, காட்டுவளவு, சொரக்காகாடு ஆகிய ஊர்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் குடிசை வீடுகளிலிருந்து 'ஒரு குடிசை ஒரு விளக்கு' திட்டத்தின்கீழ் மின்சாரம் வேண்டி விண்ணப்பங்கள் எதுவும் இதுவரையில் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன், பதிவு வரிசை முன்னுரிமை அடிப்படையில், தருமபுரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கீட்டினைப் பொறுத்து மின் இணைப்பு வழங்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

**மின்சாரம் அடிக்கடி நிறுத்தப்படுதல்**

வினா **11411—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மின் பகிர்மான வட்டம் ஈங்கூர் துணை மின் நிலையத்தில் இருந்து வெள்ளக்கோவில் பகுதிக்கு விநியோகம் செய்யும் மின்சாரம் அடிக்கடி நிறுத்தப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஈரோடு மின் பகிர்மான வட்டம் ஈங்கூர் 230/110 கே.வி. துணை மின் நிலையத்தில் இருந்து வெள்ளக்கோவில் பகுதிக்கு விநியோகம் செய்யும் மின்சாரத்தில் ஜனவரி 1997 முதல் ஜூன் 1997 முடிய மின் தடைகள் ஏற்பட்டு வந்துள்ளன. கோடை காலங்களில் மேட்டூர் மற்றும் கீழ் மேட்டூர் புனல் உற்பத்தி நிலையங்களில் மின் உற்பத்தி மிகவும் குறைவாக இருந்தது. மேலும்,



ஈங்கூர் 230/110 கே.வி. துணை மின் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள தானியங்கி மின் மாற்றிகளில் (35x50 எம்.வி.ஏ.) அனுமதிக்கப்பட்ட பளுவை விட, பளு அதிகரித்ததின் காரணமாக மின் தடை செய்ய நேர்ந்தது. தற்போது புனல் நிலையங்களின் மின் உற்பத்தி அதிகரித்திருப்பதால் ஜூலை 1997 முதல் மின் தடை எதுவும் இல்லை. எதிர்காலத்தில் இது போன்று மின் தடை ஏற்படாவண்ணம் தடுப்பதற்காக கூடுதலாக நான்காவது 50 எம்.வி.ஏ. தானியங்கி மின் மாற்றியை ஈங்கூர் 230/110 கே.வி. மின் நிலையத்தில் நிறுவும் பணி நடந்து கொண்டிருக்கிறது.

**18—**

**பெண் மருத்துவர் பணியிடம் நிரப்பப்படல்**

வினா **12024—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்ட அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் பணியிடம் நிரப்பப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கோட்டை அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் பணியிடம் நிரப்பப்பட்டு, மருத்துவர் வே. காவேரி, எம்.எஸ். (பொது) 1-7-1996 முதல் பணியாற்றி வருகிறார்.

**19—**

**குடிநீர் இணைப்பு வழங்குதல்**

வினா **4269—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சத்துவாச்சாரியில் குருதோப்பு பகுதிக்கு குடிநீர் இணைப்பு முழுமையாக வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். சத்துவாச்சாரியில் குருதோப்பு பகுதிக்கு குடிநீர் வழங்க சத்துவாச்சாரி குடிநீர் அபிவிருத்தித் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சத்துவாச்சாரி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கட்டம் 1 மற்றும் கட்டம் 3 பகுதிகளுக்கு குடிநீர் வழங்க சத்துவாச்சாரி பேரூராட்சி கோரியபடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு திட்ட மதிப்பீடு ரூ.188.40 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

**20—**

### தனியார் சந்தைகளை அரசுடமையாக்கும் செயற்குறிப்பு

வினா **4707—திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள தனியார் சந்தைகளை அரசுடமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு நகராட்சி, பேரூராட்சி பகுதியிலுள்ள தனியார் சந்தைகளை அரசுடமையாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**21—**

### ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் திருமண மண்டபம்

வினா **7287—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், கலியாவூர் கிராமத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் திருமண மண்டபம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**22—**

### துவக்கப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடம்

வினா **7290—திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஒன்றியம், சாயர்புரம் பேரூராட்சி பேய்க்குளம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, சிவகளை மாங்கொட்டாபுரம், வாழவல்லான் ஆகிய கிராமங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஒன்றியம், சாயர்புரம் பேரூராட்சி, பேய்குளம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கும் சிவகளை கிராம ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கும் போதிய கட்டிட வசதி உள்ளதால் கூடுதல் கட்டிடம் கட்டத் தேவையில்லை. மாங்கொட்டாபுரம் கிராமத்தில் உள்ள பள்ளிக் கட்டிடம் பழுதடைந்துள்ளதால் 1997-98-ல் பழுது நீக்கப் பணி நிறைவேற்றப்படும். வாழவல்லான் கிராமத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு 1996-97-ல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு கட்டிடப்பணி நடைபெற்று வருகிறது.

**23—**

**ஜீவன்தாரா கிணறு வெட்ட 20 விழுக்காடு வழங்குதல்**

வினா **7310—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊரக வளர்ச்சித் துறையில் வழங்கப்படும் ஜீவன்தாரா கிணறு வெட்ட மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினர்களுக்கு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 20 விழுக்காடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு விதிமுறைகளின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஆதிதிராவிடர் வகுப்பில்லாதவர்களுக்கு மொத்த கிணறுகளில் மூன்றில் ஒரு பங்கு தற்போது ஒதுக்கப்பட்டு வருகிறது. இதில் மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினர்களும் அடங்குவர்.



(ஆ) வினா எழவில்லை.

**24—**

**ஏரியில் சிறிய பாலம் கட்டுதல்**

வினா **7437—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரம், வெள்ளார்நாயக்கன் பாளையம் வழியாக மூப்பனூருக்கு வரும் சாலையில் அச்சம்பட்டி ஏரி கடைகோடியில் ஒரு சிறிய பாலம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சி, வெள்ளார்நாயக்கன் பாளையம் வழியாக மூப்பனூர் வரும் சாலையில் அச்சம்பட்டி ஏரி கடைகோடி பகுதியானது போக்குவரத்து அதிகமில்லாத பகுதியாகும். இருப்பினும், இப்பகுதியில் சிறுபாலம் கட்டும் பணி மன்ற ஒப்புதல் பெற்று அடுத்து வரும் திட்ட ஆண்டுகளில் மேற்கொள்ள நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**25—**

**தொகுப்பு வீட்டிற்கு வழங்கும் நிதியளவு விவரம்**

வினா **7471—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திரா குடியிருப்புத் திட்டத்தில் கட்டப்படும் தொகுப்பு வீட்டிற்கு மாநில அரசு வழங்கும் நிதியளவு என்ன?

(ஆ) அதனை மேலும் உயர்த்தி வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மாநில அரசு சாதாரண மண்ணில் கட்டும் வீட்டிற்கு ரூ.4,000/-ம், கடினமான பகுதியில் கட்டும் வீட்டிற்கு ரூ.4,400/-ம் மற்றும் ஆர்.சி.சி. கூரைத்தளம் அமைக்க கூடுதலாக ரூ.7,000/-ம் வழங்கி வருகிறது.

(ஆ) இல்லை.

**26—**

**நெசவாளர் குடியிருப்புக்கு மனைப் பிரிவு அமைத்தல்**

வினா **10889—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், கருக்குப்பாளையத்தில் 50 நெசவாளர் கொண்ட குடியிருப்பு அமைத்திட மனைப்பிரிவு அனுமதி (லே அவுட் அப்ருவல்) கோரி முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களிடம் வரப்பெற்றுள்ளது.

(ஆ) சமுதாயக்கூடம் தேவை குறித்தும் நெசவாளர் கூட்டுறவு மனைப்பிரிவிற்குத் தேவைப்படும் இதர நிலை உபயோகம் குறித்தும் இடம் நேராய்வு செய்து அறிக்கையினை மண்டல துணை இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளது. அறிக்கை பெறப்பட்டதும் அதற்கு ஏற்ப வரைபடம் தயாரித்து ஒப்புதல் அளித்து அனுப்பி வைக்கப்படும் என நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.





**27—**

**கால்வாய்கள் சீர்செய்தல்**

வினா **4639—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, திக்கணாங்கோடு பேரூராட்சி, திக்கணாங்கோடு சந்திப்பிலிருந்து திங்கள் சந்தை சாலையோரமாக ஓடும் பட்டணம் கால்வாய், துணைக் கால்வாய் ஆகியவற்றைச் சீர் செய்ய, அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

ஆம். இக்கால்வாய்கள் உலக வங்கியின் நிதி உதவியோடு சீர் செய்யப்படும்.

**28—**

**நதியின் குறுக்கே தடுப்பு அணைகள் சீர்செய்தல்**

வினா **4915—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெலமங்கலம் ஒன்றியம், அனோக்கல் ஊராட்சியின் தொட்டபேலூர் ஐக்கேரி பஞ்சாயத்தில் உள்ள சின்ன அட்டி மற்றும் கோனேசத்திரம் கிராமங்களுக்கு அருகில் உள்ள சனத்குமார் நதியின் குறுக்கே தடுப்பு அணைகள் பழுது அடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சனத்குமார் நதியின் குறுக்கே சின்னாட்டி பெரிய அணை மற்றும் சின்னாட்டி அணை என இரண்டு அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. இவ்விரண்டு அணைக்கட்டுகளின் பழுதுகளை

நடப்பு ஆண்டு 1997-98-ல் சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**29—**

### வாய்க்காலில் தூர் எடுத்தல்

வினா **6871—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் கிழக்கு கரை வாய்க்காலில் உள்ள பொன்னம்பாளையத்திலிருந்து வெள்ளாளபுரம் வரை செல்லும் வாய்க்காலில் வற்றாம்பாளையம் என்ற இடத்திலிருந்து நல்லங்கியூர் கோவேரிப்பட்டி வரை உள்ள வாய்க்காலில் தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயில் உள்ள பொன்னம்பாளையத்திலிருந்து வெள்ளாளபாளையம் வரை செல்லும் பிரிவு வாய்க்காலில் மைல் 4-4-60-ல் வற்றாம்பாளையத்திலிருந்து நல்லங்கியூர் கோனேரிப்பட்டி வரை செல்லும் கிளை பிரிவு வாய்க்காலில் தற்சமயம் சிறப்பு மராமத்துப் பணி நடைபெற்று வருகிறது. அதில் தூர் எடுக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. விரைவில் இப்பணி முடிவுறும்.

**30—**

### ஏரிகளுக்கு வாய்க்கால் அமைத்தல்

வினா **6873—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள பெரிய ஏரி மற்றும் சிறிய ஏரிகளின் பரப்பளவு எத்தனை ஏக்கர்?

(ஆ) அந்த ஏரிகளுக்கு மேட்டூர் கிழக்குக் கரை வாய்க்கால் வழியாக குஞ்சம்பாளையத்திலிருந்து வரும் வாய்க்காலில் சுமார் 2 கிலோ மீட்டர் வரை செப்பனிட்டு ஒரு கிலோ மீட்டர் அளவிற்கு வாய்க்கால் அமைத்து பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி பெரிய ஏரி மற்றும் சின்ன ஏரிகளின் மொத்த பரப்பளவு 313.13 ஏக்கர்.

(ஆ) தற்சமயம் காவிரி நதி நீர்ப்பிரச்சினை நிலுவையில் உள்ளதால் புதிதாக கால்வாய் வெட்டி நீட்டித்து மேட்டூர் கால்வாய் பாசனப் பகுதியை அதிகரிக்க இயலாது.

**31—**

### பேருந்து வசதி செய்தல்

வினா **6134—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்திர அள்ளி ஊராட்சி, ஆரல்குந்திக்கு பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் முதல் ஆரல்குந்தி வரை உள்ள தடத்தின் நீளம் 37 கி.மீ. இதில் ஆரல்குந்தி கிராஸ் முதல் ஆரல்குந்தி வரையுள்ள 4 கி.மீ. தூரத்திற்கு யாதொரு பேருந்து வசதியுமில்லை. இத்தடத்தின் நீளம் 35 கி.மீ.-க்கு அதிகமாக உள்ள காரணத்தால் தற்போதுள்ள அரசு ஆணைப்படி நகரப் பேருந்து இயக்கிட இயலாது. புறநகரப் பேருந்து இயக்கிடும் அளவிற்கு பயணிகளின் பயன்பாடு இல்லாததால் புறநகரப் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

32—

### வழித்தடத்தை மாற்றி அமைத்தல்

வினா **7464—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் முதல் பாண்டியன் நகர் வரை செல்லும் வழித்தட எண் 11 பேருந்தை வாலிபாளையம் சென்று திரும்புகிற வகையில் வழித்தடத்தை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தடம் எண் 11—இரு பேருந்துகள் மற்றும் தடம் எண்11/சி1 பேருந்து மூலம் 44 தனிநடைகள் திருப்பூரிலிருந்து வாலிபாளையம் வழியாக செங்கப்பள்ளி வரை இயக்கப்பட்டு வருவதால் வாலிபாளையத்திற்கு போதிய பேருந்து வசதி உள்ளது. தடம் எண் 11/சி1 பேருந்து மூலம் காலை கூட்ட நேரத்தில் மட்டும் இரு தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. அவ்விரு தனிநடைகளை கோரிக்கைபடி வழித்தடம் மாற்றி இயக்க இயலாத நிலை உள்ளது.

33—

### நல்லாத்துப்பாளையம் வரை பேருந்து நடை இயக்குதல்

வினா **7468—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நல்லாத்துப்பாளையம் வழியாக இயங்கிவரும் 11-பி பேருந்தை அனைத்து நடைகளிலும் (Singles) நல்லாத்துப்பாளையம் சென்று வருமாறு மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது திருப்பூர் நகரத்தடம் எண் 11டி/29 பேருந்து (1) திருப்பூர்-ஊத்துக்குளி (வழி) நல்லாத்துப்பாளையம் என தினசரி 8 நடைகளும், (2) திருப்பூர்-தெக்கலூர் (வழி) ராக்கியாப்பாளையம் என தினசரி 6 நடைகளும், (3) திருப்பூர்-எல்.ஆர்.ஜி. கல்லூரி என தினசரி 2 நடைகளும், (4) திருப்பூர்-அரசு மருத்துவமனை என தினசரி 2 நடைகளும் ஒரு பல்திசைப் பேருந்தாக இயங்கி வருகிறது. மேற்படி பேருந்தை அனைத்து நடைகளும் நல்லாத்துப்பாளையம் சென்று வருமாறு மாற்றி இயக்கிடும் பட்சத்தில், தற்போது இப்பேருந்தால் பயன்பெற்று வரும் அம்மாபாளையம், ராக்கிபாளையம், தேவராய பாளையம் மற்றும் வேலாயுதம்பாளையம் ஆகிய கிராமப் பொதுமக்கள் நடைக்குறைப்பின் மூலமாக பாதிக்கப்படுவார்கள். இந்நிலையில் மேற்படி நகரப் பேருந்தினை திருப்பூர்-நல்லாத்துப்பாளையம் என அனைத்து நடைகளையும் மாற்றி இயக்கிட சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

34—

### சுற்றுச் சாலை போடும் பணி

வினா **8156—திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க திருச்சி சாலையிலிருந்து கன்னியாகுமரி சாலை வரை சுற்றுச் சாலை போடும் பணி எப்போது துவங்கும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க திருச்சி சாலையிலிருந்து கன்னியாகுமரி சாலை வரை 27 கி.மீ. நீளத்திற்குச் சுற்றுச்சாலை அமைக்க தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி உதவி நிறுவனத்திடம் ரூ.36.35 கோடிக்கு கடன் பெற்று மேற்படி சாலை பணியைச் செய்திட அரசு ஆணை எண் 132 நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23-5-97-ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முன் ஏற்பாடு வேலைகளை முடித்து மதுரை மாநகராட்சி, திட்டத்திற்கான தொகையை நெடுஞ்சாலைத்துறை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட பிரிவிற்கு வைப்புத் தொகையாக செலுத்திய உடன் வேலையை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**35—**

### பேருந்துகள் ஒரே நேரத்தில் செல்வதை மாற்றி அமைத்தல்.

வினா **8324—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி ஊராட்சி மக்களின் தேவையைக் கருதி ஒ-7 பேருந்தினை முன்னர் இயக்கிய நேரத்திலேயே இயக்கவும், தடம் எண்கள் ஒ11 மற்றும் ஒ-8 ஆகிய பேருந்துகள் ஒரே நேரத்தில் செல்வதை மாற்றி அமைத்திடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஓமலூர் பணிமனை துவக்கத்திற்கு முன் ஒ-7 பேருந்தின் பராமரிப்பு சேலம் பணிமனையில் இரவு 20.05 மணியிலிருந்து 22.30 மணி வரை நடைபெற்று வந்தது. ஓமலூர் பணிமனை துவக்கத்திற்குப்பின் இப்பேருந்தின் பராமரிப்பு இரவு 19-30 மணியிலிருந்து 21-25 மணி வரை நடைபெற்று வருகிறது. பேருந்துகளைப் பராமரிப்பு செய்யும் இடத்தை மாற்றி அமைத்துள்ளதால், பேருந்துகள் இயங்கும் நேரமும் சிறிய அளவு (சுமார் 10,15 நிமிடங்கள்) மாற்றத்துடன் இயக்கப்படுகின்றன. பயணிகளுக்கு எந்தவிதமான அசௌகரியமும் ஏற்படாமல், ஓமலூர் பணிமனையில் பராமரிக்கப்படும் தடம் எண்.ஓ.7 பேருந்து மூலம் பழையபடியே 8 நடைகள் இயக்கப்படுகிறது. கோரிக்கையில் கேட்கப்பட்ட தடம் எண். ஓ.8 மற்றும் ஓ.11 பேருந்துகள் வெவ்வேறு தடங்களில் வெவ்வேறு நேரப்படி இயக்கப்பட்டு வருவதால் இந்த கோரிக்கை மீது நடவடிக்கை எடுக்கும் அவசியம் நிலவவில்லை.



**36—**

### மொத்த விபத்துக்கள் விவரம்

வினா **8629—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் 1996-ஆம் ஆண்டு முழுவதும் நடந்த மொத்த விபத்துக்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றின் மொத்த சேத மதிப்பீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மொத்த விபத்துக்கள் 14,916.

(ஆ) மொத்த சேத மதிப்பீடு ரூ.3,52,33,997.08.

**37—**

### கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா **9495—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேசசேரி ஒன்றியம், ஊஞ்சப்பட்டி பகுதிக்கு மேட்டூரில் இருந்து செல்லும் தடம் எண் 34-ல் மேலும் ஒரு பேருந்தை பள்ளி குழந்தைகள் பயன்பெறும் வகையில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் மேட்டூர்-மேச்சேரி (வழி) குஞ்சாண்டியூர், நங்கவள்ளி, மலையடிப்பட்டி, ஊஞ்சப்பட்டி மற்றும் குட்டப்பட்டி வரை சேலம், கோட்டம் 1-ஐ சேர்ந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 34 மூலம் தினசரி 10 நடைகள் வீதம் ஒரு முழு நேரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தில் பயணிகளின் பிரயாணம் 55 விழுக்காடு மட்டுமே உள்ளதால், தற்போது

[1997 அக்டோபர் 18

இந்த வழித்தடத்தில் அளிக்கப்பட்டுள்ள பேருந்து வசதியே போதுமானதாக கருதப்படுகிறது. மேலும், குறைந்த அளவில் பேருந்து வசதி பெற்று வரும் ஊர்களுக்கும், பேருந்து வசதியே பெறாத ஊர்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ள காரணத்தால் கேட்கப்பட்ட வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

38—

## பேருந்தை மீண்டும் இயக்குதல்

வினா **9825—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஆரூர்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் சென்று கொண்டிருந்த ஓ-12 பேருந்தினை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரூர்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள கிராமங்கள் வழியாக இயக்கப்பட்டு வந்த ஓ.12 நகரப்பேருந்து சாலை பழுது காரணமாக நிறுத்தப்பட்டது. பின் பொதுமக்கள் தொடர்ந்து வலியுறுத்தியதன்பேரில் இந்த சாலை சரி செய்யப்பட்டு, அதே வழித்தடத்தில் தடம் எண். ஓ.12 பேருந்திற்குப் பதிலாக தடம் எண். ஓ-12ஏ என்ற புதிய பேருந்து 15-4-97 முதல் கீழ்க்கண்டவாறு இயக்கப்பட்டு வருவதால் இத்தடத்தில் ஓ.12 பேருந்தை மீண்டும் இயக்கும் தேவை நிலவவில்லை.

1. ஓமலூர்-ஜலகண்டாபுரம் (வழி) எலவம்பட்டி, நச்சணம்பட்டி - 4 நடைகள்.

2. ஓமலூர்- ஜலகண்டாபுரம் (வழி) சேடப்பட்டி அரியாம்பட்டி - 4 நடைகள்.



1997 அக்டோபர் 18 ]

39—

## புதிய பேருந்தை இயக்குதல்

வினா **9827—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கட்டம்பட்டி ஊராட்சிப் பகுதிகளுக்கு செல்ல முத்தநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர், புறவழிச்சாலை, பாப்பம்பாடி வழியாக ஓமலூர்-கொங்கணாபுரம் வழித்தடத்தில் ஒரு புதிய பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இந்த வழித்தடத்தில் தற்போது சேலத்திலிருந்து முத்துநாயக்கன்பட்டி வழியாக ஓமலூருக்கு அதிக எண்ணிக்கையில் நகரப்பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழித்தடத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பகுதி வாரியாக பேருந்து வசதி பெற்று வருவதாலும், அரசு ஆணையின்படி பேருந்துகள் இயக்கப்படும் பகுதியிலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்கள் அனைத்தும் நேரடியாக பேருந்து வசதி பெற்றவையாகவே கருதப்படவேண்டும் என்பதன் அடிப்படையிலும் இத்தடத்தில் தனியாக பேருந்து இயக்குவதற்கான தேவை நிலவவில்லை.

40—

## அமரகுந்தி வரை பேருந்து விடுதல்

வினா **9831—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியப் பகுதியில் இயங்கும் ஓ-15 பேருந்தினை பெரியேரிப்பட்டி வழியாக அமரகுந்தி வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் ஓ-15 பன்முனை வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. கோரிக்கையில் குறிப்பிட்டபடி நடைகளை பெரியேரிப்பட்டி, அமரகுந்தி வழியாக தடம் மாற்றி இயக்கினால், தற்போது பேருந்து வசதி பெற்று வரும் எம்.செட்டிபட்டி, ரெட்டிபட்டி, இலவமரத்தூர் முதலான ஊர்களுக்கு பேருந்து வசதி இழப்பு நேரிடும். இப்பகுதி மக்கள் தங்களது கிராமங்களுக்கு ஏற்கனவே கூடுதல் பேருந்து வசதி கேட்டு வருவதால், தடமாற்றம் செய்ய இயலாது. தற்போது கோரிக்கையில் கேட்கப்பட்ட பெரியேரிப்பட்டி, அமரகுந்தி வழியாக ஓமலூரிலிருந்து மேச்சேரிக்கு நகரப்பேருந்து தடம் எண் ஓ-7 மூலம் 8 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இது பயணிகள் தேவையை போதுமான அளவு நிறைவு செய்து வருகிறது.

**41—**

### பேருந்து இயக்கப்படாத கிராமங்கள் விவரம்

வினா **10221—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98-ஆம் ஆண்டில் பேருந்துகள் இயக்கப்படாத கிராமங்கள் என்று சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்கள் கணக்கிடப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1000 மக்கள் தொகை கொண்டதாகவும், அதே சமயம் பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடங்களிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் உள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெறாதவையாகக் கருதப்பட்டு, பேருந்து வசதி உடனடியாக அளிக்கப்பட வேண்டும் என்ற அரசு கொள்கையின்படி, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் தாலுகாவைச் சேர்ந்த பாலமலை கிராமமும், பரமத்தி வேலூர் தாலுகாவைச் சேர்ந்த பாளையம் கிராமமும் மட்டுமே பேருந்து வசதி அளிக்கப்பட வேண்டியவை. இக்கிராமங்களுக்கு பேருந்துகள் செல்ல ஏற்ற சாலை



வசதி இல்லாததால் இதுவரை பேருந்து வசதி அளிக்க இயலவில்லை. இது சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுக்கக் கோரி நெடுஞ்சாலைத் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**42—**

### புதிய பேருந்துகள் விவரம்

வினா **10222—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ஆம் ஆண்டில் அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு எத்தனை பேருந்துகள் புதியதாக வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) எடப்பாடி நகரில் அமைந்துள்ள அண்ணா போக்குவரத்து கிளைக் கழகத்திற்கு எத்தனை பேருந்துகள் புதியதாக வழங்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், கோட்டம் 1-க்கு 15-8-1997 வரை 101 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டு அனைத்து வழித்தடங்களிலும் இயக்கப்படுகின்றன.

(ஆ) எடப்பாடி நகரில் உள்ள கிளைக்கு 1-4-97 முதல் 15-8-97 வரை 5 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**43—**

### கூடுதலாகப் பேருந்துகள் விடுதல்

வினா **10303—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், அரங்கனூர் கிராமத்திற்கு சேலத்திலிருந்து தடம் எண் 79 மற்றும் 97-ல் மேலும் கூடுதலாக பேருந்துகள் விட அரசு முன்வருமா?

[1997 அக்டோபர் 18

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நகரப் பேருந்துகள் தடம் எண்கள் 79 மற்றும் 97 மூலம் 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது அளிக்கப்பட்ட பேருந்து வசதியே போதுமானது என கருதப்படுகிறது. அரசின் வழிகாட்டுதல்களின்படி குறைந்த அளவு பேருந்து வசதி அல்லது பேருந்து வசதியே பெறாத ஊர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளதால், தற்போது கேட்கப்பட்ட வழித்தடத்தில் கூடுதல் பேருந்து வசதி அளிக்க இயலாது.

44—

**திருவண்ணாமலையில் நேரடிப் பேருந்து விடுதல்**

வினா **10464—திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் மற்றும் தெள்ளார் ஒன்றியத் தலைநகரங்களிலிருந்து மாவட்டத் தலைநகரமான திருவண்ணாமலைக்கு நேரடிப் பேருந்து இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை-பெரணமல்லூர் தடத்தில் அரசு மாவட்டப் பேருந்துகள் மூலம் தினசரி 6 நடைகளும், தனியார் பேருந்துகள் மூலம் 8 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் பயணிகள் அடர்வு 20% தான் உள்ளது.

திருவண்ணாமலை—தெள்ளார் தடத்தில் தெள்ளாரிலிருந்து வந்தவாசிக்கு அரசு பேருந்துகள் மூலம் 82 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்திலும் பயணிகள் அடர்வு 25% தான் உள்ளது.



1997 அக்டோபர் 18]

வந்தவாசி-திருவண்ணாமலை வழித்தடத்தில் அரசுப் பேருந்துகள் மூலம் 70 நடைகளும், தனியார் பேருந்துகள் மூலம் 10 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. தெள்ளாரிலிருந்து வந்தவாசி வந்தால் அங்கிருந்து திருவண்ணாமலை செல்ல போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது. ஆகவே தெள்ளார்—திருவண்ணாமலை என தனியாக பேருந்து இயக்க தேவையில்லை என கருதப்படுகிறது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

45—

**விபத்தில் மரணம் அடைந்தவர்கள் விவரம்**

வினா **11230—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1996-97-ஆம் ஆண்டு சாலை விபத்தில் மரணம் அடைந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) சாலை விபத்திற்கு என்ன காரணம் என்று அரசு ஆராய்ந்து வருகிறதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 1996-ல் சாலை விபத்தில் மரணம் அடைந்தவர்கள் 9028 பேர்கள்.

(ஆ) சாலை விபத்திற்கான காரணத்தை அவ்வப்போது அரசு ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. உள்துறைச் செயலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு அலுவலர் குழு தற்பொழுது விபத்துக்களை தவிர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து வருகிறது

46—

**போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை**

வினா **12498—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் நகரப் பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1. சேலம் மாநகரத்தில் போக்குவரத்தைச் சீர்செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பாக போக்குவரத்து ஆலோசனைக் குழு சேலம் மாநகரத்திற்கு மட்டும் தனியாக அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் முடிவின்படி நடைபாதை மற்றும் போக்குவரத்து சாலைகளை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது.

2. காவல் துறை, சேலம் மாநகராட்சியுடன் இணைந்து, நடைபாதை கடை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், ஒரு வழி போக்குவரத்து பாதை ஏற்பாடு செய்தல், பள்ளி, கல்லூரி மாணவர்களை சாலை பாதுகாப்பு பணியில் ஈடுப்படுத்துதல் மற்றும் போக்குவரத்து ஒழுங்குபடுத்துவோர் (டிராபிக் வார்டன்) நியமித்து போக்குவரத்தினை முறைப்படுத்துதல் போன்ற திட்டங்களின் மூலம் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**47—**

### முடி இறக்குவோர் சம்பளம் உயர்த்துதல்

வினா **2361—திரு. டி. மணி:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழநி திருக்கோவிலில் முடி இறக்குவோர் சங்கத்திடமிருந்து அவர்களின் சம்பளம் உயர்த்த வேண்டும் என கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் முடியிறக்கும் தொழிலாளர்கள் திருக்கோவில் ஊழியர்கள் அல்ல. முடிப்பிரிவு தொழிலாளர்கள் திருக்கோவிலில் உரிமம் மட்டும் பெற்று தொழில் புரிகின்றனர். அவர்களுக்கு திருக்கோவிலில் இருந்து சம்பளம் ஏதும் வழங்கப்படுவதில்லை. ஒவ்வொரு முடிக்காணிக்கை சீட்டும் ரூ.5/- என விலை நிர்ணயிக்கப்பட்டு அதில் முடிப்பிரிவு தொழிலாளர் பங்கு ரூ.4/- எனவும், திருக்கோவில் பங்கு ரூ.1/-எனவும் வழங்கப்பட்டு வருகிறது. பழநி திருக்கோவிலிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு மேற்படி தொழிலாளர்கள் முடியிறக்குவதால், அவர்களின் செயல்பாட்டினை மட்டும் திருக்கோவில் நிர்வாகம் கண்காணித்து வருகிறது.





**48—**

### 'அரசுப் பணியாளர்' என்று குறிப்பிடுதல்

வினா **6402—திரு. கே. சுப்பராயன்—**மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுத் துறையில் பணியாற்றுவோரை 'அரசு ஊழியர்' என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக 'அரசுப் பணியாளர்' என்று குறிப்பிட அரசு உத்தரவிடுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அரசுத் துறையில் பணியாற்றுவோர் 'அரசுப் பணியாளர்' என்றுதான் அழைக்கப்படுகிறார்கள்.

**49—**

### தொல்லியல் ஆய்வுக்கு ஒதுக்கிய தொகை விவரம்

வினா **12567—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வு நடைபெற அரசு 1997-98-ஆம் ஆண்டு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) அதற்காக அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98-ஆம் ஆண்டில் நாகப்பட்டிணம் மாவட்டம், பூம்புகார், இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளம் ஆகிய இடங்களில் தொல்பொருள் ஆய்வுத் துறையும், ஈரோடு மாவட்டம், கொடுமணலில் தொல்பொருள் ஆய்வுத் துறை, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து அகழாய்வு மேற்கொள்ள அரசு 1997-98-ஆம் ஆண்டுக்கான பகுதி திட்டத்தில் ஒப்பளிப்பு செய்துள்ளது.

(ஆ) ரூ. 6.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**50—**

**பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டிடம் புதியதாக்குதல்**

வினா **11497—திரு. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஆதனக்கோட்டை கிராமத்தில் பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டிடம் கட்ட பொதுமக்களால் இலவசமாக கொடுத்த இடத்தில் புதிய சங்க கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ). ஆதனக்கோட்டை பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் பெயரில், ஆதனக்கோட்டை கிராமத்தில் 5 சென்ட் புஞ்சை நிலம் (சர்வே எண்.90/6) இனாம் சாசனமாக 24-4-1996 அன்று பத்திரம் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் சங்கம் கடந்த 3 தணிக்கை ஆண்டில் இலாபத்தில் செயல்பட்டாலும், சங்கத்தில் கட்டிட நிதியோ அல்லது மிகை நிதியோ (Surplus Fund) இல்லை. எனவே தற்போதைய நிதி நிலையில், சங்கம் சொந்தமாகவோ அல்லது கடன் மூலமோ ஆதனக்கோட்டை கிராமத்தில் பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டிடம் கட்ட இயலாத நிலையில் உள்ளது. இருந்தபோதிலும் அரசு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 100 சதவீத மானிய அடிப்படையில் கட்டிடம் கட்டித்தர தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குப் பரிந்துரை செய்யப்படும்.



## (ஆறாம் பட்டியல்)

**1—**

**காவலர்களுக்கு வீடு கட்டுதல்**

வினா **7657—திரு. ரா. ஈஸ்வரன் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி, வாசுதேவநல்லூர், புளியங்குடி ஆகிய காவல் நிலையக் காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

வாசுதேவநல்லூர் தொகுதியில் அமைந்துள்ள சிவகிரி, வாசுதேவநல்லூர், புளியங்குடி ஆகிய காவல் நிலையங்களைச் சார்ந்த காவலர்களுக்கு ஏற்கெனவே தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகத்தின் வாயிலாக வீடுகள் கட்டப்பட்டு அவ்வீடுகள் பணியாளர்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

**2—**

**காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம்**

வினா **7909—திரு. இ.ஜி. சுகவனம் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை மாற்றி சொந்தக் கட்டிடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

[1997 அக்டோபர் 18

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்டும் பணி எப்போது துவங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பர்கூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட காவல்துறைக்குச் சொந்தமான நிலம் இல்லை. சொந்தமான நிலம் தேர்வு செய்வது குறித்து காவல்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் தேர்வு செய்த பின்னர் பர்கூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டும் கருத்துரு பரிசீலிக்கப்படும்.

3—

## எடப்பாடி காவலர்களுக்குக் குடியிருப்பு

வினா **8261—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆம். அரசு ஆணை எண் [illegible] உள் (காவல்) துறை, நாள் 19-3-1997-ல் சேலம் மாவட்டம், எடப்பாடி காவல் நிலையத்தில் பணிபுரியும் 1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 20 காவலர்களின் (ஆக மொத்தம் 23 பணியாளர்களுக்கு) குடியிருப்புகள் கட்ட ரூ. 65.40 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணியும் நடைபெற்று வருகிறது. இவை 31-3-1998-க்குள் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1997 அக்டோபர் 18]

4—

## காவலர்களுக்குக் குடியிருப்பு

வினா **9391—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, கபிஸ்தலம், அய்யம்பேட்டை, சுவாமிமலை ஆகிய காவல் நிலையக் காவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): காவல் துறைக்குச் சொந்தமான நிலங்களில், கட்டுமானப் பணி தொடர்பாக நில ஆய்வு நடைபெற்று வருகிறது. ஆய்வு முடிந்ததும் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பகுதி-2 திட்டத்தில் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

5—

## அகதி முகாம்கள் விவரம்

வினா **12241—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் அகதிகள் முகாம்கள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்த்தில் ஒன்பது இலங்கை அகதிகள் முகாம்கள் உள்ளன. அவை பின்வருமாறு:-

(1) மேட்டூர்.

(2) பவளத்தாலூர், ஓமலூர் தாலுக்கா.

(3) குறுக்குப்பட்டி.

(4) சேலம் ஸ்டீல் பிளாண்ட் குடியிருப்பு.

(5) சித்தர் கோவில் மண்டபம்.

(6) அத்திகாட்டலூர், ஓமலூர் தாலூக்கா.

(7) செந்தாரப்பட்டி (வடக்கு).

(8) செந்தாரப்பட்டி (தெற்கு).

(9) தம்மம்பட்டி.

6—

**சிறுபான்மையினருக்குப் புத்தகம் வழங்குதல்**

வினா **6239—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Is it a fact that Telugu and Kannada books were not supplied to the minorities in the State?

(b) if so, the reasons thereof?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

**அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்**

வினா **11205—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—.

(அ) மேலூர் தொகுதி, மேலூரில் தற்போது நல்ல முறையில் இயங்கி வரும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1994-95ம் நிதியாண்டில் மதுரை மாவட்டம், மேலூரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பகுதி-2 திட்டத்தின் கீழ் இரண்டு வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க தெரிவு செய்யப்பட்டு (அரசின் பங்கீடு 75 விழுக்காடு, மற்றும் பெற்றோர்-ஆசிரியர் கழக பங்கீடு 25 விழுக்காடு) பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்சமயம் வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

8—

**மஞ்சள் காமாலை நோய்க்கு இலவசத் தடுப்பூசித் திட்டம்**

வினா **8404—திரு. ஜி. நிஜாமுதீன் மற்றும் திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மஞ்சள் காமாலை நோய்த் தடுப்பூசி அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகப் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஹெப்பாடைட்டீஸ் என்று சொல்லப்படும் மஞ்சள் காமாலை நோய் 5 வகை நுண்கிருமிகளால் உண்டாகின்றது. இந்நோய் அசுத்த தண்ணீரைப் பருகுவதாலும் மற்றும் நோய் பாதித்தவர்களின் இரத்தத்தின் மூலமும் பரவுகின்றது. இந்நோய்க்கான தடுப்பு மருந்தினை இந்தியாவிலேயே உற்பத்தி செய்யக்கூடிய வசதி வாய்ப்புகள் குறைவாக உள்ள காரணத்தினாலும் உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளதாலும் மத்திய அரசு இம்மருந்து தயாரிக்கும் திட்டத்தினை இன்னும் செயல்படுத்தவில்லை. எனவே மஞ்சள் காமாலை நோய்க்கு இலவசமாகத் தடுப்பூசி போடும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

9—

**பரம்பரை சித்த வைத்தியர்களுக்கான ஊதியம் விவரம்**

வினா **9541—திரு. இ. கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98-ல் வயது முதிர்ந்த பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான மாத ஊதியம் எத்தனை பேருக்கு, எவ்வளவு வழங்கப்படுகிறது?

(ஆ) சேலம், ராஜாஜி மாவட்டங்களில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98-ல் வயது முதிர்ந்த பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான ஓய்வூதியம் 578 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 70 நபர்களுக்கும் நாமக்கல் இராஜாஜி மாவட்டத்தில் 14 நபர்களுக்கும் வயது முதிர்ந்த பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

10—

**குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு இலக்கு நிர்ணயித்தல்**

வினா **10805—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

1-1-1995 முதல் தமிழ்நாட்டில் குறியீடு இல்லாத (Target Free) குடும்பநலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆதலால் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வதற்கு, தற்போது அரசு இலக்கு ஏதும் நிர்ணயிப்பதில்லை. ஆனால் இந்தப் புதிய முறையில் கிராம சுகாதார செவிலியர்கள் தாங்களே தங்கள் பகுதியில் தகுதியுள்ள தம்பதியரின் (Eligible Couples) எண்ணிக்கை அடிப்படையில் குறியீடு நிர்ணயித்து குடும்பநலத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர்.

11—

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுத்துதல்**

வினா **10250—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், ஒன்றியங்களிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம். பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 33 ஊராட்சிகளிலும், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் (மொத்தம் 32) 15 ஊராட்சிகளிலும் ஆக

மொத்தம் 48 ஊராட்சிகள் உள்ளன. 1996-97-ல் கீழ்க்கண்டவாறு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஒன்றியத்தின் பெயர் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை | மானியமாக விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| (1) | ஊராட்சி ஒன்றியம், பெண்ணாகரம் | 33 | 395 | 12.461 |
| (2) | ஊராட்சி ஒன்றியம், நல்லம்பள்ளி | 15 | 142 | 3.593 |
| | மொத்தம் | 48 | 537 | 16.054 |

12—

### சமுதாய நலக்கூடம் அமைத்தல்

வினா **11453—திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், மேலப்பாட்டாகுறிச்சியில் சமுதாய நலக்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.



13—

### விவசாய அமைப்பு ஏற்படுத்துதல்

வினா **10242—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பாசனக் கால்வாய் மராமத்துப் பணிகளில் படிப்படியாக பங்கேற்க எந்தெந்த மாவட்டங்களில் விவசாயிகள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகள் பாசனக் கால்வாய் மராமத்துப் பணிகளில் படிப்படியாகப் பங்கேற்க முதற்கட்டமாக மதுரை மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு மற்றும் மருதாநதி நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய மூன்று நீர்ப்பாசன அமைப்புகளை முன்னோடியாக எடுத்துக் கொண்டு விவசாய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

14—

### ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா **11879—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தெக்கூர் கிராமத்தில் விவசாயத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து பாசனவசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு செலவில் பாசனத்திற்கு குழாய்க் கிணறு அமைத்திட வேளாண்மைப் பொறியியல் துறையில் திட்டம் ஏதும் தற்பொழுது

செயல்முறையில் இல்லை. குழாய்க் கிணறு அமைக்க தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 விசைத்துளைக் கருவிகளும், 52 கைத்துளைக் கருவிகளும் உள்ளன. விவசாயிகள் தங்கள் பகுதிக்கு அருகே உள்ள தஞ்சாவூர் (அல்லது) கும்பகோணம் விரைவுத்திட்டம் அலுவலகத்தில் வாடகை முன்பணம் செலுத்தி முன்னுரிமைப்படி கருவிபெற்று குழாய்க்கிணறு அமைத்துக் கொள்ளலாம்.

விசைத்துளைக் கருவி மூலம் 6" குழாய்க் கிணறு அமைக்க ஒரு மீட்டருக்கு ரூ.120/-ம், 7" 8" குழாய்க் கிணறு அமைக்க ஒரு ரூ.130/-ம் கைத்துளைக் கருவி மூலம் குழாய்க் கிணறு அமைக்க ஒரு மீட்டருக்கு மீட்டருக்கு ரூ.30-ம் வாடகை வசூல் செய்யப்படுகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**15—**

### கால்வாய்கள் சீர் செய்தல்

வினா **4639—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மனாபபுரம் தொகுதி, திக்கணாங்கோடு பேரூராட்சி, திக்கணாங்கோடு சந்திப்பிலிருந்து திங்கள் சந்தை சாலையோரமாக ஓடும் பட்டணம்கால், துணைக்கால்வாய் ஆகியவற்றைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

ஆம், இக்கால்வாய்கள் உலக வங்கியின் நிதி உதவியோடு சீர் செய்யப்படும்.

**16—**

### பழைய பேருந்து நிலையத்திற்குப் பேருந்துகள் வருதல்

வினா **6610—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



பெரியார் மாவட்டம், பவானி வட்டம், பவானி நகரின் பழைய பேருந்து நிலையத்திற்கு நகரப் பேருந்துகள் அனைத்தும் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(1) கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு, பெருந்துறை, சங்ககிரி பகுதிகளில் இருந்து வரும் நகரப் பேருந்துகள் அனைத்தும் பழையபேருந்து நிலையம் வழியாக புதிய பேருந்து நிலையம் சென்றடைகின்றன.

(2) மேலும் பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டப்பட்டும், வாடகைக்கார் நிறுத்தும் இடம் அமைக்கப்பட்டும் பேருந்து நிலைய இடம் குறுகலாக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் பவானி நகரின் தேவைக்கேற்ப முன்பைவிட தற்பொழுது அதிகப்படியான நகரப் பேருந்துகள் பவானி வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, அனைத்து நகரப் பேருந்துகளையும் பவானி பழைய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும்வண்ணம் இயக்கினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட ஏதுவாகும்.

**17—**

### உணவுப் பங்கீட்டுப் பொருட்கள் சீராகக் கொடுக்காததன் விவரம்

வினா **8470—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வேலூர், குடியாத்தம், வாணியம்பாடி பகுதிகளில் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உணவுப் பங்கீட்டுப் பொருட்கள் முழுமையாகக் கொடுக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் தேவையின் அடிப்படையில்

உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. கடந்த நான்கு மாதங்களில் (விவரப்பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) இம்மாவட்டத்தில் உள்ள வேலூர், குடியாத்தம், வாணியம்பாடி வட்டங்களில் அத்தியாவசியப் பண்டங்கள் சீராகவே வழங்கப்பட்டுள்ளன. தேவைக்குக் குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டது எனத் தெரிய வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து தேவைக்கேற்ப கூடுதல் பண்டங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

### விவரப் பட்டியல்

ஜனவரி '97 முதல் ஏப்ரல் '97 வரை வேலூர் மாவட்டத்தில் உள்ள வேலூர், குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் உள்ள குடும்ப அட்டைகளுக்குத் தேவையான அளவு ஒதுக்கீடு, நியாயவிலைக்கடைகளுக்கு அனுப்பப்பட்ட அளவு மற்றும் நுகர்வு விவரங்கள் பின்வருமாறு:—

அரிசி

| (மெட்ரிக் டன்னில்) | 1/97 | 2/97 | 3/97 | 4/97 |
|---|---|---|---|---|
| வேலூர் | | | | |
| தேவை | 2766.3 | 2770.4 | 2071.5 | 2081.1 |
| முன்னிருப்பு | 189.5 | 187.5 | 282.1 | 196.3 |
| ஒதுக்கீடு | 2039.8 | 2186.8 | 2074.4 | 2005.3 |
| மொத்தம் | 2229.3 | 2374.3 | 2156.5 | 2201.6 |
| நகர்வு | 2007.6 | 2187.0 | 1932.6 | 1947.5 |
| நுகர்வு | 2023.1 | 2092.4 | 1942.8 | 1887.0 |
| குடியாத்தம் | | | | |
| தேவை | 2770.4 | 2751.4 | 2161.0 | 2264.9 |
| முன்னிருப்பு | 187.5 | 105.5 | 116.9 | 172.6 |
| ஒதுக்கீடு | 2186.5 | 2299.9 | 2059.2 | 2130.4 |



| (மெட்ரிக் டன்னில்) | 1/97 | 2/97 | 3/97 | 4/97 |
|---|---|---|---|---|
| மொத்தம் | 2374.0 | 2405.4 | 2176.1 | 2303.0 |
| நகர்வு | 2187.0 | 2294.6 | 2103.5 | 2124.7 |
| நுகர்வு | 2092.3 | 2283.6 | 2109.4 | 2087.7 |
| வாணியம்பாடி | | | | |
| தேவை | 2086.7 | 2088.3 | 1802.4 | 1911.5 |
| முன்னிருப்பு | 196.1 | 115.8 | 97.3 | 99.6 |
| ஒதுக்கீடு | 1830.8 | 1816.2 | 1802.3 | 1823.2 |
| மொத்தம் | 2026.9 | 1932.0 | 1899.6 | 1922.8 |
| நகர்வு | 1923.6 | 1805.6 | 1787.3 | 1805.6 |
| நுகர்வு | 1809.7 | 1820.5 | 1784.9 | 1803.3 |
| சர்க்கரை : | | | | |
| வேலூர் | | | | |
| தேவை | 266.0 | 266.5 | 266.0 | 266.5 |
| முன்னிருப்பு | 12.3 | 9.8 | 22.3 | 18.1 |
| ஒதுக்கீடு | 236.9 | 234.6 | 244.0 | 258.2 |
| மொத்தம் | 249.2 | 244.4 | 266.3 | 266.3 |
| நகர்வு | 237.1 | 238.6 | 235.2 | 253.8 |
| நுகர்வு | 239.2 | 236.0 | 219.5 | 241.0 |
| குடியாத்தம் | | | | |
| தேவை | 264.5 | 264.5 | 264.5 | 264.5 |
| முன்னிருப்பு | 10.1 | 5.7 | 12.1 | 22.1 |

| | 1/97 | 2/97 (மெட்ரிக் டன்னில்) | 3/97 | 4/97 |
|---|---|---|---|---|
| ஒதுக்கீடு | 228.3 | 232.0 | 252.0 | 242.6 |
| மொத்தம் | 238.4 | 237.7 | 264.1 | 264.7 |
| நகர்வு | 228.3 | 231.9 | 251.5 | 242.6 |
| நுகர்வு | 228.1 | 227.4 | 229.4 | 230.4 |
| **வாணியம்பாடி** | | | | |
| தேவை | 210.7 | 210.9 | 210.4 | 211.4 |
| முன்னிருப்பு | 20.5 | 13.4 | 21.5 | 27.0 |
| ஒதுக்கீடு | 190.5 | 193.5 | 189.4 | 185.0 |
| மொத்தம் | 210.0 | 207.9 | 210.9 | 212.0 |
| நகர்வு | 190.0 | 193.5 | 188.9 | 185.0 |
| நுகர்வு | 193.9 | 185.5 | 183.9 | 184.8 |
| **மண்ணெண்ணெய் :** | | | | |
| வேலூர் : | | (கிலோ லிட்டரில்) | | |
| தேவை | 788.9 | 793.0 | 793.2 | 794.2 |
| முன்னிருப்பு | 10.0 | 11.9 | 18.0 | 16.6 |
| ஒதுக்கீடு | 782.0 | 782.7 | 774.5 | 776.5 |
| மொத்தம் | 792.0 | 794.6 | 792.5 | 793.1 |
| நகர்வு | 767.3 | 777.2 | 750.3 | 772.1 |
| நுகர்வு | 765.4 | 771.9 | 751.7 | 766.7 |



| | 1/97 | 2/97 (கிலோ லிட்டரில்) | 3/97 | 4/97 |
|---|---|---|---|---|
| **குடியாத்தம்** | | | | |
| தேவை | 544.5 | 554.5 | 545.0 | 545.0 |
| முன்னிருப்பு | 25.6 | 30.9 | 22.0 | 24.9 |
| ஒதுக்கீடு | 519.1 | 514.2 | 522.8 | 518.6 |
| மொத்தம் | 544.7 | 545.1 | 544.8 | 543.5 |
| நகர்வு | 517.9 | 513.8 | 500.8 | 518.1 |
| நுகர்வு | 514.5 | 510.7 | 508.0 | 508.6 |
| **வாணியம்பாடி** | | | | |
| தேவை | 446.4 | 446.4 | 446.4 | 446.4 |
| முன்னிருப்பு | 5.9 | 7.5 | 10.0 | 10.9 |
| ஒதுக்கீடு | 440.5 | 439.2 | 436.9 | 439.9 |
| மொத்தம் | 446.4 | 446.7 | 446.9 | 450.8 |
| நகர்வு | 440.7 | 431.5 | 432.9 | 431.0 |
| நுகர்வு | 440.1 | 427.6 | 431.9 | 432.8 |

18—

## நியாய விலைக் கடைகள் விவரம்

வினா **10229—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 அக்டோபர் 18

(அ) 1997-98-ஆம் ஆண்டு எடப்பாடி சங்ககிரி வட்டங்களில் எத்தனை நியாய விலைக் கடைகள் உள்ளன?

(ஆ) புதிதாக எத்தனை நியாய விலைக் கடைகள் கேட்டு அரசிடம் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது?

(இ) அதில் எத்தனை கடைகள் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி, எடப்பாடி வட்டாரங்களில் கீழ்க்கண்டவாறு நியாய விலைக் கடைகள் இயங்கி வருகின்றன.

| வ.எண். (1) | வட்டம் (2) | முழுநேர நியாய விலைக் கடைகள் (3) | பகுதிநேர நியாய விலைக் கடைகள் (4) |
|---|---|---|---|
| 1. | சங்ககிரி | 70 | 8 |
| 2. | எடப்பாடி | 56 | - |

| | முழுநேரக் கடைகள் | பகுதி நேரக் கடைகள் |
|---|---|---|
| (ஆ) புதிதாக நியாயவிலைக் கடை கேட்டு அரசிடம் விண்ணப்பம் வரப் பெற்றுள்ளவை | | |
| 1. சங்ககிரி | - | 3 |
| 2. எடப்பாடி | - | 8 |
| (இ) அரசு நிறுவ உத்தேசித்துள்ள கடைகள்: | | |
| 1. சங்ககிரி | - | 2 |
| 2. எடப்பாடி | 1 | 1 |



1997 அக்டோபர் 18 ]

சங்ககிரி வட்டத்தில் காவலூர் மற்றும் வளையக்காரனூர் ஆகிய இடங்களில் பகுதி நேரக் கடை திறக்கவும், எடப்பாடி வட்டத்தில் எல்லக்குட்டூரில் முழுநேரக் கடையும், மொரசப்பட்டியில் பகுதிநேரக் கடையும் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் மகளிர் நியாய விலைக் கடை ஏதும் திறக்கப்படவில்லை.

**19—**

**நியாய விலைக் கடைக்குக் கட்டிடம்**

வினா **10289—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், வெள்ளரி வெள்ளி பஞ்சாயத்தில் உள்ள நியாய விலைக் கடை தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதால் அதற்கு அரசு கட்டிடம் ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரத்திலுள்ள வெள்ளரி வெள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்ட வெள்ளரி வெள்ளி கிராம நியாய விலைக் கடைக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அங்காடி அமைப்பதற்கு கட்டிடம் கட்டுவதற்காக வெள்ளரி வெள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு அருகில் இடம் தேர்வு செய்யப்பட்டு பரிசிலனையில் உள்ளது.

20—

புதிய நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 10295—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி கிராம கோல்காரனூர் நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து, தீராம்பட்டி, கொல்லம் காட்டுவளவு மற்றும் பகுதிகளையும் இணைத்து, தீராம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி கிராமம், கோல்காரனூர் நியாய விலைக் கடைக்கு 572 குடும்ப அட்டைகள் உள்ளன. அவற்றில் தீராம்பட்டி, தீராம்பட்டி காட்டுவளவு, கொல்லம் காட்டுவளவு மற்றும் பகுதிகளையும் இணைத்து குடும்ப அட்டைகள் 233 உள்ளன. தீராம்பட்டியில் 500 குடும்ப அட்டைகள் இல்லாத நிலையில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. ஆயினும் பகுதிநேரக் கடை அமைக்க ஊர் பொதுமக்கள் பாதை வசதி மற்றும் இலவசக் கட்டிடம் கொடுக்கும்பட்சத்தில் பகுதிநேரக் கடை அமைக்க இதர நிபந்தனைகள் பூர்த்தியாவதால், தீராம்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்புகள் உள்ளன.

21—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம் கட்டுதல்

**வினா 8579—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், காளிப்பட்டி கிராமம், குட்டப்பட்டிபுதூரில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், காளிப்பட்டி கிராமம், குட்டப்பட்டிபுதூரில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 30-4-1990-ல் பதிவு செய்யப்பட்டு, 22-5-1990 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் நாளொன்றுக்கு சுமார் 350 லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகிறது. இச்சங்கத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டிக்கொள்ளும்பொருட்டு 5 சென்ட் நிலம் சமீபத்தில் வாங்கப்பட்டுள்ளது. அதற்குண்டான நில கிரயப்பத்திரம் இன்னும் பதிவு செய்யப்படவில்லை. எனவே சங்கத்திற்கான நிலம் கிரயம் செய்த பின்னர் சொந்தக் கட்டிடம் கட்டிக்கொள்ள சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (அல்லது) வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் மூலம் நிதியுதவி பெற்று கட்டிடம் கட்ட ஆவன செய்யப்படும்.

22—

முத்தரப்புக் குழுக்கள் விவரம்

**வினா 4663—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நலத் துறையின் கீழ் இயங்குகிற முத்தரப்புக் குழுக்கள் எத்தனை?

(ஆ) அதில் அனைத்துத் தொழிற்சங்கங்களுக்கும் இடம் அளிக்கப்பட்டுள்ளதா?

(இ) எந்தெந்த சங்கப் பிரதிநிதிகள் அங்கம் பெறுகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழிலாளர் நலத் துறையின்கீழ் மொத்தம் 17 முத்தரப்புக் குழுக்கள் உள்ளன.

(ஆ) ஆம்.

(இ) தொழிலாளர் நலத் துறையின்கீழ் இயங்குகிற முத்தரப்புக் குழுக்களின் விவரம்.

| வரிசை எண் (1) | குழு/வாரியத்தின் பெயர் (2) | தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் விவரம் (3) |
|---|---|---|
| 1. | தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனைக் குழு | 1) ஐ.என்.டி.யு.சி. |
| | | 2) சி.ஐ.டி.யு. |
| | | 3) ஏ.டி.பி. |
| | | 4) ஏ.ஐ.டி.யு.சி. |
| 2. | மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் | 1) ஐ.என்.டி.யு.சி. |
| | | 2) சி.ஐ.டி.யு. |
| | | 3) என்.எல்.ஓ. |
| | | 4) ஏ.ஐ.டி.யு.சி. |
| | | 5) எல்.ப்பி.எப். |
| 3. | சம ஊதியச் சட்டத்தின் கீழ் ஆலோசனைக் குழு | 1) எல்.ப்பி.எப். |
| | | 2) ஐ.என்.டி.யு.சி. |
| | | 3) எச்.எம்.எஸ். |
| | | 4) ஏ.ஐ.டி.யு.சி. |
| 4. | குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியம் | 1) ஏ.ஐ.டி.யு.சி. |
| | | 2) சி.ஐ.டி.யு.சி. |
| | | 3) எச்.எம்.எஸ். |
| | | 4) ஏ.டி.பி. |
| | | 5) ஐ.என்.டி.யு.சி. |
| | | 6) பிலிம் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் ஆப் சௌத் இந்தியா |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 5. | மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம் | 1) எல்.ப்பி.எப். |
| | | 2) ஏ.ஐ.டி.யு.சி. |
| | | 3) சி.ஐ.டி.யு.சி. |
| | | 4) ஐ.என்.டி.யு.சி. |
| | | 5) எச்.எம்.எஸ். |
| | | 6) என்.எல்.ஓ. |
| | | 7) தென் இந்திய எஸ்டேட் ஸ்டாப் யூனியன், கோயம்புத்தூர் |
| 6. | தொழில் நல்லுறவு பரிசுக் குழு | 1) எல்.ப்பி.எப். |
| | | 2) ஐ.என்.டி.யு.சி. |
| | | 3) சி.ஐ.டி.யு. |
| | | 4) ஏ.ஐ.டி.யு.சி. |
| 7. | தோட்டத் தொழிலாளர் | 1) ஐ.என்.டி.யு.சி. |
| | | 2) ஏ.டி.பி. |
| | | 3) ஏ.ஐ.டி.யு.சி. |
| | | 4) சி.ஐ.டி.யு. |
| | | 5) எச்.எம்.எஸ். |
| | | 6) எஸ்டேட்ஸ் ஸ்டாப்ஸ் யூனியன் ஆப் சௌத் இந்தியா |
| | | 7) பிளான்டர்ஸ் ஒர்க்கர்ஸ் யூனியன் காங்கிரஸ் |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 8. | மாநில மதிப்பீடு மற்றும் அமுல்படுத்தும் குழு | 1) எல்.ப்பி.எப்.<br>2) ஐ.என்.டி.யு.சி.<br>3) ஏ.ஐ.டி.யு.சி.<br>4) எச்.எம்.எஸ்.<br>5) ஏ.டி.பி.<br>6) சி.ஐ.டி.யு.<br>7) என்.எல்.ஓ. |
| 9. | தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர் நல வாரியம் | 1) லேபர் ப்ரொகரசிவ் யூனியன்.<br>2) தமிழ் மாநிலக் கட்டிடத் தொழிலாளர் சங்கம்.<br>3) தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்.<br>4) தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் லேபர் சென்ட்ரல் யூனியன்.<br>5) சென்டர் ஆப் இந்தியன் டிரேடு யூனியன். |
| 10. | மாநில சுண்ணாம்பு மற்றும் பில்மனைட் தொழிலாளர் நல நிதி ஆலோசனைக் குழு | இக்குழுவின் காலம் 12-7-96 உடன் முடிவுற்றது. இக்குழுவில் எல்.ப்பி.எப். மற்றும் ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்டு குழுவைத் திருத்தியமைக்க மத்திய அரசை இவ்வரசு கோரியுள்ளது. |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 11. | மாநில பீடித் தொழிலாளர் நல நிதி ஆலோசனைக் குழு | இக்குழுவின் காலம் 21-6-96 உடன் முடிவுற்றது. இக்குழுவில் எல்.ப்பி.எப்., சி.ஐ.டி.யு. மற்றும் பெண்கள் பிரதிநிதிகள் (ஏ.ஐ.டி.யு.சி.) ஆகிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கொண்டு குழுவைத் திருத்தி அமைக்க மத்திய அரசை இவ்வரசு கோரியுள்ளது. |
| 12. | மாநில திரைப்படத் தொழிலாளர் நல நிதி ஆலோசனைக் குழு | இக்குழுவின் காலம் 12-7-96 உடன் முடிவுற்றது. இக்குழுவில்,<br>1) பிலிம் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் ஆப் சௌத் இந்தியா, சென்னை,<br>2) சௌத் இந்தியன் பிலிம் சேம்பர் ஆப் காமர்ஸ், சென்னை,<br>3) சௌத் இந்தியன் பிலிம் டைரக்டர்ஸ் அசோசியேஷன், சென்னை,<br>ஆகிய பிரதிநிதிகளை உறுப்பினராகக் கொண்டு, குழுவைத் திருத்தியமைக்க மத்திய அரசை இவ்வரசு கோரியுள்ளது. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 13. | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 1) எல்.ப்பி.எப்.<br>2) ஏ.ஐ.டி.யு.சி.<br>3) ஐ.என்.டி.யு.சி.<br>4) சி.ஐ.டி.யு.சி.<br>5) என்.எல்.ஓ. |
| | தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை | |
| 14. | மாநில குழந்தை தொழிலாளர் ஆலோனைக் குழு | 1) தொழிலாளர் முன்னேற்றப் பேரவை.<br>2) தேசிய தொழிலாளர் அமைப்பு.<br>3) இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ், மகளிர் பிரிவு.<br>4) இந்து மஸ்தூர் சபா.<br>5) தமிழ்நாடு செயற்கை வைர தொழிலாளர் நல பாதுகாப்பு சங்கம்.<br>6) அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ், தமிழ்நாடு பிரிவு.<br>7) அண்ணா தொழிற்சங்க பேரவை.<br>8) தேசிய தொழிலாளர் அமைப்பு, தமிழ்நாடு பிரிவு.<br>9) இந்திய தொழிற்சங்க மையம். |





| (1) | (2) | (3) |
|---|---|---|
| 15. | மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு | 1) எல்.ப்பி.எப்.<br>2) ஏ.ஐ.டி.யு.சி.<br>3) என்.எல்.ஓ.<br>4) சி.ஐ.டி.யு.<br>5) எச்.எம்.எஸ்.<br>6) ஐ.என்.டி.யு.சி. |
| 16. | தொழிலாளர் ஈட்டுறுதி வட்டார வாரியம் | 1) ஐ.என்.டி.யு.சி.<br>2) சி.ஐ.டி.யு.<br>3) எச்.எம்.எஸ்.<br>4) எல்.ப்பி.எப். |
| 17. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி வட்டாரக் குழு | ஐ.என்.டி.யு.சி., சி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ். மற்றும் இக்குழுவில் ஏ.ஐ.டி.யு.சி., எல்.ப்பி.எப்., ஆகிய தொழிற்சங்க பிரதிநிதிகளை உறுப்பினர்களாக நியமனம் செய்து, இக்குழுவை திருத்தியமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து, அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையினை தமிழ்நாடு அரசு இதழில் மறு வெளியீடு செய்ய 11-8-97 அன்று பொது மேலாளர், (அரசு அச்சகம்) அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. |

[1997 அக்டோபர் 18

**23—**

**மழைக்கால நிவாரணத் தொகை அளித்தல்**

**வினா 10787—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்களுக்கு வழங்கப்படுவதைப் போல் கட்டிடத் தொழிலாளர்களுக்கும் மழைக்கால நிவாரணத் தொகை அளிக்க அரசு முனவருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1. ஒரு ஆண்டில் நான்கு மாத காலத்திற்கு பருவமழையின் காரணமாக மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல முடிவதில்லை. மீன்பிடிப்பு குறைவாக உள்ள இந்த நான்கு மாதங்களில் மீனவர்களுக்கு பிழைப்புதவி வழங்கிட வேண்டி சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மீனவரும் ஒரு மாதத்திற்கு ரூ. 45 வீதம் எட்டு மாதங்களுக்கு ரூ. 360-ம் செலுத்துவர். இதற்கு ஈடாக மத்திய அரசு ரூ. 360-ம் மாநில அரசு ரூ. 360-ம் தங்களது பங்காக வழங்கியதை சேர்த்து மொத்தம் ரூ. 1,080 மீன்பிடிப்பு குறைவான நான்கு மாதங்களில் நான்கு தவணைகளில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

2. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு இதுபோன்ற நிவாரணத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை. கட்டுமான தொழிலாளர்களின் நலன்களுக்காக வாரியம் அமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இது குறித்து இவ்வாரியத்தில் நடைபெறும் கூட்டத்தில் விவாதித்து தக்க முடிவெடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**24—**

**உலமா பென்ஷன் தொகையை உயர்த்தும் திட்டம்**

**வினா 12449—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை .அமைச்சர் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 18 ]

தமிழ்நாட்டில் வழங்கப்படும் உலமா பென்ஷன் தொகையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் வழங்கப்படும் உலமா பென்ஷன் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

**25—**

**நீதிமன்ற வளாகத்தில் பொது அறை, நூலகக் கட்டிடம் கட்டுதல்**

வினா **63—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கிழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டையில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்காக ஒரு பொது அறையும் (Common Hall) நூலகக் கட்டிடமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

நீதித் துறைக்கான நீதிமன்றக் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் 1993-94-ஆம் ஆண்டு முதல் மைய அரசின் 50 விழுக்காடு நிதி உதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன. 1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், நீதித்துறைக்கான கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்புகள் கொண்ட ஒரு பெருந்திட்டத்தை (Master Plan) தயாரித்து அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்குமாறு சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அந்த பெருந்திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கான பொது அறையும், நூலகக் கட்டிடமும் கட்டும் செயற் குறிப்பையும் சேர்த்து முன்னுரிமை அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்யும்போது நிதிநிலைக்கேற்ப அரசு பரிசிலனை செய்யும்.

[1997 அக்டோபர் 18

26—

**நீதிமன்ற வளாகத்திற்கு 'ஏ' பிளாக் கட்டிடம்**

வினா **9652—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் உள்ள நீதிமன்ற வளாகத்திற்கு 'ஏ' பிளாக் கட்டிடம் இன்னும் கட்டப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூரில் உள்ள நீதிமன்ற வளாகத்திற்கு 'ஏ' பிளாக் கட்டுவது குறித்த செயற்குறிப்பு சென்னை உயர்நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை. உயர்நீதிமன்றத்திடமிருந்து மேற்படி செயற்குறிப்பு வரப் பெற்றால் அரசு அதனை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

27—

**பயனுள்ள மரங்கள் வளர்க்க நடவடிக்கை**

வினா **10916—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதியில், பச்சைமலை கிழக்கு மலைத்தொடர்ச்சி குன்றுகளிலுள்ள பயனில்லாத மரங்களை வெட்டி எடுத்துவிட்டு ஆச்சா, சந்தன மரம், மூங்கில் போன்ற பயனுள்ள மரங்களை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள மரங்களை வெட்டி புதிதாக மரங்கள் நடும் திட்டம் எதுவுமில்லை. தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டத்தின்கீழ் பயன்தரும் மரங்கள் வருங்காலத்தில் பச்சைமலைக் குன்றுகளில் வளர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.



1997 அக்டோபர் 18]

28—

**சத்துணவுக்கூடம் அமைத்தல்**

வினா **7733—திரு. வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு ஊரகத்தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பழுக்காடு சத்துணவுக் கூடத்தை சீரமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தினை சேர்ந்த பழுக்காடு பள்ளி சத்துணவு மைய சமையல் கூடத்திற்கு 1997-98 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 30,000 மதிப்பீட்டு செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட உள்ளது.

29—

**கலப்பு மணம் எண்ணிக்கை விவரம்**

வினா **7769—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கலப்பு மணம் புரிந்து கொண்டுள்ளோர் எண்ணிக்கை குறித்து அரசு கணக்கெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் எண்ணிக்கை என்ன?

[1997 அக்டோபர் 18

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் கலப்பு மணம் புரிந்து கொண்டுள்ளோர் எண்ணிக்கை குறித்து இத்துறை மற்றும் பொருள் இயல் மற்றும் புள்ளி விவர இயக்ககம் மூலம் இதுவரை கணக்கெடுக்கப்படவில்லை.

சமூக நலத் துறை மூலம் கலப்பு மணம் புரிந்து கொண்டவர்களுக்கு நிதி வழங்கிடும் திட்டத்தில் இதுவரை பயன்பெற்றோரின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 1990-91 | 508 |
| 2. | 1991-92 | 585 |
| 3. | 1992-93 | 563 |
| 4. | 1993-94 | 538 |
| 5. | 1994-95 | 554 |
| 6. | 1995-96 | 553 |
| 7. | 1996-97 | 526 |

**30—**

**கலப்புத் திருமண உதவித் தொகை**

வினா **10327—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் 1996-97-ல் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்?



1997 அக்டோபர் 18]

(ஆ) பவானி தொகுதியில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்? அதில் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) பெரியார் மாவட்டத்தில் 1996-97-ல் கலப்புத் திருமணத்திற்கான உதவித்தொகை கேட்டவர்களின் எண்ணிக்கை : 13

(ஆ) பவானி தொகுதியில் கலப்புத் திருமணத்திற்கான உதவித்தொகை கேட்டவர்கள் : 2

(இ) உதவித்தொகை வழங்கப்பட்டவர்கள் : 2

**31—**

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

வினா **11623—திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட ஊடையம்-கரட்டுப்பாளையம் பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேற்படி கிராமத்தில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு க.ச.எண்.229/2 சாலையில் 0.82.0 எக்டேர் நிலம் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78-ன் கீழ் கையகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடவடிக்கைகள் முடிவுற்றதும் பட்டா வழங்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

[1997 அக்டோபர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) நெல்லை மாவட்டத்தில் வேலை உறுதி அளிப்புத் திட்டத்திற்கான பணம் பயன்படுத்தியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. நெல்லை மாவட்டத்தில், மத்திய அரசின், வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் பணத்தினைத் தவறாகப் பயன்படுத்தி, முறைகேடு நடந்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அப்பாவு, திரு. வேல்துரை, திரு. ரவி அருணன், திரு. ஞானசேகரன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக அதனை அனுமதித்து, அனைவரின் சார்பிலும், திரு. அப்பாவு அவர்களை மட்டும் பேச அழைக்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின், வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் நெல்லை மாவட்டத்தில் 19 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கொடுக்கப்பட்ட நிதியில், 3 தலைப்புகளின்கீழ், அதாவது குடிநீர், சாலை வசதி, வேளாண்மை போன்ற 3 தலைப்புகளின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டதில், வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட நிதியை, வேளாண்மைத் துறை, மண்வள மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அந்த ஒன்றியத்திற்குட்பட்ட சொந்தமான குளத்தினை ஆழப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வேலையை 60:40 என்ற கணக்கில், வேலையில்லாதவர்களுக்கு, மிக வறண்ட பகுதியில் உள்ளவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டத்தின் நோக்கம். ஆனால் யாருக்குமே வேலை கொடுக்காமல், இயந்திரங்களை வைத்து அந்தப் பணிகள் நடைபெற்றன. இயந்திரங்களை வைத்து, ஒரு குளத்தின் கரையிலிருந்து 10 மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான் மண் எடுக்க வேண்டுமென்ற ஒரு விதி இருந்தும், அதையும் மீறி, குளக் கரையிலேயே ஐந்தடி, ஆறடிக்குள்ளாக அந்த மெஷின்களை வைத்து, அங்குள்ள மண்ணை அள்ளி கரையிலேயே போடப்பட்டுள்ளது. அதனால்,



1997 அக்டோபர் 18 ] [திரு. மு. அப்பாவு]

குளங்கள் பெருகியதும், அதனால் குளத்தில் கசிவு ஏற்படுவதோடு மிகப்பெரிய அளவுக்குக் குளக்கரைக்கே பாதிப்பு ஏற்படக்கூடிய நிலையில் அந்தக் குளத்தில் வேலைகள் நடைபெற்று இருக்கின்றன. அதோடு மட்டுமின்றி, இப்பணிகள் எல்லாம், 30-8-1997-க்குள் அனைத்துப் பணிகளுமே முடிந்து விட்டதாக, அதற்குரிய பணங்களும் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை 22-9-1997 அன்று அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதற்கான முன்மொழிவை 22-9-1997 அன்று தான் எங்களிடமிருந்து பெற்றார்கள். அதற்கு முன்பாகவே அந்தப் பணிகள் எல்லாம் செய்துவிட்டதாகவும், இயந்திரங்களை வைத்துப் பணிகளைச் செய்துவிட்டு ஆட்களை வைத்து வேலை செய்ததாக தவறுதலாக கணக்குகளைப் பதிவு செய்து இருக்கிறார்கள். உதாரணத்திற்கு 2 இலட்ச ரூபாய் மதிப்புள்ள ஒரு வேலையை ஒரு குளத்தில் செய்வதற்குப் பதிலாக நான்கே நாட்களில் இயந்திரத்தை வைத்து அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். சுமார் 10,000 ரூபாய் முதல் 20,000 ரூபாய் வரை செலவு செய்யப்பட்டு 2 இலட்ச ரூபாய்க்கான நிதியை அரசிடமிருந்து முறைதவறி பெற்றிருக்கிறார்கள். இதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ மற்ற யாருமே இதில் சம்பந்தப்படவில்லை. முழுவதுமாக அதிகாரிகளுடைய கவனக் குறைவினால்தான் இது நடைபெற்றிருக்கிறதே தவிர மற்றபடி இந்த அரசின் மீது குறையாக இதை நாங்கள் கூறவில்லை. அதேபோன்று இந்த வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் வருகிற பணிகளில் குடிநீர், சாலை வசதிகள் என்ற இரண்டு தலைப்பின் கீழும் நிதியிருக்கிறது. ஆனால் அந்த இரண்டு தலைப்பின் கீழும் உள்ள பணிகள் இதுவரை முழுமையாகச் செயல்படவில்லை. பகுதியாகவும் செயல்படவில்லை.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மதிப்பீடுகள்கூட தயாரிக்காத நிலையில் இருக்கிறது. இந்த ஒரு பணி மட்டும் இவ்வளவு வேகமாக நடைபெற்று இருக்கிறது என்றால் முறைகேடு நடப்பதற்காகத்தான் நடந்து இருக்கிறதே தவிர வேறில்லை. அனைத்துக் குளங்களிலும் குளக்கரையிலிருந்து 10 மீட்டருக்கு அப்பால்தான் மண் எடுக்க வேண்டும் என்ற விதியையும் மாற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள். இன்னும் எத்தனை தடவைதான் சொல்வீர்கள்?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரங்கள் மூலமாகச் செய்ததற்கு இந்த மன்றத்தின் மூலமாக இதை விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினையை நெல்லை மாவட்டத்திற்கு மட்டுமல்ல தமிழ்நாடு முழுமைக்கும் விளக்கிக் கூற வேண்டிய ஒரு சூழ்நிலை எனக்கு உருவாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலை ஏன் எப்படி எழுந்தது என்பதெல்லாம் எனக்கு மிக நன்றாகத் தெரியும். இங்கே நான் தருகிற விளக்கம் 1995-96-ஆம் ஆண்டில் இதுபோன்ற திட்டங்கள் வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டங்களின்கீழ் நடக்கின்ற பணி ஒரே ஒரு குருவிக்குளம் ஒன்றியத்தில் மாத்திரம்தான் 1995-96-ல் கடந்த கால ஆட்சியிலே மேற்கொள்ளப்பட்டது. ஒன்றியங்கள் மூலம் செலவு செய்ய 60 இலட்சம் ரூபாயும் வேளாண் பொறியியல் துறை மூலம் செலவு செய்ய 52.50 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டது. இதில் ஒன்றியங்கள் மூலம் 100 பணிகள் 58.85 இலட்ச ரூபாயும், வேளாண் பொறியியல் துறை மூலம் 51.70 இலட்ச ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. வேளாண் பொறியியல் துறை மூலமாக நிறைய பணிகள் மேற்கொள்வது தவறு என்று இந்த மன்றத்திலே பேசியதாக நான் அறிந்தேன். அன்றையதினம் நான் இந்த மன்றத்திலே இல்லை. ஆனால் மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்படி 1993-ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்ட இந்த வழிகாட்டுதல் குறிப்பின்படி "The implementing agencies will be Blocks, Panchayats, Agricultural Engineering and Public Works Departments" என்றிருக்கிறது.

"The scheme has been implemented from 1-10-1993 in Tamil Nadu" என்றும் இருக்கிறது. எனவே, வேளாண் துறை மூலமாக பொறியியல் துறை மூலமாக செய்வதில் எந்தவிதமான புதிய திருப்பத்தையும் இந்த அரசு உருவாக்கிவிடவில்லை என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். 1995-96-ல் குருவிக்குளம் ஒன்றியத்தில் மாத்திரம் நடைபெற்ற இந்த வேலை, 1996-97 ஆம் ஆண்டில் 9 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 219.66 இலட்ச ரூபாயும் வேளாண் பொறியியல் துறை மூலமாக செலவு செய்ய 163.85 இலட்ச ரூபாயும் நிதி பெறப்பட்டிருக்கிறது நெல்லை மாவட்டத்தில். இதில் ஒன்றியங்கள் மூலமாக 219.66 இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுவிட்டது. ஒதுக்கப்பட்டத் தொகை ஒன்றியங்கள் மூலமாக செலவழிக்கப்பட்டுவிட்டது. வேளாண் பொறியியல் துறை மூலமாக ஒதுக்கப்பட்ட 163.85 இலட்சத்தில் 151.40 இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றியங்கள் 72 பணிகளை முடித்துள்ளன. மீதமுள்ள 154 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண் பொறியியல் துறை 215 பணிகளை முடித்துள்ளது. மீதமுள்ள 21 பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்பிறகு 1997-98 என்று எடுத்துக்கொண்டால் இந்தத் திட்டத்தின் கீழ் 19 ஊராட்சி ஒன்றியங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிட 135 இலட்ச ரூபாயும், வேளாண் பொறியியல் துறை செலவிட 307 இலட்ச ரூபாயும் நிதி வழங்கப்பட்டது.





முற்பகல் 10-20

இதில் வேளாண்மைப் பொறியியல் துறை 236.85 லட்ச ரூபாயை இதுவரையில் செலவிட்டுள்ளது. 169 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தார் மற்றும் சிமெண்ட் போன்ற பொருட்கள் 133 லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டத்தின் இந்தக் குறிப்புகளை, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் அவைக்கு வந்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நான் பெற்ற அறிக்கையை நான் இங்கே கூறவிரும்புகிறேன். இந்த மாவட்டத்தில் அனைத்துப் பிரிவுப் பணிகளும் அரசின் வழிகாட்டுதல் விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டப் பணிகளுக்கான வழிகாட்டுதல் விதிமுறைகளைப் பார்க்கும்போது Water and Soil Conservation Works-40%, Minor Irrigation Works - 20%, Link Roads - 20%, Primary Schools and Anganvadi Buildings - 20%. அதிலே, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பணிகள் அனைத்தும் ஒன்றியங்கள் மூலமாகச் செய்யப்படுகின்றன. Minor Irrigation Works, Link Roads, Primary Schools and Anganvadi Buildings இவைகள் எல்லாம் ஒன்றியங்கள் மூலமாகச் செய்யப்படுகின்றன. அதாவது 60 சதவிகிதப் பணிகள்

ஒன்றியங்கள் மூலமாக நடைபெற்றுள்ளன. 40 சதவிகிதப் பணிகளான Water and Soil Conservation Works-ஐப் பொறுத்தவரையில் அரசுத் துறைகள் மூலமாகத்தான் செய்யவேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்தப் பணிகள் வேளாண் பொறியியல் துறை மூலமாகச் செய்யப்பட்டுள்ளன. வேளாண் பொறியியல் துறை மூலமாகச் செய்யப்பட்டுவரும் நீர்ப்பாசன திட்டப் பணிகள் நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சியின் காரணமாக நிலத்தின் மேற்பரப்பு மிகவும் இறுகி, மேடு தட்டி, பாறை போன்று உரு மாறியிருக்கின்ற காரணத்தால் மனித ஆற்றலை மாத்திரம் கொண்டு இதைச் சீர் செய்ய முடியாது என்பதற்காக, மண்ணை தோண்ட இயலாத அசாதாரணமான நிலைமையில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். இயந்திரங்களுக்கு இந்த வகையிலே செலவிடப்பட்ட தொகை 10 சதவிகிதம்தான். அதாவது நான் குறிப்பிட்ட பிரிவு-1 என்ற பணிகள், வேளாண் துறையின் மூலமாக செய்யப்படுகின்ற பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை, இயந்திரங்களுக்காக 10 சதவிகிதத்திற்கும் குறைவானதுதான். 'புரொக்லின்' போன்ற இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் விதிமுறைகளின்படி மொத்தத் தொகையில் 60 சதவிகிதம் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியமாகவும், 40 சதவிகிதம் கட்டுமானப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செலவாகவும் இருத்தல் வேண்டும்.

1996-97-ஆம் ஆண்டு இயந்திரங்கள் பயன்படுத்திய வகையில் 7.20 லட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. எனவே நெல்லை மாவட்டத்தில் இந்தத் திட்டச் செயல்பாட்டில் எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெறவில்லை என்றும் அரசு விதிமுறைகளின்படிதான் செலவுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

1997-98-ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் இதுவரையில் 226 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 169 பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையான 236.85 இலட்ச ரூபாயில் 161.65 இலட்ச ரூபாய் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. மக்களுக்கே போய் சேரவில்லை என்ற அவரது கூற்று தவறானது என்பதற்கு இந்தப் புள்ளிவிவரம் சரியான சான்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.



52.60 இலட்ச ரூபாய் கட்டுமானப் பொருட்களுக்கும், 22.80 இலட்ச ரூபாய் இயந்திரங்களுக்கும் செலவிடப்பட்டுள்ளது. இவைகளின் சதவிகிதம் முறையை 22 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் ஆகும். விவசாயத் தொழிலாளர்களுக்குப் போய் சேர்ந்திருக்கின்ற தொகை 68 சதவிகிதம் ஆகும்.

1995-96-ல் ஒதுக்கீடு 60 இலட்ச ரூபாய். செலவு 58.85 இலட்சம். 1996-97-ல் ஒதுக்கீடு 219 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய். செலவு 219 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய். 1997-98-ல் ஒன்றியங்களுக்கு 135 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு. செலவு 133 இலட்ச ரூபாய். மொத்த ஒதுக்கீடு, 1995-96, 1996-97, 1997-98-ன் ஒதுக்கீடு 414 இலட்சத்தில் செலவு 411 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய். வேளாண் பொறியியல் துறையின் மூலமாக இந்த ஒதுக்கீடு, 1995-96, 1996-97, 1997-98-ல் 523 இலட்சம் ரூபாய். அதிலே செலவு 439 இலட்சம் ரூபாய். இரண்டும் சேர்த்து 938 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு, செலவாகி இருப்பது 851 இலட்சம் ரூபாய்.

இஃதன்னியில், அங்கே ஒரு முறைகேடு நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாயிற்று, அதை அதிகாரிகள் நல்ல முறையில் தடுத்துவிட்டார்கள் என்பதற்கான ஒரு செய்தியை இங்கே நான் கூற விரும்புகிறேன். ஊரக வளர்ச்சித் துறையின் துணைச் செயலாளர் தன்னுடைய 30-12-1996 தேதியிட்ட கடிதத்தில் திருநெல்வேலியிலுள்ள கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் ஊரக வளர்ச்சிச் சங்கத்தின் கோரிக்கையான திருநெல்வேலி மாவட்டத்தில் 'ஜவகர் ரோஜ்கர் யோஜனா' திட்டத்தின்கீழ் சிறிய நீர்ப்பாசனப் பணிகளையும் இராதாபுரம் வட்டத்திலே மீன் குட்டைகளை நிறுவும் பணிகளையும் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ள மனுவின் மீது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று இங்கேயிருந்து ஊரக வளர்ச்சித் துறை துணைச் செயலாளர் கேட்டிருந்தார். அங்கே கஸ்தூரிபாய் பெண்கள் சங்கத்தின் சார்பாக இந்தப் பணிகளையெல்லாம் எடுத்து செய்கிறோம் என்று 'கூறியிருந்தார்கள். அது தமிழ்நாட்டிலே எங்கிருக்கிறதோ எனக்குத் தெரியவில்லை. வளர்ச்சிப் பணிகளை கவனிக்கும் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் ஊரக வளர்ச்சி சங்கம் தெரிவித்த இடத்திற்கு 1-7-1996 அன்று சென்று பார்த்தபோது, அந்த முகவரியிலே நிரந்தரமான அலுவலகமோ, கருவிகளோ எதுவுமேயில்லை என்பதோடு ஒரு போர்டு மாத்திரம்தான்

இருந்தது என்ற அளவில் அப்படிப்பட்ட பணிகளை எடுத்து செய்யக்கூடிய கடந்த கால அனுபவமோ, தகுதியோ சங்கத்திற்கு இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார். எனவே, இப்படி முறைகேடு நடப்பதை, செய்யப்பட்ட முயற்சியை முறையிடுகின்ற வகையிலேதான் அதிகாரிகள் அங்கே பணியாற்றியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்து எந்த முறைகேடும் நடைபெறவில்லையென்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

## (ஆ) உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி தன் உயிருக்கு ஆபத்து உள்ளதாகத் தெரிவித்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த, சிறப்புக் கவன ஈர்ப்பு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தன் உயிருக்கு ஆபத்து உள்ளது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மிகச் சுருக்கமாகப் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சில மாதங்களாக திடீர், திடீரென்று கலவரங்கள் வெடிப்பதும், அதைத் தொடர்ந்து மக்கள் பீதிக்குள்ளாவதையும் நாம் அறிவோம். சமீபத்தில் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னாலேகூட சென்னையிலே ஆயிரக்கணக்கான குடிசைகள் தீக்கிரையாயின. அதே போல தென்மாவட்டங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. வீடுகள் இடிக்கப்பட்டன. சட்டமன்ற உறுப்பினராகிய நான் சுற்றுப்பயணம் செய்கின்றபோது திடீரென்று பல கிராமங்களிலே என் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 1996-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலே, விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம் அருகே சங்கரலிங்காபுரம் என்ற கிராமத்திலே என்னுடைய கார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதே போல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் ஓராண்டுக்கு முன்னால் இருந்த நிகழ்ச்சிகளை ஆரம்பித்தால், முடிப்பதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். அண்மையிலே எனக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கிறீர்கள். அதிலே நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள் இருக்கும்போது இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அதற்காக அனுமதி கொடுத்திருக்கிறேன். தயவுசெய்து சுருக்கமாகப் பேசுங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கொடுத்த கடிதத்தில் எனக்கு வந்த தகவலின்படி ஒரு அரசியல் கட்சி அவருடைய உயிருக்கு குறி வைத்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அது எந்த அரசியல் கட்சி என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எனவே, அது எல்லா அரசியல் கட்சிகளையும் குறிப்பிடுகின்ற ஒன்றாக இருக்கின்ற காரணத்தினால், அதைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டால் நல்லது. அல்லது ஆளுங்கட்சியோ, இங்கு இருக்கின்ற கட்சிகளோ அதற்குத் தொடர்பில்லை என்று சொன்னாலாவது நல்லது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதே போல கிழவிக்குளத்திலேயும் என்னுடைய கார் மீது தாக்குதல் நடந்தது. காவல்துறை அதிகாரிகள் இருந்தபோது நடந்தது. 15 நாட்களுக்கு முன்பு எழுமலை அருகே நான் சுற்றுப்பயணம் செய்கின்றபோது 7 கிராமங்களிலே மின் விளக்கினை அணைத்து என்மீது தாக்குதலை நடத்தினார்கள். இதையெல்லாம் ஏதோ சாதாரண நிகழ்ச்சி என்று எடுத்துவிடக் கூடாது. இதற்கெல்லாம் நிச்சயமாக ஒரு பின்னணி இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு சாட்சி, சில நாட்களுக்கு முன்பு எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அந்தக் கடிதத்திலே ஒரு அதிபயங்கரமான சதி நடந்து கொண்டிருக்கிறது என்றும் அதற்கு காரணமாக கடந்த முறை ஆட்சியிலே இருந்த அ.இ.அ.தி.மு.க. தான்...(குறுக்கீடுகள்) என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு அவர்கள் பேசட்டும்....(குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** மொட்டை பெட்டிஷன் கொடுத்து அதை நீங்கள் இந்தமாதிரி எடுத்துக்கொள்கிறீர்களே, அப்படியானால் நானும் ஒன்றைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 10-30

**திரு. இரா. தாமரைக்கனி:** முன்னாள் தி.மு.க. எம்.பி.யாகப் போட்டி போட்டவர். தி.மு.க.விற்கு ஜால்ரா போட்டுக்கொண்டு, ஜாதிக் கலவரங்களைத் தூண்டிவிடுகிறார். தி.மு.க. தூண்டுதல் காரணமாக ஜாதிக் கலவரம் நடக்கிறது. நீங்கள் வந்து திசை திருப்புகிறீர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் தாமரைக்கனி அவர்கள் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்கிற கூற்றுக்குப் பதில் சொல்ல வந்து, தி.மு.க. தூண்டுதலின்பேரில்தான் ஜாதிக் கலவரங்கள் நடக்கின்றன என்று சொல்வது எந்த வகையிலே நாகரீகம், எந்த வகையிலே இந்த அவைக்கு உகந்தது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே, தாமரைக்கனி சொன்ன அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு). நான் பேசும்போது நீங்கள் பேசக்கூடாது. உட்காருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்று அளித்த கடிதத்தின் அடிப்படையில் நான் சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். அவர் உங்கள்பேரில் குறை சொன்னால், அதற்கும் உங்களுக்கும் தொடர்பு இல்லை என்று சொல்லுங்கள்; தவறாகச் சொல்கிறார் என்று சொல்லுங்கள்; நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். இப்போது அமைதியாக உட்காருங்கள் (குறுக்கீடு). அமைதியாக உட்கார்ந்து கேளுங்கள்; அதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள் செட்டப் பண்ணி இப்படி ஒரு கவன ஈர்ப்பை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "நீங்கள்" என்றால் யார், நானா? (குறுக்கீடு) "நீங்கள்" என்றால் நானா?

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்த ஆட்சி...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, கொஞ்சம் இருங்கள். நீங்கள் சட்டப்படி பேச வேண்டும். மூன்று நாட்களுக்கு முன்னாலே வீரப்பன் ஒரு கொலைகாரன், 200 கொலை பண்ணியவன் என்று சொல்லிவிட்டு அடுத்த நிமிடமே வீரப்பனுக்கும், முதல்வருக்கும் தொடர்பு இருக்கிறது என்று சொன்னீர்கள், நான் அனுமதித்தேன். நீங்கள் அடுத்தவர்களைக் குறை சொல்லும்போது அனுமதித்தேன், உங்களைப் பற்றிப் பேசும்போது அமைதியாகக் கேட்க வேண்டும். நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். அதை இல்லை என்று சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடு) திரு. சுந்தரம், சும்மா இருங்கள், நீங்கள் பேசக் கூடாது. தாமரைக்கனிக்கு நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒட்டுமொத்தமாக 6 கோடி தமிழ் மக்களுடைய பிரச்சினை. சில நாட்களுக்கு முன்பு எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அந்தக் கடிதத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், டி.ஜி.பி. அவர்களுக்கும் உளவுத் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறேன். அதிலே பல நிகழ்ச்சிகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. சென்னையிலே சத்தியவாணிமுத்து நகரில் எரிக்கப்பட்ட - தீ வைத்துக் கொளுத்தப்பட்ட குடிசைகளும் அதைப்போல பல இடங்களில் - குறிப்பாக சேலம் மாவட்டத்தில் தொட்டம்பட்டி அருகிலே நடந்த இரயில் கவிழ்ப்பு போன்ற நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் அ.தி.மு.க.தான் காரணம் என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற தகவல் இருக்கிறது.

அதிலே மிக முக்கியமான விஷயம், தாரமங்கலம் எம்.எல்.ஏ. திரு. கோவிந்தன் அவர்களுடைய, அதைப்போல தேவேந்திர குல வேளாள சங்கத்தின் தலைவர் திரு. கிருஷ்ணசாமி ஆகிய என்னுடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் எப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்றால் "தேவேந்திர குல வேளாளர் சங்கத்தின் எம்.எல்.ஏ.-வை இல்லாமல் செய்ய வேண்டும். இதற்குத் தனியாக நல்ல கூலி கிடைக்கும்" எனவே, கடந்த ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு, அடி ஆட்களை வைத்துக்கொண்டு, ஆட்டோக்களை வைத்துக் கொண்டு அராஜக ஆட்சி செய்தவர்கள், ஆட்சி இழந்த காரணத்தாலே ஆத்திரப்பட்டு, அந்த ஆட்சி இழப்பதற்குக் காரணமாக இருந்தவன் நான் என்ற அடிப்படையில் என்னைத்

தீர்த்துக்கட்டுவதற்கு, அ.தி.மு.க.வுடைய பொதுச் செயலாளர் ஜெயலலிதாதான் காரணம் என்று இந்த மன்றத்தில் குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குண்டான ஆவணங்கள் சரியாக இருக்கிறது என்று, எனக்கு வந்த கடிதத்தின் தகவலின்படி நான் இந்தக் குற்றச்சாட்டை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லி முடித்துவிட்டீர்களா? நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கொடுத்த ஆவணங்கள் அத்தனையும் என்னுடைய அறையிலே கொடுத்திருக்க வேண்டும். ஏற்கெனவே நீங்கள் கொடுத்த கடிதத்தை நான் காவல் துறைத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறேன். உங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், பேரவைத் தலைவர் என்ற முறையில் உங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கச் சொல்ல எனக்கு உரிமையுண்டு. ஆகையினால் உங்கள் பேச்சை இத்தோடு முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய உயிருக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கோரியதற்கு...

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, கொஞ்சம் இருங்கள். (குறுக்கிடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** எல்லோரும் சேர்ந்து, ஆளும் கட்சி, எதிர்க்கட்சியில் உள்ள அத்தனைபேரும் ஒன்றாகச் சேர்ந்து அத்தனை பேரும், தாங்கள் எல்லோரும் சேர்ந்து நாடகம் ஆடுகிறீர்கள்.

*முற்பகல் 10-35*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் முதலிலே தங்களிடத்திலே கேட்டுக்கொண்டேன். சாதிக் கலவரங்களைத் தூண்டி விடுவது தி.மு.க.தான் என்று சொன்ன வாசகத்தை அவைக் குறிப்பிலே இருந்து அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதைப்போலவே, 'எல்லோரும் சேர்ந்து, ஆளும் கட்சி, எதிர்க்கட்சியிலே உள்ள அத்தனை பேரும், தாங்கள் எல்லோரும் சேர்ந்து, நாடகம் ஆடுகிறீர்கள்' என்று சொன்ன அந்த வாசகங்களையும் அவைக்



குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டும் என்று தங்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** உங்களுக்குச் சாதகம் என்றால் வைத்துக்கொள்கிறீர்கள் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு என்றால் யார்? (குறுக்கிடு) எனக்கா? (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாகப் பேசுங்கள். உங்களுக்கு என்றால் எனக்கா? (குறுக்கீடு) அப்படி என்றால், நேற்றைக்கு முந்தையநாள் முதலமைச்சரைப்பற்றி . . . (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** உங்களுக்குச் சாதகமாக இருந்தால் வைத்துக்கொள்வது; இல்லாவிட்டால் எடுத்துவிடுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றைக்கு முந்தையநாள் வீரப்பனுக்கும் முதலமைச்சருக்கும் தொடர்பு இருக்கிறது என்று சொன்னீர்களே. அதை நான் எடுத்தேனா? உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கிறேன்; நீங்கள் உட்காருங்கள் . . . . (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, பேச அனுமதி கொடுங்கள் ...

**திரு. இரா. தாமரைக்கனி:** கிருஷ்ணசாமி உண்மைக்கு மாறாகச் சொல்கிறார். ஆந்திராவில் பயிற்சி பெற்ற நக்சலைட் அவர். டி.ஜி.பி. ஆபீசில் கேளுங்கள். மத்திய சர்க்காருக்கும் தெரியும், மாநில சர்க்காருக்கும் தெரியும். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பொது மேடை அல்ல. உட்காருங்கள். உங்கள் பிரச்சினை முடிந்தது. (குறுக்கீடுகள்)

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே,.....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை முடிந்தது. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை இதோடு முடிந்தது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்கார வேண்டும்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** எங்கள் கட்சிக்கு வாய்ப்புக் கொடுப்பது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஜெயலலிதாவைப்பற்றிச் சொன்னதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குங்கள் . . . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,...

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் முன்னாள் தி.மு.க. எம்.பி.-க்காகப் பாடுபட்டவர். இப்போது நக்சலைட் ஆகிவிட்டார். அவர் சொல்வதை வைத்து....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே,....

**திரு. சொ. கருப்பசாமி:** தலைவர் அவர்களே,.....

**திரு. சி. வேலாயுதன்:** தலைவர் அவர்களே,...

(டாக்டர் க. கிருஷ்ணசாமி தனது இருக்கையைவிட்டு நகர்ந்து திரு. இரா. தாமரைக்கனியை நோக்கி வேகமாக வந்தார்.) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. டாக்டர் கிருஷ்ணசாமி வெளியேறுங்கள் அவையைவிட்டு.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் அடிக்க வரலாமா?

**திரு. இரா. தாமரைக்கனி:** இது நியாயமா?



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,...

**திரு. இரா. தாமரைக்கனி:** சாதிப் பிரச்சினையை இங்கே கிளப்புகிறார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,....

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்களே சப்போர்ட் பண்ணுகிறீர்கள். இது நியாயமா? . . . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, . . .

**திரு. இரா. தாமரைக்கனி:** பத்திரிகை நிருபர்கள் இல்லையா? இது நியாயமா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே,.....

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே,.....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி, அடுத்த முறை எழுந்தால் வெளியேற்றுவேன். நீங்கள் முறைகேடாக நடந்து இருக்கின்றீர்கள். வன்மையாக எச்சரிக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, இதைப்பற்றிப் பேச வரவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் நாட்டு நலனுக்காகச் சொல்கிறேன்.....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசாமல் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** டாக்டர் கிருஷ்ணசாமி பேசியதை எடுக்கப் போகிறீர்களா, இல்லையா ?.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள். எடுப்பதும் எடுக்காததும் என்னுடைய உரிமை.

*(மீண்டும் டாக்டர் க. கிருஷ்ணசாமி தனது இருக்கையைவிட்டு நகர்ந்து திரு. இரா. தாமரைக்கனியை நோக்கி வேகமாக வந்தார்.)*

**திரு. இரா. தாமரைக்கனி:** அடிக்க வருகிறார் அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதுகாப்புக் கொடுக்கிறேன்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி நின்று கொண்டு இருந்தார், (கூச்சல்-குழப்பம்).*

**திரு. இரா. தாமரைக்கனி:** (திரு. கிருஷ்ணசாமியைப் பார்த்து) நீயா, நானா? பார்க்கலாமா ?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** போடா......

**திரு. இரா. தாமரைக்கனி:** நீ போடா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தாமரைக்கனி, கிருஷ்ணசாமி, இரண்டு பேரையும் அவையைவிட்டு வெளியேற்றுகின்றேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி, கிருஷ்ணசாமி, இருவரையும் அவையைவிட்டு வெளியேற்றுகின்றேன். வெளியேறுங்கள். வெளியேறுங்கள். இரண்டு பேருமே வெளியேறுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் சொன்ன பிரச்சினையை எடுத்துவிடுங்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளியேறுங்கள். அது எனக்குத் தெரியும். காவலர்கள், அவர்களை வெளியேற்றுங்கள் இரண்டு பேரையுமே வெளியேற்றுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவர் சொன்ன பிரச்சினையை எடுங்கள்__

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் வெளியே போங்கள்.



**திரு. இரா. தாமரைக்கனி:** (சிரித்துக்கொண்டே) நான் வெளியே போனால் அடித்துக் கொன்றுவிடுவார் என்று பயமாக இருக்கிறது. போலீஸ் பாதுகாப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதுகாப்புக் கொடுக்கிறேன்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி ஆகிய இருவரும் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

*முற்பகல் 10-40*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம், ஒரே வரியில் எங்களுக்குத் தொடர்பு இல்லை என்று மட்டும் சொல்வதற்கு அனுமதி அளிக்கிறேன். சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி, எங்களுடைய பொதுச் செயலாளர் ஜெயலலிதா அவர்களைப் பற்றிப் பேசிய வார்த்தைகள், எங்களுக்கு அதிலே சம்பந்தம் இருக்கிறது என்று கூறிய வார்த்தைகள், இவைகளை தயவுசெய்து அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுகிறேன். முதல்வர் அவர்கள் தி.மு.க.வுக்கும், ஜாதிப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை, அதை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொன்னார்கள். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட்டீர்கள். அதேபோல் அவர் ஆதாரம் இல்லாமல் பேசியிருக்கிறார். அவர் வேண்டுமானால் ஆதாரத்தைக் கொடுக்கட்டும். அதை நீங்கள் பரிசிலித்து அதில் நீங்கள் சொல்லலாமே தவிர, அவர் பொத்தாம் பொதுவாக எங்கள் கட்சி மீதும் அவதூறாக அபாண்டமாகப் பழி சுமத்தியிருப்பதை நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து தயவுசெய்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*(திருவாளர்கள் ஜி.கே. மணி, சொ. கருப்பசாமி நின்று கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லாம் இடையில் ஏன் எழுந்திருக்கிறீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் இதுபோன்று ஏதாவது ஒரு நிகழ்ச்சியை நடத்திவிட்டு

ஆக்கபூர்வமாக இங்கே நடைபெறுகின்ற பல்வேறு விவாதங்கள் எல்லாம்
மறைந்துபோகின்ற அளவுக்கும், நாட்டு மக்களுக்காக இங்கே உள்ள
பல கட்சிகளின் தலைவர்கள், எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், மற்ற
தோழமைக் கட்சிகளாக இருந்தாலும், அந்தக் கட்சிகளின் தலைவர்களும்
உறுப்பினர்களும் எடுத்து வைக்கின்ற நல்ல கருத்துக்கள் - அரசுக்குத்
தேவையான கருத்துக்கள் - அந்தக் கருத்துக்களை அறிந்து அரசு
தன்னையும் திருத்திக்கொண்டு, மக்களுக்கும் நல்லது செய்ய
வேண்டுமென்ற அளவிலே அமைகின்ற கருத்துக்கள், இவைகள் எல்லாம்
ஏடுகளில் இடம்பெற முடியாத ஒரு நிலையை உருவாக்கி, சட்டசபையில்
மோதல், அடிதடி, சண்டை என்ற இந்தச் செய்திகளுக்கே முக்கியத்துவம்
தருகின்ற சூழ்நிலையை உருவாக்க எண்ணுகிறார்கள்.

அவர்கள் ஆளுங்கட்சியாக இருக்கும்போதும் இதைத்தான்
செய்தார்கள். ஆளும் கட்சியாக இருக்கும்போது, ஒருவர் இருவராக
இருந்த எதிர்க்கட்சிக்காரர்களை எல்லாம் பந்தாடுகின்ற அளவுக்கு
பல நிகழ்ச்சிகள் இந்த அவையிலே நடைபெற்றிருக்கின்றன. இப்போது
உருவாகியிருக்கின்ற இந்தப் புதிய ஆட்சியில் சட்டமன்றத்தில் எல்லா
வகையான நாகரீக உணர்வுகளோடும் அனைவரும் செயல்பட்டுக்
கொண்டு வாதங்களை நடத்திக்கொண்டிருக்கும்போது, வேண்டுமென்றே
சம்பந்தம் இல்லாத விஷயங்களைப் பேசி, இங்கே தகராறுகளை
விளைவிப்பதையே தங்களது முக்கிய நோக்கமாகக் கொண்டு அ.தி.மு.க.
வைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் இங்கே செயல்பட்டுக்
கொண்டிருக்கின்றார்கள். கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு கூற்றை எடுத்துச்
சொன்னார். அவர் அத்தகைய கடிதம் ஒன்றை எனக்கும்
அனுப்பியிருக்கிறார். தங்களுக்கும் அனுப்பியிருப்பதாகச் சொன்னார்.
தாங்களும் அதைப் போலீஸ் துறைக்கு அனுப்பியிருப்பதாகச்
சொன்னீர்கள். அந்தக் கடிதம் பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது. எல்லாவிதமான எச்சரிக்கைகள், பாதுகாப்புகள் எல்லாருக்கும்-
கிருஷ்ணசாமிக்கு மாத்திரமல்ல, எல்லா சமுதாயத்திலும் உள்ள
தலைவர்களுக்கும் அத்தகைய பாதுகாப்புகள் அளிக்கப்பட
வேண்டுமென்ற நிலையை அரசு எடுத்து செயல்பட்டு வருகின்றது.

அவர் பேசும்போது ஒரு அரசியல் கட்சி என்று சொன்ன
காரணத்தால்தான் நான் கூட கேட்டேன். இந்த அவையில் உள்ள
அரசியல் கட்சிகள் அல்ல என்று சொன்னால், வேறு எந்த அரசியல்
கட்சி என்று சொல்லுங்கள் என்றுகூட நான் கேட்டேன். ஆனால்
அவர் ஒரு அரசியல் கட்சியைக் குற்றம் சாட்டி இங்கே பேசினார்.





அவருக்கும் தாமரைக்கனிக்கும் இங்கே விவாதம் நடந்துகொண்டிருக்கும்
போது, தேவையில்லாமல் தாமரைக்கனி என்னையும் தங்களையும்
இந்த அவையிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையும் மற்ற
தலைவர்களையும் இணைத்து எல்லோரும் சேர்ந்து நாடகம் ஆடுவதாக
உரத்த குரலில் பேசினார். உரத்த குரலில் பேசுவது, பேசிவிட்டு
உடனடியாக அதை நகைச்சுவையாக மாற்றிக்கொண்டு
சிரித்துக்கொண்டே வெளியேறுவது என்பதைப் பார்க்கும்போது, யார்
ஆடுவது நாடகம் என்றே எனக்குப் புரியவில்லை. ஆக்ரோஷமாகப்
பேசிவிட்டு, உடனே பத்திரிகைகளில் செய்தி வந்துவிடும் என்ற
கணிப்பில், பத்திரிகையாளர்களே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று
அவர்களைப் பார்த்துப் பேசுவது என்பது இந்த அவைக்கு மிக மிக
மாறுபாடான, நம்முடைய மரபுக்கு ஒத்துவராத, கடந்த காலத்திலே
நடைபெற்ற கனவுகளாகவே ஆகிவிடக்கூடிய சில நிகழ்ச்சிகள்,
ஆக்கப்பட வேண்டிய நிகழ்ச்சிகளை அவர்கள் தொடர்ந்து செய்து
வருகின்றார்கள். எனவே இனிமேலாவது அத்தகைய நிகழ்ச்சிகள்
நடைபெறாமல் அந்தக் கட்சியின் தலைமை இவர்களுக்கு அறிவுரை
கூறும் என்று நான் கருதுகிறேன். அதற்கிடையிலே இங்கே நடைபெற்ற
சம்பவங்களில் எதையும் தாங்கள், நான் சொன்னவைகளைக்கூட,
எடுத்துவிட வேண்டுமென்று நான் சொன்னவைகளைக் கூட
என்னுடைய வேண்டுகோளுக்காக எடுக்கத் தேவையில்லை.
அத்தனையும் பத்திரிகையிலே அப்படியே வந்தால்தான், என்ன நடந்தது;
சபை எப்படி நடக்கிறது என்பதை நாட்டுமக்கள் அறிந்துகொள்வார்கள்.
எனவே, எல்லாம் அப்படியே இருக்கட்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**திரு. பி.ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
ஒன்றே ஒன்று....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எழுந்து நிற்கும்போது நீங்கள்
உட்கார வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒரு கருத்தைச்
சொல்ல விரும்புகின்றேன். நேற்றையதினம் தொடங்கியது இன்றும்
தொடர் கதையாக நடைபெறுகின்றது. சட்டப் பேரவையை எப்படி
நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக
ரீதியாக விரும்புகின்றார்களோ, அதைக் கடைப்பிடித்து என்னால்
முடிந்தவரை நடுநிலையாக இருக்கின்றேன். அதற்கு ஒரு உதாரணம்

சொல்ல வேண்டும். நேற்று துணை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற்றது. பேசிய உறுப்பினர்கள் 9 பேர். 165 பேர் உள்ள ஆளும் கட்சி சார்பில் ஒரேயொரு உறுப்பினர்தான் பேசினார். எதிர்க்கட்சி சார்பிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் திரு. சி. ஞானசேகரன் அவர்களும் பேசினார்கள். ஆளும் கட்சி சார்பிலே 3 பேர்களை நான் அனுமதித்திருந்தேன். ஆனால் நேரமாகிவிட்ட காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற கட்சிகளெல்லாம் பேசட்டும் என்று சொல்லி, ஆளும் கட்சி சார்பில் பேசவிருந்த மூன்று உறுப்பினர்களில் 2 பேரை நீக்கிவிட்டார்கள். இது எண்ணிக்கையைப் பொறுத்தவரையில். நேரத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கால் மணி நேரம்தான் பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரை மணி நேரம் பதில் சொன்னார்கள். ஆனால் அ.இ.அ.தி.மு.க. தலைவர் திரு. இரா. தாமரைக்கனி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களும் எடுத்துக்கொண்ட நேரம் 30 நிமிடங்களுக்கு மேல்.

ஒழுங்குப் பிரச்சினை என்று பல முறை திரு. சுந்தரம் அவர்கள் பேச எழுந்தார்கள். 3 நாட்களுக்கு முன்னாலே திரு. தாமரைக்கனி அவர்கள் சந்தனக் கடத்தல் வீரப்பனை 'அவன், இவன்' என்று கூறிவிட்டு, முதலமைச்சர் 'அவர்' என்று சொல்லக் கூடாது என்று கண்டித்துவிட்டு, 200 பேரைக் கொலை செய்தவன் என்று சொல்லிவிட்டு, அடுத்த வினாடியே, முதலமைச்சர் அவர்களுக்கும், வீரப்பனுக்கும் தொடர்பிருக்கிறது என்று சொன்னார். அதை திரு. சுந்தரம் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார். ஆனால், தோழமைக் கட்சியிலே ஒருவர், முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கும் வீரப்பனுக்கும் தொடர்பு என்று சொன்னவுடன் எழுந்து 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று சொல்கின்றார். அதனால் என்னைப் பொறுத்தவரையில், இதற்குமேல் ஜனநாயகமாக சபையை நடத்த முடியாது. உறுப்பினர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகின்றேன்.

நாடாளுமன்றத்திலே விவாதத்திற்கு ஒதுக்கப்படும் நேரத்திலே கட்சிகளின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் உறுப்பினர்களுக்கு நேரம் ஒதுக்கப்படும். அதை அடியோடு நான் இங்கே கடைப்பிடிப்பதில்லை. இனிமேல் அதைக் கடைப்பிடிக்கப் போகிறேன்



என்பதை நான் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). காரணம், 165 பேர் பேசத் தெரியாதவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நாட்டுமக்கள் நினைத்து விடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களை எவ்வளவோ கட்டுப்படுத்தித்தான் மாண்புமிகு முதலமைச்சர் வைத்திருக்கின்றார்கள். நானும் பேரவைத் தலைவர் என்ற முறையிலே செய்கிறேன். நேற்றையதினம் கூட இரண்டு உறுப்பினர்கள் எழுந்து நின்றார்களேயொழிய, ஆளும் கட்சி உறுப்பினர்கள் 50 பேர் இவர்களுக்குப் பின்னாலே இருக்கின்றார்கள், யாரும் பக்கத்திலே, வரவில்லை. ஆகவே. அடிக்க வருகின்றார்கள் என்றெல்லாம் சொல்வது ஒரு நாடகம். நான் முடிந்த வரையிலும் ஜனநாயக ரீதியாக சபையை நடத்துவேன். ஆனால் திட்டவட்டமாக இப்போது ஒன்றைச் சொல்கிறேன். அடுத்த கூட்டத் தொடர் முதல் கட்சிகளின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் நேரம் ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). அப்படி நான் செய்கின்ற நேரத்தில் பல கட்சிகளுக்கு, பல நாட்களுக்குப் பேச வாய்ப்பே கிடைக்காது, எண்ணிக்கையின் அடிப்படையில். அதை நீங்கள் மறந்து விடக்கூடாது. தொடர்ந்து இந்த முறையைத்தான் நீங்கள் கடைப்பிடிப்பீர்கள் என்றால், நான் இந்தக் கொள்கையைத்தான் கடைப்பிடிப்பேன் என்று தெளிவாக இப்போது எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று..... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், இப்போது சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணசாமி அவர்கள் தனது இருக்கையிலிருந்து எழுந்து வந்து எங்களுடைய கட்சித் தலைவரைத் தாக்க வந்தாரா, இல்லையா ? என்னுடைய கேள்வி இதுதான். இது நியாயமா ? நேர்மையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. கிருஷ்ணசாமி அவர்களை எதற்காக வெளியேற்றினேன் என்று நினைக்கிறீர்கள்? அவர் பேசியதிலே ஒன்றும் தவறில்லை. சொன்ன கருத்திலும் ஒன்றும் தவறில்லை. அவரது இடத்திலிருந்து எழுந்து வந்ததற்காகத்தான் அவரை வெளியேற்றினேன். இன்னொன்றையும்

நீங்கள் மறந்து விடக்கூடாது. நீங்கள் இந்தச் சட்டமன்றத்திற்குத்தான் முதன்முதலாக வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். பலகாலமாக இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினர்களைத் தாக்குவதில் கதாநாயகன் யார் என்பதை மறந்து விடாமல் பேச வேண்டும்.

*முற்பகல் 10-50*

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினருக்கு வந்துள்ள கொலை மிரட்டல்

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கோவிந்தனுக்கு கொலை மிரட்டல் வந்துள்ளது என்று சொன்னார்கள். நீங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தப் பாதுகாப்பு வேண்டுமானாலும் உங்களுக்குத் தருகிறோம். நீங்கள் உட்காருங்கள். திரு. கோவிந்தனிடம் இது பற்றிப் பேசி விட்டேன்.

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (இ) இராமேசுவரம் அருகில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள்மீது இலங்கை இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, இராமேசுவரம் அருகில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள்மீது இலங்கை இராணுவம் சுட்டது குறித்து திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. இ. கணேசன் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற முறையிலும், திரு. ஜி.கே. மணி, திரு. ஜி. நிஜாமுதீன், (குறுக்கீடு) திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளனர்.

இந்தத் தீர்மானத்தில் பேசுவதற்கு 5, 6 பேர் எழுதிக் கொடுத்து இருக்கிறீர்கள். கட்சியில் ஒற்றுமையாக இருக்கிறீர்கள், ஆனால் கையெழுத்துப் போட மறந்து விடுகிறீர்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக இதை அனுமதித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேச அழைக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.





**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இராமேஸ்வரத்தில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள்மீது சிங்களப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மூவர் காயம் அடைந்து அவர்கள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த மீனவர்கள் தாக்கப்படுவது என்பது தொடர் நிகழ்ச்சியாக நடந்து வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புவது எல்லாம் நம்முடைய அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு பேச வேண்டும். சிங்கள இராணுவம் நம்முடைய தமிழக மீனவர்கள்மீது அடிக்கடி இதுபோன்ற துப்பாக்கிச் சூட்டை நடத்தி தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலையை உருவாக்கிக் கொண்டிருப்பது ஒன்று. இன்னொன்று, அவர்கள் மீன் பிடிக்கப்போகிற தொழிலுக்கே குந்தகம் விளைவிக்கக்கூடிய, ஒரு பீதி அடையக்கூடிய நிலையை உருவாக்கிக் கொண்டிருப்பது ஆகும். இந்த இரண்டு நிலைகளையும் தவிர்க்கின்ற முகத்தான் நம்முடைய தமிழக அரசு, மத்திய அரசுக்கு எழுதி உரிய நடவடிக்கை எடுத்து சிங்கள இராணுவம் தமிழக மீனவர்கள்மீது தாக்குதல் தொடுக்காவண்ணம் ஆவன செய்யப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய கடலோர மீனவர்கள் தொடர்ந்து சிங்கள கடற்படை இராணுவத்தால் தாக்கப்பட்டு வருகின்ற நிகழ்ச்சி தொடர் கதையாகி வருகின்றது. இதற்கெல்லாம் ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று சொன்னால், கடல் பகுதிகளிலே அவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறபோது, அவர்கள் எல்லைகளைப் பார்த்துச சென்று மீன்பிடிக்க இயலாது. தரையிலேகூட நீங்கள் பார்த்தால், வரப்புகளை தள்ளித்தள்ளிப் போட்டுத் தகராறுகள் உருவாவதைப் பார்க்கலாம். தரையிலே அடையாளம் காண முடியும், ஆனால் கடல் நீரிலே அடையாளம் காண முடியாது. எந்தப் பகுதி தமிழ்நாட்டிற்குரிய பகுதி, எந்தப் பகுதி இலங்கைக்குரிய பகுதி என்றெல்லாம் காண முடியாது.

அதேபோல, கச்சத்தீவுப் பகுதிகளிலே மீன் பிடிக்கின்ற உரிமை முன்பு தமிழகத்திற்குச் சேர்ந்திருந்தது. ஆனால் இடையிலே அந்த உரிமையானது பறிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எழுதிக்கேட்டு, அந்த உரிமையை சிங்கள அரசாங்கத்திடமிருந்து, மத்திய அரசாங்கமானது பெற்று வந்து இருக்கிறதா என்று தெரியவில்லை. நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்கு அந்தக் கடலோர மீனவர்கள் அன்றாடம் தங்களுடைய உயிரை, உடைமைகளை இழந்து தவிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மீனவர்கள் சிங்களப் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு, இலங்கையிலே காவல் வைக்கப்படுகின்ற கொடுமையான சூழ்நிலை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் தயவுசெய்து அமைதி காக்கவும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'தரைமேல் பிறக்க வைத்தான், எங்களைத் தண்ணீரில் பிழைக்க வைத்தான், கடல்மேல் இருக்க வைத்தான், எங்களைக் கண்ணீரில் குளிக்க வைத்தான்' என்று ஒரு படப் பாடல் வரிகள் வரும். அந்தத் துயரமான வரிகளை, இன்றைக்கு மீனவர்களிடமிருந்து, அவர்களுடைய துயரை களையவேண்டும். நம்முடைய தமிழக கடல் எல்லையிலேயும் சரி, கச்சத்தீவுப் பகுதியிலேயும் சரி, இராமேஸ்வரம் பகுதியிலேயும் சரி, தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கின்ற அந்த உரிமையை மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுப்பெற்று வந்தாலொழிய, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு இருக்காது என்ற வகையில், அதற்கு தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டு விடைபெற்றுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 3 நாட்களுக்கு முன்பு, இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 மீனவர்களை சிங்கள இராணுவம் சுட்டுக் காயப்படுத்தி இருக்கிறது. இத்தகைய நிகழ்ச்சி பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து கொண்டே வருகிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் பல நடந்தும், மத்திய அரசு முறையான



நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. இதுபோன்று தொடர்ந்து நடக்கின்ற தாக்குதல்களினால், நமது தமிழக மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்களுடைய தொழிலை நடத்த முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் எல்லைகளில் அந்த நாடுகளின் இராணுவம் நம்மை நோக்கிச் சுட்டால் அல்லது நம் பகுதிகளில் வாழும் மக்களை நோக்கிச் சுட்டால், நமது இராணுவம் உடனே சென்று, மீண்டும் சுட்டு, அங்கே அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற நேரத்திலே, இலங்கை இராணுவம் நமது மக்களைச் சுடும்போது, நமது இராணுவம் ஏன் சும்மா இருந்து கொண்டிருக்கிறது, நமது கடற்படை ஏன் தூங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நமது மாநில அரசு மத்திய அரசைக் கேட்க வேண்டும்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடராவண்ணம் இருப்பதற்கு கச்சத் தீவை மீண்டும் மீட்டு இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இ. கணேசன், திரு. ஜி.கே. மணி, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோர் இராமேஸ்வரம் அருகில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் மீது இலங்கை இராணுவம் சுட்டது குறித்து ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 15-10-1997 அன்று முற்பகல் இராமேஸ்வரம் மீன்பிடித்தளத்தில் இருந்து (1) திரு. சுப்பிரமணியன், த/பெ. வீரபத்திரன், (2) திரு. ஆனந்தன், த/பெ. மாணிக்கவாசகம், (3) திரு. தர்மலிங்கம், த/பெ. பாண்டித் தேவர், (4) திரு. திரவியம், த/பெ. பரஞ்சோதி நாடார் ஆகிய 4 மீனவர்களும், ஆர்.எம்.எஸ்.எல். 2215 என்ற மீன்பிடி விசைப் படகில் மீன்பிடிக்கச் சென்றார்கள். அவர்கள் கச்சத் தீவு அருகே மீன்பிடிக்கச் சென்றபோது, இரவு சுமார் 8.30 மணிக்கு இலங்கைக் கடற்படையினரால், இப்படகின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இப்பகுதியில், இப்படகின் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டினால், இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், வேப்பங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரபத்திரன் மகன்

திரு. சுப்பிரமணியன், வயது 39 என்பவரின் இடது முதுகில் மற்றும் வலது கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தபோது, உடனே, அவரை மற்ற மீனவர்கள் காயம் அடைந்த மீனவருடன் படகில் வந்து இராமேஸ்வரம் மீன்பிடித் தளத்தில், 16-10-1997 அன்று நள்ளிரவு 1.30 மணியளவில் கொண்டு வந்தனர். காயம் அடைந்த மீனவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்து, முதல் உதவிச் சிகிச்சை செய்யவும், அங்கேயுள்ள மருத்துவர்களின் ஆலோசனைப்படி மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலே மேற்கொண்டு சிகிச்சைக்காகவும் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் ஆபத்தான நிலையைக் கடந்து குணம் அடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றபோது, ஒவ்வொரு நிகழ்வுகளிலும் மத்திய அரசிடம் உடனுக்குடன் தமிழக அரசு தொடர்பு கொள்கிறது. மத்திய அரசு, வெளியுறவுத் துறை மூலமாக, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு, இலங்கை அரசை அணுகி இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி வருகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்திட ஆவன செய்யவேண்டும் என்று தமிழக அரசு உடனுக்குடன் கேட்டுக்கொண்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், இந்தத் துப்பாக்கிச் சூட்டினால் இறந்து துயருறும் குடும்பங்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து துப்பாக்கிச் சூட்டில் இறந்த மீனவர்களுக்குப் பல்வேறு காலகட்டங்களில், 10 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரையில் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 17-10-1997 அன்று முதல் மீனவர்கள்பால் கருணை உள்ளம் கொண்ட நமது தமிழக முதல்வர் அவர்கள், ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதாக இசைவு அளித்துள்ளார்கள். இந்த இசைவு, இந்த ஆணை 12-8-1997 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், காயம் அடைந்து இறக்கும் மீனவர்களுக்கு அவர்கள், மீனவக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தார்களானால், அவர்களுக்கு குழுக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 50 ஆயிரமும் மற்றும் அவர்கள் வருடத்திற்கு 60 ரூபாய் பிரிமியம் செலுத்துபவர்களாக இருந்தால், அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயும் வழங்கி வருகிறது. இந்த நிகழ்வுகளைப் பற்றி, தமிழக மீனவர்களைப் பற்றி நமது அரசு, நமது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம்





எடுத்துரைத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு இப்போது அங்கு எந்தப் பதட்ட நிலைமையும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் கொடுத்தாகிவிட்டது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழக அரசு மத்திய அரசுக்குக் கடிதம் அவ்வப்போது எழுதி வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து ஏதாவது நமக்குப் பதில் வந்திருக்கிறதா, மத்திய அரசு எப்போது, எந்தெந்த நாட்களில் சிங்கள இராணுவத்தோடோ, அல்லது சிங்கள அரசோடோ, ஏற்கெனவே அவர்கள் இலங்கை அரசுக்கு எழுதி, இதுபோன்ற நிகழ்வுகள் வரக் கூடாது என்று மத்திய அரசு ஏதாவது இலங்கை அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படும்போது உடனுக்குடன் தமிழக அரசு மத்திய அரசை அணுகி மத்திய அரசின் வாயிலாகத்தான் நாம் இலங்கையை அணுகுகிறோம் என்பதை நான் முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். ஆகவே எந்த நாளில் என்கிற குறிப்பு என்னிடம் இப்போது இல்லை. உடனுக்குடன் தமிழக அரசுக்குத் தெரிந்தவுடன் நாம் மத்திய அரசை அணுகியிருக்கிறோம். மத்திய அரசும் இலங்கை அரசை அணுகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஈ) தமிழகம் முழுவதும் பரவலாக உள்ள மின் தடை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, தமிழகம் முழுவதும் பரவலாக உள்ள மின் தடை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. மணிவர்மா, திரு. ச. அழகிரி, திரு. மு. பன்னீர்செல்வம், திரு. கு. ரவி அருணன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. அ.வ. அப்துல் நாசர், திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. வி. திருஞானசம்பந்தம் ஆகியோர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்காகச் சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அதில், ஒரு கட்சிக்கு ஒருவர் என்ற வகையிலே முதலில் திரு. ச. அழகிரி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபகாலமாகத் தமிழகத்திலே மின்வெட்டு மிக அதிகமாக இருக்கிறது. ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 8 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் விவசாயிகள் சிரமப்படுகிறார்கள். எந்த நேரத்திலே மின்வெட்டு வரும் என்பது முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டால் விவசாயம் செய்பவர்களுக்கு வசதியாக இருக்கும். வேலைக்கு ஆட்களை கூலிக்கு அமர்த்திவிட்டு மின்சாரம் இல்லாத காரணத்தினால் தண்ணீர் பாய்ச்ச இயலாமல் பல கிராமங்களிலே விவசாயிகள் சிரமப்படுவது தெரிகிறது. இதுவரை கோட்டையைச் சுற்றியாவது மின்சார வசதி இருந்துவந்தது. நேற்று இரவு சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேயே மின்சாரம் இல்லை. பல மணி நேரம் மின்சாரம் இல்லாமல் சிரமப்பட்டார்கள். எனவே, மாண்புமிகு மின் துறை அமைச்சாவர்கள் இதன் மீது கவனம் செலுத்த வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

இரண்டாவதாக சென்ற வரவு-செலவுத் திட்டத்தின்பொழுது மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். 100 மெகாவாட் திறனுள்ள 20 மின் நிலையங்கள் அமைக்க இருப்பதாகவும், பெட்ரோல் எண்ணெயின் மூலமாக - நாப்தா மூலமாக - அதைச் செயல்படுத்த இருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொல்லி 1½ ஆண்டுகாலம் ஆகியிருக்கிறது. இதுவரையில் அதில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதனை அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம். ஏனென்றால் ஒரு தேசத்தினுடைய முன்னேற்றம் என்பது மின்சார உற்பத்தியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஒரு பக்கம் நாம் தாராளமயமாக்கத்தை அறிமுகப்படுத்தி வருகிறோம். இன்னொரு பக்கம் வெளிநாட்டு முதலாளிகளை, வெளி மாநில முதலாளிகளை, தொழில் முனைபவர்களை தமிழகத்திற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். ஆனால் அவர்கள் எல்லாம் வருவதாக இருந்தால், தாராளமான மின்சார வசதி இங்கே கிடைக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை பற்றி சுருக்கமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும்.

**திரு. ச. அழகிரி:** துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு பெரிய பிரச்சினை. எப்படி சுருக்கமாகச் சொல்ல முடியும்? எனவே வெளி மாநிலங்களிலிருந்து, வெளி நாடுகளிலிருந்து, தொழில் முனைபவர்கள்





இங்கே வரவேண்டுமென்று சொன்னால், தாராளமான மின்வசதி வேண்டும். அவைகள் எல்லாம் இன்றைய சூழ்நிலையிலே இல்லை என்பதனை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் புதிய ஆட்சி வந்த பிறகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக என்ன வழிமுறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய நாங்கள் ஆவலாக இருக்கிறோம். நாம் செய்திகளாகச் சொல்கிறோம். சட்டமன்றத்திலே வாசிக்கிறோம். வரவு-செலவுத் திட்டத்திலே சொல்கிறோம். மின் துறை அறிக்கையிலே சொல்கிறோமே ஒழிய, நடைமுறையிலே அவைகள் எந்த அளவிற்கு வந்திருக்கின்றன என்பதைப் பார்க்கிறபோது எதுவுமே வந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் மின்சார உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் குறைந்தபட்சம் 5 ஆண்டுகாலம் தேவை. ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. இன்னும் 3 ஆண்டுகள்தான் இருக்கின்றன. எனவே 5 ஆண்டுகாலத்திற்குள்ளாக புதிய மின்சார உற்பத்தியை நாம் தொடங்குவோமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. எனவே மின் துறை அமைச்சரவர்கள் மின் உற்பத்தியைப் பெருக்குவதிலே சரியான கவனத்தைச் செலுத்தவேண்டும். மின் உற்பத்திப் பெருக்கம் இல்லாமல் எந்த முன்னேற்றமும் வராது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

விவசாயிகள் 10,000 ரூபாய் கட்டினால், முன்னுரிமை அடிப்படையிலே மின் இணைப்புத் தரப்படும் என்று சொன்னார்கள். ஆனால், 10,000 ரூபாய் கட்டிய பல நூறு விவசாயிகள் மின் இணைப்பு இல்லாமல் சிரமப்படுகிறார்கள். இரண்டாவதாக, 50,000 ரூபாய் திட்ட மதிப்பீடு இருந்தால், அந்த 10,000 ரூபாய் கட்டினாலே போதும் என்ற விதி இருந்தது. ஆனால், 50,000 ரூபாய்க்கு மேல் 100 ரூபாயோ, 200 ரூபாயோ. அதிகமாகத் திட்ட மதிப்பீடு போனால், முழுத் தொகையான 50,100 ரூபாயும் அல்லது 50,200 ரூபாயும் கட்ட வேண்டுமென்று மின்சார வாரியம் சொல்கிறது. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், 50,000 ரூபாய்க்கு மேல் வருகிற அந்த 100 ரூபாயோ, 200 ரூபாயோ அல்லது 1,000 ரூபாயோ அதுவரைக் கட்டினால் போதும் என்று அந்தச் சட்டத் திருத்தத்தை மாற்றி, பணம் கட்டுகிற விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையிலே மின் இணைப்பை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன், அதேபோல், நேரடி நெல் கொள்முதல் செய்யக்கூடிய தஞ்சை போன்ற மாவட்டங்களில்...

[1997 அக்டோபர் 18

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலேயே 4, 5 உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று சொன்னேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான விஷயம் பற்றித்தான் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். நான் சண்டை போடவில்லை. ஏ.சி. பற்றிப் பேசவில்லை. ஒரு முக்கியமான தேசப் பிரச்சினை பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது மணியடித்துக் கொண்டேயிருந்தால் அது எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியில்லை. நீங்கள் மின்சார வாரிய பட்ஜெட்டிலே பேசுகிற மாதிரி பேசிக்கொண்டே போகிறீர்கள். சிறப்புக் கவன ஈர்ப்பு என்றால் சுருக்கமாகப் பிரச்சினையைத் தெரிவிக்க வேண்டும், அவ்வளவுதான்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் செய்யப்படுகின்ற தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு 24 மணி நேரமும் மின்சார வசதி கிடைக்கிறது. ஆனால், சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் பகுதிகளில் மின்சார வசதி கிடைப்பதில்லை. ஏற்கெனவே, சட்டப் பேரவையிலே நான் சொல்லி இருக்கிறேன். அப்போது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் பகுதிகளுக்கும் தஞ்சை போன்ற வசதி செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரை செய்யவில்லை. நான் மட்டும் சொல்லவில்லை, எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களும் இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த வகையிலே தஞ்சை மாவட்டத்திற்கு எந்தவித முன்னுரிமை அளிக்கிறோமோ, அதே முன்னுரிமையை சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் பகுதிகளுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. பன்னீர் செல்வம், இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்டு இருக்கிற



1997 அக்டோபர் 18] [திரு. வை. சிவபுண்ணியம்]

சூழ்நிலைகளைப் பற்றி முன்னாலே உறுப்பினர் அழகிரி அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழகத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவுவதைப் போக்க வேண்டும் என்பதற்காக முன் முயற்சிகளை நமது அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இப்போது மின் வெட்டின் காரணமாக நிலவுகிற சூழ்நிலைமையால் விவசாயம் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படுகிறது. அரசு நிறுவனம் பாதிக்கப்படுகிறது. மருத்துவமனைகளிலே பல்வேறு பணிகள் பாதிக்கப்படுகின்றன. அறுவை சிகிச்சை போன்ற பணிகளை மேற்கொள்கின்ற சமயங்களிலே மின்தடை ஏற்படுகின்ற காரணத்தினாலே, அபாயகரமான சூழ்நிலைகள் கூட பல இடங்களிலே ஏற்படுகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்வதோடு, இப்போது தீபாவளி காலமாக இருக்கிற காரணத்தினாலே, வர்த்தக நிறுவனங்களிலே இம்மாதிரியான மின்தடைகள் ஏற்படுகிற காரணத்தினாலே, பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இவைகளையெல்லாம் போக்குவதற்குரிய முயற்சிகளை நமது தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதோடு, கூடுதலாக என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினையையும் நான் தனிக் கவன ஈர்ப்பாகக் கொடுத்தேன். அதுவும் இதிலே இணைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மன்னார்குடி தொகுதியிலே இருக்கிற போவாநல்லூர் துணை மின் நிலையத்திலே கூடுதல் மின்சக்தி உள்ள 'டிரான்ஸ்ஃபார்மர்களை'ப் பொருத்த வேண்டும். அதேபோல், கூத்தாநல்லூர், பரவாக்கோட்டை பகுதிகளில் துணை மின் நிலையம் அமைத்தால்தான் அந்தப் பகுதியிலே உள்ள மின் குறையைப் போக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கூத்தாநல்லூர், பரவாக்கோட்டை ஆகிய பகுதிகளிலே துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கருத்தையும் இதோடு இணைத்துக் கூறி, அமர்கின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அழகிரி அவர்களும், சிவபுண்ணியம் அவர்களும் தமிழ்நாட்டிலே பரவலாக உள்ள மின் தட்டுப்பாட்டைக் குறித்து தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதுபற்றி முதலிலே சில விவரங்களைச சொல்லிவிட்டு பிறகு அவர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு விடை காணலாம் என்று நான் விரும்புகின்றேன். தமிழக அனல் மின் நிலையத்திலும் மைய அனல் மின் நிலையத்திலும் 3-10-1997 அன்று எதிர்பாராமல் ஒரே நேரத்தில் ஏற்பட்ட மின் பழுதுகள் காரணமாகத் தமிழகத்தின் மின் நிலைமை தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டது. சென்னை மாநகரம் மற்றும் சில முக்கிய நகரங்களில் மின் வெட்டைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள ஊரகப் பகுதிகளில் மிகுதியான அளவில் மின் தடங்கல்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 4-10-1997 அன்று மின் நிலையங்களிலே சற்று முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது பகுதி செயல் இழந்ததால், 5-10-1997 முதல் மின் தடங்கல்களை மேற்கொள்ள வேண்டியதாகியது. 13-10-1997 அன்று பல மின் இயந்திரங்கள் கட்டமைப்போடு இயக்கப்பட்டதால் மீண்டும் நிலைமை இப்போது சீரடைந்துள்ளது.

முற்பகல் 11-10

தற்போதைய தமிழக மின் கட்டமைப்பின் தினசரி மின் பயனீட்டளவு 95 மில்லியன் யூனிட் ஆகும். அதன் தேவை 3,500 மெகாவாட் முதல் 4,500 மெகாவாட் ஆகும். மேற்படி காலத்தில் அனல் மின் நிலையங்களில் ஏற்பட்ட இயந்திர இழப்பைச் சமாளிக்க புனல் நிலையங்களிலிருந்து அதிகபட்ச அளவான 24 மில்லியன் யூனிட் வரை மின் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழகப் புனல் மின் நிலையங்களிலிருந்து மிகுதியான நீரை மேற்குறிப்பிட்ட காலத்திலே பயன்படுத்தி விட்டதால் கையிருப்பில் இருக்கும் நீர் மின் அளவு இன்றைய நிலையில் குறைந்து இருக்கிறது. இந்த நீர் மின் அளவு அடுத்த பருவ காலம் தொடங்கும் வரை பயன்படுத்த வேண்டியுள்ளது. வட கிழக்குப் பருவ மழை இப்போதுதான் ஆரம்பமாகியுள்ளது. கிணற்றுப் பாசனம் அதிகமாக உள்ள செங்கை, தென்னாற்காடு மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தால் நமது மின் பயனீட்டளவு மற்றும் மின் தேவை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி காலகட்டத்தில் தமிழகம் மத்திய



உற்பத்தி நிலையங்களிலிருந்து தன் பங்கீட்டிற்கும் அதிகமான மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 3-10-1997 முதல் 13-10-1997 வரை திட்டமிடப்பட்ட மற்றும் எதிர்பாராத இயந்திர இழப்புக்களின் விவரங்களை முழுமையாக நான் இந்த அவைக்கு இப்போது சொல்ல ஆரம்பித்தால் அதுவே மணிக்கணக்கில் ஆகும். எனவே, அனல் மின் நிலையங்களில் ஏற்படும் எதிபாராத இயந்திர இழப்புக்களைத் தவிர்த்துப் பார்த்தால் பொதுவாக மின் நிலைமை நிறைவு அளிப்பதாக இருக்கிறது. 16-10-1997 அன்று நீர் இருப்பு அளவு 1,550 மில்லியன் யூனிட் ஆகும். வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் தொள்ளாயிரம் மில்லியன் யூனிட் அளவு நீர் வரத்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் அடுத்த பருவ மழை தொடங்கும் வரை தமிழகம் தன் மின் தேவையைச் சமாளிக்கும் நிலையில் உள்ளது. கோடைக்காலத்தில் தேவைப்படும் கூடுதலான மின் தேவையைச் சமாளிக்கும் பொருட்டு எல்லா அனல் மின் நிலைய வருடாந்திர பராமரிப்பு வேலைகளை 15-1-1998-க்கு முன்னதாக முடித்துவிட திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலக்கரி கையிருப்பு 8 நாட்கள் மின்சார உற்பத்திக்குத் தேவையானதாக இருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்படி நிலக்கரி கையிருப்பை 15 நாட்களுக்கு அதிகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. அனல் மின் நிலையங்களில் எதிர்பாராமல் திடீரென ஒரே நேரத்தில் மின் பழுது ஏற்பட்டதனால் தமிழ்நாடு மின்சார வாரியம் வேறு வழியின்றி மின் தடங்கல் ஏற்படுத்தும் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதுபோன்ற நிலை எதிர்காலத்திலே ஏற்படாது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் முன்கூட்டியே தெரிவிக்காததால் விவசாயிகள் பாதித்துள்ளார்கள் என்று சொன்னார். உண்மையிலே இது விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய பெரும் குறை என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் திடீரென்று மத்திய அரசின் கீழ் இயங்கி வருகின்ற கல்பாக்கம் அணு மின் நிலையமும், அதைப்போலவே வேறு சில அனல் மின் நிலையங்களும் திடீரென்று பழுது ஏற்பட்டு அதனுடைய உற்பத்தியை நிறுத்திவிட்டது. நம்முடைய தமிழக அரசின் கீழ் உள்ள நம்முடைய வட சென்னை, தூத்துக்குடி, மேட்டூர் போன்ற இடங்களிலே உற்பத்தியாகின்ற மின்சாரமும் திடீரென்று 3-ஆம் தேதியிலிருந்து தடைபட்டுவிட்டது. எனவே இது எதி[illegible]லை. எனவே

24446.

தமிழக விவசாயிகளும் மாண்புமிகு உறுப்பினர்களும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று இரவுகூட எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலே மின் தடை ஏற்பட்டது என்று சொன்னார்கள். நிச்சயமாக எதிர்காலத்திலே எம்.எல்.ஏ. ஹாஸ்டல் போன்ற இடங்களிலே மின் தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்கான உத்தர சிலைவுகள் பிறப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 100 மெகாவாட் மின்சார உற்பத்தி 20 இடங்களிலே உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டதாகக் கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்டது. அது என்னவாயிற்று என்று கேட்டார்கள். 20 இடங்களிலே மின்சார உற்பத்தி செய்வதற்கான குளோபல் டெண்டர்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டு யாருக்கு அந்தப் பணிகள் ஒப்படைப்பது என்றெல்லாம் முடிவு செய்து மத்திய அரசுக்கு ப்யூயல் லிங்க்கேஜுக்காக அனுப்பி வைத்திருந்தோம். ஆனால் மத்திய அரசாங்கம் வெறும் 800 மெகாவாட்டுக்குத்தான் அந்த நாஃப்தாவை ஒதுக்கியிருக்கிறது. மேலும் 1500 மெகாவாட்டிற்கு ஒதுக்க வேண்டும் என்று நம்முடைய பிரதமர் அவர்கள் இங்கே வந்திருந்த நேரத்திலேயும், நாங்கள் டெல்லிக்குச் சென்றிருந்த நேரத்திலேயும் பிரதமரைச் சந்தித்துக் கேட்டோம். அவரும் ஆவன செய்வதாகச் சொன்னார். ஆனால் இதுவரையிலே எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. இருந்தாலும் நம்முடைய தமிழகத்தினுடைய நிலைமைகளை நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த தொழில் அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் இரண்டு தினங்களுக்கு முன்னாலே கலந்து பேசி இதற்கு ஏதாவது ஒரு தீர்வு காண வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து ஒரு நல்ல முடிவை அடுத்த வாரம் வெளியிடப் போவதாக எனக்குச் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட முடிவுகள் வருமேயானால் அதன்மூலம் அடுத்த ஆண்டு நிச்சயமாக அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு 1999 ஏப்ரலுக்குள்ளாகவே—ஏனென்றால் இந்த நாஃப்தா மூலம் மின்சாரம் தயாரிக்கின்ற திட்டங்கள் 18 மாத காலத்திலே மின்சார உற்பத்தியைக் தொடுக்க முடியும். எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

10 ஆயிரம் ரூபாய் கட்டியவர்களுக்கெல்லாம் மின் இணைப்பு வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். இப்போதுள்ள



விதிமுறைகளின்படி 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினால் அந்த எஸ்ட்டிமேட் 50 ஆயிரம் ரூபாய்க்குள்ளே இருந்தால்தான் நாம் மின்சாரம் வழங்க முடியும். 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலே போனால் முழுத் தொகையையும் செலுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. அதை மாற்றவேண்டும் என்பது என்னுடைய கருத்துகூட. ஆனால் ஏற்கெனவே இழப்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய மின்சார வாரியத்தில் நம்முடைய வாரியத் தலைவர் மற்ற உறுப்பினர்கள் ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். இது குறித்தும் அரசு நல்ல முடிவு எடுக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சைக்கு அளிப்பது போன்ற ஒரு சலுகையை நம்முடைய தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் அளிக்கவேண்டுமென்று சொன்னார்கள். எதிர்காலத்தில் அதுபற்றியும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தீபாவளி நேரத்திலாவது மின் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வாரியம் கவனத்தில் கொண்டு நிச்சயமாக தீபாவளியின்போது தமிழகத்திலே எங்குமே மின்சாரத் தடை இல்லாமல் பார்த்துக்கொள்ள இந்த அரசு உறுதி அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) திருநெல்வேலியில் எம்.ஜி.ஆர். சிலை அமைக்க அனுமதி கோரியது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு.பி.ஆர். சுந்தரம், நீங்கள் என்னிடம் தெரிவித்த அந்தப் பிரச்சினைக் குறித்து மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும், மேற்கொண்டு எதுவும் பேசக் கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஜனவரி திங்கள் 1, 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் திருநெல்வேலியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெள்ளி விழா மாநாடு நடைபெறவிருக்கிறது. அந்த மாநாட்டிலே திருநெல்வேலியிலே புரட்சித் தலைவர், பொன்மனச்

செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருவுருவச் சிலை மூன்று இடங்களில் அமைக்கவேண்டுமென்று நாங்கள் அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருக்கிறோம். 1. ஜங்ஷன் அருகில் நடு ரோடு. 2. தேசிய நெடுஞ்சாலையில் பெரியார் பஸ் ஸ்டாண்டின் அருகில். 3. தேசிய நெடுஞ்சாலையில் சொக்கிகுளம் ஆகிய மூன்று இடங்களில் அமைக்கவேண்டுமென்று முறையாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் அளித்து கிட்டத்தட்ட 4 மாதங்கள் ஆகின்றன. தற்போது அது சென்னைக்கு அனுப்பப்பட்டு ஒரு மாத காலம் ஆகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சிலையை உடனடியாக வைப்பதற்கு ஆவன செய்யவேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இங்கே என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிலை வைப்பதற்கு அனுமதி (குறுக்கீடு) எதற்குத் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இங்கே என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எம்.ஜி.ஆர் அவர்கள் என்னுடைய 40 வருட இனிய நண்பர்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். சிலை வைப்பது பற்றி மட்டும் நீங்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் போதும். நீங்கள் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தர[illegible]** [illegible]புமிகு [illegible] அவர்களே, சிலை வைக்கவேண்டும் என்றால் இன்னும் ஒரு மாத காலம்தான் இருக்கிறது. ஆகவே, கூடிய விரைவில் அந்தச் சிலையை வைப்பதற்குத் தேவையான அனுமதியை வழங்க இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எந்த அளவுக்கு மரியாதை செலுத்தவேண்டுமோ அதைச் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் எம்.ஜி.ஆர். சமாதி கட்டப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

திருநெல்வேலியில் எம்.ஜி.ஆர். சிலை அமைப்பது குறித்து இடம் தேவை என்று விண்ணப்பித்ததாகவும், அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்து இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்திருப்பார்களானால் நிச்சயமாக இந்த அரசு அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. பேரவை விதி 111-ன் கீழ் வேளாண்மைத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை விதி 111-ன்கீழ் அறிக்கை அளித்தல். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111(1)-ன்கீழ் கீழ்க்காணும் திருத்த அறிக்கையை வைக்கிறேன் :

"26-3-1997-ஆம் நாள் அன்று திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்களது வினா எண் 1879-க்கான துணை வினாக்களுக்கு சட்டமன்றப் பேரவையில் விடை அளிக்கும்போது இந்தப் புதிய சட்டப் பிரிவு 10-ன் படி விற்பனைக் குழுவுக்கு கீழ்க்கண்டவாறு உறுப்பினர்கள் அரசால நியமனம் செய்யப்படலாம் என்று சட்டம் [illegible] செய்யும்போது [illegible]ட்டது. [illegible] வேளாண் விளைபொருள்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் இவர்களில் குறைந்தபட்சம் 3 பேர் சிறு விவசாயிகளாகவும் மற்றும் 3 பேர் மிகச்சிறு விவசாயிகளாகவும் இருத்தல் வேண்டும். முடிந்தவரை அறிவிக்கை செய்யப்பட்ட விளை பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குச் சம பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் இந்த நியமனம் இருக்க வேண்டும். விற்பனைக் குழு உரிமம் பெற்ற

வியாபாரிகளில் 3 பேர் இதில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பரிந்துரையின் பேரில் நியமனம் செய்யப்படும் உற்பத்தியாளர்களில் ஒருவர் அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர் அதாவது மாவட்டப் பொறுப்பு வகிக்கும் வேளாண்மைத் துறையைச் சார்ந்த அலுவலர் ஒருவர், கால்நடை, வனம், மீன்வளம், தோட்டக் கலை, பட்டுப்புழு வளர்ப்பு அல்லது எண்ணெய் வித்துத் துறை ஆகிய துறைகளில் ஏதாவது துறையைச் சேர்ந்த 2 பேரும் விற்பனைக் குழுவின் பகுதி எல்லையாகக் கொண்ட உதவி வேளாண்மை இயக்குனர் அலுவலக உறுப்பினர் ஒருவரும் இதிலே உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். இவர்களில் ஒருவரைத் தலைவராக நியமிக்கலாம் என்று அரசு முடிவு செய்தது. அந்த நிலையிலேயே இப்போது அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என விடையளித்திருக்கிறேன்."

*முற்பகல் 11-20*

மேற்படி உரையில், கடைசியில் இடம் பெற்ற "இவர்களில் ஒருவரைத்" தலைவராக நியமிக்கலாம் என்று அரசு முடிவு செய்தது. அந்த நிலையிலேயே அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது." என்னும் வரிகளுக்குப் பதிலாக, "தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை ஒழுங்குபடுத்தல் சட்டம் 1987, பிரிவு 12-இன்படி தலைவர், தேர்தல் மூலம்தான் தேர்வு செய்யப்பட வேண்டுமே தவிர, நியமிக்க முடியாது. இப்போது இந்திய அரசு ஏற்றுக்கொண்டு, மாநில அரசு செயல்படுத்தும்படி கூறியுள்ள குறு குழு பரிந்துரையின்படி விற்பனைக் குழுக்களுக்கு அலுவல் சாராத உறுப்பினர்களையும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கலாம்; தேர்ந்தெடுக்க வேளாண் விற்பனை இயக்குநரிடம் வரைவு - சட்டத் திருத்தம் கேட்கப்பட்டுள்ளது. இதுவே இப்பொழுது ஆய்வில் உள்ளது" என்னும் வரிகள் இடம் பெறலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) இரயில்வே விழா அழைப்பிதழில் பெயர்கள் அச்சிட்டுள்ள வரிசை

**திரு. ஜி. நிஜாமுதீன்:** தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நிஜாமுதீன், நீங்கள் அறிவிப்பு ஒன்றும் கொடுக்காமல் கேட்டால் எப்படி அனுமதி கொடுப்பது?





**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஒரேயொரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயின்ட் ஆஃப் ஆர்டரா? கிளாரிபிகேஷனா?

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நேற்று சபையிலே நடந்த பிரச்சினையைப் பற்றித்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேற்று நடந்ததைப் பற்றி இன்றைக்கு எப்படி எழுப்ப முடியும்? (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினையைத் தகவலுக்காக அவையிலே எழுப்புகிறேனே அன்றி, வேறு எந்தத் தவறான நோக்கத்திலும் நான் எழுப்பவில்லை என்பதை முதலிலேயே கூறிக்கொள்கிறேன். நேற்று இந்தச் சபையிலே, வேலூர் மாவட்டத்திலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தொகுதியிலே நடந்த விழாவிற்கான அழைப்பிதழில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முகமது சகி அவர்கள் பெயரை மேலேயும், சட்டமன்ற உறுப்பினர்களின் பெயரைக் கீழேயும் போட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குற்றம் சுமத்தினார்கள். ஆனால், நாளை நடக்கவிருக்கும் இரயில்வே விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்கள் பெயர் மேலேயும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

## 5. கவன ஈர்ப்பு

### மயிலாடுதுறை வட்டம் அஞ்சாறு - வார்தலை விக்ரமன் பாலம் பழுதடைந்துள்ளமை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார். திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

[1997 அக்டோபர் 18

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள அஞ்சாறு-வார்தலை பாலம் பழுதடைந்துள்ளது குறித்து நான் கொடுத்திருந்த கவன ஈர்ப்பின் விவர அறிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே, இந்தப் பாலம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதில் இருக்கும் வாசகத்தை மட்டும் முதலில் படியுங்கள்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், மயிலாடுதுறை வட்டத்திலுள்ள அஞ்சாறு-வார்தலை விக்ரமன் பாலம் பழுதடைந்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

### அறிக்கை

மேற்கண்ட கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது குத்தாலம்—பந்தநல்லூர் அரசு மாவட்ட பெருஞ்சாலையில் கிலோமீட்டர் 2/4 இல் விக்ரமன் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள வலுவிழந்த பழுதடைந்துள்ள செங்கல் வளைவு பாலமாகும். இவ்விடத்தில் நீர்வழிப்பாதையின் அகலம் 13 மீட்டர் ஆகும். இப்பாலத்தில் இருபக்க தாங்குச் சுவர்கள், இறக்கை சுவர் கைப்பிடி சுவர் ஆகியவை சேதமடைந்துள்ளன. மேலும் அடித்தளப் பாதுகாப்பு (Apron) முழுவதும் சேதமடைந்துள்ளது. இப்பாலம் குறுகலான வலுவிழந்த பாலமாகும். இப்பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் அமைக்க தோராயமாக ரூ.40,00,000/- (ரூபாய் நாற்பது லட்சம்) தேவைப்படும். இப்பாலத்தின் முக்கியத்துவத்தினையும், அவசியத்தையும் கருத்தில் கொண்டு இப்பாலப் பணியினை 1998-99 பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்து மேற்கொள்ளுவதற்கு தக்க நடவடிக்கை எடுககப்படும்.



1997 அக்டோபர் 18 ]

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் கருத்திற்கொண்டு 98-ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுதி அளித்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பாலத்தைப் பொறுத்தவரை குத்தாலத்திலிருந்து சென்னை செல்வதற்கும், அதே போல திருமணஞ்சேரி என்ற ஊரிலே இருக்கின்ற பிரசித்தி பெற்ற அருள்மிகு கல்யாணசுந்தரேஸ்வரர் கோவிலுக்குச் செல்வதற்கும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்லக்கூடிய பாலம். இதை விரைவில், இந்தக் கோடைக் காலத்திலேயே கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மயிலாடுதுறை பக்கம் இருக்கின்ற மணல்மேடு என்.பி.கே.ஆர்.ஆர். சர்க்கரை ஆலைக்கு இந்தப் பகுதியிலேயிருந்துதான் நிரம்ப கரும்பு எடுத்துச் செல்லப்பட வேண்டும். எனவே, கரும்பு செஸ் நிதி என்ற திட்டத்தின் கீழாவது இந்தப் பாலத்தை உடனடியாக எடுத்து, இந்தக் கோடை காலத்திற்குள் கட்டித்தர வேண்டும், கட்டித் தருவாரா என அறிய விரும்புகிறேன். அந்தப் பாலத்தின் இடையில் ஆபத்தான நிலையில் இருக்கின்ற கைப்பிடிச் சுவரை, இடிந்துபோய் இருக்கின்ற அந்தக் கைப்பிடிச் சுவரை, தற்காலிகமாகவாவது கட்டித்தர அமைச்சர் முன்வர வேண்டும். முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் நிதியாண்டில் தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய இந்த 3 மாவட்டங்களில் ஏறத்தாழ 21 பாலப் பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நபார்ட் மற்றும் ஹட்கோ திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கின்றன. பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒரு பாலம் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று மாவட்டங்களில் மட்டும் சுமார் 25 கோடி ரூபாய் அளவிற்கு 22 பாலங்கள் கட்டுவதற்கு 1997-98-ல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தலைஞாயிறு சர்க்கரை ஆலை அருகில் பழவாற்றுப் பாலம் திரும்பக் கட்டுவதற்காக 2 கோடியே 8 இலட்சமும், புஷ்பவனத்திற்கும், செம்போடைக்கும் இடையில் உப்பனாற்றுப் பாலம் திரும்பக்கட்டுவதற்கு 132 இலட்சமும், நபார்ட் திட்டத்தின் கீழ் செங்கதலை-வேதாரண்யம் சாலையில் முன்னியாற்றில் பாலம் திரும்பக் கட்ட 16 இலட்சம் ரூபாயும், அதேபோல, அதே சாலையில் கிலோ மீட்டர் 5/10-ல் சாருமதா வாய்க்காலில் பாலம்

திரும்பக் கட்ட 40 இலட்சம் ரூபாயும், மாப்படுகை-கடலங்குடி பாலம் திரும்பக் கட்டுவதற்கு 27 இலட்சமும், எடமணநல்லூர் சாலையில் புதுமண்ணியாற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 17 இலட்சமும், ஆக ஒரு கோடி ரூபாய் ஹட்கோ திட்டத்தின்கீழும், நபார்ட் திட்டத்தின் கீழும் நாகை மாவட்டத்திலே மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறது.

திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர்-தஞ்சைக்கு இடையில் வெண்ணாற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 176 இலட்சமும், திருவாரூர் தஞ்சைக்கு இடையில் கோரையாற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 107 இலட்சமும், திருவாரூர்-குடவாசல்—வலங்கைமான் சாலையில் வெட்டாற்றில் பாலம் திரும்பக் கட்ட 208 இலட்சமும், திருத்துறைப்பூண்டி நகரத்தில் முன்னியாற்றில் புதியதாக பாலம் கட்டுவதற்கு புறவழிச்சாலையிலே இந்தப் பாலம் அமைய இருக்கிறது. அதற்காக 88 இலட்சம்; இது ஹட்கோ திட்டத்தின்கீழ் திருவாரூர் மாவட்டத்தில்; திருவாரூர் மாவட்டத்தில் நபார்ட் திட்டத்தின்கீழ் திருத்துறைப்பூண்டி நகரத்தில் அடப்பாற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 50 இலட்சமும், திருத்துறைப்பூண்டி நகரத்தில் முன்னியாற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 40 இலட்சமும், திருத்துறைப்பூண்டி அருகில் வளவனாற்றுப் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 20 இலட்சமும், திருத்துறைப்பூண்டி—பரவாக்கோட்டை சாலையில் மரைக்கா கோரையாற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 32 இலட்சமும், அதேபோல தஞ்சை மாவட்டத்தில் பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 4 கோடியே 16 இலட்சமும், பெரம்பலூர் மானாமதுரை சாலையில் குடமுருட்டி ஆற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 347 இலட்சமும், கும்பகோணம்-மன்னார்குடி சாலையில் அரசலாற்றில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 176 இலட்சமும், நபார்ட் திட்டத்தின்கீழ் திருமங்கலக்கோட்டை கிழக்கு—நல்லக்கோட்டை சாலையில் கண்ணன் ஆற்றில் பாலம் புதியதாக கட்டுவதற்கு 130 இலட்சமும், பழுதலை-கட்டியங்காடு சாலையில் பாலம் புதியதாக கட்டுவதற்கு 200 இலட்சமும், அய்யம்பேட்டை—அகரமாங்குடி சாலையில் ராஜன் வாய்க்காலில் பாலம் திரும்பக் கட்டுவதற்கு 15 இலட்சமும், ஆக 22 பாலப் பணிகள் இந்த 1997-98-லே மட்டும் இந்த மூன்று மாவட்டங்களிலே இதுவரை இல்லாத அளவிற்கு, இந்தத் துறை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பாலங்களை வருகின்ற காலங்களிலே அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி எடுத்துக்கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும்.



## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. ஆர். இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 68 முதல் 75 வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ச. அழகிரி, உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 5-வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பா. மு. முபாரக், மனுக்கள் குழுவின் தலைவர்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 7-வது மற்றும் 8-வது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், ஆய்வு செய்தல். 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்70/1997). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1997 அக்டோபர் 18

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 70/1997) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், இதிலே விவாதம் கிடையாது, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே விவாதம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி முடிவு செய்யப்பட்டுவிட்டது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், அலுவல் ஆய்வுக் குழுவிலே உங்கள் கட்சியின் தலைவர் இடம் பெற்றிருக்கிறார். அவர் முன்னிலையிலே பேசி, அவர் ஒத்துக்கொண்டார். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

@ 17-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1997 அக்டோபர் 18] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 70/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 64/1997). மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I want to oppose it. நீங்கள் வேண்டுமானால் ரெக்கார்டு பண்ணிக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், அது முடிந்துபோய்விட்டது. அடுத்த அலுவலுக்கு வந்தாயிற்று, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 64/1997) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனைவரி சட்டத்திலே ஒரு புதிய திருத்தச் சட்டமுன்வடிவை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. அதிலே, குறிப்பாக வணிகர்கள் தங்களுடைய கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளவில்லை என்றால் அல்லது அவர்கள் வேண்டுமென்றே தவறு செய்தார்கள் என்றால், அவர்களுக்கு மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை தரலாம் என்கின்ற ஒரு திருத்தச் சட்டமுன்வடிவு இந்த அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை நான் கடுமையாக எதிர்க்கின்றேன்.

---

@ 16-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





ஏனென்றால், வியாபாரிகளுக்கு அதிகாரிகள் மூலமாகச் சிறைத் தண்டனை அளிப்பது என்பது ஒரு ஏற்புடையதுதானா என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வணிகர்கள் எப்படித் தங்களுடைய கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோமோ, அதே போலவே அதிகாரிகளும் பல இடங்களிலே நேர்மையாக நடந்து கொள்ள மாட்டார்கள். எனவே, நேர்மையாக நடந்து கொள்ளாத அதிகாரிகளுக்கும் மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதம் வரை சிறைத் தண்டனை அளிப்பது என்கின்ற ஒரு புதிய திருத்தத்தை இந்தச் சட்டத் திருத்தத்திலே கொண்டுவர முடியுமா என்பதனை இந்த அவை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இந்த அரசாங்கத்தினுடைய மொத்த வரவு-செலவிலே 6,000 கோடி ரூபாய்க்கு விற்பனை வரியிலிருந்து வருமானம் கிடைக்கிறது.

முற்பகல் 11-35

குறிப்பாக பதிவு செய்யப்பட்ட 3 இலட்சம் நிறுவனங்கள் 20 விழுக்காட்டுக்கு மேலாக வரி கட்டுகிறார்கள். உதாரணமாக, பெட்ரோல், சிமெண்ட் போன்ற 5 தொழில்களை நடத்தும் நிறுவனங்களிலிருந்து மட்டும் 20%-க்கு மேல் நமக்கு விற்பனை வரி கிடைக்கிறது. அதேபோல, 100-க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் 60 விழுக்காடு விற்பனை வரியை நமக்கு வழங்குகிறார்கள். அதன் பிறகு இருக்கின்ற, மீதமுள்ள 20 விழுக்காடு விற்பனை வரி ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகளிடமிருந்து நமக்குக் கிடைக்கிறது. எனவே, இந்த ஒரு இலட்சம் சிறு வியாபாரிகளுக்கும், விற்பனை வரித் துறைக்கும் இடையேதான் பிரச்சனை இருக்கிறது. எனவே, இந்த ஒரு இலட்சம் பதிவு செய்யப்பட்ட சிறு வியாபாரிகள் செலுத்துகின்ற 20 விழுக்காடு விற்பனை வரிக்காக இந்தச் சட்டங்களைக் கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டு வருகின்றபோது பொதுவாக உயர்நிலையில் இருக்கின்ற அதிகாரிகள் மிகவும் நேர்மையாகவும், நியாயமாகவும் இருக்கிறார்கள். ஆனால் கீழ் நிலையிலே இருக்கின்ற அதிகாரிகள் பல்வேறு காரணங்களுக்காக சிறு வியாபாரிகள் மீது பல்வேறு விதமான பிரச்சினைகளை, சங்கடங்களைத் தோற்றுவிக்கிறார்கள். அப்படி இருக்கின்ற நேரத்தில் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளவில்லை என்பதற்காக 3

மாதத்திலிருந்து 6 மாதம் வரை சிறைத் தண்டனை தருவோம் என்று சொன்னால், இது கொடுங்கோலான சட்டமாக மாறிவிடும். ஏதோ ஜார் ஆட்சிக் காலத்திலே, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொடுமையான சட்டங்களைப் போல இந்தச் சட்டம் வியாபாரிகளுடைய கண்களுக்கும், மக்களுக்கும் தென்படும். எனவே, அந்த வகையிலே இந்த விற்பனை வரிச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதற்கு முன்பாக துறை அதிகாரிகள் மிகவும் சிரமப்பட்டு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், சென்ற முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விற்பனை வரி இலாகாவை தன்னுடைய கையில் வைத்திருந்தபோது பல்வேறு சலுகைகளை வியாபாரிகளுக்கு வழங்கினார்கள். அப்படி வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகளின் மூலமாக அப்பொழுது என்ன சொல்லப்பட்டது என்றால், வியாபாரிகளுக்கு வரிச் சலுகை வழங்குவதால் விலைவாசி குறையும் என்ற ஒரு கருத்து இந்த அவையிலேயே அப்பொழுது சொல்லப்பட்டது. அன்றைக்கு நான் பதில் அளித்துப் பேசியபோது, "விற்பனை வரியைக் குறைப்பதன் மூலமாக விலைவாசி குறைந்துவிடாது, விலைவாசியைக் குறைப்பதற்கும், விற்பனை வரியைக் குறைப்பதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. வரியைக் குறைப்பது என்பது விற்பனை வரியைச் சீரமைப்பதற்கான ஒரு வழிதான், வியாபாரிகள் கணக்கு வழக்குகளை வைத்துக்கொள்ள வேண்டியிருப்பதை எளிமைப்படுத்துவதற்காக விற்பனை வரியைக் குறைக்கலாமேயொழிய, வரியைக் குறைக்கின்ற ஒரு காரணத்தாலேயே விலைவாசி குறைந்துவிடும் என்று சொன்னால், அது ஏற்புடையது அல்ல" என்று நான் அன்றைக்கே சொன்னேன். ஆனால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல மாவட்டங்களில் பலபேர் அறிக்கை விட்டார்கள். அன்றைக்கு அரசாங்கம்கூட என்னுடைய கூற்றை தவறு என்று கூறியது. ஆனால் இன்றைக்கு இந்தப் புதிய சட்டம் கொண்டு வந்திருப்பதன் நோக்கம் என்ன? நீங்கள் விலைவாசி குறையும் என்று எதிர்பார்த்தீர்கள். விற்பனை வரியைக் குறைத்தால் விலைவாசி குறைந்துவிடும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால் விலைவாசியும் குறையவில்லை, வரியும் தாங்கள் எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்கவில்லை என்றவுடன், வியாபாரிகளைப் பிடித்து சிறையில் அடைப்போம் என்று சொல்லி, ஒரு சட்டதிருத்தத்தைக் கொண்டு வருகிறீர்கள். ஆண்டுக்காண்டு



அரசாங்கத்தினுடைய மனப்போக்கு, வியாபாரிகள் மேல் இருக்கின்ற மனப்போக்கு மாறிக் கொண்டேயிருக்கிறது என்பதையே இந்தச் சட்டமுன்வடிவு தெளிவாகக் காட்டுகிறது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வியாபாரிகளைச் சிறை பிடித்தால் மட்டும் உங்களுக்குக் கணக்கு வழக்குகள் சரியாக வந்துவிடாது. விலைவாசியும் குறைந்துவிடாது. அதற்குப் பதிலாக அரசாங்கம் வேறு ஒன்றைச் செய்யலாம். வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அந்தச் சலுகைகள் அவர்களுக்கு நேரடியாகச் சென்றடையும் வகையில் துறை அதிகாரிகள் தங்களுடைய அறிக்கைகளை எளிமைப்படுத்தலாம், நடைமுறைகளை எளிமைப்படுத்தலாம். உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 28-4-1997 அன்று இந்தப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மீன்பிடிப்பவர்களின் பின்னலாடைக்கு வரி கிடையாது என்று சொன்னார். அவர் படித்ததை அப்படியே படிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள், "மீனவர்கள் வலை பின்னுவதற்காக 'மால்' வாங்குகிறார்கள். அது துண்டு துண்டாக இருக்கின்ற ஒன்று. அந்த 'மாலை' வாங்கி வலை தயார் செய்யும்போது, அந்த 'மாலுக்கு' வரி விதிக்கவில்லை" இது முதலமைச்சர் அவர்கள் 28-4-1997-ல் பேசியது.

ஆனால் இன்றைய வரை அந்த மாலுக்கான வரியைத் தமிழ்நாடு விற்பனை வரி அதிகாரிகள் விதித்துக் கொண்டிருக்கிறார்கள். விற்பனை வரி அதிகாரிகளிடம் போய்க் கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள், மாண்புமிகு முதலமைச்சர் சட்டப் பேரவையிலே பேசினாரேயொழிய எங்களுக்கு எந்தவிதமான அரசாங்க ஆணையும் வரவில்லை; எனவே அரசாங்க ஆணை வரப்பெறுகிற வரை அதற்கான வரி விதிப்பைச் செய்து கொண்டுதான் இருப்போம் என்று சொல்கிறார்கள்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும், கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், இந்தப் பேரவைக்கும் நான் தெரிவிப்பது என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்தப் பேரவையிலே ஒரு உறுதிமொழியைக் கொடுத்த பிறகு, உறுதிமொழி

கொடுத்து சற்றேறக்குறைய 10 மாதங்கள் ஆகிய பிறகும், இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மீன் வலை பின்னுகிற பின்னலாடைக்கு வரி விதிப்பை இதுவரை குறைக்கவில்லையென்றால் அதற்கு என்ன காரணம்? துறை இந்த அளவுக்கு மெத்தனமாகச் செயல்படுவதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் இந்தப் பேரவைக்கு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, 50 ரூபாய்க்குக் குறைவாக உள்ள செருப்புக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்தார்கள். நான் தர்மபுரி மாவட்டத்திற்கு உறுதிமொழிக் குழுவின் சார்பாகச் சென்றிருந்தபோது அங்கேயுள்ள செருப்பு தயாரிக்கிறவர்கள் என்னிடம் ஒரு விண்ணப்பத்தினைக் கொடுத்தார்கள். அதில் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் 50 ரூபாய்க்குக் குறைவான செருப்புக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு என்று சொல்கிறார்கள், ஆனால் எங்கள் மாவட்டத்திலே இருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகளிடம் சென்று கேட்டால், ஒரு செருப்புக்கா, இரண்டு செருப்புக்கா என்று கேட்கிறார்கள் என்கிறார்கள். இதற்கான தெளிவான உத்தரவு இல்லை என்று சொல்கிறார்கள். இதற்கான தெளிவான உத்தரவைப் பெற்று வந்தால்தான் விற்பனை வரி குறைப்பு கிடைக்கும் என்று அதிகாரிகள் சொல்கிறார்களாம். ஒரு சாதாரண செருப்பு தைக்கிறவர் இதற்கான உத்தரவை எங்கிருந்து பெற்று வருவார்?. எனவே, வருவாய்த் துறையைச் சேர்ந்த ' அதிகாரிகள் தங்களுடைய இலாகாவிலே உள்ள விதிகளை எளிமைப்படுத்த வேண்டும். வியாபாரிகள் தங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருக்குமென்று சொன்னால் அதை எளிமைப்படுத்தி, தெளிவான அரசாங்க ஆணையை அவர்களுக்குக் கொடுத்தால் விற்பனை வரிச் சட்டத்தில் உள்ள குளறுபடிகள் குறையும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு ஒன்றைக் கொண்டு வந்தார்கள். பலமுனை வரி என்பதை ஒரு முனை வரியாகக் கொண்டு வந்தார்கள். பிரச்சினைகள் இருக்கக் கூடாது என்பதற்காக. விற்பனை வரி நடைமுறை எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் கொண்டு வந்த முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்து விட்டதோ எனத் தோன்றுகிறது. எனவே, வியாபாரிகளைச் சிறையில் அடைப்பதற்காக இந்தச் சட்டத் திருத்தத்தினை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் எனத் தோன்றுகிறது. ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தை வாபஸ் பெற்று, அதற்குப் பதிலாக வருவாய் வரி





நடைமுறைகளை எளிமைப்படுத்த இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் 2 பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒன்று, 50 ரூபாய்க்குக் குறைவான செருப்புகளுக்கு வரி விதிப்பது குறித்து. ஒரு செருப்புக்கா, இரண்டு செருப்புக்கா என்று தருமபுரியில் சுற்றுப் பயணம் செய்தபோது கேட்டதாகச் சொன்னார்கள். மிக விளக்கமாக, செருப்பு என்றால் 1 ஜோடிதான். தனியாக ஒரு செருப்புக்கு வரி போடுவது கிடையாது. அதைப்போலவே மீன் வலையைப் பற்றியும் சொன்னார்கள். மீன் வலையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே விளக்கங்கள் கொடுத்தாகி விட்டது. இன்னும் தெளிவாக உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் ஓரிரு நாட்களிலே அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் செருப்புத் தயாரிப்போர் அளித்த மனுவைத் தங்கள் அனுமதியோடு அமைச்சருக்கு அளிக்கிறேன்.

(ஒரு விண்ணப்பத்தை அமைச்சரிடம் அளித்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் எங்களுடைய கட்சியின் சார்பாக இதை நாங்கள் எதிர்க்கிறோம். தற்போது முறையாகக் கணக்குகளைக் காட்டினாலேகூட, அந்தக் கணக்குகள் சரியில்லை என்று கூறி 10 சதவீதம் பணம் கொடுத்தால்தான் அந்தக் கணக்குகளை முடிக்க முடியும் என்று சொல்கிற சூழ்நிலை நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. மேலும் போலி கணக்குகள், போலி பில்கள் இவற்றில் ஏதாவது தவறிருந்தால் அவற்றைப் பார்த்து நடவடிக்கை எடுக்க, தண்டனை கொடுக்கும் பிரிவு, 'பெனால்டி கிளாஸ்' அந்தச் சட்டத்திலேயே உள்ளது. எனவே அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தினாலே இந்தப் போலி

பில்களையெல்லாம் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-45

மேலும், பெனால்ட்டி போட்டு, அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று, மறுபடியும் அவர்கள் அந்த வழக்குகளிலே வாதாட வழி இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக நீங்கள் அவர்களை மூன்று மாத காலம், ஆறு மாத காலம் ஜெயிலில் அடைக்க வேண்டும் என்று கூறினீர்களென்றால், அது சரியல்ல. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதித் துறைக்கும் அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், அவருக்கு ஒன்றும் தெரியாது என்று நான் சொல்ல விரும்பவில்லை.

தமிழகத்திற்கு கிட்டத்தட்ட ரூ. 12,000 கோடி வருமானம் வருகின்றது என்பது நம் அனைவருக்கும் தெரியும். அந்த 12,000 கோடி ரூபாயில் 50 சதவிகிதம், கிட்டத்தட்ட 6,000 கோடி ரூபாய் இந்த வணிகத்தின் மூலமாக, வரி விதிப்பின் மூலமாகத்தான் இந்த அரசு பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்தக் கூட்டத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வணிகர்களுக்கு வரிச் சலுகைகள் அளித்தால்தான் அவர்கள் தொழிலை நல்லமுறையிலே விருத்தி செய்ய முடியும். அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்கும். அப்பொழுதுதான் அரசாங்கம் பல கொள்கைகளை, பல திட்டங்களைச் செயல்படுத்தமுடியும் என்பதை நான் இந்தக் கூட்டத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வணிக வரித் துறை என்பது, அதாவது மலரிலேயிருந்து தேனை எப்படி மெதுவாக எடுக்கின்றோமோ, அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இந்தப் பேரவையிலே பேசுகின்றபோது, இந்தக் கூட்டத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்' என்று குறிப்பிடுகிறார். பொதுக்கூட்டத்தில் பேசுவதுபோல் நினைத்துப் பேசுகின்றார் என்று கருதுகிறேன். அது பற்றி விளக்கம் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை அவர்தான் விளக்க வேண்டும்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்'. போதுமா? இந்த வணிகவரித் துறை என்பது மலரிலேயிருந்து தேனை எப்படி மென்மையாக எடுக்கின்றோமோ அதுபோல வணிகர்களிடமிருந்து வரியை வசூல் செய்யும்போது மிக மென்மையாக நாம் வசூலித்தால்தான் நாம் நினைக்கின்ற காரியம் நிறைவேறும். இல்லையென்றால், மலரே நசுங்கி விட்டால், மலரே வாடிவிட்டால், நாம் நினைக்கின்றபடி, அந்த வரியை நமது அரசாங்கம் பெறமுடியாது என்பதை நான் இந்த கட்டத்திலே தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நீங்கள் இப்படி, மூன்று மாதகாலம், ஆறு மாதகாலம் சிறைத் தண்டனை என்று சட்டத் திருத்தம் கொண்டுவந்தால், அதிகாரிகள் வேண்டுமென்றே, *உண்மைக்கு மாறான தஸ்தாவேஜுகளைக் காட்டிவிட்டீர்களென்று, *உண்மைக்கு மாறான காரணங்களை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ** என்ற வார்த்தைக்குப் பதிலாக 'உண்மைக்கு மாறான' என்று மாற்றிக் கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலியான, உண்மைக்கு மாறான பில்களைக் கொடுத்துவிட்டீர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்து, அரசாங்கத்திற்கு வரவேண்டிய பல இலட்சக்கணக்கான பணம் அதிகாரிகளுடைய பாக்கெட்டிற்குச் செல்லும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பஞ்சாயத்துகளுக்கு எப்படி அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் எப்படி ஒரு கமிட்டி அமைத்திருக்கிறீர்களோ அதுபோல, இதையெல்லாம் விவாதிப்பதற்காக, ஒரு கமிட்டி அமைத்து, அதிலே என்னைவிட அதிகம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்களையெல்லாம் ஒரு உறுப்பினராக...

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் எனக்காக எந்தப் பரிந்துரையும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.
** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேல்ஸ் டாக்ஸ் விஷயத்தில் அரசாங்கத்திற்கு அவர்கள் நிறைய ஆலோசனைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் அவர் சொல்லிவிட்டார். உங்களுடைய பரிந்துரையை ஏற்றுக்கொள்கிற நிலையில் அவர் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பரிந்துரையை திரு. சொக்கர் அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, இதிலே பல கட்சிகளைச் சார்ந்த அதிக அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, இந்தச் சட்டத் திருத்தம் தேவையா, இல்லையா என்பதை அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் மூவராக இருக்கலாம். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பில்லிலே பேசி முடித்துவிட்டீர்கள் அல்லவா? அத்துடன் உட்காருங்கள். அடுத்து, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவிலே இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, வணிகர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்குவது என்பது மிகவும் கடுமையான ஒரு செயல். இன்று நமது மாநில வருவாயிலே பெரும் பகுதியைத் தந்து கொண்டிருப்பவர்கள் வணிகர்கள். இந்த நிலையிலே அவர்களுக்குச் சிறைத் தண்டனை என்று அதிகாரிகள் கையிலே அதிகாரத்தை வழங்கினால் பல பிரச்சினைகள் எழக்கூடும். குறிப்பாக, தீபாவளி போன்ற நாட்களிலே கடையிலே வியாபாரம் அதிகமாக இருக்கும்போது, கீழ் நிலையிலே உள்ள சில அதிகாரிகள் அங்கே சென்று வணிகவரித் துறையின் 'ரெய்டு' நடத்தப்போகிறோம் என்று கூறி அவர்களை மிரட்டிப் பணம் பெறுவது தமிழகத்திலே தொன்றுதொட்டு, வாடிக்கையாக நடந்து வருகின்ற ஒன்று.

*முற்பகல் 11-50*

சாதாரண தண்டனை என்ற ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு, தீபாவளி போன்ற இந்தப் பண்டிகை நேரங்களில், கடைகளிலே



பணத்தைப் பறிக்கின்றபோது, இதுபோன்று சிறைத் தண்டனை என்று சொன்னால், அது மேலும் இலஞ்சம் பெருகுவதற்கும், ஊழலை வளர்ப்பதற்கும் வாய்ப்பாக அமைந்துவிடும். ஆகவே, இதுபோன்ற காரணங்களால், அவர்களுக்குப் பணமாகத் தண்டனை கொடுக்கலாமே தவிர, சிறைத் தண்டனை என்ற ஒன்று இருப்பதை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், வரிகளைப் பொறுத்தவரையில், சில பொருள்களுக்கு ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அந்த ஏற்றத்தாழ்வுகளினால் பல குழப்பங்கள் நிகழ்வதுண்டு. உதாரணத்திற்கு, திருமணப் பத்திரிகை என்று எடுத்துக் கொண்டால், பத்திரிகைக்கு 11 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. அதேநேரத்தில் அந்தத் திருமணப் பத்திரிகை வைக்கக்கூடிய கவருக்கு 8 சதவிகிதம் வரி இருக்கிறது. இது ஒரு பிரச்சினைக்குரிய நிகழ்வாக இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல், 'கிரீட்டிங்ஸ்' என்று எடுத்துக் கொண்டால், 'பிரின்ட்' செய்யப்பட்ட 'கிரீட்டிங்ஸ்'-க்கு 8 சதவிகித வரியும், பிரின்ட் செய்யப்படாத கிரீட்டிங்ஸ்-க்கு 11 சதவிகித வரியும் என்று இதுபோன்று வித்தியாசமாக இருப்பதை மாற்றி, ஒரே சீரான வரியை ஏற்படுத்த வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். வரியைக் குறைப்பதால், விலைவாசி குறையும் என்று குறிப்பிட்டார்கள். இது முற்றிலும் தவறான கருத்து. விலைவாசி என்பது பொருள் தேவையையும், சப்ளையையும் பொறுத்து மாறுபடுகிறதேயொழிய, வரி குறைப்பாலோ, வரி ஏற்றத்தாலோ விலைவாசி மாறுபடுவதில்லை. எந்தப் பொருள்களுக்குத் தேவை அதிகமாக இருக்கிறதோ அந்தப் பொருள்...

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் கருத்தைத்தான் நானும் சொன்னேன். வரி விதிப்பதால் விலைவாசி குறையாது என்றுதான் நான் சொன்னேன். அவர், நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** விரி விதிப்புக் குறைப்பால், மக்கள் பயன்பெறுகிறார்கள் என்பதுதான் உண்மையான கருத்து. ஆகவே, வரியைக் குறைப்பது, மக்களுக்கும் இந்த நாட்டிற்கும் நல்லது. ஏனென்று சொன்னால், மேலும் விளக்கமாக அதிகமான கணக்கை, வியாபாரிகள் காட்ட முன்வருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டிலே, எந்தப் பிரச்சினையானாலும் பாதிக்கப்படுவது வியாபாரிகள்தான். குறிப்பாகச் சொல்லப்போனால், சில கட்சிகள் பெயர் பலகை அழிப்புப் போராட்டம் என்று நாம் வியாபாரிகளின் பெயர்ப் பலகைகளையெல்லாம் அடித்து உடைத்து விடுகிறோம். 'பந்த்' என்று சொன்னாலும் அவர்கள்தான் அடிபடுகிறார்கள். ஊர்வலம் என்று சொன்னாலும், போராட்டம் என்று சொன்னாலும், இந்த நாட்டிலே பாதிக்கப்படுவதும், தாக்கப்படுவதும் வியாபாரிகள்தான். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'அடித்து உடைத்து விடுகிறோம்' என்று சொல்கிறார். யாரோ கருங்காலிகள் செய்கின்ற குற்றத்திற்கு இந்த மன்றத்திலே வந்து 'அடித்து உடைத்து விடுகிறோம்' என்று சொன்னால், நாம் எல்லாம் அதிலே சேர்ந்து விடுகிறோம் என்பதுபோல ஆகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத் திருத்திக் கொள்ளுங்கள்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் இவ்வாறு சொல்வது, இங்குள்ள உறுப்பினர்களுள் யாரோ ஒருவர் அடித்து உடைத்து விடுகிறோம் என்பது போல உள்ளது. அதிலே, அந்த உறுப்பினரையும் சேர்த்து, உளப்பாட்டுத் தன்மையா, அது?

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடித்து உடைக்கிறார்கள். அதிலே பாதிக்கப்படுவது வியாபாரிகள்தான். பொதுவாக, நம் மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்திய நாட்டிற்கே, ஏன் இந்த உலகத்திற்கேகூட அதிகமான வருவாயைத் தரக்கூடிய வியாபாரிகளுக்கு, இந்த நாடு போதுமான பாதுகாப்பு



வழங்கவில்லை. போராட்டங்கள் என்று அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டாலோ, அல்லது தாக்கப்பட்டாலோ, அந்த வழக்குகளைக் காவல் துறைக்கு எடுத்துச் சென்றால், "அது போராட்டம் நடந்தபோது நடந்தது; 'பந்த்' நடந்தபோது நடந்தது; யாரைப் போய் பிடிப்பது?' என்று 'அம்போ' என்று விட்டுவிடுகிறார்கள். ஆகவே, இதற்கெல்லாம் ஒரு முறையான சட்டம் வகுக்க வேண்டும். வியாபாரிகளுக்கு முறையான பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு பற்றி பெருத்த விவாதம் நடந்து கொண்டிருக்கிற வேளையிலே, அமைச்சர் மூலமாக ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். வியாபாரிகள், அதிகாரிகளிடம் கணக்கைக் காட்டும்போது, அந்தக் கணக்கை ஏற்றுக் கொள்ளாமல், 'நீங்கள் தவறான கணக்கைக் காட்டியிருக்கிறீர்கள்' என்று பல முறைகளில் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பதுண்டு. இது சர்ச்சைக்குரிய விஷயம். வியாபாரிகள் சொல்வது சரியா. அதிகாரிகள் சொல்வது சரியா என்று அது நீதிமன்றங்கள் வரைகூடப் போகலாம். ஆனால், இப்போது அறிமுகப்படுத்தப்படும் சட்டத்தின் மூலமாக, அந்த நிலையிலேயே தவறான கணக்கு என்று அதிகாரிகள் கருதுவார்களேயானால், வியாபாரிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கலாம் என்று சட்டம் இருப்பதாக நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் புரிந்து கொண்டிருப்பது சரிதானா அல்லது தவறா என்றால் மேற்கொண்டு விவாதத்தைத் தொடர்வது சரியாக இருக்கும்.

இன்னொன்று: வியாபாரிகள், உண்மையிலேயே வணிகம் செய்து, கணக்கைக் காட்டும்போது இருக்கக்கூடிய முரண்பாடுகள் வருவது இயற்கை. ஆனால், வணிகமே செய்யாமல், 'பில் டிரேடிங்' என்று ஒன்று உண்டு; 'டம்மி பில்' என்று. ஒரு பொருளை வாங்குவதும் இல்லை, விற்பதும் இல்லை. ஆனால் பில் மட்டும் கொடுத்துவிட்டு அதற்காகப் பணம் சம்பாதிக்கின்றார்கள். அது மிகத்தவறானது. அதுபோன்று செய்பவர்களுக்குச் சிறைத் தண்டனை இருந்தால் ஆட்சேபணை இல்லை. ஆகவே அப்படித்தான் இருக்கப் போகின்றதா

அல்லது வணிகர்கள் கணக்கு காட்டுவதிலேயே சந்தேகம் இருந்தாலுமே சிறைத் தண்டனை வழங்கப்படுமா என்பதைத் தெளிவுபடுத்திவிட்டால் இதில் பிரச்சினையே இருக்காது.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிகர்கள் கணக்குக் காட்டுகின்ற நேரத்திலே ஏற்படுகிற பிரச்சினைக்காக நிச்சயமாக சிறைத் தண்டனை கிடையாது. அதில் ஏதாவது தவறு இருக்குமானால் அவர்கள் அந்த அதிகாரிகளைச் சந்தித்து விளக்கம் சொல்வதும், அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதும் அதிகாரிகளுக்கும், வணிகர்களுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினை. ஆனால் இது இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவில் போலியான ரசீது, பற்றுச்சீட்டு, வாக்குறுதி சான்றிதழ் அல்லது ஆவணங்களை வெளியிடும் வணிகர்களுக்குத் தண்டனை அளிக்கும் வகையிலேதான் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய சொக்கர் அவர்கள் சொன்னதைப்போல வணிகமே செய்யாமல் வெறும் letter pad வைத்துக்கொண்டு ரசீது வைத்துக் கொண்டு வியாபாரம் செய்கின்ற அப்படிப்பட்ட வணிகர்களுக்குத்தான் இந்தத் தண்டனைச் சட்டம் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொக்கர், அதைத்தான் பேசிவிட்டீர்களே, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், நீங்களும் ஏற்கெனவே பேசி விட்டீர்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது



விற்பனை வரிச் சட்டத்திற்கு சில புரட்சிகரமான திருத்தங்கள், வரி ஏய்ப்பைத் தடுக்கின்ற முறையிலேயும், அரசாங்கத்திற்கு வருமானத்தை வரியின் மூலம் அதிகம் பெறுகிற முறையிலேயும் இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இங்கே ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரியாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கராக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. நிஜாமுதீனாக இருந்தாலும் இந்தச் சட்டத்தைப் படித்துவிட்டு பேசுவார்கள் என்று நான் கருதினேன். மன்னிக்க வேண்டும்.

"Any person who knowingly issues a false bill, voucher, declaration, certificate or other documents with a view to support any dealer to claim exemption or reduction in rate of tax on the sale or purchase of any goods under this Act, shall, on conviction, be liable to simple imprisonment which may extend to three months and in the event of a second or subsequent conviction, to rigorous imprisonment for six months," என்று தெளிவாக இதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. போலியான வவுச்சர்களோ, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல போலியான பில்களோ, வவுச்சர்களோ, சான்றிதழோ, ஆவணமோ, டிக்ளரேஷனோ தெரிந்து ஏமாற்றும் நோக்கத்தோடு போலியான ஆவணங்களைத் தந்து ஏமாற்றினால் அப்படிப்பட்ட வரி ஏய்ப்பு, ஏமாற்றுகின்ற சமூக விரோதிகளுக்கு எதிராகத்தான் இந்தச் சிறைத் தண்டனைச் சட்டம் பாய்கிறது. அதுமட்டுமல்லாமல் அதிகாரிகளே அந்தத் தண்டனையை வழங்கி விடமுடியாது. நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர்களுடைய நியாயத்தை எடுத்துச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து அவர்கள் தாங்கள் நிரபராதிகளா, இல்லையா என்பதை ஆதாரத்தோடு நிரூபித்து, அதற்குப் பிறகுதான் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கும். ஆகையால் இந்தப் பேரவையில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் இங்கே அரசாங்கம் வியாபாரிகளுக்குக் கடுமையான தண்டனை விதிக்கிறது, அநீதி வழங்குகிறது என்று சொல்வது அடிப்படையற்ற உண்மைக்குப் புறம்பான, சட்டத்திலே இல்லாத ஒன்று என்பதை மிகுந்த வேதனையோடு நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே குற்றத்தைப்

பற்றிச் சொல்கின்றபோது முதல் குற்றமாக இருந்தால் 3 மாத சிறைத் தண்டனை simple imprisonment. இரண்டாவது முறையோ அல்லது தொடர்ந்து அந்தக் குற்றம் இழைக்கப்பட்டால் 6 மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை என்று போடப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் இன்னொன்றையும் இங்கே நான் தெளிவாக விளக்க விரும்புகிறேன். போலியான பில் டிரேடிங் வியாபாரத்திலே நம்முடைய சொக்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தவறான போகஸ் சர்டிபிகேட் போலியான ஆவணங்களைக் கொடுத்தவர்களுக்கு இந்தத் தண்டனை. அதை வாங்கி அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்களே ``A person who produces bogus bills...." அவர்களுக்கும் தண்டனை சட்டத்திலே விதிக்கப்பட்டு இருக்கிறது. போலியான பில்லைக் காட்டுபவர்களுக்கு வரி எவ்வளவோ அதைச் செலுத்த வேண்டும்.

நண்பகல் *12-00*

ஏற்கெனவே வரி செலுத்தியதாகப் பொய்யான சர்டிபிகேட்டை அல்லது ஆவணத்தைக் காட்டுகிறார்கள் அல்லவா அதில் எந்த வரி செலுத்தியதாகக் காட்டுகிறார்களோ அந்த வரியை அவர்கள் செலுத்தியாக வேண்டும். பெனால்டி, அபராதத் தொகை 50% செலுத்தியாக வேண்டும். முதல் தடவையாக இருந்தால், தொடர்ந்து இரண்டாவதாக அதைச் செய்தால் அல்லது தொடர்ந்து செய்துகொண்டே இருப்பாரேயானால் 100 சதவிகிதம் அபராதம் விதித்தாக வேண்டும். ஆக, இந்தப் பிரிவைப் பொறுத்தவரையில் தவறான, தப்பான போலி வவுச்சர்களை வரி ஏய்ப்பு நோக்கத்தோடு தருபவர்களுக்கு ஒரு தண்டனை, அதை வாங்கிப் பயன்படுத்துபவர்களுக்கு ஒரு தண்டனை என்று இதில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. போலிவெளச்சர்களை வரி ஏய்ப்பு நோக்கத்தோடு வெளியிடுபவர்கள் விஷயத்தில் மட்டும் நீதி மன்றத்தின் மூலமாக பைசல் செய்யப்படும். அதிகாரிகள் இது குறித்து ஒன்றும் செய்ய முடியாது. போலி வௌச்சர்களை வரி ஏய்ப்பு நோக்கத்தோடு வாங்கிப் பயன்படுத்துபவர்களுக்கு 150 விழுக்காடு வரை. வணிகவரி அதிகாரிகளால் தண்டத் தொகை விதிக்கப்படும்.

அடுத்து, இதிலே மிக முக்கியமான இன்னொரு திருத்தத்தைப் பற்றியும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு தனியாருடைய நிர்வாகம் மூடப்படுகிறது, அதைக் கலைப்பதற்கு முன்னோ, பின்னோ,





'வைன்டிங் அப்' நஷ்டம் ஏற்பட்டு மூடப்படுமானால் அவர்கள் வரி பாக்கி வைத்திருந்தால், அல்லது சட்டரீதியாகக் கொடுக்க வேண்டிய பாக்கிகள் இருந்தால், பெனால்டி, அபராதத் தொகை கட்ட வேண்டியிருந்தால், அவற்றை அரசாங்கம் வசூலிப்பதற்கு சட்டத்தில் வழி இல்லாமல் இருந்தது. இப்போது அதில் ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்து அந்தத் தனியார் நிறுவனத்தினுடைய டைரக்டர்கள் — அந்தப் பாக்கிகளை, வரி பாக்கிகளை, சட்டப்படியான பாக்கிகளை, தண்டனைத் தொகை பாக்கிகளை, அந்த நிர்வாகம் கட்டவேண்டி இருக்குமானால் அவற்றை — மூலமாக வசூலிப்பதற்கான வழிவகை செய்கின்ற விதத்தில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் அந்த நிர்வாகிகளைப் பொறுத்தமட்டிலே, இயக்குநர்களைப் பொறுத்தமட்டிலே No negligence, No breach of duty. கடமையை நாங்கள் தப்பாகச் செய்துவிட்டோம், அல்லது அஜாக்கிரதையாகச் செய்துவிட்டோம், அல்லது எங்களுக்கு இதிலே சம்பந்தம் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தினால் 'நெக்லிஜன்ஸ்' எங்கள் பகுதியில் இல்லை No negligence, no breach of duty எங்கள் பகுதியில் இல்லை, எனவே இதிலே எங்களுடைய கடமையைச் செய்கிறபோது நாங்கள் எந்தத் தப்பையும் செய்யவில்லை என்று அந்த இயக்குநர்கள் நிரூபித்தால் அவர்களிடமிருந்து அதை வசூலிப்பதற்கு உரிய சூழ்நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படமாட்டார்கள் என்று அவர்களுக்கு ஒரு பாதுகாப்பும் இந்தத் திருத்தத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, இன்னொரு திருத்தமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உதாரணமாக வணிக வரி ஆணையர் `Commissioner of Commercial Tax 'Rate of Tax on Goods' ஒரு பொருளுக்கு எவ்வளவு வரி விதிப்பு செய்வது என்பது குறித்துப் பதிவு செய்யப்பட்ட வணிகர் `Registered Trader' ஒரு பொருளுக்கு எவ்வளவு வரி போடுவது என்ற சந்தேகம் ஏற்பட்டு அல்லது ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறார் என்றால் முறைப்படி அவர் வணிக வரி ஆணையருக்கு விளக்கம் கேட்டு மனு செய்யலாம். · அப்படி மனு செய்கிறபோது வணிக வரி ஆணையர் `Commissioner of Commercial Tax' அது குறித்து தெளிவுபடுத்துகிற `Power to issue clarifications' அதிகாரம் பெற்றவராக இப்போது இருக்கிறார். ஏற்கெனவே உள்ள சட்டத்திலே இப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறது. ஆனால், அவருக்குக் கீழே வேலை பார்க்கக்கூடிய வணிக வரி ஆணையரின் கீழே

பணியாற்றுபவர்கள் அந்த 'கிளாரிபிகேஷனை' சட்ட ரீதியாக 'லீகல்-பைன்டிங்' ஏற்றுக்கொள்ள முடியுமா என்றால், இல்லை. உதாரணமாக, Commissioner of Commercial Tax தன்னுடைய அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி 'கிளாரிபிகேஷன்' சொல்லலாம். அவருக்குக் கீழே பணியாற்றுபவர்கள் அதை ஏற்கலாம், ஏற்காமலும் இருக்கலாம், வேறு விளக்கங்கள் கொடுக்கலாம். அதற்கு ஒரு லீகல்-பைன்டிங், லீகாலிட்டி, சட்ட ரீதியான அமைப்பு இல்லை. இப்போது அதற்கு ஒரு சட்ட ரீதியான வடிவம் 'லீகல்-பைன்டிங்' கொடுக்கப்படுகின்ற விதத்திலே இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். எதற்கு என்றால், `For the purpose of uniformity in the work of assessment and collection of revenue' தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அந்த அமைப்பில் இருக்கக்கூடிய பல்வேறு வித்தியாசங்கள் இன்றி, 'யூனிபார்மிட்டி' அந்த வரி நிர்ணயிப்பதிலே இருக்க வேண்டும், ரெவின்யூவிலே இருக்க வேண்டும், அதில் ஒவ்வொருவரும் வியாக்கியானம் செய்து கொண்டிருக்கக் கூடாது என்பதற்காகத்தான் `For the purpose of uniformity in the work of assessment' வரி நிர்ணயிப்பதில் இதை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக இந்த அதிகாரத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

அடுத்து, இறுதி வரி விதிப்புக் கணக்கை முடிக்க காலக்கெடு நிர்ணயம் செய்திருக்கிறோம். இப்போதுள்ள சட்டத்திலே இறுதி வரி விதிப்புக் கணக்கை முடிக்க கால வரம்பு இல்லை. `There is no time limit' வணிகர்கள் பல ஆண்டு காலமாக கணக்குப் புத்தகங்களை வைத்துக் கொண்டு பராமரிக்க வேண்டும். இல்லையென்றால் அதிகாரிகள் அந்த இறுதிக் கணக்கை முடிக்காமல் 3 வருடம், 4 வருடம், 5 வருடம் என்று வைத்திருப்பார்கள்.

*பிற்பகல் 12.05*

இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே, இப்போதுள்ள சட்டத்திலே இறுதி வரி விதிப்புக் கணக்குகளை முடிக்க காலவரம்பு இல்லாத காரணத்தினாலே இது பல இடையூறுகளை உருவாக்கும் என்ற காரணத்தினாலே இதை நீக்குகின்ற விதத்திலே இதற்குக் காலவரம்பு நிர்ணயித்து திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 'ரிஜிஸ்ட்டர்டு



டீலர்ஸ்' பதிவு செய்த வணிகர்கள் மூன்று ஆண்டுகளுக்குள்ளான இறுதி வரி விதிப்புக் கணக்கை முடிக்க வேண்டும். அதுபோலவே பதிவு செய்யாத வணிகர்கள் ஏழு ஆண்டுகளுக்குள் கணக்கை முடிக்கவேண்டும். 'ரிமான்டட் கேஸ்-இலே' உள்ளவர்கள் ஆர்டர் கிடைத்த தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் கொடுத்தாக வேண்டும். 'ரிஜஸ்ட்டர்ட் மற்றும் அன்-ரிஜிஸ்ட்டர்ட்' அது யாராக இருந்தாலும் 1996-க்கு முன்பாக உள்ள இறுதி வரி விதிப்புகள் பொறுத்த கணக்குகளை 31-3-2000-க்குள் முடிக்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். கோர்ட்டுகளிலே வழக்குகள் 'பெண்டிங்'-ஆக இருக்குமேயானால் அந்த 'பெண்டன்சி பீரியடை' கழித்துவிட்டு மீதி நாட்கள் கணக்கிடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோலவே டிபார்ட்மென்ட்டிற்கு இதுவரை சேல்ஸ் டாக்ஸ் அப்பலட் டிரிபியூனல்-இல் மேல்முறையீடு செய்யும் உரிமையில்லை. அந்த அதிகாரம் இப்போது வழங்கப்பட்டிருக்கின்றது. அதே நேரத்திலே ஜாயின்ட் கமிஷனரிடத்திலே இருக்கக்கூடிய *Suo Motu* Revision என்று சொல்லக்கூடிய அந்த 'பவர்' நீக்கப்படுகிறது.

அடுத்து, கடைசியாக பொருள்கள் வெளி மாநிலங்களிலே விற்கப்படுகின்றபோது, உங்களுக்கெல்லாம் தெரியும், 'சி-ஃபார்ம்' கொடுக்க வேண்டும். அதற்கு 4% வரிச் சலுகை. அதைக் கொடுக்க முடியாதபோது, 'சி-பார்ம்' கொடுக்கவில்லை என்றால் 10% வரி மட்டும் கொடுக்க வேண்டும், பெனால்டி இல்லை என்ற ஒரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே வணிகர்கள் சமர்ப்பிக்கும் கணக்கு - returns, it may be either incorrect or incomplete. ஆனால், அந்த ரிட்டர்ன்ஸ் எந்தவித உள்நோக்கத்தோடும் இல்லாமல் அவர்கள் கொடுத்த கணக்கிலே தவறு இருக்குமேயானால், உதாரணத்திற்கு 'டர்ன் ஓவர்' 11 இலட்சம் என்று ரிட்டர்ன்ஸ் கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அதிகாரிகள் பார்க்கும்போது 10 இலட்சம்தான் இருக்கிறது என்றால், அது மறைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வியாபாரி செய்யாமல், தவறுதலாக அந்த ஒரு இலட்சம் விட்டுப்போய் இருக்குமேயானால், கண்டுபிடிக்கப்பட்ட அந்த விற்பனைத் தொகைக்கு மட்டும் அதற்குரிய வரி போடப்படுமே தவிர 'பெனால்டி' கிடையாது. அது போலவேதான் பதிவு பெறாத வணிகர்கள் மூலம் — இது மிக மிக முக்கியமானது. இதைச் சொல்லிவிட்டு என் பேச்சை முடிக்க விரும்புகிறேன் — 'இந்து' பத்திரிகைகூட சில அச்சத்தைத் தெரிவித்து

[திரு. அ. இரகுமான்கான்] [1997 அக்டோபர் 18

எழுதியிருக்கின்றார்கள் "Major amendments to Tamil Nadu Sales Tax Act" என்று. வெளியிலே வேறுவிதமாக வந்துவிடக் கூடாது என்பதற்காக இதற்கு நான் இந்த அவை மூலமாக விளக்கம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பதிவு பெறாத வணிகர்கள் 'அன்-ரிஜிஸ்டர்டு டீலர்ஸ்' மூலமாக ஒரு பொருளைத் தயாரிப்பதற்கான மூலப் பொருளை வாங்குகிறார்கள். ஒரு பொருளை உற்பத்தி செய்வதிலே அந்த மூலப்பொருள் பயன்படுத்தப்படுகிறது. "அந்த 'ரா மெட்டீரியல்ஸ்' பொருளை உற்பத்தி செய்வதற்கு முழுமையாகப் பயன்படுகிறது. உற்பத்தி செய்த பொருளின் ஒரு பகுதியாக அதாவது சாம்பாரில் உப்பு இருப்பது போல அது இருக்கிறது. ஆகையினாலே அதற்கு மட்டும்தான் வரியே தவிர, 'கன்சியூமபிள் கூட்ஸ்' எரிபொருள் (Fuel) போன்றவைகளுக்கெல்லாம், அந்தப் பொருளை உற்பத்தி செய்வதற்கு உதவிகரமாக இருக்கலாம். ஆனால் அந்தப் பொருளின் உற்பத்தியோடு Part and parcel of the finished product அல்ல. ஆகையினாலே இந்த 'கன்சியுமபிள் கூட்ஸ்' எரிவாயு போன்றவைகளுக்கெல்லாம் வரி கூடாது. அந்தப் பொருள் உற்பத்தியில் முழுக்க முழுக்க கலந்திருக்கக்கூடிய part & parcel-ஆக இருக்கக் கூடியவைகளுக்குத்தான் வரி" என்று உயர்நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதன் காரணமாக எரிவாயுவிற்கு வரி போட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே உள்ள சட்டத்தில் எந்தப் பொருளை 'கன்சியூமபிள் கூட்ஸ்' என்று சொல்கிறோமோ 'not in the manufacture' அது உற்பத்தி செய்வதில் இல்லை. ஆகையினாலே அதற்கு வரியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதை மாற்றுவதற்கு "in the manufacture" - என்ற வார்த்தையோடு, "or for the manufacture" — என்று போடப்படுகிறது. அது உற்பத்தி செய்கிற பொருளில் இருந்தாலும் சரி அல்லது பொருளை உற்பத்தி செய்வதற்காகப் பயன்பட்டாலும் சரி என்று சொல்கிறபோது அந்த வரி விதிப்பிற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் 'இந்து' பத்திரிகையிலே ஹோட்டல்களிலே பயன்படுகிற அடுப்புக்கரி, விறகு போன்றவைகளுக்கெல்லாம் வரி விதிப்பிற்கு வாய்ப்பு ஏற்படுமோ என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இவைகளுக்கு எல்லாம் விதி விலக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே வேறுவிதத்திலே சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.



1997 அக்டோபர் 18]

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நீண்ட விளக்க உரை — வரி விதிப்பு மக்களை பாதித்திருக்கிறது என்பதைவிட — நீண்ட உரை எங்களை பாதித்திருக்கிறது. ஏற்கெனவே, பனியன்களுக்கு 1 சதவீதம் என்கிற விற்பனை வரியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே பட்ஜட் நேரத்திலே, நீக்கினார்கள். எப்படி மீன்வலை 'மாலுக்கு' 4 சதவீதம் வரி நீக்கப்பட்டதற்கு அரசு ஆணை வரவில்லையோ அதுபோல இதுவரையில் பனியனுக்கு 1 சதவீத வரி நீக்கம் குறித்த ஆணை இன்னும் வழங்கப்படவில்லை. அங்கே நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விரைவாக 6 மாதம், 3 மாதம் தண்டனை கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய அரசு, உடனடியாக, பனியனுக்கு ஒரு சதவீத வரி நீக்கத்திற்கான அரசு ஆணையும், மீன்வலை மாலுக்கு 4 சதவீத வரி நீக்கத்திற்கான அரசு ஆணையும் ஏன் இன்னும் வழங்காமல் இருக்கிறது? இந்த ஆணைகளை உடனடியாக வெளியிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்ட பொருள்களுக்கு அரசு இன்னும் உத்தரவு வழங்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். பனியனுக்கு ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீன்வலை சம்பந்தமாகக்கூட, அடுத்த வாரத்திற்குள் — மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் குறிப்பிட்டார்கள், அவர்கள் குறிப்பிட்ட அந்த நூல் போன்ற மீன்வலை மாலுக்கு — டாக்ஸ் எக்சம்ஷன் சம்பந்தமாக உத்தரவுகள் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**Thiru M. ABDUL LATHEEF:** Hon. Deputy Speaker Sir, I do not want to deal with the long explanation given by the Hon. Minister. But one thing, I have got my own misgiving. It is with regard to the corporate bodies. Hon. Minister has explained with regard to the

collection of recovery of collection of arrears, that it would be recovered from the individual directors also, i.e. not only from the corporate body but also from the individual directors. If that is so, the Act must have specific provision that the tax arrears will be recovered both individually and collectively. Whether that provision is there already in the statute; if not, if you have made any arrangement for the statutory provision in the amending Act. That I do not find. So, therefore, it will open the floodgate of a lot of litigation and as a result the free flow - even now we are having only a retarded flow - of sales tax to the Government Treasury. It will retard further and it will create a lot of room for litigation. Unless and until you have a specific provision that the arrears of a corporate undertaking will be recovered from the individual director also, when it is wound up, then it will be very difficult. I don't know whether it is private limited companies or public limited companies. But I feel that there will be great difficulties.

**Hon. Thiru A. RAHMAN KHAN:** Hon. Deputy Speaker Sir, our Hon. Member is a good lawyer as far as practising the sales tax issues. However, what I am saying is—(குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் தெரிந்த உறுப்பினர், தமிழில் பேசுவதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் பேசினார்கள். நான் அவர்களுக்குத் தமிழ் தெரியாது என்று நினைத்துச் சொல்லவில்லை. அவர் விரும்புகிற எக்ஸ்பிரஷனை ஆங்கிலத்தில் சொன்னேன். அவர் அகமகிழ்வுக்காக ஆங்கிலத்திலே ஒரு வரி சொன்னேன்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகமகிழ்வுக்கு என்று பேசிப் பேசித்தான் ரொம்ப குட்டிச்சுவராகியிருக்கிறோம். தமிழ் தெரிந்தவர்கள், தமிழ்நாட்டிலே தமிழிலேதான் பேச வேண்டும். அப்படி ஏதாவது ஆங்கிலத்தில் பேச வேண்டுமென்றால், வெளியிலே மேடை இருக்கிறது; பட்டிமன்றம் போட்டும் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.



**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் பேசுவது என்பது எனக்கு அகமகிழ்வு அல்ல. தமிழில் பேசினால்தான் அகமகிழ்வு. தமிழ்மொழியிலே-பழக்கத்தினால் ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டிருந்ததை-மொழி பெயர்த்து தெளிவாகச் சொல்வதற்குத் தடங்கல் ஏற்படும்; சொல்கிற கருத்தை முறையாக நிறைவாக அவர் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் பழக்கப்பட்ட எதை வழக்காடு மன்றத்திலே பயன்படுத்தினேனோ, அதைப் பயன்படுத்தினேன். மாண்புமிகு நம்முடைய தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழக்குமன்றங்களிலேயும் இனிமேல் தமிழிலேதான் வாதம் செய்யவேண்டும். தமிழில்தான் தீர்ப்புக் கூற வேண்டும் என்று ஒரு முறையை அவர்கள் கொண்டுவரத் துணிந்தால் அல்லது அதற்கான நடவடிக்கை மேற்கொண்டால் நான் அதிலேயும் அகமகிழ்வேன்.

பிற்பகல் 12-15

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களில் தீர்ப்புகள் தமிழில் வழங்கப்பட வேண்டுமென்றும் வாதங்கள் தமிழில் வைக்கப்பட வேண்டுமென்றும் சான்றுகள் தமிழில்தான் பதியப்பட வேண்டுமென்றும் ஏற்கெனவே அரசாணை இருக்கிறது. ஒருவேளை உறுப்பினருக்கு அது தெரியாமல் இருந்து இருக்கலாம் என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி ஒவ்வொருவரும் எழுந்து நின்றால் நேரம் ஆகும்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** திரு. அப்துல் லத்தீப் அவர்களே, சட்டமன்றத்திலே ஆங்கிலத்தில் பேசினால், அப்புறம் நீதிமன்றத்தில் போய்த் தமிழில் எப்படி பேசுவார்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதிலே எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஆங்கிலத்தில் பேசினால் அவர் மட்டும் அகம் மகிழவில்லை; இந்த அவையும் மகிழ்கிறது. பிரச்சினையை இத்தோடு விடுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் ஒரு சந்தேகத்தைக் கேட்டார்கள். இந்தத் திருத்தம் தனிப்பட்ட ஒரு பிரைவேட் கம்பெனிக்கு, அதை மூடிவிட்டால் அதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இதில் தேவையான அமென்ட்மென்ட் செய்யப்பட்டு இருக்கிறது. தனியாக இன்டிவிஜுவல் டைரக்டர் அவர்களிடமிருந்தும் ரெக்கவர் செய்யலாம் என்று இப்போது திருத்தம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இது ஒரு பிரைவேட் கம்பெனிக்கு. அதை மூடிவிட்டால் அதிலே இருக்கக்கூடிய இன்டிவிஜுவல் டைரக்டரிடத்திலேயும் இதை நாம் ரெக்கவர் செய்யலாம் என்பதுதான் திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய மேலான கருத்துகளை இந்த அரசு ஏற்று அவைகளைப் பரிசீலித்து தேவையான திருத்தங்கள் அவசியம் என்றால் அவை குறித்து கவனத்திலே கொண்டு, மேலான கருத்துகளைச் சொல்லிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை, திருத்தங்கள் இல்லை.



பிரிவுகள் 2 முதல் 14 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 64/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 66/1997). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 66/1997) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

*பிற்பகல் 12-20*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தொழில்நுட்ப இயக்குநரை நியமிப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் ஒரு சிறந்த அறிவு நுட்பம் கொண்டவராகவும், விஷயம் தெரிந்தவராகவும் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன்.

1980-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இரண்டாவது மாடியில் 201-வது அறையில்தான்

---

@16-10-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





தங்கியிருக்கிறேன். சட்டமன்றம் இல்லாத நட்களில்கூட அதிலே மாதம் ஒன்றுக்கு ரூ. 600 கொடுத்துத் தங்குகிறேன். சில சமயங்களில் அதிலே வரக்கூடிய தண்ணீரில் வருகின்ற அழுக்கு இருக்கிறதே, ஏனென்றால் அசிங்கமான அழுக்குகள் வருகின்றன. அழுக்குகளோடு ரொம்ப மோசமாக வருகிறது. சில நேரங்களில் சிலது எல்லாம் கலந்து வருகிறது. புழு எல்லாம் வருகிறது. அந்தத் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு வந்து இங்கே கூட 3-4 வருடங்களுக்கு முன்பு காட்டினேன். அவ்வளவு மோசமான தண்ணீர் அங்கே வருகிறது. ஆகவே நீங்கள் இப்படி நியமிக்கக்கூடிய அதிகாரிகள், இந்தக் கழிவுநீரை அகற்றுவதில் கண்ணுங்கருத்துமாக இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். காரணம் அந்தத் தண்ணீரை இந்தப் பகுதிக்கு அனுப்பக்கூடாது. முன்பே ஒரு முறை சொல்லியிருக்கிறேன். அங்கே எங்கேயாவது ஒரு பெரிய ராட்சதக் குழாய் போன்று போட்டு, சென்னை மாநகரத்தில் வரக் கூடிய கழிவுநீர் அத்தனையையும் எங்காவது தூரமாகக் கொண்டு போய் அகற்றவேண்டும். அப்படி இல்லாவிட்டால் மிகப் பெரிய சுகாதாரக் கேடுகளை அது உருவாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தண்ணீர் கொடுப்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இங்கே சென்னையில் குடிநீர் கொடுப்பது மட்டுமல்ல, கிராமங்களிலும், வெளியூர்களிலும் கூட தண்ணீர்ப் பிரச்சினை மோசமாக இருக்கிறது. பேரணை என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கிருந்து வைகையாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு போகிறார்கள். பேரணையிலிருந்து மதுரைக்குத் தண்ணீர் போகிறது, திண்டுக்கல்லுக்குப் போகிறது. உசிலம்பட்டிக்குத் தண்ணீர் கொண்டுபோகிறார்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் உள்ளூரில் உள்ள அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்காமல் வெளியூருக்குக் கொண்டுசென்றால் அந்தப் பகுதி மக்கள் என்ன செய்வார்கள்? ஆகவே அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வத்தலக்குண்டு பெரிய நகரமாகி வருகிறது. தினமும் வளர்ந்து வருகிறது; வளர்ந்து வருவதோடு மட்டுமல்ல, தண்ணீர் தேவையும் அதிகமாகி இருக்கிறது. பக்கத்தில் உள்ள மலையில் மலைச் சரிவு ஏற்படுகிறது. கொடைக்கானல், பொன்னக்காடு, காட்டுக்குடி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் எல்லாம் சென்னைக்கு வருகிறார்கள். அவர்கள் சென்னையில் வந்து குடியேறுகிறார்கள். ஆகவே வத்தலக்குண்டு பெரிய நகரமாகும் என்று நினைத்துக்கொண்டு, அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்கெனவே ரூ. 3,56,54,000 சாங்க்ஷன்

செய்திருக்கிறார்கள். அதற்கு ஒரு கிணற்றை வெட்டி, அந்தக் கிணற்றில் தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். இப்போது மழை பெய்திருக்கிறது. தண்ணீர் வந்திருக்கிறது. ஆகையால், மாநிலத்தில் எந்தெந்த தொகுதியில் தண்ணீர் இல்லையோ அங்கே முன்னுரிமை கொடுத்து தண்ணீரைக் கொடுக்க முயற்சி மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கழிவுநீரை அகற்றுவதில் சென்னையைப் பொறுத்தவரையில் மிகவும் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஒரு அதிகாரி போதாது. அவருக்குத் துணையாக ஒன்றிரண்டு பேர் நியமிக்கப்படலாம். அப்படி நியமித்து சென்னையில் கழிவுநீரை அகற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். ஏற்கெனவே டெக்னிக்கல் டைரக்டர் என்று இருந்த பதவியை இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை அந்தப் பதவியை நீட்டித்துக் கொண்டிருக்கிறீர்கள். என்ஜினியரிங் டைரக்டர் என்பது இப்போது டெக்னிகல் டைரக்டர் என்ற வடிவில் வருகிறது. ஆகவே இதை முழுநேரப் பதவியாகக் கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் பொல்லூஷன் இல்லாமல் தண்ணீர் கிடைக்கவேண்டும். ஆகவே இந்த டெக்னிகல் டைரக்டரைக் கொண்டு நல்ல பொறியாளர்களையும் அதிலே போட்டு அனைத்துக் குழாய்களிலும் உள்ள அடைப்புகளை நீக்கி சுத்தமான தண்ணீர் மக்களுக்குக் கிடைக்க வழி வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது மழைக் காலம் வந்துவிட்டது. மழைக் காலத்தில் பாதாள சாக்கடைச் சுவரும் மழை நீர் அகற்றுகிற கால்வாயும் இணைந்து அதிகமான தண்ணீரை வெளியேற்றமுடியாமல் வெள்ளப் பெருக்கு ஏற்படும். ஆகவே பாதாள சாக்கடை தண்ணீர்தான் ஆங்காங்கே தேங்கி நிற்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே பாதாள சாக்கடை அடைப்புகளை அகற்ற மான்ஸ்டர் என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது. முன்பு அத்தகைய கருவிகள் சென்னையில் பத்து இருந்தது. இப்போது ஐந்துதான் இருக்கிறது. ஆகவே கண்டிப்பாக மண்டலத்திற்கு ஒன்று என்ற எண்ணிக்கையில்



அந்தக் கருவி இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் திடக் கழிவுகளை அந்தப் பாதாள சாக்கடையிலிருந்து அகற்றுவதற்கு பக்கெட் மிஷின் என்று இருக்கிறது. அந்தப் பக்கெட் மிஷின் பரிபூர்ணமாகக் குறைந்தது ஒரு மண்டலத்திற்கு 5 என்ற அளவில், மொத்தம் 50-ஆவது இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் ஸ்லிட்-களை டீ-சில்ட் செய்யமுடியும். அதை 50 ஆக உயர்த்த வேண்டும். அதுமட்டுமல்லாது மேலை நாடுகளிலும், மும்பை, டெல்லி போன்ற பெரு நகரங்களிலும். suction-cum-jet என்ற மிஷின் இருக்கிறது. அதன்மூலம் தண்ணீரை உறிஞ்சி அதிலிருந்து திடக் கழிவுகளை அகற்றும் முறை அங்கே இருக்கிறது.

நம்முடைய தமிழக அரசு 10 மெஷினுக்கு ஆர்டர் செய்யப் போவதாக அறிகிறேன். எனவே தயவுசெய்து அந்த மெஷினை அதிகமாக ஆர்டர் செய்து வாங்கி பாதாள சாக்கடை அடைப்புகளை நீக்க வேண்டும். இப்போது பாதாள சாக்கடைக்குள் 'மூழ்குபவர்கள்', பாதாள சாக்கடையிலே மூழ்குவதற்குச் சட்டம் அனுமதிக்கவில்லை. அவர்கள் மூழ்குவதும் இல்லை. அதற்கான ஆட்களும் இன்றைக்கு இல்லை. ஆகவே தூர் எடுப்பதற்கான ஒரு சூழ்நிலை இல்லாமல் இருப்பதால் ஆங்காங்கே பாதாள சாக்கடைகள் அடைபடுகின்றன. ஆகவேதான் இந்த இயந்திரத்தை நீங்கள் உடனடியாக வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

ஆங்காங்கே இருக்கிற பம்பிங் ஸ்டேஷன்கள், பாதாள சாக்கடையிலே கழிவுகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அந்த நிலையங்களில், இப்போது மழைக்காலங்களிலே மின்சாரம் தடைப்படுகிறது. ஆகவே குடிநீரும் கழிவு நீரும் சேருகிறது. எனவே இதை நீக்க ஜெனரேட்டர்கள் நிச்சயம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு சப்-ஸ்டேஷன்களிலும் - பாதாள கழிவுநீரகற்று நிலையங்களிலும்- ஜெனரேட்டர்கள் தேவை. அந்த ஜெனரேட்டர்கள் குறைந்தது ஒரு கிலோ வாட் திறன் உள்ளவைகளாக இருப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். அப்போதுதான சென்னையிலே பாதாள சாக்கடையிலே இருக்கிற அடைப்புகளைப் போக்க முடியும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த சட்டமுன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், ஒரு தொழில் நுட்ப இயக்குநரை இந்த வாரியத்தில் பங்கு பெறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அவர் மத்திய சர்க்காரிலோ மாநில சர்க்காரிலோ அங்கம் பெற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதுவரையில் அப்படி இல்லை. நல்ல பிரசித்தி பெற்ற, நல்ல வல்லுநராக இருக்கக்கூடிய ஒருவரைத் தேர்வு செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இதைப் பயன்படுத்தி - கழிவுநீர், குடிநீர் என்று வருகிற காரணத்தாலே - நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்களும் இங்கே ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். 'குடி தண்ணீரிலே சாக்கடை கலக்கிறது; அப்படிக் கலப்பதால் அதிலே புழு பூச்சிகள் வருகின்றன. சுத்தம் இல்லாமல் போகிறது' என்று குறிப்பிட்டார்கள். அதிலே சென்னையைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் மட்டும் இந்தத் தவறைச் செய்கிறார்கள் என்று சொன்னால் அதை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. சில இடங்களில் மக்களே இந்தத் தவறைத் தெரிந்தே செய்கிறார்கள். நமக்கென்ன என்று பொறுப்பற்ற தன்மையில் பல இடங்களில் சாக்கடை நீரை வெட்டி விடுவதும், குழாய்களை உடைப்பதும், மழைக்காலங்களில் எப்படியாவது தன் பகுதியில் தண்ணீர் இல்லாமல் போனால் போதும் என்ற நிலையில் அப்படிச் செய்கிறார்கள். அதைச் சரியான முறையில் கண்காணிக்காமல் சில அதிகாரிகளும் இருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஒருவழியில் அதிகாரிகள் என்றில்லாமல் மக்களும் இதைச் செய்கிறார்கள் என்ற கருத்து இருக்கிறது என்று சொல்லியிருந்தால், இதைக்கூட நான் இங்கே குறிப்பிடுவதற்கில்லை.

இன்னும்கூட, விஞ்ஞான முறையில் அதிகமான தொழில் நுட்பத்தைக் கலந்த கருவிகள் அமைக்கப்பட வேண்டுமென்பதில் வேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஒருவாறாக, இப்போதுதான், இந்த ஆட்சி வந்த பிறகுதான்—இதற்கு முன்னாலேயும் இந்த பிறகுதான்—குப்பையை அகற்றுவதற்கே லாரிகள் அதிகமாக வாங்கித் தந்ததே கலைஞர் ஆட்சிதான். அவர்தான் அதை நேரடியாகப் பார்த்துவிட்டு, ஒருநாள் என்னை அழைத்து, இப்படியெல்லாம் குப்பை சிந்திக்கொண்டு போகிறதே, இப்படியெல்லாம் மூடாமல் கிடக்கிறதே, இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறாய்? என்று 1990-91-ஆம்



நிதியாண்டிலே கேட்டபோது, அப்போது தெரிவித்ததின் அடிப்படையில் அப்போதும் லாரிகளை வாங்கித் தந்தார். சில இயந்திரங்களை வாங்கித் கொடுத்தார். அதைபோலவே, இப்போதும் லாரிகள் வாங்குவதற்கும், இயந்திரங்கள் வாங்குவதற்கும் அரசு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இது திரு. செங்கை சிவம் அவர்களுக்கும் தெரியும். ஒருவேளை, இது போதாது, அதிகமாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றுதான் என்னைப் பொறுத்தவரையில் கருதுகிறேன்.

எனவே, ஏற்கெனவே இந்த விதி இல்லாததை இப்போது மத்திய, மாநில அரசுகளிலே பணியாற்றுகிறவரையோ அல்லது இந்த அரசுக்குத் தொடர்புடைய மற்றைய மன்றங்களில், ஊராட்சிகளுக்குத் தொடர்புடைய மன்றங்களில் பணியாற்றுகிற ஒரு வல்லுநரையோ இன்று இதில் நியமிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

பிற்பகல் 12-30

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 66/1997) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





## (ஈ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 69/1997). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 69/1997) (@) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே. நகராட்சியினுடைய சட்டமுன்வடிவின்கீழ் பேசக்கூடிய வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் சென்னை மாநகரம், மதுரை, திருச்சி, கோவை, சேலம் போன்ற பல்வேறு இடங்களில் வெவ்வேறுபட்ட சூழ்நிலையில் இருக்கக்கூடிய மாநகராட்சிகளிலேயும், நகராட்சிகளிலேயும் வசதி உள்ள நகராட்சிகள், வசதியில்லாத நகராட்சிகள், வருமானம் இல்லாத நகராட்சிகள் என்ற நிலையிலே,-இன்று பேரூராட்சிகள் கூட புதிய சட்டத்தின் வடிவத்தில், நகர்பாலிகா சட்டத்தின்கீழே நகராட்சிகள் என்று இருக்கின்ற நிலையிலேயும் சொத்து வரி என்ற நிலையில் அங்கே இருக்கக்கூடிய நிலத்திற்கு ஒரு சில பொதுக் காரியங்களுக்கு மாத்திரம் ஒதுக்கிவிட்டு மற்றவர்களுக்கு எல்லாம் முழுமையாக வரி போடுவதாகக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கின்றது. தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் அங்கே இருக்கக்கூடியவர்களிலே. அந்த வசதிக்கேற்ற, வருமானத்திற்கேற்ற நிலையில் அதை அவர்களே அமைத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புள்ள சூழ்நிலையை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

---

@17-10-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது

குறிப்பாக, கடந்த வாரத்திலே பல்வேறு நகராட்சிப் பகுதிகளுக்கு,
அதாவது பேரூராட்சிப் பகுதிகளிலே சுற்றுப் பிரயாணம் செய்த
நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் இங்குள்ள வீடுகளுக்கு
எல்லாம் சதுர அடிக்கு வரி விதிப்பதாகக் கூறுகிறார்களே, இது
உண்மையா, அப்படிச் செய்வார்களேயானால் எதிர்காலத்தில் எப்படி
வரியைக் கட்ட முடியும் என்பதையெல்லாம் எனக்கு எடுத்துச்
சொன்னார்கள். சொத்து வரி என்பது வளமான தமிழகம், வலிமையான
இந்தியா உருவாவதற்கு—கண்டிப்பாக வருமானம் வேண்டும்.
கண்டிப்பாக வருமானம் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது.
வருமானம் வருவதற்கு ஏற்ற வகையில் அதேநேரத்தில் ஏற்கெனவே
இருந்த நிலையிலிருந்து சிறிதுசிறிதாக, படிப்படியாக மாற்றம்
கொண்டுவர வேண்டுமேயொழிய, உடனடியாக அதிகமான பளுவை,
சுமையை மக்களிடத்திலே திணிக்காத சூழ்நிலையை இந்த அரசு
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக, பேரூராட்சிகள் நகர்பாலிகா சட்டத்திலே இருக்கக்கூடிய
சூழ்நிலையில் அங்கே இருக்கக்கூடிய சட்டத்தில், தேர்ந்து எடுக்கப்பட்ட
பிரதிநிதிகளே தொடர்ந்து அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப
செயல்படக்கூடிய வகையில், இருக்கக்கூடிய மாநகராட்சிகளிலே,
நகராட்சிகளிலே அவர்களுடைய இடத்திற்கேற்ப-சென்னை நகரம்,
மதுரை, கோவை போன்ற நகரங்களுக்கு ஏற்ற வகையிலும்,
நகராட்சிகளிலேயும், எதிர்காலத்திலே செய்ய வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டு, இந்தச் சட்டத்தில் அங்கே இருக்கக்கூடிய
பிரதிநிதிகளுடைய ஆலோசனைகளைக் கேட்டு, செயல்பட
வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, நகராட்சியின் இந்தச் சட்டத் திருத்த முன்வடிவை
வரவேற்றுப் பேசுவதோடு, ஒரு சில பிரச்சினைகளை மட்டும் அரசின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தலுக்குப்
பிறகு, ஆங்காங்கு தனியாக இருந்த பஞ்சாயத்து அலுவலர்கள்,
நகராட்சியினுடைய நிர்வாகிகள்-அவர்கள் எல்லாம்
தான்தோன்றித்தனமாக, சில அதிகாரிகள் ஆங்காங்கு சில ஊழல்கள்
செய்தவர்கள், உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு இந்தப் பிரதிநிதிகள்
வந்தவுடன் அவர்களுக்கு இடையூறாக இருந்து ஆங்காங்கு சில
பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். அதாவது, நகராட்சியினுடைய





சேர்மென், தலைவர்களை மதிக்காத சில பிரச்சினைகள் ஏற்படுகிறது.
அதிலும் பெண் ஒருவர் தலைவராக வந்த இடத்தில் பிரச்சினைகள்
அதிகமாக ஏற்படுகின்றது. என்னுடைய பத்மநாபபுரம் நகராட்சியைப்
பொறுத்தவரையில், அந்த அதிகாரி, எங்களது சேர்மென், பெண்
என்ற காரணத்தினால் அவரை மதிக்காமல் தீர்மானத்தில்
கையெழுத்துப் போடுவதற்குக்கூட, - அவரைத் தாஜா செய்யக்கூடிய
நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

இதுபோன்று பல இடங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலை
ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இதுபோன்ற அதிகாரிகளை அந்த இடத்திலேயிருந்து மாற்றம் -
இதுபோன்ற குறைகள் நடக்கும் இடங்களை ஆராய்ந்து, அவர்களை
இடமாற்றம் - செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோல் கழிவுநீர் சாக்கடை பாதாள சாக்கடை பத்மநாபபுரம்
நகராட்சிக்குத் தேவைப்படுகிறது. இது ஒரு சிறிய நகராட்சி. எனவே,
அதைக் கவனத்திலே கொண்டு கழிவுநீர் சாக்கடையை, பாதாள
சாக்கடையாக அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சிகளில் இருக்கின்ற சுத்திகரிப்புப் பணியாளர்கள்
போதாது என்று சொல்கிறார்கள். கிராமப்புறங்களைவிட நகரங்களில்
தான் அதிகமான அளவில் அசுத்தமாகவும், துர்நாற்றம் அடிக்கக்கூடிய
சூழ்நிலையும் இருக்கிறது. எனவே, தேவைக்கேற்றார்போல், சுத்திகரிப்புப்
பணியாளர்களைக் கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று
கேட்டுகொள்கிறேன்.

பல நகராட்சிகளில் நாய்த் தொல்லை மிக அதிகமாக உள்ளது.
எனவே, இந்த நாய்களை எந்தளவுக்கு அப்புறப்படுத்துவது, அதற்கு
எந்த முறையைக் கையாளுவது என்று....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் பேசும்போது, இந்த
நாய்களை அகற்றுவதற்கு என்று கூறுகிறாரே, எந்த நாய்கள் என்று
அவர் மிகத் தெளிவாகச் சொல்லவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
நகராட்சிகளில், வீடுகளில் வளர்க்கப்படுவது.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொல்வது நான்கு
கால் உள்ள நாய்.

**திரு. சி. வேலாயுதன்:** துணைத் தலைவர் அவர்களே,
நகராட்சிகளுடைய மேம்பாட்டுப் பணிக்குப் போதுமான நிதி
கிடைக்கவில்லை. எனவே, அந்த நிதியைச் சற்று அதிகப்படுத்திக்
கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும்
என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். பாரத் மாதாகி
ஜே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
நகராட்சி சம்பந்தப்பட்ட சட்டத் திருத்தம் சம்பந்தமாக சில
விவரங்களை நான் இங்கே சொல்ல விழைகிறேன். நகராட்சிகளில்
வடிகால்கள் இல்லாத ஒரு மிகப் பெரிய குறைபாடு இருக்கிறது.
அதிலும் குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தினை
எடுத்துக்கொண்டால், தேசிய நெடுஞ்சாலைகள் பெருவாரியாக
இருக்கக்கூடிய பகுதிகளில்தான் இந்த 3 நகராட்சிகள் வருகின்றன.
அது நாகர்கோவில் நகராட்சியானாலும் சரி, தக்கலை
நகராட்சியானாலும் சரி, குழித்துறை நகராட்சியானாலும் சரி, எதிலும்
வடிகாலே கிடையாது. வடிகால் இலலை என்று சொன்னால் நகரத்தை
எப்படிச் சுகாதாரமாக நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். எனவே,
நகராட்சியும், தேசிய நெடுஞ்சாலைத் துறையும் இணைந்து
வடிகால்களை அமைத்தால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட
முடியும். அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நகராட்சியிலேயிருந்து 5 லட்ச ரூபாய்க்கு ஒரு
பணியினைச் செய்வதற்கு, நகராட்சியிலே தீர்மானம் போட்டாலுமகூட,
எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்தாலும்கூட, ஆர். இ. யினுடைய
சாங்ஷனுக்காக பாளையங்கோட்டைக்கோ அல்லது திருநெல்வேலிக்கோ
செல்லவேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இதிலே
இரண்டு மாதம் காலதாமதம் ஏற்படுகிறது. அங்கே சந்திக்க
வேண்டியவர்களைப் பார்க்க வேண்டிய முறையிலே பார்த்தால்தான்,
அதனுடைய சாங்ஷன் உடனே கிடைக்கின்ற சூழ்நிலை இருக்கிறது.





எனவே, இந்த நிலையிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி,-அங்கே இருக்கின்ற என்ஜினியருக்குக் கொடுத்திருக்கின்ற வரம்பு இருக்கிறதே, 50 ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டிருக்கின்ற அந்த வரம்பை மாற்றி குறைந்தபட்சம் 2 லட்சம் ரூபாய். அவர்களுடைய அதிகாரத்திற்குள்ளே தரக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்தால் உதவிகரமாக இருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் சுகாதாரப் பணியாளர்கள். இதிலே ஒரு காலகட்டம் தாண்டியபிறகு, இப்போது ஒரு விதிமுறை வந்துவிட்டது. அவர்களை வைத்து நாம் மலம் அள்ளக்கூடாது என்று ஒரு விதிமுறை வந்துவிட்டது. ஆனால் எல்லா இடங்களிலேயும் கழிப்பறை வசதி இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. ஆகவே, சுகாதாரப் பணியாளர்கள் என்பது குறைந்து போய், தினந்தோறும் நகரப் பகுதிகளிலே வருகின்ற குப்பைக் கூளங்களை அகற்றுவதற்கே சாத்தியம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதற்கு ஒரு நார்ம்சை வைத்திருக்கிறார்கள். இவ்வளவு சாலை இருக்கவேண்டும், இவ்வளவு வருமானம் இருக்கவேண்டும் என்று. அப்படி இருந்தால்தான், அதற்கு ஏற்றவாறு நமக்கு ஊழியர்களைத் தருகின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே, இந்த நிலையைச் சற்று தளர்த்தி, நகராட்சியினுடைய தேவையாக இருந்தாலும், சம்பளம் கொடுக்க முடியுமா என்று ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. குறிப்பாக, குழித்துறை நகராட்சியைப் பொறுத்தவரையிலும், அந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லை. சம்பளம் பற்றாக்குறை என்றோ, சம்பளம் கொடுப்பதற்கு வசதி இல்லாத ஒரு நகராட்சியோ அல்ல. அந்த வகையிலே செய்வதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதேபோல் என்.எம்.ஆர். பிரச்சினை. நகராட்சிக்குச் சொந்தமான சாலைகள் நிறைய இருக்கின்றன. அந்தச் சாலைகளைப் பழுதுபார்ப்பதற்கு நமக்கு என்.எம். ஆர். வேண்டும். அந்த என்.எம். ஆர். இல்லாத சூழ்நிலை இப்போது இருக்கிறது. அதற்கு அனுமதி தரவேண்டும்.

அடுத்தபடியாக வரி விதிப்பு என்று வருகின்றபோது, என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், இதிலே 3 வகை இருக்கின்றது. லட்சக்கணக்கான அளவில் பணத்தைச் செலவழித்து, அதை ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு வாடகைக்கு விட்டிருப்பவர்களுக்கும்

சாதாரணமாக ஒரு குடிசை அல்லது நடுத்தரப் பகுதி மக்களுடைய வீட்டிற்கும் ஒரே இலக்கான வரி விதிப்புக் கொள்கை என்பது சரியாக இருக்காது. இதிலே கொஞ்சம் மாற்றம் வேண்டும்.

அதேபோல் நகரத்திலே உள்ளே இருக்கின்ற - இந்த ஆண்டைப் பார்க்கின்றபோது - மொத்தத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள நிலத்தினுடைய விலை என்பது 30 சதவீதம் குறைந்து போய் இருக்கிறது.

அதில் இரண்டு முக்கியக் காரணங்கள். அந்த மாவட்டத்தினுடைய மிகப் பெரிய வருமானத்தைத் தருகின்ற ரப்பர், அதனுடைய விலைச் சரிவு, தேங்காய், அதனுடைய விலைச் சரிவு, இதன் காரணமாக விலைவாசி அந்த அளவில் சரிந்ததன் காரணமாக நிலத்தினுடைய விலை-மொத்த விலையில் 35 சதவீதம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைவு ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் அதிகப்படியான இந்த வரி விதிப்புக் கொள்கை வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகள் தொடர்பான திருத்தச் சட்டமுன்வடிவைப் பற்றி என்னுடைய கருத்துரையை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

கடந்த 17 ஆண்டுக் காலமாக வரி விதிக்க இயலாமல் இருந்த ஒரு சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்த முன்வடிவானது அமலாக்கப்படுவதாக அறிகிறோம். இதிலே பழைய வரி மதிப்பீடு செய்கின்ற அதிகாரிகளுக்கு இருந்த உரிமையை மாற்றி, இந்தக் கட்டிடங்களுக்கான தகுதியை, தன்மையை, அது இருக்கின்ற இடத்தைப் பொறுத்து, புதியதாக வரியை நிர்ணயம் செய்யக் கூடிய இந்தச் சட்டத் திருத்த முன்வடிவை பொதுவாக வரவேற்கின்ற அதே நேரத்திலே, இதிலே உள்ள சில சங்கடங்களை எதிர்காலத்திலே நீக்கி, நகராட்சி, மாநகராட்சிகளுக்கு வருவாயைப் பெருக்கினால்தான் அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தர இயலும் என்ற காரணத்தினாலே, இதனை நான் உங்கள் முன்னால் உங்கள் கவனத்திற்கு முன்வைக்க விரும்புகிறேன்.



1978-லே அமைந்திருந்த அரசானது நாங்கள் வழிகாட்டி நெறிமுறைகளைத் தருகின்ற வரையிலே நீங்கள் வரி விதிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தியதனுடைய விளைவாக சென்னை மாநகராட்சியிலே பல முறைகளிலே வரி விதிக்க இயலாமல் வருமானமானது மிக மிகக் குறைந்து கொண்டிருந்த ஒரு சூழ்நிலை இருந்திருக்கிறது. ஆகவே இன்றைக்கு இந்த முறையை நாம் அமல்படுத்துகிறபோது இதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன். ஏற்கெனவே இந்த முறையானது அதாவது கட்டிடங்களுடைய தன்மை, இடம் இவற்றையெல்லாம் வைத்து மதிப்பீடு செய்தல் வேண்டுமென்ற இதே முறையை ஐதராபாத்திலே முன்பு ஒரு முறை, அதாவது ஆந்திர மாநிலத்தினுடைய முன்னாள் தலைமை நீதிபதி திரு. இராமகிருஷ்னா அவர்களுடைய அந்த ஒரு முறையைத்தான் ஐதராபாத் மாநகராட்சியிலே அன்றைக்குக் கடைப்பிடித்தார்கள். அதே முறைதான் இப்போது இங்கேயும் வந்து அந்த முறையில், அதாவது மதிப்பீடு செய்து வரி விதிக்கின்ற முறையை அமல்படுத்த இருப்பதாக அறிகிறேன். இதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், இதிலே இந்த முறையை நாம் அமல்படுத்துகிறபோது வசதி படைத்தவர்கள் - தியேட்டர் முதலாளிகள், நட்சத்திர ஹோட்டல் வைத்திருப்பவர்கள், ஆக இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இப்போது என்ன செய்வார்கள் என்றால், அந்த மதிப்பீடு செய்கிறபோது தங்களுடைய வரிச் சுமை அதிகமாகிறது என்ற அடிப்படையிலே சுலபமாக, அவர்களிடம் பண வசதி இருக்கிற காரணத்தினாலே நீதிமன்றத்திற்குச் செல்ல வாய்ப்புகள் இருக்கின்றன.

அதேபோல இன்றைக்கு மாநகராட்சி போன்ற இடங்களிலே எல்லா பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான வரி விதிப்பு முறைகள் வருமேயானால், அதிலேயும் ஒரு சங்கடம் இருக்கிறது. ஏனென்றால் அரசினுடைய நிதியுதவி பெற்று நடைபெறுகின்ற பள்ளிகளும் இருக்கின்றன. அதேபோல தனியாரிடத்திலேயிருந்து நன்கொடை பெற்று நடைபெறுகின்ற பள்ளிகளும் இருக்கின்றன. ஆக இரண்டிற்கும் ஒரே மாதிரியான வரிகள் விதிக்கப்படுகின்ற சூழ்நிலைகள் எல்லாம் இருந்தால், அது அந்த அரசு நிதியுதவி பெறுகின்ற பள்ளிகளுக்கு சங்கடமாக இருக்குமென்ற காரணத்தினாலே அவற்றையெல்லாம் கவனத்திலே கொண்டு எச்சரிக்கையாக வரி விதிப்பு முறைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அந்த வரி விதிக்கின்ற அதிகாரிகளுக்கு இருந்த அந்த அதிகாரத்தை எடுத்ததை நாங்கள் வரவேற்கிறோம். அந்த நேரத்திலே இன்றைக்கு இப்படி வரி விதிப்பில் புதிய முறையைப் புகுத்துவதன் மூலமாக ஓரேயடியாக 3 மடங்கு, 4 மடங்கு வரிகள் அதிகரிப்பதற்கும் இதிலே ஒரு வாய்ப்பு இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், சில நேரங்களில் பழைய கட்டிடங்களுக்கு வரி விதிக்கிறபோது. இதிலே 20 ஆண்டுகாலம் வரையிலே கழிவு செய்கின்ற தன்மை இல்லை. 20 ஆண்டிலேயிருந்து 40 ஆண்டுகள் வரையிலே 10 சதவீதக் கழிவு. 40 ஆண்டுகளுக்கு மேலே உள்ள கட்டிடங்களுக்கு 15 சதவீதக் கழிவு என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தால் நிச்சயமாக அந்தப் பழைய கட்டடங்கள் வருவாய் இல்லாமல் இருக்கும். சில நேரங்களிலே அந்தக் கட்டிடத்தினுடைய உரிமையாளரேகூட குடியிருப்பார். அப்படியெல்லாம் இருக்கிறபோது வருமானம் இல்லாதபோது வரிச் சுமை அதிகமாக இருந்தால் அவர்கள் எல்லாம் இன்று சிரமப்பட ஒரு வாய்ப்பாக இருக்குமென்ற காரணத்தினால், அவற்றையெல்லாம் கருத்திலே கொள்ளவேண்டும். இன்னும்கூட வாடகையாளர்கள் இருக்கின்ற அந்த மாதிரியான கட்டிடத்திற்கும், கட்டிடத்தினுடைய சொந்தக்காரரே குடியிருக்கின்ற அந்த மாதிரியான கட்டிடத்திற்கும் இப்போதுள்ள இந்த வரி விதிப்பு முறைகளின் மூலமாக ஓரே மாதிரியான வரி விதிப்பு முறை இருக்குமேயானால், அதிலே வாடகையாளர்கள் இருப்பதைவிட சொந்தக்காரர்கள் இருப்பதனால் வரிச் சுமை கூடுகின்ற ஒரு வாய்ப்பும் இதிலே இருக்கிறது என்பதை நான் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

முன்பு ஒரு முறை சென்னை மாநகராட்சியிலே தனி அதிகாரி இருந்தபோது, கம்ப்யூட்டர் மூலமாக இந்த வரிவிதிப்பு முறைகளைச் செய்தார்கள். அப்படிச் செய்கிறபோது என்ன ஆயிற்று என்றால், பல வழக்குகள் நீதிமன்றங்களுக்கு முன்பு கொண்டு செல்லப்பட்டன. அப்படி நீதிமன்றத்திற்குப் போன அந்த வழக்குகள் இன்று வரையிலே தீர்க்க முடியாத சூழ்நிலையையும், வரி விதிக்க முடியாத ஒரு சங்கடத்தையும் நாம் சந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். இதற்காக மாநகராட்சியினுடைய ஸ்டேண்டிங் கவுன்சிலிலே இருக்கக் கூடிய வழக்கறிஞர்களை—சில ஆட்சி மாற்றங்கள் நடைபெறுகிறபோது, அந்த வழக்கறிஞர்களும் அடிக்கடி மாற்றப்படுகிறபோது, முன்னாலே இருந்த



அந்த வழக்கறிஞர்கள் அடுத்து வரக்கூடிய வழக்கறிஞர்களுக்குச் சரியாக அந்த ஆவணங்களைத் தாராமலேயே போய்விடுகிறார்கள். அப்படித் தராமல் போகிற காரணத்தினாலே, அந்த வழக்குகள் எல்லாம் அப்படியே நிலுவையில் இருக்கக்கூடிய சூழ்நிலை எல்லாம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இப்படிப்பட்ட வரிவிதிப்பிற்கான நிலுவையில் உள்ள வழக்குகளையெல்லாம் விசாரிக்கின்ற நேரத்திலே; நாம் திறமையான தனியார் வழக்கறிஞர்களைக்கூடப் பயன்படுத்தலாம். ஏனென்றால், இந்த வழக்கறிஞர்களுக்கும் பணம் கொடுத்துத்தான் நாம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அந்த வழக்குகள் முறையாக முடிவை அடைவதில்லை. அதற்காக அந்த வழக்கறிஞர்களைத் திறமை குறைவானவர்கள் என்று சொல்வதாகக் கருத வேண்டாம். ஆனால், மிகப் பெரிய ஹோட்டல்களின் உரிமையாளர்கள், மிகப் பெரிய கட்டிடத்திற்குச் சொந்தக்காரர்கள், தியேட்டர் உரிமையாளர்கள், இவர்கள் எல்லாம் தங்களுடைய பண வசதியின் காரணமாக பெரிய, பெரிய வழக்கறிஞர்களை வைத்து வாதாடுகிறபோது, நாம் அரசுத் தரப்பிலே அந்தக் கவுன்சிலின் மூலமாக அனுப்பப்படுகின்ற வழக்கறிஞர்களைக் கொண்டு ஈடுகொடுத்து, அந்த மாநகராட்சிக்கோ, நகராட்சிக்கோ வெற்றி பெற்றுத் தரக்கூடிய அளவிற்கு இயலாமல் போகின்ற சூழ்நிலை எல்லாம் இருக்கின்றது. அந்தக் காரணத்தினாலே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு ஓரேயடியாக 3 மடங்கு 4 மடங்கு வரிச்சுமை ஏற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். படிப்படியாக இந்த வரியை ஏற்றுவது சீராக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வரியை அதிகமாக ஆக்குகிற அதே நேரத்திலே நகராட்சிப் பகுதிகளிலே நீங்கள் வசதியையும் ஏற்படுத்த வேண்டுமாறு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, திண்டிவனம் போன்ற நகராட்சிப் பகுதிகளிலே பார்த்தால், சாலைகள் கொஞ்சம்கூட சரியாக இல்லை. பலமுறை கோரிக்கைகள் வைத்த பிறகும்கூட அவைகளில் சரியான கவனம் செலுத்தப்படவில்லை, சாலைகள் செப்பனிடப்படவும் இல்லை. இதிலே இன்னொரு கொடுமை என்ன என்று சொன்னால், அந்த நகராட்சியிலே பணி புரியக்கூடிய துப்புரவுத் தொழிலாளர்களுக்கு பல மாதங்களாகச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை எல்லாம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. அதேபோல், நகராட்சியிலே, அதையொட்டி சில புதிய குடியிருப்புகள் உருவாகிறபோது, அவற்றிற்குச் சரியாக குடிதண்ணீர் வசதியோ, மின்சார வசதியோ தர இயலாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆக, வரியை விதிக்கிற அதே நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அத்தகைய நகாராட்சிப் பகுதிகளில், அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமைக் கொடுத்து, இந்த வரியின் மூலமாகக் கிடைக்கின்ற வருவாயின் மூலமாகக் உடனடியாக அந்த அடிப்படை வசதியை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து, அங்கு இருக்கக்கூடிய துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ஊதியம் கிடைப்பதற்கு வழிவகை காண வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி சட்டமுன்வடிவிலே வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எனது ஒரு சில கருத்துக்களை மட்டும் கூறி விடைபெற ஆசைப்படுகிறேன். எங்களது சிதம்பரம் நகராட்சியில் இருக்கக்கூடிய கழிவு நீரெல்லாம் வெளியேறும்போது, கன்சர்வாய்கள் என்று வாய்க்காலில் கலக்கிறது. அந்தக் கன்சர்வாய்களைப் பயன்படுத்தி குடிநீருக்காகவும், ஆடுமாடுகள் குடிப்பதற்குப் பயன்படுத்தும்போதும், அந்த ஆற்று நீர் படு மோசமானதாகவும், விஷத் தன்மைக் கொண்டதாகவும் மாறுகின்ற காரணத்தினால், இந்த நகராட்சியிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீரை சுத்திகரித்து வெளியேற்ற வேண்டுமென்ற இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு எனது தொகுதியான பரங்கிப்பேட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியிலே வரிவிதிப்பு என்று சொல்லும்போது 4 மடங்கு, 5 மடங்கு சிலருக்கு 10 மடங்கு என்று கூட வரி விதிப்பு செய்யக் கூடிய சூழ்நிலையில் ஒரு சீரான நிர்ணயமே இல்லாத வகையிலே வரிவசூல் செய்யப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அதனால் அந்தப் பகுதி மக்களிடத்திலே பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இவையெல்லாம் ஒரே சீரான வரிவிதிப்பதாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது



நகராட்சிக்குத் தேவையான பொருட்களையெல்லாம். மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வகையிலே தேவைப்படும் பொருட்களையெல்லாம் வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அனுமதி பெற்று, அவருடைய பரிந்துரையின் அடிப்படையில் வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் ஓரிரு வேலைகள் செய்வதற்கு மிகவும் காலதாமதம் ஆகின்றது.

*பிற்பகல் 12-50*

எனவே, ஒவ்வொரு நகராட்சியிலும் இப்போது அப்பீல் கமிட்டி என்று இருப்பதைப்போல் ஒரு பர்சேஸிங் கமிட்டி அமைத்து அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கூடிய உறுப்பினர்களே அந்த நகராட்சிக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு அனுமதிக்கும் வகையிலே சட்டம் இயற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிதம்பரம் நகராட்சியில் சாலைகளில் எல்லாம் மணல் மேடு அதாவது ஆற்று மணல் போல் குவிந்து கிடக்கின்றது. இதெயெல்லாம் அகற்றுவதற்கு அங்கே தொழிலாளர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். லாரி வசதி போதவில்லை என்று சொல்கின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையால் சாலையில் சைக்கிளில் செல்லக்கூடியவர்கள் எல்லாம் வழுக்கி விழுந்து அடிபடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்த மணல்களை அகற்றுவதற்கு நமது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பணியாளர்களையும் நியமிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி,

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சியினுடைய சொத்து வரிக்கான மதிப்பீடு அடிப்படையில் அறிவிக்கப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வ்ந்திருக்கிற 4 வரி முறை அமைப்பில் ஒன்று மட்டும்தான் அநேகமாக சாதகமாக இருக்கிறது. பொதுவாக நுகர்வோர்களுக்குப் பாதகம் இல்லாத வகையிலே ஒரே ஒரு பாரா மட்டும்தான் இதில் அமைந்து இருக்கிறது. மற்ற அனைத்தும் முழுமையாக மிகப்பெரிய பாதகத்தை உள்ளடக்கி அமைந்துள்ளது.

1994-ஆம் ஆண்டு இதுபோன்ற ஒரு சட்டத்தை இந்த மன்றம் திருத்தியமைத்தது. குறிப்பாக ஒருவர் 30,000 ரூபாய் வரி செலுத்த வேண்டுமென்று சொன்னால் அவர்கள் 1 இலட்சத்து 20,000 கட்ட வேண்டும் என்று சொல்லி ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு சென்னை மாநகரத்தில்கூட பல கடைகளை வாடகைக்கு விடக்கூடியவர்கள், இடத்துச் சொந்தக்காரர்கள் தங்களுடைய வாடகையைவிட வரி அதிகமாக இருக்கிற காரணத்தால் பல பேருக்கு லட்சக்கணக்கான ரூபாய்கள் நேரடியாகக் கட்ட முடியாமல் இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இன்னும் மாநகராட்சியினுடைய நிர்வாகம் நேரடியாக அந்தக் கட்டிடத்தினுடைய சொந்த உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்க முடியாமல் வாடகைக்கு இருப்பவர்களிடத்திலேயிருந்தே வசூலிக்கக்கூடிய ஒரு நிலை இன்றைய தினத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அந்த வாடகைதாரர்களிடம் சென்று அதற்குப் பின்னால் 6 மாதத்திற்கு அந்தக் கட்டிடத்திற்கான சொத்து வரியை அவர்களிடத்திலே வசூலிக்க முடியாமல் அந்தக் கட்டிடத்தினுடைய உரிமையாளர்களிடத்திலே வசூலிக்கக்கூடிய நிலைமை இருந்தும் வசூலிக்க முடியாததால் அந்தக் கட்டிடத்தினுடைய உரிமையாளருக்கு 50 இலட்சம், 60 இலட்சம் என்று சென்னை மாநகராட்சியிலே பாக்கி இருக்கிறது. அதை எப்படி வசூல் செய்யப் போகிறோம்?

வாடகையை முற்றிலும் வசூல் செய்த பின்னாலும் அவர் மேலே இருக்கிற அந்தப் பாக்கி வசூல் செய்ய முடியாத அளவுக்குக் கட்டிடத்தை விற்பனை செய்தால்தான் முடியும் என்ற அளவுக்கு இன்றையதினத்திலே நிலைமைகள் நகராட்சி போன்ற இடங்களில் இருக்கிறது.

அதைப்போல இன்னொன்றும் கூறப்பட்டிருக்கிறது. காலியான இடங்களுக்கு இன்றையதினத்திலே கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் என்று இருக்கிறது. காலியாக இருக்கக்கூடிய இடத்திலே எந்தவித வருமானமும் கிடையாது. ஏற்கெனவே ரெவின்யூ கிஸ்தி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தனி வரி கட்ட வேண்டியிருக்கிறது. இதற்குப் பின்னால் நகராட்சிகளுக்கோ அல்லது பேரூராட்சிகளுக்கோ கட்டுவது என்றால் எப்படிக் கட்ட முடியும்.? இதிலே ஏற்கெனவே பஞ்சாயத்து ராஜ்யத்தின் மூலமாக பஞ்சாயத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்ற பிரிதிநிதிகளைக் கொண்டிருக்கிற குழு அமைக்கப் பட்டிருக்கிறது. நகராட்சியிலே, மாநகராட்சியிலே. பேரூராட்சியிலே



அமைக்கப்பட்டிருக்கிறது. ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடியவற்றிற்கு பஞ்சாயத்து வரியை நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆக ஒட்டுமொத்தமாக அங்கே இருக்கக்கூடிய வருமான நிலைக்கு வியாபார நோக்கத்தோடு இருக்கக்கூடிய அளவுக்கு எங்கே சாத்தியமோ அங்கே அமைத்தால்தான் அந்தந்தப் பேரூராட்சிக்கு, நகராட்சிக்கு, சாதகமாக இருக்கும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்குத் தெரியாததை நான் சொல்லவில்லை. சில வருமானம் வரக்கூடிய நகராட்சிகள் இருக்கின்றன, வருமானமே இல்லாத அளவுக்கு சில நகராட்சிகளும், பேரூராட்சிகளும் இருக்கின்றன. ஆக ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு பூராவும் ஒரு வரியைச் சீராக நாம் கொண்டு வந்தோம் என்று சொன்னால் அங்கேயிருந்து எப்படி வரியைச் வசூலிக்க முடியும் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும், மறுபரிசிலனை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்தக் குழு அமைக்கப்பட்டதற்கான அதிகாரம் என்ன? அவர்கள் என்ன நிர்ணயிக்கப்போகிறார்கள்? ஏன் அந்தக் குழு? இதுபோன்ற அந்தக் குழுவுக்கு மாறாக இந்தச் சட்டமுன்வடிவு வருகிறது என்று கூற விரும்புகிறேன்,

பிற்பகல் 12-55

இதிலே இன்னும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். சில வயதான கட்டிடங்கள் இருக்கின்றன. ஆனால் அதற்கு வரியை மட்டும் நிர்ணயிக்கிறோம் அந்தக் கட்டிடத்தினுடைய வயதை நிர்ணயித்து வரி குறைக்கப்படுகிறது. ஆனால் அந்தக் கட்டிடத்தை இடிப்பதற்கு அல்லது அதற்கு வயது ஆகிவிட்டது, இந்தக் கட்டிடம் இன்னும் இருந்தால் ஆபத்து என்று சொல்வதற்கு இந்தச் சட்டத்திலே இடம் இல்லை. அதில் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது இல்லை. ஆகவே இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட சில நடைமுறைச் சிக்கல்களை நீக்கவேண்டும். ஒரு கட்டிடத்திற்கு என்ன வயது நிர்ணயிக்கிறோமோ அந்த வருடத்தில் அதை இடித்து புதியக் கட்டிடம் கட்டுவதற்கு கட்டாய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்களால் கொண்டு வந்த அந்த வரியைக் கட்ட முடியாது இருக்கிறார்கள். சென்னையில் பல இடங்களில் அதற்கு நான் உதாரணம் சொல்ல முடியும்.

[திரு. ஜி. பழனிசாமி] [1997 அக்டோபர் 18

வாடகைதாரர்களிடமிருந்து உரிமையாளர்கள் வரியை வசூல் செய்து தன்னுடைய கையிலிருந்து நகராட்சிக்கும், மாநகராட்சிக்கும் கட்ட முடியாமல் வைத்து இருக்கக்கூடிய அந்த வரி பாக்கியைத் தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். 5 நிமிடத்திலே பேசி முடிக்க வேண்டும். அதற்குப் பிறகும் பேசினால் அது அவைக் குறிப்பில் ஏறாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே நான் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஏற்கெனவே கொடுக்கக்கூடிய சொத்து வரிக்கு உருப்படியாக, எந்தவிதமான வசதியையும் நகராட்சியில் இருக்கக்கூடிய மக்கள் பெற முடியவில்லை. குப்பைகளை அள்ள மறுக்கிறார்கள். தூய்மையான நீரைக் கொடுக்கவில்லை. இப்போது எல்லாம் வேலூர், சத்துவாச்சாரி போன்ற பகுதிகளுக்கு நாம் அங்கே கொடுக்கக் கூடிய குடிநீர், அது குடிப்பதற்கே லாயக்கற்ற குடிநீர் என்று சர்ட்டிபிகேட்டே வந்து விட்டது. அப்படி லாயக்கு இல்லாத ஒரு குடிநீரைக் கொடுத்துவிட்டு, குப்பைகளை எல்லாம் அள்ளாமல், இப்படியெல்லாம் நாம் வரியை மட்டும் ஏற்றிக்கொண்டே போனால் இன்றைக்கு நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர் குடிக்க லாயக்கற்ற தண்ணீர் என்று எப்போது ரிப்போர்ட் வந்தது? அதை இந்த அரசின் கவனத்திற்கு தாங்கள் கொண்டு வந்திருக்கிறீர்களா? தாங்கள் அந்த விவரங்களைச் சொன்னால் நன்றாக இருக்கும். ஏதோ பொத்தாம் பொதுவிலே தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லை என்று வரி விதிக்கின்றபோது சொன்னால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே நம்முடைய இந்த துறையின் செகரட்டரிக்கும் தெரியும், வாட்டர் போர்டு எம்.டி.க்கும் தெரியும். எல்லோருக்கும் கொடுத்திருக்கிறோம். அதாவது 'அன்பிட் பார் டிரிங்கிங் வாட்டர்' என்று கொடுத்து இருக்கிறோம்.



1997 அக்டோபர் 18 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்ட கேள்விக்கு ஒழுங்காகப் பதில் சொல்லுங்கள். எந்தத் தேதியில் வந்திருக்கிறது? அது வந்த பிறகு, நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக முறையாகச் செயல்படவேண்டும் என்றால் உடனே அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கவேண்டும். இல்லையென்றால் இப்போது பத்திரிக்கை விளம்பரத்திற்காக இங்கே வந்து பேசுகிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனு கொடுத்து 9 மாதம்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எது எதற்கோ கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் தண்ணீர் என்பது மிக முக்கியமான பிரச்சினை, குடிநீர் நல்ல தண்ணீர் இல்லை என்றால் அதைப்பற்றி இந்த அவையிலேயே தெரிவித்து இருக்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். நீங்கள்தான் என்னை அனுமதிக்கவில்லை. இல்லையென்று சொன்னால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து ஒத்திவைக்கவேண்டுமென்று பேசியிருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை என்றால் அதைப் பெரிய குற்றமாக எடுத்துச் சொல்கிறீர்கள். நீங்கள் 500 காகிதங்களைக் கொண்டு வந்து கொடுக்கிறீர்கள். எல்லாவற்றையும் அனுமதித்தால் வேலூர் ஒன்றுதான் தமிழ்நாடு என்று ஆகிவிடும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விதித்து இருக்கிற அந்தச் சொத்து வரிக்கே நாம் முழுமையாக மக்களுக்கு இன்னும் சேவையைக் கொண்டுபோய் சேர்க்கவில்லை என்ற காரணத்தால்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு மறந்து விடும், அதற்காக நான் அடிக்கடி குறுக்கிடுகிறேன். அதாவது அப்படியென்றால் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டுத்தான் வரியைப் போடவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா?

[1997 அக்டோபர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைச் சொல்லுகிறேன். இவர் கொஞ்சம் பழக்கப்பட்ட எம்.எல்.ஏ.வாக ஆகிவிட்டார். நான் ஐந்து நிமிடங்களில் முடிக்கவேண்டும் என்று சொன்னதற்காக இப்படி வம்பை வளர்த்து நேரத்தை வீணாக்கி, இதிலே இடையூறு இருந்தது என்று சொல்லி, கூட கொஞ்ச நேரம் பேசுவதற்கு முயற்சி செய்கிறார். அதற்கு நீங்கள் இடம் கொடுக்காதீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது எல்லாம் ஏற்கெனவே பேரூராட்சிகள், மற்றப் பகுதிகளில் இருக்கக்கூடிய வரியைச் செலுத்த முடியாமல் மக்கள் நிறைய பேர் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். 3 வருடங்கள் ஆகியும் நீங்கள் இன்னும் அதைக் கலெக்ட் செய்யாமல் அதுவே டைம் பார்-ஆகப் போய் கொண்டிருக்கிறது. அதையே நீங்கள் உருப்படியாக வசூல் செய்யவில்லை. அதையே வசூல் செய்யாத கட்டத்தில் இன்னும் அதிகமாக வரியைப் போட்டு நீங்கள் மக்களுடைய தலையில் பளுவைப் போடுவது என்பது கொஞ்சம்கூட ஏற்புடையது அல்ல என்பதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 1-00

இதைத் தயவுசெய்து செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி வையுங்கள். இப்பொழுது அவசரப்பட்டு, தீர்மானம் இயற்றி உடனே சட்டத்தைக் கொண்டு வந்து விடாதீர்கள். இதில்கூட நீங்கள் அறிவியல் முறைப்படி சில வரி விதிப்புகளைச் சொல்கிறீர்கள், அதாவது ஏற்கெனவே அந்தக் கட்டிடத்தினுடைய வயது, லொக்கேஷன், பரப்பளவு என்றெல்லாம் போட்டு. ஏற்கெனவே இருக்கக்கூடிய விதிமுறையே போதுமானது. அதனுடைய அடிப்படையிலே இருக்கக்கூடிய வருவாயை வைத்துக்கொண்டே நீங்கள் நிறையப் பண்ணலாம். இன்னும் சொல்லப்போனால், பேரூராட்சிகளிலே இருக்கக்கூடிய வாட்டர் பம்ப் ஆப்பரேட்டர்ஸ் போன்றவர்களுக்கெல்லாம், கொடுத்த சம்பளத்தைவிட இப்பொழுது குறைத்துவிட்டிருக்கிறீர்கள். அப்படியெல்லாம் போய்க்கொண்டிருக்கின்றது நிலைமை. இவ்வளவு பணமெல்லாம் வர வேண்டும் என்று நாம் ஆசைப்பட்டாலும்கூட அதைச் செயல்படுத்துவது சிரமம். ஆகவே,.....



1997 அக்டோபர் 18 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எம்.எல்.ஏ.க்களுக்கு அதிகம் கொடுக்க வேண்டுமென்று நீங்கள்தானே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்களும் குறைத்து வாங்க வேண்டியதுதானே?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் அவர்களுக்கே அதிகமாகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பொறுத்தவரையில் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்குச் சம்பளமே வேண்டாம். படிகளை மட்டும் நீங்கள் மிஜோராமிலே கொடுப்பதைப்போல 14,000 ரூபாய் கொடுங்கள் என்றுதான் கேட்டேன். எங்களுக்குச் சம்பளமே வேண்டாம்.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த அறிவியல் முறைப்படி நீங்கள் சில விதிமுறைகளை வைத்து வரியைக் கூட்டுவது சரியல்ல. ஏற்கெனவே பஸ் கட்டணம் உயர்ந்து விட்டது. எல்லாமே உயர்ந்து கொண்டிருக்கும்போது இதுவும் போய்க் கொண்டிருந்தால்— இப்பொழுதுதான் எலெக்ஷனிலே வந்திருக்கிறார்கள்; 6, 7 மாதங்கள்தான் ஆகியிருக்கின்றன. அந்த மக்கள் பிரதிநிதிகளெல்லாம்—அந்தத் தலைவர், அந்தக் கவுன்சிலர் நாளைக்கு ரோட்டிலே நடமாட முடியாது. நீங்கள் வரியை அதிகமாகப் போட்டு விடாதீர்கள். செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி நிதானமாக ஆலோசனை செய்து, ஏற்கெனவே நம் சட்டமன்றப் பேரவையின்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், உறுப்பினர்களே என்னிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். நேரிலும் பேசியிருக்கிறார்கள். இந்த வரியை வைத்துக்கொண்டு ஒன்றுமே செய்ய முடியாது, இதற்கு ஏதாவது பரிகாரம் தேடிக் கொடுங்கள் என்று கேட்டதற்குப் பிறகுதான் இந்தச் சட்டமே கொண்டு வருகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களிடம், ஏற்கெனவே சதுர அடிக் கணக்கெல்லாம் போட்டு வரியைப் போடுவீர்கள் என்று சொன்னால் நாங்கள் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி மக்கள் மனு கொடுக்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது? பேரூராட்சி, சம்பளத்தையே கொடுக்க முடியாத நிலை சில இடங்களிலே இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் தயவுசெய்து இதைச் செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். அவசரம் இல்லை. ஏற்கெனவே ஆக்ட் 42/1997-இன் படியே நீங்கள் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறீர்கள். இதையும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, பிறகு நிதானமாக முடிவெடுங்கள். அவசரப்பட வேண்டாம். அதைத்தான் நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இதை தயவுசெய்து நீங்கள் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி நிதானமாக ஆய்வு செய்து பிறகு வேண்டுமானால் என்ன செய்யலாம் என்று பண்ணுங்கள். இதிலேகூட ஏற்கெனவே சம்பளமே கொடுக்க முடியாத நிலையிலே இதற்கு ஒரு Tribunal போடப் போகிறீர்கள். அந்த ஜட்ஜுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கலாம் என்று சொல்கிறீர்கள். இதெல்லாம் நடக்காத காரியம். அந்த ஜட்ஜ் எல்லாம் உங்களிடத்திலே சம்பளம் வாங்க மாட்டார்கள். ஏற்கெனவே இந்தத் தொழிலாளர்கள் எல்லாம் சம்பளம் சம்பந்தமாகச் சாலை மறியல் பண்ணிய இடமெல்லாம் இருக்கிறது. இப்பொழுது இந்த ஜட்ஜ் எல்லாம் நாளைக்கு வந்து சம்பளம் வரவில்லை, அது வரவில்லை என்று சொல்லி அவஸ்தைப்படக் கூடாது. ஏற்கெனவே இருக்கக்கூடிய முறையே போதும். ஆகவே, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த விதிகளையெல்லாம் போட்டு இன்னும் அதிகமான வரியைக் கூட்டி விடாதீர்கள் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் எங்களுடைய வேலூர் நகராட்சியைப் பொறுத்த அளவில் (மணியடிக்கப்பெற்றது) இன்னும் 5 நிமிடங்கள் ஆகவில்லை என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் 7 உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு பாலசுப்பிரமணியன், வேலாயுதன், மணி, தீரன், அப்துல்நாசர், பழனிசாமி, ஞானசேகரன் ஆகியோர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முதலில் இந்தச் சட்டத்தைப்பற்றி ஒன்றைச் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன். வரியை உயர்த்துவதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை. இந்தச் சட்டத்திருத்தத்தினுடைய நோக்கமே காரண காரியங்களிலே விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது.





ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கிற சொத்து வரி என்ற பெயரிலே வசூலித்துக் கொண்டிருந்த வீட்டு வரி தவறான முறைகளில் அதைக் கையாண்டு அதிகாரிகள் பலயிடங்களில் செய்திருப்பதையும் அந்த வரி விதிப்பின் அடிப்படையிலே நீதிமன்றங்களுக்குச் சென்று, நீதிபதிகள் அறிவுறுத்திய அறிவுரையின்படியும், இது ஒரு செல்லுபடியான சட்டமாக இருக்கப்பட வேண்டும் என்பதும். குறையற்ற சட்டமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பொதுவாக வரியை உயர்த்துவதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. வரியை எந்த அடிப்படையில் விதிப்பது என்பதுதான் சட்டத்தினுடைய நோக்கம்.

ஏற்கெனவே சொத்து வரி என்று சொல்லிவிட்டு, வீட்டு வாடகையை வைத்து அதன் பேரில் வரி விதிக்கப்பட்டு வந்தது. அவரவர்கள் இஷ்டத்திற்கு அந்த வரியை வீட்டு வாடகையைக் கணக்கிட்டு எழுதி டிமாண்ட் ரிஜிஸ்தரை வைத்துக்கொண்டு வரி வசூலித்தார்கள். சிலபேர் வேண்டாதவர்களுக்கு, ஞானசேகரன் சொன்னதைப் போல அதிகமாக விதித்து விட்டு, பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல அதிகமாக விதித்து விட்டு அவர்கள் கொஞ்சம் பணத்தைச் செலவழித்து நீதிமன்றத்திற்குப் போய் அந்த வரியை இதுவரையில் கட்டாமலும் இருக்கிறார்கள். அவர்கள் கட்டாமல் இருக்கிறார்கள் என்பதற்காகக் காத்திருந்து வரியே விதிக்காமல் இருப்பது தவறு.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரி விதிப்பில் கூடுமானவரையில் பேரூராட்சியிலிருந்து இந்த வரி பொருந்தும். பேரூராட்சி, நகராட்சி., மாநகராட்சி அத்தனைக்கும் பொருந்தும். காரணம், நகர்பாலிகா சட்டம் எது உடன்பாடாகி இருக்கிறதோ அவைகளுக்குப் பொருந்தும்.

ஆனால் இப்பொழுது வரியை விதிக்கிறபொழுது. அவர்களுக்கு என்ன சொத்து இருக்கிறது என்பதை அவர்களே நிர்ணயித்துக் கொண்டு, அவர்களே தன்னுடைய சொத்தின் மதிப்பை அறிவிப்பார்களேயானால், அதன் அடிப்படையில் வரி விதிக்கலாம் என்று இந்தச் சட்டத்திலேயே இருக்கிறது. இதுவரை எந்தச் சட்டத்திலும் இல்லை. ஆனால், அதிலே தவறு நேருமானால். தவறாது தகவலைத் தந்தால் அந்தத் தவறான தகவலுக்காக, அதற்கு மேல் அபராதம் விதிக்கின்ற வகையிலே இந்தச் சட்டத்தில் இடம் தந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட நிலை வருகிறபோது, வாடகை அடிப்படையிலே இதை விதிக்கலாமே என்று சொன்னால் வாடகையை யார் நிர்ணயிப்பது? நீதிமன்றத்திலே அதைத்தான் கேட்கிறார்கள். வாடகை எந்த அடிப்படையில் நிர்ணயித்தீர்கள் என்று சொல்கிறபோது, வாடகைக் கட்டுப்பாடுச் சட்டம் ஒன்று இருக்கிறது. அதன் அடிப்படையிலே நிர்ணயிக்கக் கூடாதா என்று கேட்கிறார்கள். திருத்தத்திலேகூட திரு. வெங்கிடு குறிப்பிட்டிருக்கிறார்.

பிற்பகல் 1-05

நான் குறிப்பிட்டுச் சொல்வது, அந்த வாடகை கட்டுப்பாட்டுச் சட்டம் எப்படியிருக்கிறது? நன்றாக யோசித்துப் பாருங்கள். ஆயிரம் ரூபாய்க்குப் பெருமானமாக உள்ள ஒரு கட்டிடம் அதற்கு முன்னால் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திற்குள் வந்திருந்தால், அது 50 ரூபாய் அல்லது 100 ரூபாயாக இருக்கிறது. அது உயர்த்தப்படவேயில்லை. ஆனால், அதுபோல ஒரு வீட்டிற்கு, அதுபோல 10 மடங்கு, 20 மடங்கு அதிகமான வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாம் அந்தச் சட்டத்தின்படி வரி விதிப்பது என்று சொன்னால் எப்படி வரி விதிக்க முடியும்? எப்படி உரிய பங்கு அந்த நிறுவனத்திற்குக் கிடைக்கும்? அதனாலேதான், இந்தப் பகுதியில் இந்த நிலத்தின் விலை இவ்வளவு, இதில் கட்டப்பட்டிருக்கிற வீடு இந்தத் தன்மை வாய்ந்தது, இது கட்டப்பட்டு எத்தனை ஆண்டுக்காலம் ஆகிறது, இது பழுதோடு இருக்கிறது, அல்லது பழுது இல்லாமல் இருக்கிறது, வயது மூத்துவிட்டது, வயது மூக்கவில்லை என்ற விவரங்கள் எல்லாம் சேகரித்து அதற்குத் தகுந்தவாறு வரி விதிப்புச் செய்ய வேண்டும் என்றுதான் வைத்திருக்கிறோம். இன்னொன்றுகூட சொன்னார்கள். இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொன்னார்கள்.

இந்தச் சட்டத்தை ஏற்கெனவே கொண்டு வந்தபோது, இதே மாமன்றத்தில் நகராட்சிக்குப் பொருந்தத்தக்க வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவா வேண்டும். அதற்கான சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்றபோது, நானே முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பின்பேரில், அவர்களுடைய ஆலோசனையின்பேரில், இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அந்த அடிப்படையில் செலக்ட் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது. அதிலே இந்தத் திருத்தம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அதிலே உறுப்பினராக இருக்கிறார். அவரைக்கூட இப்போது நான் கேட்டேன்.



கொள்கை அளவில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தச் சட்டம் இன்னும் வராமலே இருக்கின்ற காரணத்தினால், அதற்கு முன்பே இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். 1-10-1998-க்குள் வரி விதிப்பு முடிந்துவிட வேண்டும். வா இருக்கின்ற சட்டம் அதற்குள் வராது, வர முடியாது. அதற்குள் அந்தச் சட்டம் வர முடியாது என்ற காரணத்தினால், வரி விதிப்பை விதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, ஓராண்டுக் காலம் விட்டுவிட வேண்டாம் என்பதற்காகவும், இதற்கு முன்பே வரி விதிக்க முடியாமல் பல நகராட்சிகள் இருக்கின்றன என்ற காரணத்தினாலும் இதைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, செலக்ட் கமிட்டிக்கு விடக்கூடாது என்பது நோக்கமல்ல. இன்னும்கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வரி இவ்வளவுதான் வாங்க வேண்டுமென்று நாங்கள் விதிக்கப்போவதில்லை. (குறுக்கீடு) நீங்கள் சொல்லலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், நீங்கள் ஏன் உறுப்பினரை அனுமதிக்கிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிறவரையில் இன்று இருக்கக்கூடிய பழைய வரி முறையையே தொடரலாமே, அதற்காகப் புதியதாக கொண்டுவர வேண்டியதில்லை என்று என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இன்னும் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்த வரி விதிப்பு என்பது, வரியை உயர்த்துவதற்காக என்று தவறாக கருதக் கூடாது. வரியை வசூலிப்பதற்கு முறையான வரியை விதிக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைச் செலக்ட் கமிட்டியிலே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்; இந்த முறையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவேதான் இந்தத் துறை இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இதற்கு மேல் போகாதீர்கள். இதற்குக் குறைவாக போடாதீர்கள் என்றுதான் அரசு சொல்லப்போகிறதே தவிர இந்த வரியை விதியுங்கள் என்று சொல்லப்போவதில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, I have given notice of an amendment. I had not been called for moving my amendment.

**Hon. Speaker:** If you do not withdraw your amendment, it will be put to vote.

**Thiru B. Venkatasamy:** Atleast it should be recorded.

**Hon. Speaker:** It will be coming later.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, அதோடுகூட, இந்த வரி விதிப்பில் எவ்வளவு பெரிய சங்கடங்கள் வந்திருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். எல்லா வசதிகளும் இல்லையென்று சொல்கிறவர், எப்படி அந்த வசதி வரும் என்று எதிர்பார்க்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே சங்கடப்படுகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. எவ்வளவுதான் அரசாங்கம் கொடுத்தாலும்கூட அங்கே இருக்கின்ற பணியை நிவர்த்தி செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆனால், இந்த வரியைப் போட்டு அதை முடித்துவிட முடியும் என்று நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. ஓரளவுக்கு வாய்ப்பு இருப்பதால், அவர்களாகவே விரும்பித் தருவதை ஏற்றுக்கொள்ளலாம். அந்த அளவுக்குத்தான் சட்டம் போடப் போகிறோம். அவர் சொல்வது சரிதான். அந்த மக்கள் பிரதிநிதிகள் சொல்வதும் சரிதான். நகராட்சி மன்றத்திற்கும், பேரூராட்சி மன்றத்திற்கும் அவர் கொடுத்திருக்கின்ற கணக்கு சரிதான் என்று ஏற்றுக்கொண்டு, இந்த வரியைப் போட்டால் அரசு அதிலே தலையிட முடியாது. அதிலே எந்தவிதமான சங்கடமும் யாருக்கும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

*பிற்பகல் 1-10*

இன்னும்கூட சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தவறாக, அதிகப்படியான வரியை விதித்துவிட்டு அவஸ்தைப்படுவதைவிட அவர்கள் செலுத்த வேண்டிய என்ற அளவிற்குக் குறைந்த வரியை விதித்து வசூலிக்க வேண்டும் என்ற நோக்கம்தான் இந்த அரசுக்கு இருக்கிறது. ஏற்கெனவே போடப்பட்ட வரிகள் அதிகப்படி என்று சொல்வதைக்கூட, அவர்களுடைய மனுக்களைப் பெற்றுக்கொண்டு, பரிசீலித்து. அவர்கள் விரும்புவதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுத்து, பழைய வரிகளை வசூலிக்கின்ற நடவடிக்கையில் நாம் ஈடுபடப்போகிறோம். அதுவும் இந்த அரசினுடைய கொள்கை.



இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார். அந்த அடிப்படையில் நாங்கள் பின்தொடர்வோம். இன்னும்கூட நான் குறிப்பிட்டுச் சொல்வது, நீதிமன்றம், விவசாய நிலங்கள், கல்வி நிறுவனங்கள், சாதாரண விவசாய நிலங்கள் ஆகிய இதற்கெல்லாம் வரி விதிக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். விவசாய நிலத்திற்கு நிச்சயமாக நாங்கள் வரி விதிக்க மாட்டோம். அதிலேயிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்களுக்குக்கூட, ஏற்கெனவே எப்படி இருந்ததோ அப்படித்தான் இருக்கப் போகிறது. அவற்றுக்கு வரி விதிக்கப் போவதில்லை. அந்த அச்சம் உங்களுக்குத் தேவையில்லை.

அதோடுகூட இன்னும் சொல்கிறேன். ஒரு ஏழை ஒரு நிலத்தை வைத்திருக்கிறான் என்று சாதாரணமாகப் பேசியிருக்கிறீர்கள். எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பேசுவது கூடாது. ஒரு நகரத்தில் பல இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள நிலத்தை சாதாரணமாகப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர் ஏழையாக இருக்க முடியுமா? . யோசித்துச் சொல்லுங்கள். பத்து இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள ஒரு நிலத்தை சாதாரண ஒரு ஏழை விற்காமலோ அல்லது அந்த நிலத்திலே வீடு கட்டாமலோ அல்லது வேறு வகையிலே உபயோகப்படுத்தாமலோ இருக்க முடியுமா? மிதமிஞ்சிப் போய், பணத்திற்குப் பதிலாக - நிலத்தின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது, அந்த ஏழை எப்போது தேவைப்பட்டாலும் அந்த நிலத்தை விற்றுக்கொள்ளலாம் என்ற நோக்கத்தில் - மிதமிஞ்சி இருப்பவர்கள்தான் காலி மனையை வைத்திருக்க முடியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கூற்று சரியல்ல. நானேகூட சென்னையிலே சாலிக்கிராமத்திலே ஒரு கிரவுண்டை வாங்கிப் போட்டிருக்கிறேன். என்னாலே வீடு கட்ட முடியவில்லை, அதனாலே காலியாக வைத்திருக்கிறேன். வருமானம் இல்லாமல், வரி போட்டீர்கள் என்றால், என்னால் எப்படிக் கட்ட முடியும்?

**மாண்புமிகு திரு. கோ.சி மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக நாங்கள் வரி விதிக்காமல் இருக்க முடியுமா? அதனுடைய விலை ஏறும் என்றுதான் வைத்திருப்பார்கள். அதுவும் தெரியும் எங்களுக்கு; விலை இறங்கிப்போய்விடும் என்று சொன்னால் விற்காமல் இருப்பார்களா?

[திரு. கோ.சி. மணி] [1997 அக்டோபர் 18

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் கொடுத்தால் கட்டத் தயாராக இருக்கிறேன். சில பேர் வீடு கட்ட வசதி இல்லாமல் இது போன்ற கிரவுண்டுகளை வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், மெதுவாகப் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆக வசதி இல்லாமல் அப்படி கிரவுண்டுகளை வைத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே நிலம் வாங்குபவர்கள், பணம் இல்லாமல், வசதி இல்லாமல் வாங்க மாட்டார்கள் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு வேறு பிரச்சினை இல்லையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரு. ஞானசேகரன் எழுந்திருக்கும்போதெல்லாம் நீங்கள் உட்காரக்கூடாது. 'Not yielding' என்று சொல்லிவிட்டு, பேசிக் கொண்டே இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி இனிமேல் கையாள்கிறேன். இதைப் பொறுத்தவரையில் எந்தச் சங்கடத்திற்கும் இந்தச் சட்டத்தில் துளிகூட இடமில்லை. நாங்கள் இதை உணர்ந்தேதான் கொண்டு வந்திருக்கிறோம். போடுகிற வரியைச் சம்பந்தப்பட்டவர்கள் கட்ட வேண்டும். அதைப் பெற்று, அந்த மன்றம் சரியாக நடக்க வேண்டும், அந்த நோக்கத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வேறு எந்த நோக்கத்தோடும் அல்ல. நாங்களும் அரசியல் நடத்துகிறோம், நாங்களும் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். மக்களுடைய அதிருப்தியை ஏற்றுக்கொண்டு அரசு நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் இல்லை. இதை மக்கள் விரும்புகிறார்கள், இதை அவர்கள் கொடுப்பார்கள், அவர்கள் கொடுக்கக்கூடிய அளவிற்கு இந்த வரி அமைய என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் அப்பொழுதில் சொன்னேன். கல்வி நிறுவனங்களுக்கு இந்த வரி போடவில்லை. விவசாய நிலங்களுக்கு இந்த வரி போடவில்லை.



1997 அக்டோபர் 18 ] [திரு. கோ.சி. மணி]

கோவில்களுக்கு இல்லை. அதெல்லாம் உண்டு. அதிலே எந்தவிதமான திருத்தமும் கிடையாது. பாக்கியெல்லாம் எப்போதும் போல இருக்கும். ஆனால் மற்றவர்களை ஏமாற்றவும், ஏமாறுபவர்களை ஏமாற்றிக்கொண்டே ஏமாற்றுபவர்களும் வாழ இடம் அளிக்கவில்லை. இந்தச் சட்டத்தினுடைய நோக்கமே வாடகை என்று வரும்போது, நீதிமன்றத்தில் சொல்வது வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின்படி போடுங்கள் என்று சொல்கிறார்கள். அது எப்படியிருக்கிறது? அதை ஒத்துக்கொள்கிறீர்களா? சரியான வாடகைதான் அந்தச் சட்டத்தின்படி வாங்குகிறார்களா? அதை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? நில விலை என்பது அதிகாரப்பூர்வமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கட்டடம் பார்க்கிறோம். அதிலே பலவிதமான பொருட்கள் அடங்கியிருக்கின்றன. விலையுயர்ந்தப் பொருட்கள் அடங்கியிருக்கின்றன. அதற்கு ஒரு விலைதான். சாதாரணமாக ஒரு கட்டடம் என்றால், அதற்கு ஒரு மதிப்புதான். அந்த மதிப்பைப் போடலாம்., அதைப் போட்டுத்தான் ஆகவேண்டும்.

எனவேதான், நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இந்த வரிச்சுமையை மக்கள் மீது ஏற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. நியாயமாகவே, அதே நேரத்தில் சட்டப்படியும் யாரும் தவறாகச் சட்டத்தைப் பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் யாரும் பயன்பெறக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-15

**Hon. Speaker:** There are two Members standing. I must call before you get up. You please sit down. Thiru M. Abdul Latheef.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நகராட்சிகளில், பேரூராட்சிகளில் குறிப்பாக அப்ரூவ்டு லே-அவுட், அன்அப்ரூவ்டு லே-அவுட் என்று இருக்கின்றன. பரவலாக அன்அப்ரூவ்டு லே-அவுட்-களுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. விளக்குகளும் கொடுக்கப்படுகின்றன, மற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன, சாலைகளும் போடப்படுகின்றன. ஆனால் வரி மட்டும் போடப்படுவதில்லை. நீண்ட நாட்களாக, நீண்ட வருடங்களாக இதை ஏன் அப்ரூவ் செய்யாமல்

[திரு. ம.. அப்துல் லத்தீப்] [1997 அக்டோபர் 18

வைத்திருக்கிறார்கள்? அப்ரூவ் செய்து அதற்கும் நீங்கள் வரி போட்டால், உடனுக்குடன் வரி போட்டால், அது உங்களுடைய ஆதாரத்தைப் பெருக்குமே!. இப்படியெல்லாம் வரி போட்டு வசூலிக்காமல், இருப்பவர்கள் மீதே சுமை ஏற்றிக் கொண்டிருக்கிறீர்களே. இது எந்த வகையில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது உண்மை. சிலவற்றில் அப்படி இருக்கின்றது என்பது உண்மைதான். ஆகையால் அந்தத் தவறு இருக்கிறதே அதை எப்படியாவது சரிசெய்துவிட்டு வரி போடுங்கள் என்று சொன்னால் அது நல்லதல்ல, அது பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. அதற்கு ஒரு நல்ல முடிவு நிச்சயமாக எடுப்போம். ஆகவே நான் தெளிவாகச் சொல்கிறேன், அந்த உண்மைக்குப் புறம்பான நடவடிக்கைகள் நகராட்சிகளில், மாநகராட்சிகளில் எங்கிருந்தாலும் கவனத்திற்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது நான் அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அப்போது நீங்கள் அவரிடம், 'உங்கள் நீண்ட பதிலை என்னால் தாங்க முடியவில்லை' என்று சொன்னீர்கள். இப்போது உங்கள் கேள்வியை மட்டும் மற்ற உறுப்பினர்களெல்லாம் தாங்கிக் கொண்டிருக்க வேண்டுமா, உட்காருங்கள், (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'வரியை உயர்த்துவதற்காக இந்த சட்டமுன்வடிவைக் கொண்டு வரவில்லை, நாங்கள் சரியான முறையில் விதிக்க இருக்கிறோம்' என்று சொன்னார்கள். ஒருவேளை இனி வரி ஏறாது, இறங்கத்தான் போகிறது என்று சொன்னால், இந்தச் சட்டமுன் வடிவை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். இது ஒன்று. இரண்டாவது ஏற்கெனவே பேரூராட்சிகளில்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வரியை அவர் வைத்துக் கொண்டு எந்த அடிப்படையில் ஏறாதா அல்லது குறையாதா என்று உத்தரவாதம் கேட்கிறார்?



1997 அக்டோபர் 18 ]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பல பேரூராட்சிகளில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வாதத்திற்காகச் சொல்கிறேன். அமைச்சர் உத்தரவாதம் கொடுத்தால், அடுத்து என்ன சொல்லப் போகிறார் ஞானசேகரன்? உள்ளாட்சி அதிகாரத்தில் அமைச்சர் தலையிடுகிறார் என்று சொல்வார். திரு.. சி. ஞாசேகரன், நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### பிரிவு—2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, திரு. பி. வெங்கடசாமி, தன் திருத்தத்தை மொழியலாம.

**Thiru B. Venkatasamy**: Hon Speaker Sir, I Move the following amenment to clause 2:

"1. In Clause 2, in the proposed new section 99, sub-section (3) may be delected.

2. In clause 2, in the proposed new section 100 for the words 'The State Government' substitute the words 'The Chennai Corporation Council'.

3. In clause 2, for the proposed new section 101 substitute the following:

[Thiru B. Venkatasamy] [1997 அக்டோபர் 18

"The fair rent formula adopted by the Rent Control Act shall be adopted".

4. In clause 2, in the proposed new section 104, after item (h) the following items (i) and (j) may be added:-

'(i) All remises/buildings owned, possessed and in full occupation of the disabled and/or defence personnel and used as personal residential purposes and not used otherwise either partially or fully.

(j) all persons given exemption under the professional tax'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் தம் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 3 முதல் 10 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1997 அக்டோபர் 18]

**பிரிவு—1**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 1, திரு. பி. வெங்கடசாமி, தன் திருத்தத்தை மொழியலாம்.

**Thiru B. Venkatasamy**: Hon. Speaker, Sir, I move the following amenment to clause 1:

"The Tamil Nadu Municipal Laws (Second Amendment) Bill, 1997 (L.A. Bill No.69 of 1997) be referred to a Select Committee of the House consisting of—Members. (List of Members will be given later)".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் தம் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 69/1997) நிறைவேற்றப் பெறவேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1997 அக்டோபர் 18

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தீர்மானம்

### (அ) விதி 156-(1) ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், பேரவை விதி 156 உள்விதி (1)-ஐத் தளர்த்தல். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 156 உள் விதி (1)-ஐத் தளர்த்தி, 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவையில் அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதத்திற்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



1997 அக்டோபர் 18 ]

## 9. அறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 14-7-1997-ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா மற்றும் சட்டமன்றப் பேரவை வைர விழாவையொட்டி இந்நாள் மற்றும் முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கும் விழா மலரும், நினைவுப் பரிசும் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விழா மலர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நாள் வரை இவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் விழா மலர்ப் பிரதியை இச்செயலக நிருபர் பிரிவு அதிகாரிகளிடமிருந்தும், நினைவுப் பரிசினை ஓய்வூதியப் பிரிவிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

பிற்பகல் 1-20

## 8. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதலுக்கான அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவருக்குப் பதிலாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன் கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கலாம்"

என்னும் தீர்மானத்தைப்பெற மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் `ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் `இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

107. வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், வேலூரில் உள்ள திப்பு மகால், சிறப்பு முகாமிலிருந்து, அங்கு தங்க வைக்கப்பட்டிருந்த 43 பேர் (இலங்கைத் தமிழர்கள்) தப்பிச் சென்ற சம்பவம் குறித்து ஒரு நபர் விசாரணை ஆணையம் நீதிபதி திரு. டி. என். சிங்காரவேலு அவர்களின் அறிக்கை. [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

108. 7-1-1997 அன்று கயத்தாறு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பூட்டப்பட்டமை. 8-1-1997 அன்று டாக்டர் கே. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் கைது செய்யப்பட்டமை, அதனைத் தொடர்ந்து, 9-1-1997 அன்று கடையநல்லூரில் அரசுப் பேருந்துகள் எரிக்கப்பட்டமை உட்பட சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு பிரச்சினைகள் ஏற்பட்டமை, அவை காரணமாகக் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியமை ஆகியவை குறித்து நீதிபதி திரு. இரா. மாணிக்கம் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

109. 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு மரங்களைக் கொண்டு செல்வதற்கான விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து சுற்றுப்புறம்





மற்றும் வனத்துறையின் 28-7-1997-ஆம் நாளிட்ட 326-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

110. 1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து சுற்றுப்புறம் மற்றும் வனத்துறையின் 8-8-1997-ஆம் நாளிட்ட 344-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

111. 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு மரங்களைக் கொண்டு செல்வதற்கான விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து சுற்றுப்புறம் மற்றும் வனத்துறையின் 8-8-1997-ஆம் நாளிட்ட 345-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

112. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 09-07-1997-ஆம் நாளிட்ட 145-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

113. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் அதிகார மன்ற விதிகள், 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட சட்டப் பணிகள் அதிகாரமன்ற விதிகள் மற்றும் 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்ட சட்டப் பணிகள் அதிகார மன்ற விதிகள் ஆகியவை இயற்றுவது தொடர்பாக, உள் (நீதிமன்றங்கள்-IV) துறையின் 14-3-1997-ஆம் நாளிட்ட 418-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். 1987-ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகார மன்றச் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 39/1987) 28-ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

114. திருநெல்வேலி மாவட்டம் துறையூரில் 5-5-1997 அன்று காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கு வழிகோலிய தகவல்கள்,

சூழ்நிலைகள் பற்றிய திரு. எம். காமாட்சி (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி) , விசாரணை ஆணையம்-அறிக்கை. [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

115. சிவகாசி கோட்டாட்சியர் அலுவலகத்தின்முன் 7-5-1997 அன்று நிகழ்ந்த காவல் துறையின் துப்பாக்கிச் சூடு குறித்து திரு. வி. தனராஜ் (ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி) விசாரணை ஆணையம்-அறிக்கை. [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

116. 1996-ஆம் ஆண்டு “மே” மாதம் 10-ஆம் தேதி முதல் சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடியில் இருசமூகத்தினரிடையே ஏற்பட்ட இனக் கலவரம் குறித்தும் அதனையொட்டி 1996-ஆம் ஆண்டு “மே” மாதம் 11-ஆம் தேதியன்று தூத்துக்குடி இந்திரா நகரில் காவல் துறையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு குறித்தும், விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட திரு. வி. கே. திருநாவுக்கரசு, மாவட்ட நீதிபதி விசாரணை ஆணையம்-அறிக்கை. [1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

20. தமிழ்நாடு விழிப்புப் பணிக் குழுவின் 1-4-1992 முதல் 31-3-1993 வரையிலான இருபத்து ஏழாம் ஆண்டு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

21. பொதுக் கணக்குக் குழுவின் 68 முதல் 75 வரையிலான அறிக்கைகள், 1997-98. (8 அறிக்கைகள்).

22. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1997-98.

23. மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கை, 1997-98.

24. மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கை, 1997-98.

25. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).



26. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

27. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

28. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 31 வரை).

D
V211,31'N97
N97 . 38.3
218446

அரக மையம அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.